ஸ்ரீராமஜயம்.

# வால்மீகிராமாயண வசனம்.

# பாலகாண்டம்.

இது

பண்டித - நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

மகாமஹோபாத்யாய

வே. சாமிநாதையராலும்,

சென்னைச் சர்ச் ஆப் ஸ்காட்லன்ட் மிஷன் காலேஜ்

தமிழ்ப் பண்டிதர்

வை. மு. சடகோபராமாநுஜாசாரியராலும்,

பார்வையிடப்பட்டது.

---

சென்னை:

க. மகாதேவன்.

1925

[ரிஜிஸ்டர்ட் காபி ரைட்.]

RE-PRINTED

AT THE B. N. PRESS, MOUNT ROAD,

MADRAS.

1925.

ஸ்ரீராமஜயம்.

# முகவுரை.

இப்பூதலத்தின்கண் பண்டித பாமர ரஞ்சகமாய், கற்பனைக் களஞ்சியமாய், நவரசம் நிறைந்ததாய், சொல்லினிமை பொருளினிமை யுள்ளதாய், கேட்போர்க்குத் தெவிட்டாத தேன்போன்றதாய், படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாய், ஷண்மதஸ்தர்களும் ஏத்திப் போற்றத் தக்கதாய், பிறமதஸ்தர்களும் கொண்டாடுதற் குரியதாய், வேதப்பொருள் நிறைந்து வேதத்துக்குச் சமானமானதென்று பெருமை பாராட்டப் படுவதாய், உலக வியல்புகளை உள்ளங்கை நெல்லிக்கனி போல் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாய், கம்பீரமான நடை யுடையதாய், நம் முன்னோரின் நாகரிகச் சிறப்புக்குப் பெரிய திருஷ்டாந்தமாய் ஸம்ஸ்கிருதபாஷையில் விளங்கும் கிரந்தம் யாதென்றால், அது வால்மீகி மகாரிஷி அருளிச்செய்த ஸ்ரீமத் ராமாயணமேயாம். பரமாத்ம ஸ்வரூபியாகிய ஸ்ரீ ராம பிரானது சரித்திரம் இராமாயணம். அது இதிகாசங்களிரண்டில் ஒன்று. மற்றோர் இதிகாசம் ஸ்ரீ மகாபாரதம். மகாபாரதம் உண்டாவதற்கு வெகு காலங்களுக்கு முன் இராமாயணம் தோன்றி எழுத்தில் ஏற்படுத்தப்படாமல் வேதம்போல் ஜனங்களுக்குள் அத்தியயன ரூபமாய் விளங்கிவந்ததென்றும், இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் மகாபாரதத்திலிருக்கும் விஷயங்களைக் காட்டிலும் பழமையான விஷயங்களென்றும் தெரிகிறது.

*எல்லாவிதத்தாலும் உயர்ந்த கிரந்தம்.*

1. இராமாயண கதை மகாபாரதத்தில் மூன்று நான்கு இடங்களில் காணப்படுதலும், மகாபாரத கதை இராமாயணத்தில் ஓரிடத்திலேனும் காணப்படாமையுமே இதற்கு ஒரு சாக்ஷி. (மகாபாரதம் ஆரணிய பர்வம் 273-வது முதல் 290-ம் அத்தியாயம் வரையுள்ள அத்தியாயங்களையும், துரோணபர்வம், சாந்தி பர்வம் முதலியவைகளையும் பார்க்க.)

2. இராமாயணத்தில் பரதகண்டத்தின் தென்பாக மெல்லாம் தண்டகாரணியம் முதலிய அரணியங்களாக இருந்ததென்று கூறியிருக்க, பாரதத்தில் தக்ஷிணத்தில் அநேக ராச்சியங்களிருந்தன வென்று கூறப்பட்டுள்ளது. (ஆதிபர்வம் 188-ம் அத்தியாயம், சபாபர்வம் 34-ம் அத்தியாயம், பீஷ்மபர்வம் 9-ம் அத்தியாயங்களால் ஆந்திரம், கர்ணாடம், சோளம், பாண்டியம் முதலிய தேசங்கள் தக்ஷிணத்திலிருந்தன வென்பதும் அவற்றின் அரசர்கள் பாண்டவர்களுடைய சபைகளுக்கு வந்திருந்தனர் என்பதும் புலப்படும்.)

3. இராமாயண கதா நாயகியாகிய சீதாபிராட்டியாரையும் மகாபாரத கதாநாயகியாகிய திரௌபதியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இராமாயணமே முதற் காவியம் என்பது ஏற்படும். சீதாதேவியின் பதிவிரதா தர்மம், பொறுமை, புத்திநுட்பம், விநயம் முதலிய குணங்கள் சர்வ சிரேஷ்டமாயினும் திரௌபதியைப்போல் இராஜ தந்திரம், மதவிஷயம் முதலிய புத்தி சாதுரியமான விஷயங்களில் அவர் அவ்வளவு தேர்ச்சி அடைந்திருந்ததாக அவரது சம்பாஷணை முதலியவைகளிலிருந்து புலப்படவில்லை. இவ்விஷயங்களில் திரௌபதியின் சாமர்த்தியம் மிகவும் அதிசயிக்கத்தக்கது. திரௌபதி யுதிஷ்டிரருடன் செய்த சார்வாகமத சம்வாதமும், சத்தியபாமைக்குப் புகட்டிய அறிவும் அவளுடைய குசாக்கிர புத்திநுட்பத்தைக் காட்டவில்லையா? இதனால் நாகரிகம் விருத்தியடைந்த பிற்காலத்தில் திரௌபதி இருந்து அதன் பயனை முழுவதும் பெற்றவளென விளங்குகின்றது.

4. திரேதாயுகத்தில் ஸ்ரீராமர் இருந்தன ரென்பதும், துவாபரயுகத்தின் அந்தத்தில் பாண்டவர்கள் இருந்தார்களென்பதும், அவர்களுக்கு ஆப்தராயிருந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய அவதாரம் ஸ்ரீ ராமாவதாரத்துக்குப் பிறகு என்பதும் பிரசித்தமன்றோ?

5. இராமாயணத்தில் கூறப்பட்ட யுத்தவிஷயங்களைக் காட்டிலும் பாரதத்தில் கூறப்பட்ட யுத்தவிஷயங்கள் எவ்வ

ளவோ சிறப்பும் நாகரிகமும் பொருந்தியவையா யிருக்கவில்லையா? பத்மவ்யூகம், சகடவ்யூகம் முதலிய பலவித வ்யூக வகுப்புக்களையும் யுத்த களத்தில் நடந்த ஏற்பாடுகளையும் ஒழுங்குகளையும் தர்ம யுத்தங்களையும் சீர்தூக்கிப் பார்க்குங்கால் அவை எவ்வளவோ பிற்காலத்தில் ஏற்பட்டவை யென்பது வெளிப்படையா யிருக்கின்ற தன்றோ?

6. இராமாயணத்தின் பாலகாண்டத்துள்ள 54, 55-ம் சர்க்கங்களாலும், அயோத்தியாகாண்டத்துள்ள 3-ம் சர்க்கத்தாலும் யவனர் முதலிய மிலேச்ச ஜாதியார் அக்காலத்தில் இருந்தனர் என்று தெரியவரினும், மிலேச்சபாஷையை எவரும் பேசியதாகப் புலப்படவில்லை. மகாபாரதத்திலோ, துரோணபர்வம் 26, 119, 122-ம் அத்தியாயங்களாலும், கர்ணபர்வம் 81-ம் அத்தியாயத்தாலும் சல்லியபர்வம் 20-ம் அத்தியாயத்தாலும் யவனர் முதலிய ஜாதியார் அக்காலத்தில் மிகுதியாயிருந்தனர் என்பதும், விதுரர், யுதிஷ்டர் முதலிய பெரியோர்களும் அவர்கள் பாஷையைப் பேசிவந்தன ரென்பதும் புலப்படுகின்றன. இதனால் பாண்டவர் காலத்தில் மிலேச்ச ஜாதியார் நம் நாட்டில் அதிகமாய்க் குடியேறத் தலைப்பட்டார்க ளென்பதும், அவர்கள் பாஷைகளும் நம்நாட்டில் பரவத் தலைப்பட்டன வென்பதும், அக்காலத்துக்கு முற்படவே இராமாயணம் ஏற்பட்ட தென்பதும் விசதமாகின்றன.

7. இராமாயணத்தை வால்மீகி மகாரிஷி வாய்மொழியாகக் குசலவர்களுக்குக் குருசிஷ்யக்கிரமப்படி சொல்லிவைக்க அவர்கள் அதை இராமரது அசுவமேத மகா மண்டபத்தில் கானம் பண்ணினதாகச் சொல்லப்பட்டிருக்கின்றதே யொழிய எந்த இடத்திலாவது அது எழுதிப் படித்ததாகச் சொல்லப்படவேயில்லை. மகாபாரதமோ வியாசபகவான் சொல்ல விக்கினேசுவரர் எழுதியதாகக் கூறப்பட்டிருக்கின்றது. இதனால் எழுதும்படியான வழக்கம் ஏற்பட்டதன்பின் மகாபாரதமும் அதற்குமுன் இராமாயணமும் உண்டாயின வென்பதை ஊகித்தறியலா மன்றோ?

மேற்கூறிய பல காரணங்களால் முதல் இதிகாசம் இராமாயணமே என்பது ஏற்படும். இராமாயணம் வாயால் பாடிப்பாடி நமக்குக் கிடைத்த கிரந்தம். மகாபாரதம் எழுத்தால் எழுதப்பட்டு நம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட கிரந்தம்.

இனி இராமாயணத்தின் மகிமையைச் சிறிது கூறுவாம்.

இராமாயண மகிமை; வைதிக முறை.

இராமாயணம் வேதத்தைப்போலவே சிறப்புற்ற வைதிக நூல். வேதப்பொருள் அநேகம் அதில் அடங்கி யிருக்கின்றன. இது காரணங் கொண்டே அதைப் பாராயணத்துக்கு யோக்கியமானதென்று எல்லோரும் கொண்டாடுகிறார்கள். அதன் பரிசுத்தியையும் சத்தியத்தையும் மகிமையையும் உத்தேசித்தே சுப காரியங்களில் அதை வேதவாக்கியமாகவே எண்ணி அநேகர் அதில் கயிறு போட்டுப்பார்த்து அவ்வாறே நடக்கிறார்கள் அதனாலேயே சர்வமதஸ்தரும் ஏற்றத் தாழ்வின்றி அதை மேலாகக் கருதுகின்றனர். மந்திரங்களிலெல்லாம் உயர்ந்ததான காயத்திரி மந்திரம் அதில் ஆயிரம் ஆயிரம் சுலோகங்களுக்குமுன் ஒவ்வோர் எழுத்தாய் 24 ஆயிரம் கிரந்தங்களுக்கு முன்னும் 24 எழுத்துக்களும் வந்து அமையப்பெற்று விளங்குகின்றது. ஆநந்த ராமாயணம், ராமதாபநி உபநிஷத்து முதலிய கிரந்தங்களால் அதன் தத்துவார்த்தம் சிறிது புலப்படுகின்றது. அந்தக்கிரந்தங்களைப் பார்த்து அறிந்த பெரியோர்பால் அதனைக் கேட்டறிக. ஆயினும் இராமாயண நுட்பங்கள் சில கூறுவாம் ஸப்தகாண்டங்களும் காயத்திரியின் ஸப்த வியாகிருதிகளைக் குறிக்கின்றன வென்றும், காயத்திரி மேற்பார்வைக்குச் சூரியனைக் குறித்த துதிபோலவும், ஆழ்ந்து பார்க்குங்கால் பிரம ஸ்வரூபத் தியானம் போலவும் இருப்பது போல், ஸ்ரீமத் ராமாயணமும் மேற்பார்வைக்குச் சூரியகுலத்தைச் சேர்ந்த ஸ்ரீராமர் சரித்திரம்போலவும் ஆழ்ந்து பார்க்குங்கால் பிரமஸ்வரூபத்தைப் பிரதிபாதிக்கின்ற இனிய கதைபோலவும் இருக்கின்றதென்றும் விளங்கும். இவைபோன்ற நுட்பங்கள் பல உண்டென்பார்கள். அவைகளைக் கற்றோர்பால் கேட்டறிக.

இராமாயணத்தை லௌகிகமாய் ஆராயுங்கால் நம் நாட்டார் தினந்தோறும் அதைப்பற்றிப் பேசாத நேரமு முண்டோ? அக்கதை தெரியாத மனிதரும் உளரோ? அதை வாசியாத குடும்பந்தா னுண்டோ? "இராமர் என்றால் பாவம்போம், சீதை என்றால் துக்கம்போம்" என்று ஒவ்வொரு தாய்மாரும் தாலாட்டுகிறதை நாம் பிரதிதினமும் கேட்கவில்லையா? "இராமாயண கதை இன்பம்; அதைக் கேட்டிடில் அகன்றிடும் துன்பம்" என்று வழங்குவதை அறியாதவரெவர்? இவைகளால் ஜனங்களுக்கு அதனிடத்தில் எவ்வளவு மதிப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதை ஊகித்துக்கொள்ளலாம். ஜந மநோரஞ்சக காவியமானதாலன்றோ அதைப் பலர் தெருத் தெருவாய் வாசித்து இன்றும் ஜீவனம் செய்கிறார்கள். அதன் பாஷையினுடைய நடையும் காம்பீரியமும் வாசாமகோசரமானவை. அது சொல்வதற்கு இனிமையாயும், கேட்பதற்கு அமிருதமாயும், அர்த்த புஷ்டியுள்ளதாயும், வியாகரணம் அலங்காரம் முதலிய சர்வ சாஸ்திரங்களுக்கும் ஒத்ததாயும் இருக்கும்படி வெகு சுலபமான திராக்ஷாபாக நடையில் எழுதப்பட்டுள்ளது.

இராமாயண மகிமை; லௌகிக முறை.

இராமாயணத்தின் அலங்காரங்கள் மிகவும் சுவாபாவிகமாயிருத்தலால் வெகு அழகாக இருக்கும். காளிதாசர் முதலிய மகாகவிகள் அதிலிருந்துதான் கடன் வாங்கினரோ என்று சொல்லும் வண்ணம் அவ்வளவு அது அழகு வாய்ந்திருக்கிறது. இதை நாம் அபிமானத்தால் சொல்வதாக எண்ணுகவண்ணம் இரண்டோர் உதாரணங் கூறி இதன் உண்மையை விளக்குவாம்.

சுபாவாலங்கார புஷ்டி.

1. அந்தப்புரத்திலிருந்த தம் தந்தையைக் காண உட்புகுந்த ஸ்ரீராமரது வரவை அம்மாளிகையின் வெளியில் அயோத்திமா நகரத்தார் அனைவரும் ஒரே பெருங்கூட்டமாய் நின்று மிக்க ஆவலுடன் எதிர்பார்த்ததை, சந்திரபகவான் வரவை எதிர்பார்த்து நிற்கின்ற சமுத்திரத்துக் கொப்பாகக் கூறியது, எவ்வளவு பொருத்தமாகவும் அழகாகவும் இருக்கிறது?

2. இராமர் ஒருகால் வனம்போகச் சம்மதிப்பாரோ மாட்டாரோ என்று கைகேயி சந்தேகித்ததை அவள் முகக் குறிப்பால் அறிந்து அவர் அவளைப் பார்த்து "தாயே! பொருளாசையால் இவ்வுலகில் வசிக்க ஆசை கொண்ட மானிடனாக நீர் என்னைக் கருதவேண்டாம்; தருமத்தைத் தருமத்தின் பொருட்டே கைப்பற்றி நடத்திவரும் முனிபுங்கவர்களுக்கு ஒப்பான மானிடனாக எண்ணல் வேண்டும்" என்றார். இது எவ்வளவு இயல்பாகவும் உண்மையாகவும் தோற்றுகிறது!

3. ஸ்ரீராம லக்ஷ்மண ரிருவருமில்லாத சமயம்பார்த்துச் சீதையைத் தூக்கிச்செல்ல இராவணன் அவர்கள் ஆச்சிரமத்தில் நுழைந்ததை, சூரிய சந்திரர் இருவருமில்லாத சந்தியாகாலத்தில் இருள் புகுந்ததுபோலும் என்று முனிவர் உவமை கூறியிருக்கின்றது, எவ்வளவு கம்பீரமாயும் உத்கிருஷ்டமாயு மிருக்கின்றது? எப்பாஷையிலாவது எந்தக் கவியாவது இவ்வளவு அழகாய்ச் சொல்லியிருக்கின்றனரா? இவைபோன்ற அழகான உதாரணங்கள் வால்மீகி ராமாயணம் முழுவதிலும் மிகுதியாய்க் கிடக்கின்றன. அவை யெல்லாவற்றையும் இந்தச் சிறு முகவுரையில் எடுத்தெழுதின் மிகவும் விரியும் என்று அஞ்சி இம்மட்டில் நிறுத்தினோம்.

கிரந்தத்தின் முக்கிய கருத்து.

இராமாயணத்தின் முக்கிய கருத்து என்னவெனில், உத்தம புருஷர்கள் உத்தம ஸ்திரீகள் இவர்களுடைய சரித்திரத்தை எடுத்தெழுதி உலகத்தாருக்கு நற்போதனை செய்ய வேண்டுமென்பதே. இதனை ஸ்ரீ வால்மீகி மகாரிஷி ஸ்ரீ நாரதமுனிவரிடம் கேட்ட கேள்வியாலேயே அறிந்து கொள்ளலாம். அதன் நடைக்காகவும் கம்பீர அபிப்பிராயத்துக்காகவுமே அதைப் பிறதேசத்தவரும் மிகவும் மேலாக மதித்துக் கொண்டாடுகிறார்கள்.

நீதிகள்.

தரும சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட நீதிகளெல்லாம் அதன் கதையில் விளங்குகின்றன. தெய்வ பக்தி, மாதிருபக்தி, பிதிருபக்தி, ஆசாரிய பக்தி, சத்தியம், பொறுமை, ஜீவகாருண்ணியம், வர்ணாச்சிரம

தருமம், மாதர் ஆடவர் தருமம், பதிவிரதா தருமம், சகோதர வாஞ்சை, நட்பு, பெரியோரிடத்தில் மரியாதை, விருந்தோம்பல், செய்ந் நன்றி யறிதல், செங்கோல், இராஜதந்திரங்கள், அன்பு, தயை, நடுவுநிலைமை, நன்மை தீமையின் பயன், சரணமடைந் தோரைக் காப்பாற்றும் உத்தமகுணம் முதலிய மேலான நீதிகள் அதில் வெகு அழகாக எடுத்துக் காட்டப்பட் டிருக்கின்றன.

வருணனைச் சிறப்பு.

நாடு நகரங்களையும், காடு மலைகளையும், ஆறு ஏரிகளையும், அருவி ஓடைகளையும், கோப்புத் தூரவுகளையும், கோட்டை கொத்தளங்களையும், சூரிய சந்திராதி கிரகங்களையும், நக்ஷத்திர தாரகா கணங்களையும், சமுத்திரம், ஆகாயம், காற்றுமுதலிய பூதங்களையும், இராஜாங்கச் சிறப்பையும், இராஜ சபைகளையும், சதுரங்க சேனைகளின் பெருக்கையும், யுத்தச்சிறப்பையும், ஜனங்களின் நடை உடை பாவனைகளையும், நாகரிகத்தையும், ஜனசங்கத்தின் குதூகலத்தையும், இன்னும் இவைபோன்ற விஷயங்களையும் வால்மீகியைப்போல் எந்தக் கவியும் எந்தக் கிரந்தத்திலும் வருணியாத வண்ணம் அவ்வளவு இயற்கையாகவே படிப்பவருக்கு உருக்கமுண்டாகும்படி வேறு எவர் வர்ணித்திருக்கிறார்? "வனத்துக்கு வால்மீகி" என்று பழமொழியும் வழங்குகிறதே. இவரது வனவர்ணனையை வாசிக்குங்கால நாம் வனத்திலிருப்பது போலவே உணர்வோம். அது அவ்வளவு அழகாயும் இயற்கையாயும் இருக்கும். சுபாவத்தை விட்டு நூலளவும் இவர் விலகுவதில்லை. அதனால்தான் வெகுகாலத்துக்குமுன் எழுதப்பட்ட இக்கிரந்தத்தில் பேசப்பட்ட விஷயங்கள் இன்றைக்கும நம் கண்ணெதிரில் நடப்பனபோல் தோன்றுகின்றன. அயோத்தி, மிதிலை, இலங்கைமுதலிய பட்டணங்களின் வர்ணனையை வாசிக்குங்கால் இக்காலத்துச் சென்னை, பம்பாய் கல்கத்தா முதலிய நகரங்களின் நடுவில் நின்று பற்பல காட்சிகளைப் பிரத்தியக்ஷமாய்க் காண்பதுபோலிருக்கும். அதில் விருந்தளிக்கும் கட்டங்களை வாசிக்குங்கால் இக்காலத்தில் நடக்கும் பெரிய சமாராதனைகளில் நாம் நின்று பந்தி விசாரிப்பது போலிருக்கும். ஸ்ரீராம பட்டாபிஷேகத்

துக்காக ஆலோசனைபண்ணத் தசரதர்கூட்டிய பெரிய சபை யைக் குறித்து நோக்குங்கால் ஆங்கிலேய பார்லிமெண்டில் நடப்பதைவிட எவ்வளவோ மேலாகவும் கம்பீரமாகவும் விமரி சையாகவும் விஷயங்கள் நடத்தப்பட்டு வந்தன என்பது விசத மாகும். பலவாறு சொல்லி யென்ன, சுருங்கச் சொல்லில், சுபா வத்தைச் சுபாவமாகவே வர்ணிப்பதில் வால்மீகிக்கு மேலான வர் எவரும் இருந்ததேயில்லை. தமிழ்நாட்டார் மிகவும் கொண் டாடுகின்ற கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரே

"வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனும் நறவ மாந்தி
*மூங்கையான் பேச லுற்றா னென்ன யான் மொழிய லுற்றேன்"

என்று சொல்வாரானால் அவர் வர்ணநாசக்தியை நாமா புகழ் வது!

கதையின் சுருக்கம்.

இனி இராமாயண கதையைச் சுருங்கக் கூறுவாம். சூரிய வமிசத்திற் பிறந்த தசரதர் என்னும் அரசர் தம் மூன்று மனைவிகளோடும் மநுமுறை தவ றாது அயோத்தியாபுரியில் ஆண்டு வந்ததும்,

"பொன்னுடையரேனும் புகழுடையரேனுமற்
றென்னுடையரேனு முடையரோ—வின்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களை யிங் கில்லாதவர்"

என்றபடி சகல சம்பத்துக்களும் நிறைந்து சகல போகங்களை அனுபவித்தும் குழந்தையில்லாக் குறையால் வருத்த முற்றுத் தம் குரு சிரேஷ்டராகிய வசிஷ்டமாமுனிவரின் கட்டளைப்படி ரிசியசிருங்க மாமுனிவரின் உதவியைக் கொண்டு புத்திரகா மேஷ்டியாகஞ் செய்து புத்திரப் பேறு அடைந்ததும், விசுவாமித் திர மகாரிஷி வந்து இராம லக்ஷ்மணர்களைக் காட்டுக்கு அழைத் துக்கொண்டு போய் அவர்களைக் கொண்டு தாடகை சங்காரஞ் செய்வித்துத் தம் யாகத்தை நிறைவேற்றியதும், அம்முனிபுங்க வர் அவர்களை மிதிலைக்குக் கொண்டுசென்று வில்லை முறிப்பித்து

---

மூங்கையான் = ஊமையன்.

ஜநக ராஜருடைய புத்திரியாகிய சீதையை ஸ்ரீ ராமருக்கு மணம்
புரிவித்ததும், தசரதர் ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகம் முடிக்
கக் கருதினதும், அதைக் கைகேயி தடுத்துத் தன் மகன் பரத
னுக்கே பட்டங் கட்டவேண்டி ஸ்ரீ ராமரைக் காட்டுக்கு அனுப்
பியதும், சீதா லக்ஷ்மண சமேதராய் ஸ்ரீ ராமர் வனம் புகுந்த
தும், அங்கே கங்கைக் கரையில் குகனைச் சிநேகஞ் செய்ததும்,
சித்திர கூட பருவதத்தில் இனிமையாய்க் காலம் கழித்து வந்த
தும், புத்திர சோகத்தால் தசரதர் உயிர் நீத்ததும், பரதன் தன்
தாய் மிக்க ஆசையால் தேடிவைத்த இராச்சியத்தை வேண்டா
மென்று மறுத்ததும், கைகேயியை ஏசிக் கால் நடையாய்க் காட்
டுக்குச் சென்றதும், வழியில் பரத்துவாஜ மகாரிஷியின் ஆச்சிர
மத்தில் தங்கி விருந்துண்டதும், சித்திரகூடத்தில் ஸ்ரீ ராம
பிரானைக் கண்டு திரும்பி வந்து இராச்சியத்தை ஆளும்படி அவ
ரைப் பணிந்து கேட்டுக் கொண்டதும், அவர் பரதனைச் சமா
தானம் பண்ணித் திருப்பியனுப்பினதும், அவர் விராதன் என்ற
ராக்ஷசனைக் கொன்றதும், சரபங்கர் ஸ்ரீராமர் அருளால் முத்தி
யடைந்ததும், இராமர் அகஸ்தியர் முதலிய மகாரிஷிகளைக்
கண்டு களித்து அவர்களால் ஏவப்பட்டுப் பஞ்சவடி தீரத்தில்
சுகமாய் வசித்ததும், இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை
யைத் தண்டனை செய்தனுப்பியதும், மாயமான் வேடங்கொண்டு
வந்த மாரீசனைச் சீதையின் பொருட்டுத் துரத்திச் சென்று
கொன்றதும், அச்சமயத்தில் இராவணன் சந்நியாசி வேடங்
கொண்டு சீதையைத் தூக்கிச்சென்றதும், நடுவழியில் ஜடாயு
கண்டு இராவணனைத் தாக்கிப் பின்பு தன் சிறகு அறுப்புண்ட
தும், சீதாபிராட்டியார் கவர்ந்து செல்லப்பட்டதை ஜடாயுவால்
அறிந்து இராமர் அவரைத் தேடிச் சென்றதும், கவந்தனைக்
கொன்றதும், சவரி பக்தியுடன் கொடுத்த இலந்தைக் கனியைப்
புசித்து அவளுக்கு முக்தியை அளித்ததும், பம்பா தீரத்தைக்
கண்டு களித்ததும்,வாலியால் துரத்தப்பட்ட சுக்ரீவன் அநுமானை
முன்னிட்டு ஸ்ரீராமரைச் சரணமடைந்ததும், அவர் வாலியைக்
கொன்று சுக்கிரீவனுக்குக் கிஷ்கிந்தையில் பட்டாபிஷேகஞ்செய்
வித்ததும், அவனுடைய எழுபத்திரண்டு வெள்ளம் வானர

சேனைகளின் உதவியைக்கொண்டு சீதாதேவியை நாலுதிக்கிலும் தேடச்செய்ததும், அநுமான் சீதாதேவியை இலங்கையில் அசோகவனத்திற் கண்டு களித்ததும், இலங்கையைக் கொளுத்தியதும், சீதாதேவியைக் கண்ட சந்தோஷச் செய்தியை ஸ்ரீராமருக்குத் தெரிவித்ததும், சீதையை மீட்டுவரச் சேதுபந்தனம் பண்ணி எழுபத்திரண்டு வெள்ளம் சேனைகளுடன் ஸ்ரீராமர் இலங்கைக்குச் சென்றதும், இலங்கேசன் தம்பியாகிய விபீஷணன் ஸ்ரீராமரைச் சரண் புகுந்ததும், இராவண கும்பகர்ணாதிகளை வதஞ்செய்து இலங்கையில் விபீஷணனுக்கு முடிசூட்டியதும், பிறகு எல்லோரும் புஷ்பகவிமான மேறி அயோத்திக்குத் திரும்பியதும், அயோத்தி சென்று ஸ்ரீராமர் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு சுகமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணினதும் வெகு அழகான பாஷையில் மிகவும் இனிமையாகவும் உருக்கமாகவும் கூறப்பட்டிருக்கின்றன.

சுந்தரகாண்டம்.

இராமாயணம் பாலகாண்டம் முதலிய ஏழுகாண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. காயத்திரியின் ஸப்த வியாகிருதிகளுக்கு இணங்க இவ்வாறு பிரிக்கப்பட்டதென்று முன்னரே கூறினோம். அதில் ஐந்தாவதாகிய சுந்தரகாண்டம் விசேஷமானது. அப்பெயர் அமைந்ததற்குப் பலர் பலகாரணம் கூறுவர். சிலர் ஸ்ரீராமபிரானது சௌந்தரியம் வருணிக்கப்பட்டிருப்பதால் இப்பெயர் அமைந்ததென்பர். சிலர் இலங்காபுரி வர்ணனை, சமுத்திர வர்ணனை, ஆகாய வர்ணனை முதலிய இயற்கை வர்ணனைகள் இக்காண்டத்தில் அழகாக அமைந்திருப்பனபோல் வேறு எந்தக் காண்டத்திலும் அமையவில்லையாதலால் இதற்கு இப்பெயர் வாய்ந்ததென்பர். வேறு சிலர் மற்றையகாண்டங்களில் சிற்சில இடங்கள் மிகவும் முக்கியமாயும், இன்பமாயு மிருக்கும்; இக்காண்டத்தில்தான் ஆதியோடந்தம் எல்லா இடங்களும் முக்கியமாயும் ஆனந்தகரமாயுமிருக்கின்றன, அதுபற்றியே இதற்கு இப்பெயர் அமைந்ததென்பர். வேறு சிலர் இக்காண்டத்தின் ஆதியிலும், மத்தியிலும், அந்தத்திலும் சந்தோஷச்செய்தி கூறப்பட்டிருப்பதால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்றென்பர். வேறு

சிலர் சுந்தரனென்று அநுமானுக்கு ஒருபெயராதலால் அவரது செய்தியைக்கூறும் இக்காண்டம் சுந்தரகாண்டமென்று பெயர் பெற்றதென்பர். எவ்விதமாயிருப்பினும் இருக்க. இராமாயண கதையின் அழகு இக்காண்டத்தில் தான் செவ்விதாய் விளங்குகின்றது. மிகவும் பிரியமான பொருள் ஒன்று தவறிப்போய் அது வெகுநாள் தேடித்திரிந்தபின் கிடைத்ததென்றால் அதன் ஆனந்தத்துக்கு அளவுண்டோ? வெகு நாளாய்த் தன் இன்னுயிர்க் கணவனைப் பிரிந்த நாயகிக்கு "பர்த்ராகமோத்ஸவாகாநார்ய:" என்றபடி அவரைக்கண்டு களிப்பதிலும் வேறு ஆனந்தம் என்ன இருக்கின்றது? காவியத்துக்கு இதைவிட வேறு அழகான விஷயம் யாது உள்ளது? காவியரசம் முழுவதும் நாயக நாயகிகளின் அன்புப்பெருக்கைக் காட்டுவதில் அடங்கும். அவ்விதமான அன்பு இக்காண்டத்தில்போல் வேறு எவ்விடத்தும் அவ்வளவு நன்றாய் விளங்கவில்லை. அளவற்ற மகிழ்ச்சியை ஒருவர் அடைவாரானால் அதைவிட வேறு அழகுமுண்டோ? கணையாழியைக் கண்ணுற்றமாத்திரத்தில் சீதாபிராட்டியார் அடைந்த மகிழ்ச்சியைக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர்

"இழந்தமணி புற்றர வெதிர்ந்ததென லானாள்
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிர்த்த மலடிக் குவமை கொண்டாள்
உழந்து விழிபெற்றதொ * ருயிர்ப்பொறையு மொத்தாள்"

என்று வர்ணித்திருக்கிறார். இவ்வித சந்தோஷத்தை அடையும் வண்ணமே சகலரும் இக்காண்டத்தை விசேஷமாய்ப் பாராயணஞ் செய்கின்றனர்போலும்.

**இராமாயண பாராயணம்.** இராமாயணத்தை வைதிகமாகவும் லௌகிகமாகவும் பாராயணஞ் செய்கின்றவர்களுக்கு எவ்வளவோ பலன்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு காண்டத்தையும் பாராயணஞ் செய்கின்றவர் ஒவ்வொரு தேவதையை உபாசிப்பவர்க்கு ஒப்பாவர் என்று சொல்வர் பெரியோர். சுந்தரகாண்ட பாராயணமோ

* உயிர்ப்பொறை=உடல்.

மிகவும் உத்கிருஷ்டமானது. இதைப் படிக்கச்செய்து கேட்கிறவர்களும் பாராயணஞ் செய்கின்றவர்களும் பின்வரும் பலன்களை அடைவார்களென்பது பெரியோர் கொள்கை. பிள்ளையில்லாதவர்கள் புத்திரசம்பத்தையும், தனமில்லாதவர்கள் தனத்தையும், இராச்சியத்தை விரும்புவோர் இராச்சியத்தையும், சிறைச் சாலையில் அடைபட்டவர் அதனின்று விடுபடுதலையும், இகலோக ஆசையின்றிப் பரலோக ஆசையுடையவர்கள் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் அடைவார்களென்பது திண்ணம். பரமாத்மாவான ஸ்ரீராமர், லக்ஷ்மியாகிய சீதா தேவி இவர்களுடைய அருளால் 21 தரம் சுந்தரகாண்டத்தைப் பாராயணம் பண்ணுகிறவர்கள் புத்திரபாக்கியத்தை அடைவார்கள். தினந்தோறும் 25 சர்க்கங்கள் பாராயணம் பண்ணுகிறவர்கள் மிக்கஐசுவரியம், வீடு, நிலம் முதலிய பாக்கியங்களைப் பெறுவார்கள். ஒரு வருஷகாலம் தினந்தோறும் 7 சருக்கங்கள் பாராயணம் பண்ணுகின்றவர்கள் அவ்வருஷத்தின் முடிவில் ராஜபதவி அல்லது அரசர்களால் நன்குமதிக்கப்படுதல் முதலிய பெரும் பாக்கியத்தை அடைவார்கள். நாளொன்றுக்கு 34 சர்க்கங்களாகப் பாராயணம் பண்ணி இரண்டு நாட்களுக் கொரு முறை சுந்தர காண்டத்தை முடித்து அவ்விதம் அதனை 34 முறை முடிக்கின்றவர்கள் தண்டனையில் நின்றும் விடுபடுவார்கள். தினந்தோறும் தம் சக்திக்குத் தக்கபடி சொற்பம் சொற்பம் பாராயணம் பண்ணுபவர்கள் இம்மை மறுமைப் பயனை அடைவார்கள். மழையின்றிப் பஞ்சம் நேரிடுங்கால் சுந்தர காண்ட பாராயணம் செய்தல் அதை நிவர்த்திப்பிக்கும். சுந்தர காண்டத்தின் முதல் சுலோகத்தை ஒரு தரம் செவியாரக் கேட்ட மாத்திரத்தில் கேட்பவனுக்குத் தொடங்குங் காரியம் கைகூடும். குஷ்டம் முதலிய தீரா நோய்களும் சங்காதோஷம் முதலிய தோஷங்களும் சுந்தரகாண்ட பாராயணத்தாலே நீங்கும். "ஸநிர்ஜித்ய புரீம்லங்காம்" என்ற சுலோகத்தின் முதலக்ஷரத்தைக் கேட்ட மாத்திரத்தில் ஒருவன் இராஜ தண்டனையினின்று நீங்குவான். அநுமான் சீதையைக் கண்ட கட்டத்

சுந்தரகாண்ட பாராயணத்தின் பலன்.

சுந்தரகாண்டத்தில் அநுமான் இலங்கைக்குப் போகச் சமுத்திரத்தைத் தாண்டுவதொன்றையே 200 சுலோகங்களால் வால்மீகி வர்ணித்திருப்பதுபோல் வேறு எந்தக் கவிகள் தாம் வர்ணித்திருக்கிறார்கள். ஹோமர், வெர்ஜில் முதலிய ஹூணகவிகள் ஆகாய கமனத்தை வர்ணித்திருந்த போதிலும் அவைகள் இவ்வர்ணனைக்குச் சிறிதும் இணையாமோ. அநுமான் இலங்கைக்குப் போய்ச் சேர்ந்ததும் என்ன செய்யலாமென்று ஆலோசிக்க அவ்வீரருக்கு அவகாசம்கொடுத்ததுபோல் அங்குச் சந்திரோதயத்தை வர்ணித்ததந்திரமொன்றே எவ்வளவோ வியப்பை உண்டாக்குமே. சீதாதேவி இராவணனுடன் சம்வாதஞ்செய்த கட்டம், இலங்காபுரிவர்ணனைக்கட்டம் இவைகளின் பெருமையைத்தான் என்ன சொல்லுகிறது? இவை நிற்க, சீதையை அநுமான் கண்ட சமயம் அப்பெண்மணி தற்கொலை செய்ய யத்தனித்தசமயம் அப்பொழுது அநுமான் சடிதியிற்சென்று காப்பாற்றவேண்டியதோ கடமை. அவ்வாறு செய்யின் இராவணன் மாயையால் குரங்கு வடிவங்கொண்டு வந்துவிட்டானென்று அப்பிராட்டி சத்தமிட்டால் தூதுவந்த காரியம் வீணாய்விடும். சமீபித்துச் செல்லாவிடிலோ பிராட்டியார் உயிர் நீப்பர். ஸ்திரீஹத்திதோஷமும் சம்பவிக்கும் வால்மீகி இவ்வித அவஸ்தையில் அநுமானைவைத்துப் பின்பு அதனினின்றும் அவரை விடுவித்த சாதுர்யமும் அழகும் சுந்தரகாண்டத்தின் 32-வது சர்க்கத்தைப் பார்க்கத் தெரியவரும். அநுமானின ஆழ்ந்த ஆலோசனையின் திறமும் புத்திக் கூர்மையும் விவேகமும் அப்பொழுதுதான் தெளிவாக விளங்க இடம்பெற்றன. அவர் தீர்க்காலோசனை பண்ணிக் கீழ்க்கூறும் வழியை அநுசரித்தார். தாம் ஏறியிருந்த சிம்சுபாவிருக்ஷத்தி லிருந்தபடியே யாரோ வேறொருவருக்குச் சொல்வதுபோல் தமக்குள்ளே மிருதுவாய் ஒரு கதை சொல்லத்தொடங்கினர். "தசரதர் என்ற ஒரு இராஜாதிராஜர் இருந்தார். அவர் குமாரர் ஸ்ரீராமர் லக்ஷ்மணர்

முதலிய நால்வர். ஸ்ரீராமர் தம் தந்தைசொற்படி காட்டுக்குத் தம்பியாகிய லக்ஷ்மணருடனும் மனைவியாகிய சீதையுடனும் சென்றார். அங்கே சீதையை அரக்கனொருவன் தூக்கிப்போனான். அத்தேவியை மீட்க ஸ்ரீராமர் வாலியைக்கொன்று சுக்கிரீவன் நட்பை அடைந்தார். சுக்கிரீவன் தன் வானரசேனைகளில் அநேகரைப் பல திக்கிலும் தேடவிட்டிருக்கிறான். அவர்களில் நானொருவன். சம்பாதியின் சொற்படி சீதையைத்தேட இவ்விலங்கைவந்தேன். அத்தேவியார் எங்கிருக்கிறாரோ தெரியவில்லையே" என்று சொல்வதைக்கேட்டதும் சீதாபிராட்டியார் தம் தலையைத் தூக்கி, எறிட்டுப்பார்க்க அநுமான் கீழிறங்கி அவரைச் சமீபிக்க, பிராட்டியாரும் அவரை மாயாவியான இராவணனெனக் கருதி அகன்றார். உடனே அநுமான் அவரை நமஸ்கரித்து அவருடைய சங்கையை ஒருவாறு முதலில் நீக்கினார். இவ்வளவு அழகாயும் இயல்பாயும் சீதையும் அநுமானும் சந்தித்ததை வால்மீகியைத் தவிர வேறெவர்தாம் வர்ணிக்கமுடியும். இவ்வாறு இவர்கள் சந்தித்ததும் முதலில் ஒருவரை யொருவர் நம்பாமல் பேசிப் பின்பு சிறிது சிறிதாய் நம்பிக்கை யுண்டாகச் செய்து முடிவில் அநுமான் ஸ்ரீராமருடைய கணையாழி மோதிரத்தைப் பிராட்டியாரிடங் கொடுத்துச் சூடாமணியைப்பெறுங் கட்டத்தின் அழக்குக்கு எதுதான் ஒப்பாகும்.

யுத்தகாண்டத்திலோ ஸ்ரீராமர் அவரவரைச் சேனையுடன் பிரயாணசன்னத்தப்படுத்தும் வீமரிசை இக்காலத்துச் சேனாதிபதிகள் செய்யும் ஏற்பாடுகளைக் காட்டிலும் மேலாய் விளங்கும். அது உண்மையோ அன்றோ என்பதை அவரவரே படித்தறிந்துகொள்ளலாம். விபீஷணர் சரணாகதி கட்டமும், இந்திரசித்து யுத்தகட்டமும், இராவணன் மாயா ராமனை வெட்டிக்காட்டியபொழுது சீதாதேவி பதைத்துத் துடித்துப் பிரலாபித்த கட்டமும், அநுமான் பிரமாஸ்திரத்தாலும் லக்ஷ்மணர் நாகாஸ்திரத்

தாலும் கட்டுண்டபொழுது ஸ்ரீராமர் துக்கிக்கும் கட்டங்களும், மூலபலச்சண்டையை வர்ணிக்கும் கட்டமும், பிராட்டியார் அக்கினிப்பிரவேசஞ்செய்த கட்டமும், பட்டாபிஷேக கட்டமும் மிகவும் வியக்கத்தக்கவை. இராமாயணத்தின் அழகனைத்தையும் இச்சிறு முகவுரையில் எடுத்துக் காட்டுவது அசாத்தியமான விஷயமானதால் சுருங்கச் சொல்லலாயிற்று.

---

## இக்காவியத்தில் வரும் பிரசித்தமான பாத்திரங்கள்.

**தசரதர்.** உலகத்தில் செங்கோல் செலுத்தும் அரசன் இவ்வாறு அரசு புரியவேண்டு மென்பதற்கு இவரே நிதர்சனமாவர். அந்தகரிஷி புத்திரன் விஷயமாய்த் தாம் மதிமயங்கிச் செய்த குற்றத்துக்காக இவர் பரிதபிக்கும் குணத்தால் அநீதியில் இவருக்கிருந்த துடி துடிப்பும், விசுவாமித்திரர் இராமலக்ஷ்மணர்களைத் தம்முடன் கூட்டியனுப்புமாறு வேண்ட அப்பொழுது அவர்களைவிட்டுப் பிரிய மனமின்றி அவருடன் பலவிதமாய்ச் சம்வாதம் செய்தாலும் உடனே வசிஷ்டர் கட்டளையைச் சிரமேற்கொண்டு அவர்கள் இருவரையும் கூட்டி யனுப்பியதால் இவரது குரு பக்தியும், ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகம் செய்ய உத்தேசித்துப் பெருஞ் சபைகூட்டி மந்திரிகளுடனும் மற்ற அரசர்களுடனும் குடிகளுடனும் தீர்க்காலோசனை செய்ததால் இவர் தம் உயர்பதவியைப் பற்றிச் சற்றும் மதியாமல் "குடிகள் க்ஷேமத்துக்கே அரசன்" என்ற மேலான கொள்கையை முற்றும் அறிந்தவராய் ஜனங்களிடம் இவர் வைத்திருந்த மரியாதையும் கௌரவமும் இவருடைய நீதியுள்ள ஆளுகையும், கைகேயி கேட்ட வரங்களைச் சிறிதும் சம்மதமின்றிக் கொடுத்ததால் இவர் சத்தியத்தினிடம் வைத்த அத்தியந்த பயபக்தியும், இராமனைப் பிரியச் சகியாதவராய் இவர் தம் உயிரைத் துறந்ததால் இவருக்கிருந்த அபரிமிதமான புத்திரவாஞ்சையும் விளங்குகின்றன. உலகத்தில் முதியோர் இளம் பருவமுள்ள இளையாள் மோகவலையிற் சிக்கி முன்பின்போக

இடமின்றி மதிமயங்கிப் பலவிதமாகச் சங்கடமுற்று உழல்வதற்கும் இவரே நல்ல உதாரணமாவர்.

**ஸ்ரீராமர்.** கதாநாயகராகிய இம்மகானைப்போல் அவ்வளவு பரிபூர்ணகுணமுள்ளவர் வேறு எந்த நூலிலும் பேசப் படவில்லை. தம் கம்பீரமான நடையாலேயே உலகத்தாருக் குப் பல மேலான குணங்களைப் பற்பல சமயங்களில் நடத்திக்காட்டிய உத்தமபுருஷர் இவரே. இவரது உண் மையும், உறுதியும், வணக்கமும், ஞானமும், கல்வியும், செல்வமும், சிறப்பும், அழகும், ஆண்மையும், நயமும், நாகரிகமும், வீரமும், வெற்றியும், தயையும், சாந்த மும், அன்பும், அருளும், ஒழுக்கமும், உயர்வும், வேறு எந்தக் கதாநாயகனிடத்திலும் காண்பதரிது. தாடகை சங்கா ரத்தில் விசுவாமித்திரர் வாக்குக்கு மேலான கௌரவம் கொடுத்ததும், கேவலம் வேடனாகிய குகனையும் உத்தம சிநேகிதனாகக் கொண்டாடியதும், தம் பிராணநாயகிக்குத் தீங்கிழைத்த பாதகனாகிய காகாசுரனிடத்தும் கருணை காட்டி அவனைப் பொறுத்தருளியதும், "கைக்கெட்டி யது வாய்க்கெட்டவில்லை" என்றபடி தமக்குக் கிடைத்த பட்டத்தைப் பறித்ததுமன்றித் தம்மைக் காட்டுக்கும் துரத்தின சிற்றன்னையிடத்துச் சற்றேனும் வெறுப்பின்றி "தந்தையும் தாயும் நீரே தலைநின்றேன் பணிமின்" என்று தம்மைப்பெற்ற தாயினிடத்துள்ளவளவிலும் பலமடங்காக அன்புகாட்டியதும், ஜடாயு செய்த நன் றியை மறவாது அவரைத் தம் தந்தையினும் மேலாக மதித்து அவருக்கு உத்தரகிரியை செய்ததும், தம் உயிர்க்கு உயிரான நாயகியைத் தூக்கிச்சென்று சிறை யிட்ட கொடியோனாகிய இராவணனிடத்தும் கருணை கூர்ந்து முடிவுவரை அவனுடைய பிழைபொறுப்பதாக வாக்களித்ததும், சரணமடைந்த விபீஷணரைத் தம் நிழல் போன்ற தம்பியாகிய லக்ஷ்மணனும், சுக்கிரீவன் முதலிய அருமை நண்பரும் பலவாறு சொல்லித்தடுத்தும் மனங் கலங்காமல் எப்படிப்பட்டவராயினும் சரணம் புகுந்த

வரைக் காப்பாற்றுவதே தாம் மேற்கொண்ட விரதம் என்று உத்தம சிநேகிதராக ஏற்றுக்கொண்டு இலங்கையை ஜயித்து அவ்விபீஷணருக்கே பட்டங் கட்டியதும், எவ்வளவு கம்பீர குணங்களைக் காட்டுகின்றன. உலகத்தில் உத்தம புருஷராயிருக்க விரும்புவோர் இம்மகானையே பின்பற்றி இவரைப்போல் ஏகபத்நீ விரதமுடையவராயிருக்கக்கடவர்.

சீதாபிராட்டியார். இராமாயண கதாநாயகியாகிய இவர் உத்தமிகளுக்கெல்லாம் உத்தமி ; மடந்தைமார்களின் திலகம் ; உவர்க்கடலன்றிப் பாற்கடல் உதவிய அமுதம் ; அருந்ததியனையாள் ; அமுதினும் இனியாள். மாமியார் மாமனார் தம் குலவிளக்கென்றும்; ஊரார் உத்தம சீலியென்றும் கொண்டாடும் வண்ணம் குலக்கொழுந்தாய்க் குணபூஷணியாய் விளங்கி வந்தனர். செல்வத்திற் பிறந்து செல்வத்தில் வளர்ந்து செல்வத்திற் புகுந்து வாழ்ந்து சகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டிருக்குங்கால் வனம்புகத் தீர்மானித்து இராமர் செலவு பெறுதற்காக இவரிருக்கும் அந்தப்புரத்துக்குச் செல்ல, இவ்வுத்தமி, திடீரென்று ஞானோதயமாகி உலகப்பற்றை முற்றும் துறந்து செல்லும் துறவியைப்போல், அவை அனைத்தையும் துறந்து தாமும் கூட வருவதாகச் சொல்ல, அவர் "பஞ்சின்மென் தளிரடிப் பாவாய், கல்லிலும் முள்ளிலும் நின் சேவடி நடவாதே. * அருக்கனும் எரியுமே" என, அம்மாதரசும் "நின் பிரிவினும் சுடுமோ" என, ஸ்ரீராமரும் "நீ எல்லையற்ற துன்பம் தருவாய்" என, சீதாதேவி கோபித்து நோக்க, இராமர் மறுவார்த்தை பேசாதிருந்தனர். இவ்வாறு தம் பிராணநாயகரிடம் வற்புறுத்தி வாதாடினது இவருடைய மனநிலைமையின் கம்பீர சுபாவத்தையும், செருக்கின்மையையும், செல்வத்தைக்குறித்து இவருக்குண்டான உண்மையான கருத்தையும் தெளிவாய் விளக்குகின்றதன்றோ ; உயிர்க்குயி

---

* சூரியன்.

ரான தம் பர்த்தா சகல வைபவங்களையும் இழந்து காடும் மேடும் சென்று காய் கனி கிழங்குகளைப் புசித்துக் கல்லி லும் காட்டிலும் படுத்துக் கணக்கில்லாத துன்பங்கள் அனுபவிக்கத் தாம் மாத்திரம் உல்லாசமாய்ப் பட்டுப் பட் டாடைகள் உடுத்துப் பஞ்சபக்ஷ்ய பரமான்னம் புசித்து ஹம்ஸதூலிகாமஞ்சங்களிட்ட அடுக்கு மெத்தைக் கட்டி லில் துயின்று சுகம் அனுபவிக்க அவ்வுத்தமியின் மனம் எவ்வாறு சகிக்கும்? "துடியாப்பெண்டீர் மடியின் நெருப்பு" அன்றோ? பஞ்சவடி தீரத்தில் பருவச்சோலை யில் வசிக்குங்கால், சீலமின்னதென்று அருந்ததிக்கு அரு ளிய திருவாகிய இவர், தாமிருந்த இடத்தைக் கண்டவர் மனமுங் கண்ணும் கவர்ந்திட வனப்புவாய்ந்த சிங்காரம் தோட்டமாகச் செய்தும், பற்பல பூஞ்செடிகளை வைத் துக் கோதாவரியின் புண்ணிய தீர்த்தத்தை எடுத்து அவைகளுக்கு வார்த்தும், அவைகளினின்றும் நறு மலர் கொய்து அம்மலர்கொண்டு விமரிசையாக மாலை தொடுத்துத் தம் நாயகன் பக்திபூர்வமாகச்செய்யும் பூஜைக்கு உதவியும், இவைபோன்ற பல பணிவிடை களைச் செய்தும், நாயகன் மெச்சும்படி நாவிற்கு உருசியானவைகளைப் பாகம்பண்ணி அமுதூட்டியும், அத்தனிக்காட்டில் தம் பொழுது போக்குக்காகப் பிடித்துவைத்து வளர்த்து வந்த இளமையான மான்களுக் கும் பைங்கிளிகளுக்கும் உணவு ஊட்டியும், அவைக ளுடன் கொஞ்சி விளையாடியும் இன்பமாய்க் காலங்கழித் துப் பின்தூங்கி முன்னெழுந்து எப்பொழுதும் தம்பர்த் தாவின் பணிவிடையிலேயே கண்ணுயிருந்து இருவரும் உயிரும் உடலும் போலவும், எள்ளும் எண்ணெயும் போலவும், நகமும் சதையும் போலவும், பூவும் மணமும் போலவும் வாழ்ந்த இன்புற்ற வாழ்வைக்குறித்து எவர் தாம் பொறாமை கொள்ளார்? "இனிது இனிது ஏகாந் தம் இனிது" என்ற ஆன்றோர் வாக்குக் கிணங்கப் பாலுடைமொழியாளும் பகலவனனையானும் நிர்மலமான

அப்புண்ணிய தீர்த்தக்கரையில் வாசஞ்செய்ததை நினைத்த மாத்திரத்திலேயே மனங் குளிர்ந்து மகிழ்வுறுகிற தென்றால் அதன் வாசம் எவ்வளவோ பங்கு மனோகரமாயிருக்கு மென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? மேற்கூறியபடி வனம்புகுங்கால் நடந்த சம்வாதம் இவருடைய நாயக பக்தியையும், வனம்புகுந்த பின்னர் அரக்கர்களை அழிக்கும் விஷயத்தில் தகுந்த குற்றங் கண்டே அவர்களைத் தண்டித்தல் தகுதியென்று இவர் தம் பர்த்தாவுக்கு விநயமாய் ஆலோசனை சொன்னது இவருடைய நடுநிலைமையையும், அசோகவனத்திற் சிறையிருக்கையில் இச்சக வார்த்தை பேசிவந்த கொடிய இராவணனைச் சிறிதும் லக்ஷ்யம் செய்யாமல் " அடா! ராக்ஷசப்பதரே, இதோ உன் தலையைக் கணப்பொழுதில் ஆயிரம் துணிக்கையாய்ச் செய்ய எனக்குச் சக்தியுண்டு: ஆயினும் என் பிராணநாதர் கையால் நீ மாண்டாயென்ற புகழ் அவருக்கு உண்டாகும் வண்ணமன்றோ சும்மாவிருக்கிறேன்" என்று சொன்னது, இவரது அருமையான திடசித்தத்தையும், பர்த்தாவினிடத்தில் இவருக்கிருந்த மனோன்னத மதிப்பையும், இராவண சங்காரத்தின் பின்னர் அக்கினிப் பிரவேசஞ் செய்ய நேரிட்டபொழுது சற்றும் மனம் நோவாமல் பரமானந்தத்துடன் அக்கினி பகவானும் அச்சமுறும்படி சென்றது இவரது உத்தமோத்தமமாகிய திரிகரண சுத்தியையும், அசோகவனத்தில் இவரை வருத்திய ராக்ஷசிகளை நசுக்க எண்ணங்கொண்ட அநுமானைப் பார்த்து " மாருதீ, அவ்வெண்ணத்தை நீக்குக. அவர்கள் மேல் குற்றம்யாது? அவர்கள் தாமாகவா வருத்தினார்கள், யஜமானனுக்காகவன்றோ வருத்தினர்; அவனிடம் அவர்கள் வாங்கியுண்ட அன்னமன்றோ அவர்களை அவ்வாறு செய்யச்சொன்னது" என்று அவர்களுக்காக வாதாடியது இவரது கருணையின் மேன்மையையும் எவ்வளவோ கம்பீரமாய் எடுத்துக் காட்டுகின்றன. ஒடுக்க வணக்கமும், மரியாதையும், பெருமையிற்றாழ்வும்,

தாழ்விற்பெருமையும், புருஷ பக்தியும், புனித நடையும், பொறுமையுடன் கஷ்டங்களைச் சகிக்கும் குணமும், அற்புத கிருபையும் ஆகிய இவ்வுத்தம குணங்கள் இந்த மாத ரசியினிடத்தில் விளங்குமாறுபோல் வேறு எவரிடத்தும் காணக்கிடையா. "சீதைபிறக்க இலங்கையழிய" என்றும், "சீதை யென்றால் துக்கம்போம்" என்றும் பிரதி தினம் சொல்லிவரும் நம் பெண்கள் இவ்வுத்தமியின் கம்பீர குணங்களைப் பின்பற்றிப் பிறந்தகுலமும் புகுந்த குலமும் பெருமைபெற விளங்கும்படி வாழக்கடவர்.

**லக்ஷ்மணர்.** இவரை இராமருடைய நிழலென்றே கூற லாம். "ஜ்யேஷ்டப்ராதா பித்ருஸம:" என்ற பெரி யோர் வாக்கை எவரும் மதிக்கும் வண்ணம் கடைப் பிடித்து நடந்து காட்டிய உத்தம குண சீலர் இவரே. இராமர் வனம் புகுங்கால் பக்தி மிகுதியுடன் தாமும் கூடச்செல்லுவதற்குப் பிராட்டியாரைப்போல வாதாடி முன்னின்றவர். "இராமனிருக்கும் இடமே அயோத்தி. அவனே தசரதர். சீதையே நின் அன்னை" என்று சுமித் திரா தேவியாகிய தம் தாய் சொன்ன சொற்கடவாமல் ஆகாரமின்றிக் காற்றைப் புசித்துக்கொண்டு அகோராத்தி ரம் தமையனுக்குப் பணிவிடைசெய்து வந்த உத்தமத் தம்பியார். "இராமன் குழந்தைப் பருவத்தில் லக்ஷ்ம ணன் பக்கத்திலில்லாமல் தூங்குகிறதே இல்லை" யென் றால் இவ்விருவர் நேசத்தை எடுத்துக் காட்டவும் அவசி யமோ? இவர் தாம் ஒரு சமயத்தில் சீதாபிராட்டியாரின் திருவடியைத் தவிர அவர் திருமேனியின் வேறு ஒரு பாகத்தையும் யான் பார்த்ததே யில்லையென்று சொன்னது இவருடைய உத்தம குணத்தையும் பரிசுத்தமான மன நிலைமையையும் எவ்வளவு அழகாய் எடுத்துக்காட்டுகி றது? இஃதொன்றே இவர் பெருமையைக் குறிக்கப் போதுமான சாக்ஷியாகுமே. இரட்டைப் பிள்ளைகளுக்கு இராமலக்ஷ்மணர் என்று பெயரிடுவதும், சகோதர வாஞ் சைக்கும் ஒற்றுமைக்கும் இராமலக்ஷ்மணரையே உபமா

னமாகக் கூறுவதும் உலகவழக்கமன்றோ ?

**பரதர்.** இவர் லக்ஷ்மணரினும் பலமடங்கு இராமரிடம் பக்தி யுடையவர். தம் தாய் தேடிவைத்த சர்வோத்கிருஷ்டமான பட்டத்தை இவர் சிறிதேனும் விரும்பாது தாயை நிந்தித்துத் தவவேடங் கொண்டு கால்நடையாய் நடந்து கானகஞ்சென்று ஸ்ரீராமரை அயோத்திக்குத் திரும்பி வந்து பட்டம் பெற்றருளும்படி பணிந்து கேட்டுக்கொண்டதும், ஸ்ரீராமர் இவரைச் சமாதானஞ் செய்து தம் பாதுகையைக் கொடுத்தனுப்பியதும், அதனை இவர் சிரமேற் கொண்டு சிங்காசனத்தின்மீது வைத்து இராமராகவே மதித்துப் பூஜித்து இராச்சிய காரியங்களைத் தம்பி சத்துருக்கனனால் நடப்பித்துத் தவவேடங் கொண்ட கோலத்துடன் நந்திக்கிராமத்தில் சந்திரன்வரவை எதிர்பார்த்து நிற்கும் சகோர பக்ஷிபோல் இராமன்வரவை எதிர்பார்த்து நாளெண்ணிக் கொண்டிருந்ததும் பிராதிருபக்தியின் பெருமையை எவ்வளவு நன்றாய்க் காட்டுகின்றன ?

"எத்தாயா வயிற்றினும் பின்பிறந்தார்க ளெல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தம னாதலுண்டோ!"

இவைகளைப் படிக்கும் சகோதரர் தாம் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவு செய்துகொண்டிருந்த போதிலும் அவற்றை நீக்கி ஒருமனப்பட்டு நடக்க முயலவேண்டுமென்ற நற்புத்தியை அடைவாராக.

**அநுமான்.** இவரைப்போன்ற தூதலக்ஷணம் முழுவதும் அமைந்த தூதர் ஒருவர் இவ்வுலகின்கண் உண்டோ ? யஜமானனிடத்தில் அத்தியந்த அந்தரங்க பக்தியை யுடையவரும், சமயோசித புத்தியுக்தி யுடையவரும், எடுத்த காரியத்தை இனிது முடிக்கும் திறமையுடையவரும், வித்தையிலும் பலபராக்கிரமத்திலும் சர்வ சிரேஷ்டராயினும் அவற்றைப்பற்றிச் சற்றும் பெருமை பாராட்டாது ஒன்றும் தெரியாதவர்போல் அடக்கமுடையவராய்ச் சிறிதும் கர்வமில்லாதவரும், இவர்போல வேறெவரு மிருந்ததில்லை

யென்றே சொல்லலாம். வால்மீகிமகாரிஷி இவரிடத்தில் தூதலக்ஷணத்தை வர்ணித்துக் காட்டியதுபோல் வேறு எவரும் எவ்விடத்தும் அவ்வளவு அழகாகப் பேசினதே யில்லை. இராச்சியமிழந்த சுக்கிரீவனிடத்தில் இவர் காட்டிய அற்புத விசுவாசமும், அசோக வனத்தில் பிராட்டியாரிடம் இவர் பேசிய வினயமும், விபீஷண சரணாகதி சமயத்தில் இவர் மிக்க ஆராய்ச்சியுடன் சொன்ன ஆலோசனையும், நிஷ்காமமாய் இவர் செய்த இராமகைங்கரியங்களும், ஸ்ரீராமபிரானிடத்து இவர் இடையறாதுவைத்த பக்தியும் மிக்க வியப்பைத் தரத்தக்கவை. அன்றியும் ஸ்ரீ ராமாயணபடனம் நடக்குமிடமெல்லாம் இவர் வந்திருந்து இராமகதாமிருதத்தைப் பானம் பண்ணிக்கொண்டிருக்கிறார் என்று இவருடைய இராம பக்தியைக் கொண்டாடுவது வழக்கம். இவரைச் சிரஞ்சீவிகள் எழுவரில் ஒருவரென்பர்.

**இராவணன்.** இந்த ராக்ஷஸ சிரேஷ்டன் இலங்கைக்கு அதிபதி. மிக்ககடுந்தவம் புரிந்து பிரமன் முதலியவரிடம் அரிய பெரிய வரங்கள் பெற்றவன். தேவர் முதலியோரை நடுநடுங்கப் புரிந்து அவர்கள் தனக்குப் பணிவிடை செய்யும்படி செய்த புஜபல பராக்கிரமசாலி பெரியோர் புத்தியைக் கேளாத தான்தோன்றி. பிராட்டியாரைச் சந்நியாசிவேடம்பூண்டு வஞ்சித்துத் தூக்கிச்சென்று கடுஞ்சிறையிட்ட கொடிய காலாந்தகன். இவன் புத்திரமித்திரகளத்திராதிகள் உற்றார் பெற்றார் முதலிய சகல சம்பத்துக்களையும் இழந்து இராம பாணத்துக்கு இரையாகி மனைவியாகிய மண்டோதரி புலம்பத் தண்டகாரணியரிஷிகள் மனக்கவலை நீங்க இறந்தொழிந்தான்.

**விபீஷணர்.** இவர் இராவணன் தம்பி. "நித்தியதை" கேட்கப்போய் "நித்திரை" என்றே குழறி அதனால் தூக்கவெறிகொண்ட கும்பகர்ணனுக்கும் இளையவர். தமையன் செய்கிற கொடுஞ் செயல்களைக் கேட்கவும் மனஞ்சகியாமல் காலாக்கினியின் மத்தியிலிருந்து விடு

பட்டுக் கற்பகதருநிழலுக்கு ஓடுபவன்போல் இராமர் திருவடியைச் சரண்புகுந்த பரமபாகவத சிகாமணி. இராமரால் இலங்கா பட்டாபிஷேகம் பெற்றவர். அசோகவனத்தின் கண்ணே பிராட்டியாருக்குச் சிறிது ஆறுதலுண்டாக்கி அந்தரங்கத் தோழியாயிருந்து பரம உபகாரஞ்செய்துவந்த த்ரிஜடையின் தந்தை. இவரையும் சிரஞ்சீவிகள் எழுவரில் ஒருவரென்பர்.

**வசிஷ்டர்.** இம்மகான் சூரியகுல குருசிரேஷ்டர். உத்தமோத்தமியாகிய அருந்ததிக்குக் கணவர். இல்லற தர்மத்தை வழுவாது நடத்துவோர் பரமயோகிகளும துறவிகளும் அடையக்கூடிய மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடைவார் என்பதற்கு நிதர்சனமாயிருந்த முனி சிரேஷ்டர். இன்றைக்கும் நாம் கல்யாண காலத்தில் நக்ஷத்திர ரூபமாயிருக்கிற இவ்வுத்தமரை தரிசித்து வருகின்றோம். இக்ஷ்வாகுவம்ச ராஜர்களுக்குப் பரம்பரையாய்க் குலகுருவாகவும் முதன் மந்திரியாகவுமிருந்து வைதிகலௌகிக காரியங்களை வெகுவிமரிசையாய் நடத்திவந்தவர். இராஜதந்திர நிபுணரென்று தற்காலத்தவர் கொண்டாடும் காலஞ்சென்ற கிழமந்திரியாகிய கிளாட்ஸ்டன் அந்தியகாலத்தில் சிறிது நிவிருத்திமார்க்கத்தில் பிரவர்த்தித்ததையே உலகம்புகழு மென்றால் இம்முனிசிரேஷ்டரை நாம் எவ்வளவுதான் புகழ்தல்கூடாது. எத்தனையோ தலைமுறையாய் வைதிகலௌகிக தர்மங்களைத் தேவர்களும் மெச்ச வெகு சாதுரியமாயும் மகாசாந்தமாயும் இந்த மகாமுனிவர் நடத்திவந்ததை ஆராயுங்கால் அம்மம்மா! என்ன சொல்கின்றது! அணுவுக்கும் மேருவுக்கும் ஈடென்போமா? மின்மினிக்கும் சூரியனுக்கும் ஈடென்போமா? அல்லது, சிறிய ஒட்டிலடங்கிய ஜலத்துக்கும் சமுத்திரத்துக்கும் தான் ஈடென்போமா? தவசிரேஷ்டராகிய விசுவாமித்திரரும் இவர் வாக்காலன்றோ பிரமரிஷி என்ற பட்டப்பெயரைச் சொல்ல விரும்பினர். அஷ்டாதச ஸ்மிருதிகளில் ஒன்றை இம்மகான் எழுதியதாகக் கூறுவர்.

**வாலி சுக்கிரீவர்.** வாலி யென்கிற வாநரசிரேஷ்டன் கிஷ்கிந்தையின் அரசன். இராவணனை எட்டுக்காற்பூச்சியைப் போல் தன் குழந்தையாகிய அங்கதனது தொட்டிலில் கட்டின அற்புத பலசாலி. யுத்தஞ் செய்யுங்கால் எதிரியின் பாதி பலம் தன்னையடைய வரம்பெற்றவன். இதனாலேயே இராமர் இவனை ஒளித்துக் கொன்றனரென்று கூறுவார்கள். இவன் ஓர் அசுரனைக் கொல்வதற்குப் பாதாளத்தில் துரத்திச் சென்ற பொழுது பிலத்தின் முகத்துவாரத்தில் தமபியாகிய சுக்கிரீவனைக் காவல் வைத்துப் போனான். போனவன் வெகு காலம் திரும்பிவாராமையால் சுக்கிரீவன் அதனை மூடிவிட்டுக் கிஷ்கிந்தை சென்று பிறர் வேண்டுகோளால் முடிசூட்டப்பெற்று அரசாண்டு வந்தான். வாலி அவ்வசுரனைக் கொன்று திரும்பிப் பிலத்தண்டை வந்தபொழுது அது அடைபட்டிருக்கக் கண்டு கோபமுற்று அதனைத் தள்ளித்திறந்து கொண்டு வெளியே வந்தான். சுக்கிரீவன் தன் சிங்காசனத்தின்மீது வீற்றிருந்து இராச்சியபாரஞ் செலுத்துவதைப் பார்த்து வெகுண்டு உடனே அவனை அடித்துத் துரத்த, அவன் விசுவாசமுள்ள மந்திரியாகிய அநுமானுடன் ரிசியமுக பர்வதத்தின்மேலேறி வாசஞ்செய்தான். பின்பு ஸ்ரீராமர் அவ்வழியே வர அவரிடம் நட்புக் கொண்டு அவரைக்கொண்டு வாலியைக் கொல்வித்து மீண்டும் கிஷ்கிந்தைக்கு அதிபதியாகி அரசாண்டு வந்தான். இச்சுக்கிரீவனே தன் 72 வெள்ளம் வானரசேனைகளுடன் ஸ்ரீராமருக்குப் பிராட்டியாரைத்தேடின விஷயத்திலும் இராவணனோடு யுத்தம் பண்ணினதிலும் மேலான உதவி புரிந்தவன். இவன் சேனையை அடக்கி ஆளும் விஷயத்தில் மிகவும் சமர்த்தன். அதனால் இப்பொழுதும் உலகத்தார் "சுக்கிரீவ ஆஜ்ஞை" என்ற பழமொழியை வழங்குகிறார்கள்!

**கைகேயி.** இம்மாது தசரதமகாராஜனுக்குப் பிரியநாயகி; பரதனுக்குத் தாய். முதலில் பரதனைக்காட்டிலும் இராம

னிடத்தில் அதிக பிரீதி வைத்திருந்தவள். கூனியென்று சொல்லப்படும் மந்தரையாகிய தனது தாதியின் துர்ப்போதனையால் இவள் இராமனைக் காட்டுக்கு அனுப்பினாள். தசரதரை வெகு பாடு படுத்தி அவர் மரணத்துக்குக் காரணமாயிருந்தவள் இவளே. பரதர் இவளைத் தாயென்று மதியாமல் பலவாறு நிந்தித்தனர். இராமர் இவளிடத்தில் தம் தாயாகிய கௌஸல்யாதேவியிடத்திலும் அத்தியந்தப் பிரீதி வைத்திருந்தார் என்பது, அவர் காட்டிலிருந்து திரும்பி வந்தபிறகு முதல் முதல் இவளுடைய அரண்மனைக்கே சென்று இவளை நமஸ்கரித்துக் கண்ணியப்படுத்தினதால், அறியப்படும்.

**சுமந்திரர்.** இவர் "ஆலம் வீழ்போலும் அமைச்சனும்" என்ற பெரியோர்வாக்குக்கு இணங்கச் சகல மந்திரி லக்ஷணமும் பொருந்திக் குடிகளுக்கு மிகவும் ஆதரவாயிருந்தவர்; சூரியகுல மந்திரியாயிருந்து இராச்சிய பாரத்தை வெகு சீராய் வகித்து வந்தவர்.

---

*இராமாயணத்தில் எல்லாருக்கும் உள்ள பக்தி.*

இவ்வளவு மாண்புள்ள இச்சிரேஷ்ட காவியம் சில வருஷங்களுக்கு முன்வரை வெகு பக்தி சிரத்தையுடன் பலராலும் படனம் செய்யப்பட்டு வந்தது. ஒரு முறை ஆதியோடந்தமாய் அர்த்தத்துடன் வாசித்து முடிக்க அவரவர் சக்திக்குத் தக்கபடி 6 மாதம் முதல் ஒரு வருஷம் வரை செல்லும். 4 மாதங்களிலும் சிலர் முடித்திருக்கிறார்கள். எந்த இடத்தில் எப்படிப்பட்டவர் படித்தாலும் எட்டு மிரண்டும் அறியாத இளம்பிள்ளைகள், ஸ்திரீகள் முதல் மகாபண்டித சிரோமணிகள் ஈறாகச் சகல ஜனங்களும் இக்கதையை வெகு நேரம் விழித்திருந்து மிக்க பக்தி சிரத்தையுடன் கேட்பது வழக்கம். பிரபுக்களும் பாமரஜனங்களின் கல்வியறிவு அபிவிருத்தியைக் கருதியும், ஜீவகாருண்யத்தைக் கொண்டும் பல பண்டிதர்கள் மூலமாய் இத்திவ்விய கதாப்பிரசங்கங்களை வெகு

தானதானியச் செலவு செய்து பரிபாலித்து வந்தனர். அதனால் தான் நம் தேசத்தில் பலர் கையெழுத்தும் வைக் கத்தெரியாத நிரக்ஷரகுக்ஷிகளாயிருப்பினும் விவேக ஞானி யராயிரார்கள். நம் தாய்மாரும் பாட்டிமாரும் எத்தனை சமயங் களில் இராமாயண திருஷ்டாந்தங்கள் கூறி யுக்தி புத்தியாய் நாம் அதிசயிக்கும் வண்ணம் ஆலோசனை சொல்லக் கேட்டிருக் கிறோம். நம் நாட்டு அறிவு விருத்திக்கும் சன்மார்க்கத்துக்கும் இராமாயண பாரத இதிகாசங்களே முக்கிய காரணம். அறிவின் பயனெல்லாம் ஜனங்களின் மன இருளைப் போக்கித் தருமமும் சத்தியமுமான வழியிலே நடத்துவதில் அடங்கும். மூடர்களை ஞானமுள்ளவர்களாக்கி நல்வழிப்படுத்தி நடக்கைகளில் உத்த மர்களாகச் செய்வதே உண்மையான படிப்பின் லக்ஷணமாகும். அவ்வாறின்றி எழுதப்படிக்கக் கற்றுக் கொடுப்பது மாத்திரம் உண்மையான படிப்பாக மாட்டாது. இந்த நுட்பம் அறிந்தே திரிகாலஞானிகளாகிய நம் பெரியோர்கள் இவ்விதிகாசத்துக்கு இவ்வளவு கௌரவம் கொடுத்துவந்தார்கள். தனித்தனியாக வும், குடும்பம் குடும்பமாகவும், தெருத்தெருவாகவும், கிராமம் கிராமமாகவும், பட்டணம் பட்டணமாகவும் இந்தத் திவ்விய இதிகாசத்தின் இனிய பிரசங்கங்களைக் கேட்டுக் கோடானு கோடி ஜனங்கள் வெகு பலன் அடைந்து குதூகலித்து வந்தார் கள். அப்படிப்பட்ட பிரசங்கங்கள் வரவரக் கிருஷ்ணபக்ஷத் துச் சந்திரன் போல் க்ஷீணகதியடைந்து வருகின்றன. பிரபுக் களும் முன்போல் உதாரமாய்ப் பரிபாலிப்பதைக் கொஞ்சம் கைவிடுகிறார்கள். பண்டிதர்களும் பக்தியையும், ஜீவகாருணியத் தையும், பரோபகார சிந்தையையும் கைவிட்டு அசிரத்தை அடையத் தொடங்கிவிட்டனர். நம் ஜனங்களும் இதனிடத்தில் இருக்கவேண்டிய அத்தியந்த பக்திசிரத்தையையும் கேட்டு ஆனந்திக்கவேண்டுமென்ற பிரீதியையும் தினேதினே சொற்பம் சொற்பமாய் இழந்து லோகவியாபாரக் கடலில் முழுகியிருக்கி றார்கள். இந்தத் திவ்வியகதாபடனம் இவ்வாறு சீர்குலையும்படி பார்த்துவருவது தருமமோ? அவரவர் தம்தம் கடமையைச் சரிவரச் செய்வதன்றோ உத்தமர்களின் லக்ஷணம்? இவ்வினிய

கிரந்தத்தை எல்லோரும் அறியவேண்டியதோ அவசியம். ஸம்ஸ்கிருத அப்பியாசமில்லாதவர்கள் பிறர் உதவியைக்கொண்டே அறியவேண்டியிருக்கிறது. எல்லோரும் பண்டிதர்களுக்குப் பொருள் கொடுத்துக் கேட்கச் சக்தியுள்ளவரல்லர். போதுமான அவகாசமும் கிட்டுவதரிது. ஆகையால் இதனை மொழிபெயர்த்தால் பலருக்கும் உபயோகமாயிருக்குமென்று கருதிப் பரோபகார சிந்தையுடன் மொழிபெயர்க்கத் தொடங்கினோம். கூட்டியும் குறைத்தும் மொழிபெயர்க்காமல் கறந்தபால் கறந்த வண்ணம் வால்மீகி சொன்னவாறே தமிழில் எழுதி யிருக்கின்றோம். மேலும் ஸம்ஸ்கிருத ராமாயணம்போலவே இதுவும் பாராயணத்துக்கு உபயோகப்படவேண்டுமென்பது நம்கருத்து. இம்மொழிபெயர்ப்புச் சிறு குழந்தைகளுக்கும் உதவியாக எழுதப்பட்டிருக்கிறபடியால் இதில் சிருங்காரரஸம் கொஞ்சமாவது எடுத்துக்காட்டக் கூடாதென்று கருதி அவ்வாறு வால்மீகத்தில், வந்திருக்கும் கங்காவதாரம் அகல்யாசாபம் முதலிய கட்டங்களைக் கொஞ்சம் சுருக்கி எழுதியிருக்கிறோம். இவ்வித கட்டங்கள் பாலகாண்டத்தில் இரண்டோர் இடங்களில் இருக்கின்றன. மற்றைய காண்டங்களி லில்லை.

இம்மொழிபெயர்ப்பின் முக்கிய கருத்து.

நம் தேச அபிவிருத்தியையும் சந்மார்க்க அபிவிருத்தியையும் கருதிய ஸ்திரீ புருஷர்கள் அனைவரும் இளையோராயினும் முதியோராயினும் இப்புத்தகத்தை ஒரு பூஷணமாக எண்ணி வாங்கிப்படித்து இம்மகா கிரந்தத்தின் அருமை பெருமையைப் பாராட்டி ஆனந்திப்பார்களே யானால் நாமும் நம் பெருமுயற்சி பயனடைந்ததாகக் கருதுவோம். அவர்களும் சகல போகங்களும் அனுபவித்து இராமகிருபையால் சுகமுறுவர்கள் என்பது திண்ணம். “ஸர்வேஜநாஸ் ஸுகிநோ பவந்து” “ததாஸ்து.”

திருவல்லிக்கேணி
1900ஆ டிசம்பர்மீ 1வ. } ச. ம. நடேச சாஸ்திரி.

# இராமாயண பாராயணக் கிரமம்.

## விக்நேச்வரத்யாநம்.

வெள்ளைக்கலையுடுத்தவரும், எங்கும் வியாபித்தவரும், சந்திரன் போன்ற வர்ணத்தை உடையவரும், நான்கு கைகளுள்ளவருமான யானை முகக்கடவுளை எல்லா விக்கினங்களும் நீங்கும் பொருட்டுச் சிந்தைசெய்வாம். கருதிய தொழில் கைகூடும் பொருட்டு எவர் எல்லாத் தேவர்களாலும் முதலில் பூஜிக்கப் படுகின்றனரோ அந்தத் துன்பந் துடைப்பவராகிய கணபதிக்கு வணக்கம் செய்வாம்.

## விஷ்வக்ஸேநத்யாநம்.

எவருடைய சபையிலிருக்கின்றதனால் கஜானனர் முதலிய பரிவார தேவர்களும் விக்கினங்களை முற்றிலும் நீக்குகின்றவராய் விளங்குகின்றனரோ அவ்விஷ்வக்ஸேநரை நமஸ்கரிக்கின்றேன்.

## ஸரஸ்வதிப்ரார்த்தனை.

ஒருகரத்தில் படிகமணிமாலை, ஒருகரத்தில் வெண்டாமரை, ஒருகரத்தில் கிளி, ஒரு கரத்தில் புஸ்தகம் இவைகளைத் தரித்து நான்கு கரங்களுடன் விளங்கிக்கொண்டு குருக்கத்தி, சந்திரன், சங்கு, ஸ்படிகம் இவையொத்த நிறத்துடன் விளங்குகின்ற வாக்தேவதையாகிய கலைமகள் என் முகத்தில் கருணைகூர்ந்து விளங்கக்கடவள்.

## வால்மீகிவணக்கம்.

இம்மாட்சிமையுள்ள கிரந்தத்தை லோகோபகாரமாக இயற்றியருளிய வால்மீகிமகாரிஷியைத் துதித்தே எவரும் இராமாயணத்தை ஆரம்பிப்பது வழக்கம். அவ்விதம் நாமும் அவரைத் துதிக்கின்றோம்.

வால்மீகிமகாரிஷியே, உமக்கு நமஸ்காரம். உம்மை எவ்விதம் வர்ணித்தால் தான் என்ன? கவநசக்தியாகிய ஓங்கியுயர்ந்து வளர்ந்த ஒரு விருக்ஷத்தின் உச்சியில் உட்கார்ந்து "ராம, ராம" என்று இடைவிடாது இனிமையாய்க் கூவும் குயில்போல் விளங்கும் உமக்கு ஒரு நமஸ்காரம். செய்யுள் என்னும் காட்டில் நிர்ப்பயமாய்ச் சஞ்சரிக்கும் சிங்கம்போலும் உமக்கு ஒரு நமஸ்காரம் ராமசரித்திரமென்னும் ஆரா அமுதை எப்பொழுதும் பானம் பண்ணிக் கொண்டிருக்கும் உமக்கு நமஸ்காரம். வருண பகவானிடத்திலிருந்து உதித்த களங்கமற்ற உமக்கு அனந்த கோடி நமஸ்காரம். உம்மிடத்திலிருந்து வந்த இராமகதையைக் கேட்டு நற்கதியடையாதவர் எவர் ? வால்மீகிமகாரிஷி என்னும் பர்வதத்திலிருந்து உற்பத்தியாய் இராமர் என்னும் சமுத்திரத்தை நோக்கி ஓடும் இராமாயணம் என்ற புண்ணிய நதியானது உலகமுழுவதையும் பரிசுத்தம்பண்ணுகின்றது. உமது மகிமை சொல்லி முடிக்கக்கூடாத அளவினதாதலால் இவ்வளவோடு நிறுத்துகிறேன்.

# ஆஞ்சநேயஸ்துதி.

"அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியற் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக் கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்று வைத்தா னவ னெம்மை யளித்துக் காப்பான்."

1. கடலைப் பசுவின் காற்குளம்படி நீராகச்செய்தவரும், இராக்கதர்களைக் கொசுவாகப் பண்ணினவரும்; இராமாயணமாகிய பெரிய மாலைக்கு இரத்தினம்போல் விளங்குபவருமான வாயுபுத்திரரை (அநுமானை) நமஸ்கரிக்கிறேன்.

2. அஞ்சனை குமாரரும், வீரரும், ஜாநகியின் துக்கத்தைப் போக்கடித்தவரும், அக்ஷன் என்ற ராக்ஷஸனைக்கொன்றவரும், இலங்கைக்குப் பயத்தைச் செய்தவருமான கபிகுல சிரேஷ்டரை வந்திக்கின்றேன்.

3. விளையாட்டாகச் சமுத்திர ஜலத்தைத் தாண்டி ஜாநகியின் விசனத்தை நீக்கித் தீயினால் இலங்கையை எரித்தவர் எவரோ அந்த ஆஞ்சநேயரை அஞ்சலிசெய்து வணங்குவேன்.

4. செம்முகமுடையவரும், பொன்மலை போன்ற அழகிய சரீரத்தை யுடையவரும், பாரிஜாதமரத்தடியில் வசிக்கிறவருமான வாயுபுத்திரனைக் கருத்துள் வைப்பேன்.

5. எவ்வெவ்விடங்களில் ஸ்ரீராமர் பெயர் சொல்லப்படுகின்றதோ அவ்வவ்விடங்களில் சிரமேற் கைகூப்பி ஆநந்த பாஷ்பம் நிறைந்த கண்களுடன் வந்திராநின்ற ராக்ஷஸாந்தகரான மாருதியை நமஸ்கரியுங்கள்.

6. வாயுவேக மனோவேக முடையவரும், ஜிதேந்திரியரும், மகாபுத்திமானும், வானரப் படைத்தலைவருமான இராமதூதரை முடிமேற்கொண்டு வணங்குவோம்.

## ராமநாம மகிமை.

"நன்மையும் செல்வமும் நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே 'ராம' என் றிரண்டெழுத்தினல்."

## ஸ்ரீராமஸ்துதி.

லக்ஷ்மணரோடுகூடிய ஸ்ரீராமருக்கு நமஸ்காரம். ஜநகர் செல்வப் புதல்வியாகிய சீதேதேவிக்கு நமஸ்காரம். இந்திரன், யமன், வாயு இவர்கள் அனைவருக்கும் நமஸ்காரம். சந்திரன் சூரியன், வாயுகணங்கள் இவர்கள் அனைவருக்கும் நமஸ்காரம். ரகுகுலத்திற் பிறந்தவரும், தசரதபுத்திரரும், அளவிலா ஆற்றலுடையவரும், சீதாநாயகரும், ரகுகுலத்துக்கு ஒரு சுடரொளியும், முழங்கால்வரை நீண்ட கையையுடையவரும், செந்தாமரைக் கண்ணரும், ராக்ஷஸர்களை நாசஞ்செய்தவருமான ஸ்ரீ ராமபிரானை நமஸ்கரிக்கிறேன்.

## ராமாயணப்ரார்த்தனை.

வேதங்களாலே அறியத்தக்க பரமபுருஷரானவர் தசரதர் புதல்வராய்ப் பிறந்தபொழுது சாக்ஷாத் வேதமானது இராமாயணமென்ற உருவெடுத்து வால்மீகியினிடமிருந்து உண்டாயிற்று. எவன் வால்மீகியின் முகத்தாமரையினின்று பெருகும் இராமாயணமென்ற இனிய தேனைக் காதுகளாகிய கலங்களாலே முகந்து பிரதிதினம் அன்புடன் நன்றாய்ப் பருகுகிறானோ அங்

தப் புருஷன் முதுமை, ஆபத்து, மரணம் முதலியவற்றால் மிகத்துன்புற்ற ஸம்ஸாரபந்தத்தினின்றும் நீங்கி நித்தியமான மோக்ஷபதவியை அடைவான்.

இலக்கணப்படி அமைத்த சொற்களின் தொடர்களையும் எழுத்துப் புணர்ச்சிகளையும் பத உற்பத்திகளையும் உடையதும் இனிமையாய்ப் பொருள் விளங்கும் வாக்கியங்களை யுடையது மாக முனிவரால் இயற்றப்பட்ட இராமசரித்திரமும் இராவண வதமும் அடங்கிய இக்காவியத்தைக் கேளுங்கள்.

# பாராயண முடிவில் சொல்லவேண்டிய மங்கள வாழ்த்து.

1. குடிகள் வாழ்க. நீதி வழுவாமல் மன்னவர் உலகத்தைப் பரிபாலிக்க. பசுக்களும் பிராமணர்களும் எந்நாளும் வாழ்வு பெறுக. அனைத்துலகும் சுகமுறுக காலத்தில் மேகம் மழை பொழிக. பூமி பயிரால் நிறையக்கடவது. நாடு யாதொரு சஞ்சலமு மின்றிச் செழிக்கக் கடவது. அந்தணர் பயமின்றி வாழக்கடவர். புத்திர பாக்யம் அற்றவருக்குப் புத்திரப்பேறு உண்டாவதாக. புத்திரருடையவருக்குப் பௌத்திரர் உண்டாகக்கடவர். பொருளற்றவருக்குப் பொருள் உண்டாகுக. எல்லோரும் நீடூழிகாலம் வாழக்கடவர்.

2. இராமாயணத்தையாவது, அதன் சுலோகத்தில் ஒரு பாதத்தையாவது, ஒரு பதத்தையாவது பக்தியுடன் கேட்கிறவன் எவனோ அவன் பிரமத்தின் ஸ்தானத்தை அடைகிறான். இரகுநாதருடைய சரித்திரமானது நூறுகோடி விஸ்தாரமானது. சொல்லப்பட்ட ஒவ்வொரு எழுத்தும் மகா பாதகங்களை நாசஞ் செய்யக் கூடியது.

3. இராமருக்கு, இராமபத்திரருக்கு, இராமசந்திரருக்கு பிரமசொரூபிக்கு, ரகுநாதருக்கு, லோகநாயகருக்கு, சீதா காந்தருக்கு நமஸ்காரம்.

4. எல்லாத்தேவர்களாலும் வணங்கப்பட்ட தேவேந்திரனுக்கு, விருத்திராசுரனை நாசஞ் செய்தபொழுது எம்மங்களங்கள் உண்டாயினவோ அம்மங்களங்கள் உண்டாகட்டும்.

5. அமிருதத்தைக் கொண்டுவருவதற்குச் செல்லும் கருடபகவானுக்குத் தாயாகிய விநதையினால் எம் மங்களங்கள் கொடுக்கப்பட்டனவோ அம் மங்களங்கள் உண்டாகட்டும்.

6. அமிருதம் கடைந்தெடுத்தபொழுது அசுரர்களைக் கொன்ற இந்திரனுக்கு அதிதி எம் மங்களங்களைக் கொடுத்தருளினளோ அம்மங்களங்கள் உண்டாகட்டும்.

7. ஒப்பற்ற பராக்கிரமமுள்ள மகாவிஷ்ணுவானவர் லோகங்களைத் தம் பாதத்தால் அளந்த பொழுது எம் மங்களங்கள் உண்டாயினவோ அம் மங்களங்கள் உண்டாகட்டும்.

8. ருதுக்கள், சாகரங்கள், தீவுகள், வேதங்கள், உலகங்கள், திக்குகள் இவைகளெல்லாம் ரகுநாதனுக்கு என்றும் மங்களங்களை அளிக்கட்டும்.

---

காயம், வாக்கு, மனம், இந்திரியங்கள், புத்தி, ஆத்மா,
பிரகிருதி, சுபாவம் இவைகளால் நான் எத்தொழில்களை
இயற்றுகின்றேனோ அத்தொழில்களை யெல்லாம்
ஸ்ரீமந் நாராயணனுக்கு அர்ப்பணம்
செய்கின்றேன்.

---

# பாலகாண்டம்.

ஸ்ரீராஸ்து.

# பாலகாண்டம்.

## விஷயசூசிகை.


| சருக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | கதைச்சருக்கம் .... .... .... | 1 |
| 2. | பிரமதேவர் வரவு .... .... .... | 12 |
| 3. | காவியத்தின் அநுக்கிரமணி .... .... | 16 |
| 4. | குசலவர்களுக்கு இராமாயணத்தைப் போதித்தல் .... .... .... | 20 |
| 5. | அயோத்திநகரச் சிறப்பு .... .... | 23 |
| 6. | அரசியற்சிறப்பு .... .... .... | 26 |
| 7. | மந்திரிகள் சிறப்பு .... .... .... | 30 |
| 8. | புத்திரகாமேஷ்டி .... .... .... | 33 |
| 9. | சுமந்திரர் வாக்கியம் .... .... | 35 |
| 10. | உரோமபாதர் ரிசியசிருங்கரை வரவழைத்தல். | 37 |
| 11. | ரிசியசிருங்கர் அயோத்தி புகுதல் .... | 41 |
| 12. | யாகசங்கற்பம் .... .... .... | 44 |
| 13. | யாகாரம்பம் .... .... .... | 46 |
| 14. | அசுவமேதயாகம் .... .... .... | 50 |
| 15. | இராவணனை வதைப்பதற்கு உபாயம் .... | 55 |
| 16. | பாயசோத்பத்தி .... .... .... | 59 |
| 17. | வாநரோத்பத்தி .... .... .... | 63 |
| 18. | இராமாவதாரம் .... .... .... | 66 |

| சருக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 19. | விசுவாமித்திர வாக்கியம் .... .... | 73 |
| 20. | தசரத வாக்கியம் .... .... .... | 75 |
| 21. | வசிஷ்டர் வாக்கியம் .... .... | 78 |
| 22. | தசரதர் இராம லக்ஷ்மணர்களை அனுப்புதல். | 81 |
| 23. | தாணுவாச்சிரம வாசம் .... .... | 83 |
| 24. | தாடகையின் வனம் புகுதல் .... .... | 86 |
| 25. | தாடகை வதம் .... .... .... | 89 |
| 26. | தாடகை வதம் .... .... .... | 91 |
| 27. | விசுவாமித்திரர் அஸ்திரங் கொடுத்தல் .... | 95 |
| 28. | இராமர் ஸம்ஹார மந்திரம் பெறுதல் .... | 97 |
| 29. | சித்தாச்சிரமம் .... .... .... | 99 |
| 30. | விசுவாமித்திரர் யாகம் .... .... | 102 |
| 31. | மிதிலைக்குப் பிரயாணம் .... .... | 105 |
| 32. | விசுவாமித்திரருடைய வம்சம் .... .... | 107 |
| 33. | குசநாபன் பொறுமை .... .... | 111 |
| 34. | விசுவாமித்திரருடைய வரன் முறை .... | 114 |
| 35. | கங்கையின் மகிமை .... .... .... | 116 |
| 36. | உமையின் செய்தி .... .... .... | 118 |
| 37. | குமாரோத்பத்தி .... .... .... | 119 |
| 38. | சகரனுக்குப் பிள்ளைகளுண்டானது .... | 120 |
| 39. | சகரபுத்திரர்கள் பூமியைத் தோண்டியது .... | 123 |
| 40. | கபிலதர்சனம் .... .... .... | 125 |
| 41. | சகரனுடைய யாகத்தின் ஸமாப்தி .... | 128 |
| 42. | பகீரதன் வரம்பெற்றது .... .... | 131 |
| 43. | கங்காவதாரம் .... .... .... | 133 |
| 44. | பகீரதனுக்கு வரங்கொடுத்தது .... .... | 137 |
| 45. | அமிருதோத்பத்தி .... .... .... | 139 |
| 46. | திதியின் கர்ப்பநாசம் .... .... | 144 |
| 47. | விசுவாமித்திரர் சுமதியைச் சந்தித்தல் .... | 146 |
| 48. | அகல்யையின் சாபம் .... .... | 148 |
| 49. | அகல்யை சாபம் நீங்கல் ... ... | 150 |

| சருக்கம். | விஷயம். | பக்கம் |
|---|---|---|
| 50. | விசுவாமித்திரர் ஜநகரிடம் சேருதல் ... | 152 |
| 51. | சதாநந்தர் வாக்கியம் ... ... | 154 |
| 52. | விசுவாமித்திரருக்கு விருந்தளித்தல் ... | 157 |
| 53. | வசிஷ்ட விசுவாமித்திர சம்வாதம் ... | 160 |
| 54. | விசுவாமித்திருடைய சண்டை ... | 162 |
| 55. | வசிஷ்ட விசுவாமித்திர யுத்தம் ... ... | 164 |
| 56. | அந்தணர்பலமே அதிகம் ... ... | 167 |
| 57. | விசுவாமிததிரர் தவம் .. ... | 169 |
| 58. | திரிசங்கு சாபம் ... ... ... | 171 |
| 59 | வசிஷ்டகுமாரரை விசுவாமித்திரர் சபித்தல். | 174 |
| 60. | திரிசங்கு சுவர்க்கத்துக்கு ஏகுதல் ... | 176 |
| 61. | ரிசீகர் சுனச்சேபனைப் பசுவாக விற்றது. ... | 180 |
| 62. | விசுவாமித்திரர் சுனச்சேபனைப் பாதுகாத்தல். | 182 |
| 63. | விசுவாமித்திரர் தவம் ... ... | 185 |
| 64. | அரம்பையின் சாபம் ... ... | 187 |
| 65. | விசுவாமித்திரர் பிரமரிஷியானது ... | 189 |
| 66. | ஜநகருடைய வில்லின் மகிமை ... | 193 |
| 67. | இராமர் வில்லை முறித்தல் ... ... | 195 |
| 68. | தசரதர் மிதிலைக்குப் புறப்பட நிச்சயித்தல் .... | 197 |
| 69. | சம்பந்திகளின் சந்திப்பு ... ... | 199 |
| 70. | இக்ஷ்வாகு வம்சாவளி ... ... | 201 |
| 71. | ஜநகருடைய வம்சாவளி ... ... | 205 |
| 72. | பரத சத்துருக்கினர்களுக்குக் கல்யாணம் நிச்சயித்தல் ... ... ... | 207 |
| 73. | சீதா விவாகம் ... ... ... | 210 |
| 74. | பரசுராமர் வரவு ... ... ... | 214 |
| 75. | பரசுராமரின் வாக்கியம் .... ... | 217 |
| 76. | பரசுராமருடைய வில்லை நாமேற்றல் ... | 220 |
| 77. | தசரதர் திரும்பி அயோத்தியைச் சேர்ந்தது... | 222 |

# வால்மீகி ராமாயணம்.

## பாலகாண்டம்.

### முதற்சருக்கம் : கதைச்சுருக்கம்.

ஈரேழுலகமும் பல்லுயிருமொன்றிநின்றோங்கி யிலகும் பகவன திணையடி மறவா வால்மீகி முனிவர், தவம் வேதாத்தியயனம் இவைகளை எப்பொழுதும் செய்கின்றவரும், கற்றறிந்தவர்களுள் உத்தமரும், முனிவர்களிற் சிறந்தவருமாகிய நாரதரைப் பார்த்துக் கேட்கலானார் :—"ஐயா முனிவரே, இக்காலத்தில் இவ்வுலகத்தில் எல்லாவிதமான சிறந்த குணங்களும் பொருந்தியிருக்கும் உத்தம புருஷன் ஒருவன் இருக்கின்றானா? பராக்கிரமசாலியும், தருமங்களை அறிந்தவனும், நன்றி மறவாதவனும், உண்மையையே பேசுகிறவனும், விரதங்களை அநுஷ்டிக்கத் தவறாதவனும், குலாசாரத்தை விடாமல் நடக்கின்றவனும், எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை செய்கிறவனும், கற்றுணர்ந்தவனும், சாமர்த்தியமுள்ளவனும் எல்லாராலும் விரும்பத்தக்க அழகுள்ளவனுமாகிய உத்தமன் ஒருவனை நீர் கண்டதுண்டா? தைரியமுள்ளவனாகித் தன் கோபத்தைத் தன்வசப்படுத்தியுள்ள புருஷன் யார்? மிகுந்த காந்தியுள்ளவனும், அசூயை யில்லாதவனும் யாவன்? போரில் எவன் கோபங்கொண்டால் தேவர்

உத்தம புருஷர் எவர்.

இப்படிப்பட்ட நற்
ருவனைப்பற்றி நான் உங்க
றேன். மகா முனிவரே, இவ்
ரம் அறிய வல்லவர்" என்று கூற,
ந்த நாரத மகாமுனிவர் வெகு
றுசொல்லத் தொடங்கினர்:—

நம. நீர் எடுத்துக்கூறிய நற்குணங்கள் எல்லாவற்றையும் ஒருவனிடத்தில் காண்பது அரிது. ஆயினும் நான் அறிந்து சொல்லுகிறேன். இத்தனை நற்குணங்களும் பொருந்திய புருஷர் ஒருவர் இருக்கிறார்; அவர் இக்ஷ்வாகு வமிசத்தில் பிறந்து இராமர் என்னும் பெயருடன் விளங்குகிறவர்; கௌஸல்யை என்னும் மாது சிரோமணியின் குமாரர்; நீர் குறித்த நற்குணங்கள் எல்லாம் அவரிடம் குடிகொண்டிருக்கின்றன; மிக்க அடக்கமுடையவர்; வெகு பராக்கிரமசாலி; மிகுந்த காந்தியுள்ளவர்; உறுதியுள்ளவர்; எல்லாரையும் தம் வசத்தில் அடக்கியாளுகிறவர்; புத்திமான்; நீதி தவறாது நடப்பவர்; வாக்குஸாமர்த்திய முள்ளவர்; சம்பத்து நிறைந்தவர்; சத்துருக்களை அழிப்பவர்; உயர்ந்த தோள்கள், திரண்டுருண்ட கைகள், சங்குபோன்ற கழுத்து, தசைப்பற்றுள்ள கன்னங்கள், விசாலமானமார்பு, பெரிய தநுசு, தசைப்பற்றால் மறைந்த தோளெலும்பு இவைகளையுடையவர்; பகைவர்களை அடக்கியாளுகிறவர்; முழங்கால் வரையில் தொங்குகிற கைகள், அழகான தலை, அழகான நெற்றி, அழகான நடை இவைகள் அமைந்தவர்; சரியான உயரம், சரியாயமைந்த உறுப்புகள், எல்லாரும் நேசிக்கும்படியான நிறம் இவைகள் பொருந்தியவர்; வெகு பிரதாபமுள்ளவர்; உயர்ந்தமார்பு, விசாலமான கண்கள் முதலிய சகல சாமுத்திரிக லக்ஷணங்களும் நிறைந்தவர்; அவருடைய தேகத்தில் சுபலக்ஷணங்கள் யாவும் தவறாது விளங்குகின்றன. தருமத்தை அறிந்தவர்; சத்திய சந்தர்; பிரஜைகளுடைய நன்மையில் எப்பொழுதும்

உத்தம புருஷர் இராமர்.

நோக்கமுடையவர் ; நல்லோரை வளர்ப்பவர் ; தீயோரை யழிப்பவர் ; மிக்க கீர்த்தி பெற்றவர் ; நல்லறிவுடையவர் ; நல்லொழுக்கமுள்ளவர் ; தம்மை அடைந்தவர்களுக்கு வசப்பட்டு நடப்பவர் ; அவர்களைப் பாதுகாப்பதிலே கவலை கொண்டவர் ; பிரமதேவருக்கொப்பானவர் ; சகல பாக்கியமும் நிரம்பியவர் ; சகல சனங்களுக்கும் இஷ்டராயிருப்பவர் ; இவ்வுலகத்திலுள்ள பிராணி சமூகங்களையும் வருணாச்சிரம தருமங்களையும் தமது குலாசாரத்தையும் தமது சனங்களையும் பாதுகாப்பவர் ; வேதங்கள் வேதாங்கங்கள் இவைகளின் தத்துவங்களை அறிந்தவர்; தநுர் வேதத்திலும் தேர்ச்சியடைந்தவர் ; ஒவ்வொரு சாஸ்திரத்தின் உண்மையையும் உள்ளபடி கண்டறிந்தவர் ; ஞாபகசக்தி யுடையவர் ; மேல் மேல் விஷயங்கள் விளங்கப்பெற்ற ஞான விசேஷமுடையவர் ; வெகு யோக்கியர் ; பெருந்தன்மை யுடையவர் ; வெகு சமர்த்தர் ; நதிகளெல்லாம் சமுத்திரத்தை நாடிச் செல்வதுபோல நல்லவர்கள் எப்பொழுதும் தம்மை நாடித் தொடரப் பெற்றவர் ; எல்லாராலும் மரியாதை பண்ணத்தக்கவர் ; எல்லாரிடத்தும் சமமாக நடப்பவர் ; எப்பொழுதும் அன்புள்ள பார்வையுடையவர் ; காம்பீரியத்தில் சமுத்திரத்துக்கும், உறுதியில் இமயமலைக்கும், பராக்கிரமத்தில் விஷ்ணுவுக்கும், சந்தோஷமுண்டாக்குவதில் சந்திரனுக்கும் ஒப்பானவர் ; கோபத்தில் பிரளய காலத்து அக்கினியையும், பொறுமையில் பூமிதேவியையும், கொடையில் குபேரனையும் நிகர்த்தவர் ; உண்மைக்கு அவரைத் தருமதேவதையின் அவதாரமாகவே சொல்லலாம்.

“இவ்விதமான குணங்களையுடையவராய், தவறாத பராக்கிரமமுள்ளவராய், எல்லாவித உத்தம குணங்களும் அமைந்தவராய், குடிகளுக்கு நன்மையைச் செய்பவராய் விளங்கிய இராமரை அவருடைய தந்தையாராகிய தசரதர் கண்டு களித்து, குடிகளுக்கு நன்மை செய்யும் பொருட்டு, மூத்த குமாரராகிய அவருக்கு அன்போடு யுவராஜ பட்டாபிஷேகம் செய்து வைக்க இச்சித்தார். இராமருடைய பட்டாபிஷேகத்துக்காக எல்லா உபகர

சென்றது.

ணங்களும் சித்தமாக விருந்ததைத் தசரதருடைய மனைவியாகிய கைகேயி பார்த்து, முன்னமே தனக்குக் கொடுப்பதாகத் தனது புருஷன் சொல்லியிருந்த வரங்களைக் கேட்கலானாள். அவை யாவையெனில், "இராமன் காட்டுக்குப் போகவேண்டும்; அவனுக்குப் பிரதியாகப் பரதன் இளவரசாகவேண்டும்" என்பனவாம். சத்தியத்தால் கட்டுண்ட தசரதர் மறுக்க வழியில்லாமல் கைகேயி கேட்ட வரத்தின்படி தமது அன்புள்ள புத்திரரான இராமரைக் காட்டுக்கனுப்பும்படி நேர்ந்தது. பித்ருவாக்கியத்தை நிறைவேற்ற வேண்டியும், கைகேயியின் மனத்தைக் களிப்பிக்க வேண்டியும் வீரராகிய இராமர் காடு சென்றார். அவருடைய மிக்க அன்புள்ள தம்பியும் வணக்கம் மிகுந்தவரும் சுமித்திரை புத்திரருமான லக்ஷ்மணர், இராமரிடம் தாம் வைத்திருந்த அதிக விசுவாசத்தாலும், சிநேகத்தாலும், அவரைப் பின்தொடர்ந்தனர். இராமருடைய பிராணநாயகியாயும், எப்பொழுதும் நன்மையையே செய்பவளாயும், ஜனகமகாராஜாவின் அபிமான புத்திரியாயும், தேவமாயைப்போலப் படைக்கப்பட்டவளாயும், எல்லாவித லக்ஷணங்களும் நிறைந்தவளாயும், பெண்களுள் உத்தமி என்று பெயர் படைத்தவளாயும், இளம்பிராய முடையவளாயும் உள்ள சீதை, சந்திரனை உரோகிணி பின் தொடர்வதுபோல இராமரை விடாது தொடர்ந்து காடுசென்றாள்.

**சித்திரகூடத்தில் வசித்தது.**

" தசரதமகாராஜாவும் அவருடைய குடிகளும் இராமரைத் தொடர்ந்து சென்றார்கள். தருமஸ்வரூபியான இராமர் சாரதியைக் கங்கைக் கரையில் சிருங்கிபேரம் என்ற ஊருக்குச் சமீபத்தில் திருப்பி அனுப்பிவிட்டு, அவ்விடத்தில் வேடர்களுக்குத் தலைவனை குகன் என்பவனோடு தோழமை கொண்டு, அவனுடைய உதவியால் ஓடமேறிக் கங்கையைக் கடந்து வனத்தில் பிரவேசித்தார். தேவர்களையும் கந்தர்வர்களையும்போன்ற இராமர் முதலிய அந்த மூவரும் ஒரு வனத்திலிருந்து மற்றொருவனமாக அநேக வனங்களைக் கடந்து அநேக நதிகளையும் தாண்டிப் பரத்துவாஜ மகாரிஷியின் சொற்படி சித்திரகூடம் என்னும்

மலையை அடைந்து அவ்விடத்தில் அழகான ஒரு பர்ணசாலை அமைத்துக்கொண்டு சுகமாக வசித்திருந்தார்கள்.

பரதர் அன்பு.

“இங்ஙனம் இராமர் சித்திரகூடஞ்சேர, தசரதர் புத்திர சோகத்தால் வருந்தி “இராமா! இராமா!” என்று புலம்பிக் கொண்டு சுவர்க்கமடைந்தார். அவர் மாித்தபின் மகாபலசாலியான பரதர், வசிஷ்டர் முதலிய பெரியவர்களால் ஏவப்பட்டும் தாம் பட்டத்தை ஒப்புக்கொண்டு அரசாளக் கொஞ்சமேனும் இஷ்டமில்லாதவராயிருந்தார். அவ் வீரர் இராமரைத் தேடி வனத்திற்குச்சென்று அவருடைய பாதத்தில் விழுந்து அவரருள் பெறக்கருதினார். அவ்வாறு அப்பரதர் சத்தியந்தவராத பராக்கிரமமுடைய சிறந்த அந்த மகாத்துமாவிடஞ் சென்று தமது நற்குணத்தை முன்னிட்டுக் கொண்டு “நீதியை ஆராய்ந்தறிந்தவரே, நீர்தாம் மன்னவர்” என்று சொன்னார். இராமர், தம்மை யாசிக்கின்றவர்களுக்கு எப்பொழுதும் சுமுகராயிருந்துகொண்டு அவர்கள் கேட்பவை களைக் கொடுத்துப் பெரும்புகழ் பெறுந்தன்மை யுள்ளவரா யினும், தமது தந்தையின் கட்டளையை நிறைவேற்றக் கருதி இராச்சியத்தின்மேல் ஆசைவைக்கவில்லை. ஆனால், தமக்குப் பிரதிநிதியாகத் தமது பாதுகைகளை இராமர் பரதருக்குக் கொடுத்து அவரை அரிதில் திரும்பிப்போகச் செய்தார். பரதர் தமது எண்ணம் நிறைவேறப் பெறாமலே திரும்பிவந்து இராம ருடைய பாதுகைகளைத் தினந்தோறும் நமஸ்கரித்துக்கொண்டு இராமர் திரும்பிவருவதை எதிர் பார்த்தவராய் நந்திக்கிராமத்தி லிருந்து இராச்சிய பரிபாலனம் செய்யலானார்.

தண்டகாரணி யம் புகுதல்.

“இவ்விதமாய்ப் பரதர் தம்மிடம்வந்து போனவுடன், உண்மையைக் கைப்பற்றியவரும் ஐம்புலன் களை அடக்கியவருமான இராமபிரான், இனி நாம் இங்கு வசித்தால் நமது நகரத்துக்குடிகள் பலரும் இங்கு நம்மை நாடி வருவார்கள் என்று நினைத்து ஓரே உறுதியாய்த் தண்டகாரணியம் போய்ச் சேர்ந்தார். அவ்விடத் தில் அவர் விராதன் என்கிற ராக்ஷஸனைக் கொன்றார்; பின்பு

சரபங்கர், சுதீக்ஷ்ணர், அகஸ்தியர், அகஸ்தியர் தம்பி முதலான மகாமுனிவர்களுடைய தரிசனத்தைப் பெற்ருர். அகஸ்தியருடைய சொற்படி அவ்விடத்தில் இராமர் தமக்காக வைக்கப் பட்டிருந்த இந்திரனுடைய வில்லையும், எடுக்க எடுக்க அம்புகள் குறையாத இரண்டு அம்பருத்தூணியையும், கத்தியையும் வெகு சந்தோஷத்துடன் எடுத்துக்கொண்டார்.

முனிவர்கள் இராமரைக் காணல்.

"இராமர் தண்டகாரணியத்திலே அவ்விடத்துள்ள அரணிய வாசிகளுடன் வசித்துக் கொண்டிருக்கும் போது அசுரர்களையும் ராக்ஷஸர்களையும் வதைப்பதற்காக வழி தேடிக் கொண்டிருந்த அநேக முனிவர்கள் இராமரை நாடி அவரிடம் வந்து சேர்ந்தார்கள். அரக்கர்கள் நெருங்கிய அக்காட்டில் இராமர் அவர்களைக் கொல்லக்கருதிய முனிவர்களுடைய வேண்டுகோளை அங்கீகரித்தார். போரில் தாம் அவ்வரக்கர்களை நாசம்பண்ணுவதாக, இராமர், தண்டகாரணியத்தில் வசித்துவந்த அக்கினிக்கொப்பான அம்முனிவர்கள் முன்னிலையில் பிரதிஜ்ஞை செய்தார்.

ஜநஸ்தானத்தில் அரக்கர்களை அழித்தது.

"அவர் அங்கு வாசஞ்செய்து கொண்டிருக்கும்பொழுதே, ஜநஸ்தாநமென்னும் இடத்திலே வசித்துக் கொண்டிருந்தவளும் தான் வேண்டியபடி வடிவங்கொள்ள வல்லவளுமான சூர்ப்பணகையென்பவள் அங்கபங்கம் பண்ணப்பட்டாள். உடனே, சூர்ப்பணகையின் சொற்களால் ஏவப் பட்டுப் போருக்கு வந்த கரன், தூஷணன், திரிசிரன் முதலிய ராக்ஷஸர்களையும், அவர்களுடன் வந்த ராக்ஷஸர்கள் எல்லோரையும் பதினாலாயிரம் வீரர்களடங்கிய அவர்களுடைய பெரிய சேனையையும் இராமர் யுத்தஞ்செய்து கொன்ருர்.

சீதையைக் கவர்தல்.

"இவ்விதமாய் அங்கு நடந்த தனது பந்துக்கள் வதையைக் கேட்டு இராவணன் கோபத்தால் கண்மூடப்பட்டவனாய் மாரீசன் என்ற அரக்கனைத் தனக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொண்

டான். மாரீசன் "இராவணா, அந்தப் பலவானோடு விரோதம் உனக்கு யுக்தமன்று" என்று பலவாறு தடுத்தான். அவன் சொல்லைக்கேளாமல் காலனால் ஏவப்பட்டவனாய் இராவணன் மாரீசனையும்கூட அழைத்துக் கொண்டு இராமருடைய ஆச்சிரமத்துக்குச் சென்றான். இராவணன் மாரீசனுடைய மாயையால் ராம லக்ஷ்மணர்களை அவர்கள் வசித்துக்கொண்டிருந்த இடத்தை விட்டு வெகுதூரம் போகச்செய்து ஜடாயு என்ற கழுகுகளினரசனைக் கொன்று சீதையைக் கவர்ந்தோடினான். ஜடாயு மாண்டுகிடப்பதைப் பார்த்தும் சீதையை இராவணன் எடுத்தோடியதைக்கேட்டும் இராமர் சோகத்தால் பரிதபித்துக் கொண்டு தமது ஐம்புலன்களும் கலங்கியவராய்ப் புலம்பினார். பிறகு அத்துக்கத்துடனே ஜடாயுவைத் தகனஞ் செய்துவிட்டுத் தமது மனைவியைக் காட்டில்தேடிக் கொண்டிருக்கும்போது, பார்ப்பதற்கு மிகப்பயங்கரனும் மகாகுரூபியாயுமிருந்த கபந்தன் என்ற ராக்ஷஸனை இராமர் கண்டார். அவனைக் கொன்று அவனுடலை எரிக்கும்போது அவன்தான் சுவர்க்கலோகம் செல்லுமுன் இராமரைநோக்கி "இவ்விடத்துக்குச் சமீபத்தில் சபரி என்று பெயருள்ள ஒரு பெரியவள் இருக்கிறாள். அவளை நீர் அவசியம் பார்க்கவேண்டும்" என்று சொல்லிப் போயினான்.

சுக்கிரீவன் நட்பு.

"அவன் சொன்னபடியே, சத்துருக்களை அழிக்குந் தன்மையரான மகாதேஜசுள்ள தசரதகுமாரர் சபரியிடம் சென்று, அவளால் நன்றாக உபசரிக்கப்பட்டு, பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் பம்மை என்னும் ஓடையின் கரையை அடைந்து அங்கு அநுமான் என்ற வானர சிரேஷ்டனுடைய சிநேகத்தைப் பெற்றார். அநுமானுடைய வார்த்தையின் மூலமாய் இராமர் சுக்கிரீவனிடம் சேர்ந்தார். மகாபலசாலியான இராமர் ஆதிதொடங்கித் தமது வரலாறுகளையும் கடைசியில் தாம் சீதையை இழந்ததையும் உள்ளபடி சுக்கிரீவனுக்குச் சொன்னார். அவற்றையெல்லாம் கேட்டுச் சுக்கிரீவன் அன்போடு அக்கினிசாட்சியாக இராமருடன் சிநேகஞ்செய்தான். அந்த வானர ராஜனும் தன் மனக்குறை

நீங்கும் என்ற நம்பிக்கையால் தன் துக்கங்கள் எல்லாவற்றையும் இராமரிடம் கூறினன். இராமர் வாலியை வதைசெய்வதாக ஒப்புக்கொண்டார். பிறகு சுக்கிரீவன் வாலியினுடைய பராக்கிரமத்தை எடுத்துச்சொல்லி, இராமருடைய வல்லமையில் அடிக்கடி சந்தேகங்கொண்டவனாய், வாலியின் பராக்கிரமத்திற்கு அடையாளமாக அவனால் முன்னொரு சமயத்தில் எளிதில் வீசியெறியப்பட்டதும் பெரிய மலைபோலப் பருத்த உருவமுள்ளதுமான துந்துபி என்ற ராக்ஷஸனுடைய உடம்பெலும்பைக் காட்டினன். மகா பலசாலியான இராமர் அந்த எலும்புக்கூட்டைப் பார்த்துப் புன்னகை செய்து தமது கால் பெருவிரலால் உந்திப் பத்துயோஜனை தூரத்துக்கப்பால் போய்விழும்படி செய்தார். அன்றியும், ஒரே பாணத்தால் ஏழுமராமரங்களைத் துளைத்தும், மலையையும் கீழுலகத்தையும் பிளந்தும், இராமர் தமது பராக்கிரமத்தைச் சுக்கிரீவனுக்குக் காட்டி அவனுக்குத் தம்முடைய பலத்தில் நம்பிக்கை உண்டாகும்படி செய்தார். இவைகளையெல்லாம் கண்டு அந்தச் சுக்கிரீவன் மனமகிழ்ந்து நம்பிக்கையடைந்து அவருடன் கிஷ்கிந்தைக்குள் பிரவேசித்து வாலியிருந்த குகையை நாடிச்சென்று தைரியமாய்க் கர்ச்சிக்க, அதைக்கேட்டு வாலி தனது மனைவியாகிய தாரையினிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியில்வந்து சுக்கிரீவனுடன் கைகலந்தான். அவ்விடத்தில் வாலியை இராமர் ஒரே பாணத்தால் கொன்றிட்டார்.

அனுமான்சீதையைக் கண்டது.

"அவ்வாறு சுக்கிரீவன் கேட்டுக்கொண்டபடி வாலியைப் போரில் வதைத்தபின் இராமர் கிஷ்கிந்தை ராச்சியத்திற்குச் சுக்கிரீவனையே அரசனாக முடிசூட்டினார். வானர சிரேஷ்டனான அவன் உடனே வானர சைநியங்களை யெல்லாம் வரவழைத்துத் திக்குகள் தோறுஞ் சென்று சீதையிருக்கு மிடத்தைத் தேடிவரக் கட்டளையிட்டான். இவ்விதமாய் உத்தரவு பெற்றுப் போனவர்களில் அதி பலசாலியான அநுமான் சம்பாதியின் சொற்படி நூறுயோஜனை அகலமுள்ள தக்ஷிண சமுத்திரத்தை ஒரே

பாய்ச்சலில் கடந்து இராவணனால் அரசாளப்பட்ட இலங்காபுரியை அடைந்து அங்கு அசோகவனத்தில் இராமரையே தியானித்துக் கொண்டிருந்த சீதையைக் கண்டான். அவளிடம் அநுமான் தான் இராமரிடமிருந்து வந்தவன் என்பதற்குரிய அடையாளத்தைக்காட்டி, இராமர் செய்துகொண்டிருக்கும் முயற்சிகளைத் தெரிவித்துச் சீதாதேவியைத் தேறுதல் செய்து அவ்வசோகவனத்தின் வெளிவாயிலைச் சிதைக்கலானான். அங்குத் தன்னை எதிர்த்துவந்த ஐந்து சேனாபதிகளை முதலிற் கொன்று, பின்பு ஏழு மந்திரி குமாரர்களை வதைத்து, அக்ஷகுமாரனையும் பொடிபடுத்தி, இறுதியில் தானே இந்திரஜித்து கையில் பிரமாஸ்திரத்தால்கட்டுண்டு அகப்பட்டுக்கொண்டான். பிரமதேவர் தனக்குக் கொடுத்திருந்த வரத்தினால் தனது முயற்சியின்றியே தான் அஸ்திர பந்தனத்தினின்று விடுபட்டதை அறிந்துகொண்டும், ஏதோ காரணத்தை உத்தேசித்து, ராக்ஷஸர்கள் சற்று நேரம் தன்னைத் துன்பஞ் செய்ததை அநுமான் சகித்திருந்தான். பின்பு சீதாதேவி நீங்கலாக இலங்கை முழுவதையும் தீயிட்டுக் கொளுத்தி, இராமரிடம் சந்தோஷ சமாசாரத்தைச் சொல்லும் பொருட்டு அநுமான் திரும்பினான். அளவிடவொண்ணாத தன்மையையுடைய அநுமான் அம்மகாத்மாவிடம் வந்ததும் அவரைப் பிரதக்ஷிணஞ் செய்து "கண்டேன் சீதையை" என்று செய்தியைத் தெரிவித்தான்.

இராவணன் வதை.

"பின்பு இராமர் சுக்கிரீவனுடன் கடற்கரை சேர்ந்து சூரியனுக் கொப்பான தமது பாணங்களால் அச்சமுத்திரத்தைக் கலக்கினார். உடனே நதிகளின் நாயகனான சமுத்திரராஜனும் நேராகவந்து தோன்றினான்; அவன் சொன்னபடி சேது என்னும் அணையை நளனுடைய உதவியால் கட்டி அதன் வழியாய் இலங்கையை அடைந்தார், அங்கு யுத்தத்தில் இராவணனை வதை செய்து சீதையை அடைந்தவுடன் இராமர் மிகுந்த வெட்க முற்றவராய் அவளைப்பார்த்து எல்லாரும் கேட்கக் கொடுமையான சில சொற்களைச் சொன்னார். பதிவிரதையான சீதை அவற்றைச்

செவிகொடுத்துக் கேட்கப் பொறுக்காமல் அக்கினிப் பிரவேசம் பண்ணினாள். பின்பு அக்கினி பகவான் வாக்கினால், சீதை பரிசுத்தமுள்ளவள் என்றறிந்து, இராமர் சந்தோஷமுள்ளவராய், தேவர்கள் எல்லாரும் பூஜிக்க அவளை ஏற்றுக்கொண்டு விளங்கினார். அவர் செய்த ஆச்சரியமான காரியத்தைக் கண்டு மூன்று உலகங்களிலும் உள்ள தேவகணங்களும், முனிவர்கணங்களும், மற்றைய சராசரப்பொருள்களும், யாவும் களிப்படைந்தன. பின்பு இலங்கையில் அரக்கர் மன்னவனாக விபீஷணருக்கு முடிசூட்டி இராமர் தாம் எடுத்த காரியத்தை முற்ற முடித்தமையால் கவலையற்றுக் களிக்கலானார். தேவர்கள் கொடுத்த அநேக வரங்களைப் பெற்றுக்கொண்டு, யுத்தத்தில் மாண்ட வானரர்களையெல்லாம் பிழைக்கச்செய்து, பிறகு புஷ்பகம் என்னும் விமானத்திலேறி, இராமர் தமது நண்பர்களால் சூழப்பட்டவராய் அயோத்திக்குப் புறப்பட்டார். உண்மையான வல்லமை அமைந்த இராமர் பரத்துவாஜ முனிவருடைய ஆச்சிரமத்தையடைந்து பரதரிடம் அநுமானை முந்தி அனுப்பி, மறுபடியும் புஷ்பகமேறி, சுக்கிரீவனுடன் பரதரைப் பற்றிய பழைய செய்தியைப் பேசிக்கொண்டு நந்திக்கிராமம் சென்றார். நந்திக்கிராமத்திலேயே சடைமுடியைக் களைந்து இராமர் தம்பிமாருடன் அயோத்திமாநகர் சேர்ந்து இராச்சியத்தைச் சீதையோடு பெற்றுக்கொண்டார்.

இராமர் இராச்சிய பரிபாலனம்.

“ அவர் இவ்வாறு திரும்பி வந்ததுமுதல் ஜனங்கள் சுகத்தையும், சந்தோஷத்தையும் அடைந்து தனிகர்களும், தருமிஷ்டர்களும், நோயற்றவர்களும், கவலை இல்லாதவர்களுமாய், துர்ப்பிக்ஷ பயமில்லாமல் வாழ்ந்து வந்தார்கள். தகப்பனிருக்கப் பிள்ளை இறப்பதென்ற அக்கிரமம் அவர் நாளில் சிறிதும் இல்லை. மாதர்கள் சந்தோஷமாய்த் தங்கள் தங்கள் நாயகர்களுக்கு ஊழியஞ் செய்துகொண்டு பதிவிரதைகளாய்க் கைம்மை என்ற பயத்துக்கு இடமே இல்லாமல் வாழ்ந்து வந்தார்கள். அக்கினிவாதை என்பதும், ஜலத்தில் முழுகி மாண்டார்

கள் என்பதும், வாதபயம், ஜ்வரபயம் என்பனவும் அவர்காலத்தில் சிறிதும் இல்லை. அவ்வாறே பசியின் பயமும், திருடர்கள் பயமும், அவர் நாளிலில்லை. ஒவ்வொரு தேசமும், ஒவ்வொரு நகரமும், தனத்தினாலும் தானியத்தினாலும் நிரம்பியிருந்தன. அங்கு வசித்த ஜனங்கள் எல்லோரும் கிருதயுகத்திலிருந்தவர்கள்போல எப்பொழுதும் சந்தோஷத்தை அடைந்திருந்தார்கள். இராமர் நூறு அசுவமேத யாகங்கள் செய்து சுவர்ணத்தாலும், அநேக கோடி பசுக்களாலும், கணக்கில்லாத மற்றைப் பொருள்களாலும், பிராமணர்களுக்கு அளவற்ற தானங்களைச்செய்து பெரும்புகழ்படைத்து, தமது வலிமையால் ராஜ வம்சங்களை நூறுமடங்கு பெருகும்படி தாபித்து, இவ்வுலகத்திலுள்ள நானா சாதியாரையும் தங்கள் தங்கள் ஆசாரத்தில் ஒழுங்காக நடப்பித்துப் பதினோராயிரம் ஆண்டு இராச்சிய பரிபாலனம் பண்ணிவிட்டுப் பின்பு பிரமலோகம் சேர்வர்.

நூற்பயன்,

"மகாபரிசுத்தமும் பாவங்களைப் போக்குவதும புண்ணியங்களை அளிப்பதும் வேதங்களுக் கொப்பானதுமான இந்த இராம சரித்திரத்தை எவன் படிக்கிறனோ அவன் சகல பாபங்களிலிருந்தும் விடுபட்டவனுவான். அதிக ஆயுளைக் கொடுக்கவல்ல இந்த இராமாயண சரித்திரத்தைப் படிக்கிறவன் தனது பிள்ளை பேரன் முதலாகிய சந்ததிகளுடன் வானேருலகத்தில் நன்கு மதிக்கப்படுவான். இதைப் படிக்கிற பிராமணன் வாக்கு வல்லமை அடைவான்; க்ஷத்திரியன் நாட்டுக்கு அரசனுகும் பதமடைவான்; வைசியன் வியாபாரத்தில் விசேஷலாபம் பெறுவான்; இதைக் கேட்பதனுலேயே சூத்திரனும் பெருமையைப் பெறுவான்."

## இரண்டாஞ்சருக்கம் :

### பிரமதேவர் வரவு.

நாரதர் தேவலோகஞ் சென்றது.

சொல்வன்மையுள்ள வால்மீகிமகாமுனிவர் நாரதர்சொன்ன வாக்கியத்தைக் கேட்டு வியப்புற்று இந்தச் சரித்திரத்தைத் தமக்குச் சொன்னதற்காக மாணுக்கர்களோடு நாரதரைப் பூஜித்தார். இவ்வாறு விதிப்படி அருச்சிக்கப்பட்ட தேவரிஷியான நாரதரும் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு தேவலோகஞ் சேர்ந்தார்.

வேடனுக்குச் சாபமிடுதல்.

அவர் சென்ற ஒரு முகூர்த்த நேரத்துக்குப்பின், வால்மீகி முனிவர் கங்காநதிக் கருகிலுள்ள தமஸை என்னும் நதிக்குச் சென்றார். அந்த நதிக் கரையைச் சேர்ந்து அதில் ஓடுகிற தெளிவான தீர்த்தத்தைப் பார்த்து அவர் தம்முடன் வந்து அருகில் நின்றுகொண்டிருந்த மாணுக்கனை நோக்கி, "அப்பா, பாரத்துவாஜா இந்தத் தெளிந்த நீரைப் பார்; சாதுக்களுடைய உள்ளம் போலப் பரிசுத்தமாயிருக்கிறது. கமண்டலத்தைக் கீழே வைத்துவிட்டு மரவுரியை எடுத்துக்கொடு. இந்தத் திவ்விய தீர்த்தத்திலே நான் ஸ்நானஞ் செய்யப்போகிறேன்" என்றார். மகாத்துமாவாகிய வால்மீகிமுனிவர் இங்ஙனம் கட்டளையிட்டவுடன், வெகு வணக்கத்தோடு பரத்துவாஜன் தனது குருவுக்கு மரவுரியைக் கொடுத்தான். ஐம்புலன்களை அடக்கிய அம்முனிவர் அவன் கையினின்றும் அதை வாங்கிக்கொண்டு விசாலமான அந்தக் காட்டை நாற்புறத்தும் பார்த்துக்கொண்டே சென்றார். சென்ற வால்மீகிபகவான் அவ்விடத்துக்குச் சமீபத்தில் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் ஆணும் பெண்ணுமாய் இனிமையான குரலுடன் விளையாடிக்கொண்டிருந்த இரண்டு கிரௌஞ்சப் பறவைகளைப் பார்த்தார். அவர் அவைகளைப் பார்த்துக்கொண்டிருக்கையில் கொடுந்தொழில் செய்யுந் துணிவும்

பிராணிகளிடத்துப் பகைமையுமுடைய வேடனொருவன் அப் பறவைகளி லொன்றைக்கொன்முன் ; கொல்லப்பட்டது ஆண் பறவை. அது தேகமெல்லாம் இரத்தமோடக் கீழே விழுந்து துடிக்க, எப்பொழுதும் தன்னைவிட்டுப் பிரியாது மனங்கலந்து களித்திருந்ததும் விரிந்த இறகுடையதும் சிவப் புக் கொண்டை தலையில் அமையப்பெற்றதுமான அவ்வாண் பறவையைப் பிரிந்து பெண்பறவை வெகு பரிதாபமாகக் கூவிற்று. அவ்வாறு அவ்வாண் பறவையை வேடன் கொன்ற தைக் காணவே, வெகு தருமாத்துமாவாகிய அம்முனிவருக்குக் கருணை உண்டாயிற்று. அக்கருணையுண்டான காரணத்தால், வேடன் செய்த செயலை வெகு அநியாயமான காரியமாக எண்ணி, பெண் பறவையின் அழுகையையுங் கேட்டு, அந்த மகாத்துமா பின்வரும் வார்த்தையைச் சொன்னார். அது யாதெனில், "அடா வேடா, காமத்தால் மயங்கியிருந்த கிரௌஞ்ச மிதுனத்தில் ஒன்றை அநியாயமாய் நீ கொன்றபடியால் உனக்கு எக்காலத்தி லும் நல்லகதி இல்லாமற் போகக்கடவது" என்பதாம். இவ் வாறு சொன்ன பின்பு, அவர் சற்றுநேரஞ் சிந்தித்து அந்த வார்த்தையை ஆலோசித்துப்பார்த்து, தமக்குள்ளேயே "இந் தப் பறவையின் துக்கத்தால் பீடிக்கப்பட்டு நாம் என்ன சொன் னோம்" என்று கருதினார். பின்பு சற்றுப் பொறுத்துத் தாம் சொன்ன பதங்களைப் பரிசோதித்து, அருகிலிருந்த பரத்து வாஜனை நோக்கி, "துக்கத்தால் நான் சொன்ன சொற்கள் எழுத் தொத்த நான்கு பதங்களாய் அமைந்து வீணைத்தந்தியில் தாள வொத்தோடு பாடப்படும் ஒருபாட்டுப்போல் இருத்தலால், இனி இது ஒரு பாட்டாகவே வழங்கட்டும்" என்றார். அவ்வாறு முனிவர் சொன்னவுடன் மாணாக்கனும் மிகச் சிறந்ததான அந் தச் சுலோகத்தை வெகு சந்தோஷத்தோடு பாடஞ் செய்து கொண்டான். குருவும் அவனிடம் சந்தோஷமடைந்தார். பின்பு அவர் அந்தத் தீர்த்தத்தில் விதிப்படி நீராடி அவ்விஷயத்தைப் பற்றி ஆலோசித்துக்கொண்டு தமது ஆச்சிரமத்துக்குத் திரும்பி னார். அவருடைய முக்கிய மாணாக்கனும் அநேக சாஸ்திரங்களை

அறிந்தவனும் ஞாபகசக்தியுள்ளவனும் வணக்கமுடையவனுமான பரத்துவாஜனும் கலசத்தில் தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு அவர்பின்னே மீண்டான். மாணாக்கனோடு ஆச்சிரமத்தையடைந்த வால்மீகி முனிவர் ஓரிடத்தில் இருந்து, நடந்த விஷயத்தில் ஞாபகத்தைச் செலுத்திக் கொண்டே வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

பிரமதேவர் வரவு.

அந்தச் சமயத்தில், உலகங்களைச் சிருஷ்டித்தவரும் வல்லமைசாலியும் நான்கு முகமுடையவரும் மிக்க தேஜஸுள்ளவருமான பிரமதேவர் வால்மீகி மகாரிஷியைத் தாம் பார்ப்பதற்கு அவ்விடம் வந்தார். அவரைக் கண்டதும், வால்மீகிமுனிவர் அதிக விரைவாய் எழுந்து மிக்க வியப்புற்று மனமொழிகளை அடக்கிக் கொண்டு கைகளைக் கூப்பிநின்றார். பின்பு அவர் பிரமாவை விதிப்படி பணிந்து, யோகக்ஷேமம் விசாரித்து, அர்க்கியம் பாத்தியம் ஆசனம் முதலியவை கொடுத்துப் பூஜித்தார். பிரமதேவர் ஓர் ஆசனத்தில் வீற்றிருந்துகொண்டு வால்மீகி முனிவரையும் வேறொரு ஆசனத்திலிருக்கச் சொன்னார். அவ்வாறே அம்முனிவரும் ஆசனத்திலிருந்தார். இவ்வாறு உலகத்தைப் படைத்தவர் தாமே தம் எதிரிலிருக்கவும் வால்மீகி முனிவர் கவலையில் முழுகினவராய் அந்தப் பறவையைக் குறித்துத் துக்கித்து அந்தச் சுலோகத்தை அடிக்கடி மனத்தினுள்ளே சொல்லிக் கொண்டு "ஐயோ! அந்த மகாபாவியான துஷ்டவேடன் என்ன காரியஞ் செய்தான்! மதுரமாய்க் கூவிக்கொண்டிருந்த கிரௌஞ்சத்தைக் காரணமில்லாமல் அநியாயமாய்க் கொன்றிட்டானே!" என்று பலவாறு நினைத்து நினைத்துத் துக்கித்தனர்.

பிரமதேவர் வரங் கொடுத்தல்.

முனிவர் அவ்வாறிருக்கையில் பிரமதேவர் அவரைப் பார்த்து மிகச் சிரித்துக்கொண்டே "ஐயா, நீர் செய்தது செய்யுள். அதிற் சந்தேகமில்லை. எனது அருளினாலேயே கலைமகள் தானாக உம்மிடம் வந்து தோன்றியிருக்கின்றாள். ஆதலினால், நீர் நீதியும், புத்திநுட்பமும், நற்குண நற்செய்கைகளும்

தைரியமும் பொருந்திய இராமருடைய சரித்திரம் முழுவதை யும் நாரத முனிவரிடம் கேட்டபடி சுலோக ரூபமாக இயற்றி உலகத்தில் பிரசித்தஞ் செய்யவேண்டும். ரஹஸ்யமாயும் வெளிப் படையாயும் இராமர், லக்ஷ்மணர், சீதை, ராக்ஷஸர்கள் என்ன என்ன செய்திருப்பார்களோ அவைகளெல்லாம், இதுவரையில் உமக்குத் தெரியாமலிருந்த போதிலும் இனி உள்ளது உள்ள படி உமக்குத் தெரிந்துவிடும். என்னுடைய அநுக்கிரகத்தால் நீர் செய்யப்புகும் காவியத்தில் சொல்லப்படும் சொற்களில் ஒன்றாவது பொய்க்காது. மனத்தைக் களிப்பிக்கும் புண்ணிய கதையான இராமாயணத்தைச் செய்யுள் ரூபமாக நீர் செய்யக் கடவீர். உலகத்தில் மலைகளும் நதிகளும் உள்ளவரையில் நீர் செய்யப்புகும் இராமாயண கதை விளங்கி நிற்கக்கடவது. நீர் செய்த இராமாயண கதை விளங்கி நிற்கிறவரையில் நீரும் நமது உலகத்தில் வசித்துக் கொண்டிருக்கக் கடவீர்" என்று சொல்லி அநுக்கிரகித்துத் தாம் வீற்றிருந்த ஆசனத்தி லிருந்தபடியே மறைந்தார். அதைக்கண்டு வால்மீகி முனிவரும் அவர் மாணாக் கர்களும் வியப்புற்றார்கள். பின்பு, அம்முனிவருடைய மாணாக் கர்கள் எல்லோரும் களிப்புடன் அடிக்கடி இடைவிடாது அந்த ஸ்லோகத்தையே பாடினார்கள். பாடப்பாட ஆச்சரியமடைந்த வர்களாய் "முனிவர் இரக்கத்தினால் சொன்ன சொல், ஒத்த யும் இயற்றுவோரிடம் நான்கு பாதங்களால் யாக்கப்பட்டுச் டார். [illegible] "என்று சொன்னார்கள்

பின்பு கீர்த்திபெற்ற மகா புத்திமானான — [illegible]படிப் முனிவர் உயர்ந்த நடையையுடையனவும், அடிதோறும் ஒத்த எழுத்துக்களை யுடையனவும், சிறந்த விருத்தங்களாக வுள்ளன வும, சொற்சுவை, பொருட்சுவை நிரம்பியனவும், படிப்பவர் களின் மனத்துக்கு ஆனந்தத்தைக் கொடுப்பனவுமான ஆயிரக்

கணக்கான சுலோகங்களினால் புகழ்பெற்ற இராமசரித்திரத்தைப் பிரசித்தமான காவியமாக இயற்றினார்.

இலக்கணப்படி அமைந்த சொற்களின் தொடர்களேயும் எழுத்துப் புணர்ச்சிகளேயும் பத உற்பத்திகளேயும் உடையதும், ஒத்து இனிமையாய்ப் பொருள் விளங்கும் வாக்கியங்களேயுடையதுமாக முனிவரால் இயற்றப்பட்ட இராம சரித்திரமும் இராவணவதமும் அடங்கிய காவியத்தைக் கேளுங்கள்.

---

## மூன்றாஞ்சருக்கம்:

### காவியத்தின் அனுக்கிரமணி.

வால்மீகிமுனிவரின் யோகதிஷ்டை.

தருமமூர்த்தியாகிய வால்மீகி முனிவர் ஆசமனம் பண்ணிவிட்டுக் கைகூப்பிக்கொண்டு கிழக்கு முகமாகத் தருப்பையைப் பரப்பி அதன் மேலிருந்து, நாரதரிடத்தில் தாம் கேட்ட வாக்கியங்களே உத்தேசித்துப் பார்த்து, புத்திமானை அந்த இராமரைக் குறித்தும், தருமங்களே அறிவிக்கும் அவரது சரித்திரத்தைக் குறித்தும் இன்னும் என்ன என்ன உள்ளனவென்று சிந்திககத் தொடங்கினார். அப்பொழுது, அவர், தம்முன்பு இராமர், லக்ஷ்மணர், சீதை, தசரதர், அவருடைய மனைவிகள் முதலான எல்லோரும் அயோத்தியில் சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும், மற்றைக் காரியங்கள் செய்து கொண்டும் யதார்த்தமாய் எந்த எந்த வேளையில் எப்படி எப்படி இருந்[illegible] வால்மீகி அந்த அந்த விதமா யிருக்கக்கண்டார். [illegible]ஷயங்களே உள்ளங்கைனத்தைக் கைக்கொண்[illegible]வாகக் கண்டார்.

[illegible]ரும் [illegible]ஜுவலிதமாய்த் தம்முடைய யோகபலத்தால் எல்லா விஷ

இராம சரித்திர மகிமை.

யங்களையும் அறிந்தபின் அந்த மகா முனிவர் ஸர்வ ஜனங்களுடைய மனத்தையும் கவர் கின்றவரான இராமருடைய சரித்திரத்தை இயற்றத் தொடங்கினார். அது எவ்விதமான சரித்திரமென்றால், படிக்கின்ற ஒவ்வொருவருடைய மநோரதத்தையும் நிறைவேற்று வது ; சதுர்வித புருஷார்த்தங்களையும் வெளியிடுவது ; சமுத் திரமானது இரத்தினங்களுக்கு இருப்பிடமா யிருப்பதுபோல அநேகமான சிறந்த விஷயங்களுக்கு இருப்பிடமானது ; காது கொடுத்துக் கேட்பதற்கோ மிக இனிமையானது. முன்பு நாரதர் எவ்வாறு சொன்னாரோ அவ்வாறே இரகுவம்சத்தின் கதையை வால்மீகி மகாமுனிவர் இயற்றினார்.

பாலகாண்டம்.

இராமருடைய அவதாரம், அவரது பராக்கிரமம், அவர் எல்லாரிடத்திலும் வைத்திருந்த விசுவாசம், மனிதர்கள் அவரிடம் வைத்த பிரீதி, அவரது பொறுமை, நற்குணம், சத்தியம், அவர் விசுவாமித்திரருடன் வசித்தகாலத்தில் பிரஸ்தாபத்துக்கு வந்த வேறுபல விசித்திர மான கதைகள், அவர் ஈசுவரனது வில்லைமுறித்தது ஜாநகியைக் கலியாணஞ் செய்துகொண்டது, அவருக்கும் பரசுராமருக்கும் நடந்த சம்வாதம்.

அயோத்தியா காண்டம்.

இராமருடைய சிறந்த குணங்கள், பட்டாபிஷேக காரி யங்கள், கைகேயியின் துஷ்ட குணம், பட் டாபிஷேகத்துக்குவந்த விக்கினம், இராம ருடைய வனவாசம், அதன் நிமித்தம் தசரத ருடைய புலம்பல், புத்திரசோகத்தால் அவருக்குண்டான மர ணம், குடிகளுக்குண்டான துக்கம், அவர்களை இராமர் அயோத் திக்குத் திருப்பியனுப்பியது, இராமருக்கும் குகனுக்கும் நடந்த சம்பாஷணை, சுமந்திரர் திரும்புதல், இராமர் கங்கையைத் தாண்டுதல், பரத்துவாஜரைத் தரிசித்தல், அவரது நியமனப் படியே இராமர் சித்திரகூடம் போய் ஒரு பர்ணசாலை கட்டிக் கொண்டு அங்கு வாசஞ்செய்தது, பரதருடைய வரவு, அவர் இராமரை அயோத்திக்குத் திரும்பிவர வேண்டிக்கொள்ளுதல்,

இராமர் பரலோகஞ் சென்ற தம் பிதாவுக்குத் தர்ப்பணஞ் செய்தல், பரதர் இராமபாதுகையுடன் திரும்பிவந்து அதற்குப் பட்டாபிஷேகஞ் செய்தல், நந்திக்கிராமத்தில் வசித்தல்.

ஆரணிய காண்டம். பின்பு இராமர் தண்டகாரண்ணியத்துக்குச் செல்லுதல், அவ்விடத்தில் நடந்த விராதனுடைய வதம், சரபங்கரைக்காணுதல், சுதீக்ஷ்ணரைச் சந்தித்தல், சீதாதேவி அநசூயையுடன் ஒரே ஆசனத்தில் வீற்றிருத்தல், அநசூயை சீதாதேவிக்குச் சந்தனங்கொடுத்தல், இராமர் அகஸ்தியரைக் காணல், ஜடாயுவைச் சந்தித்தல், பஞ்சவடி சேர்தல், சூர்ப்பணகையைப் பார்த்தல், சூர்ப்பணகையின் சம்பாஷணை, அவளை அங்கபங்கஞ் செய்தல், கரதூஷணத் திரிசிரர்களுடைய வதம், இராவணனுடைய முயற்சி, மாரீசன் வதை, சீதையை இராவணன் தூக்கிச்செல்லல், இராமர் புலம்பல், கழுகுகளுக்குத் தலைவனான ஜடாயுவின் வதை, கவந்தனைக் காணல்.

கிஷ்கிந்தா காண்டம். பம்பாசரசைப் பார்த்தல், சபரியைக் காணல், பின்பு அநுமானைச் சந்தித்தல், ரிசியமூக பருவதஞ் சேர்தல், அங்குச் சுக்கிரீவனுடன் சிநேகஞ்செய்தல், சுக்கிரீவனுக்கு நம்பிக்கை உண்டாகும்படி செய்தல், பிறகு இராமருக்கும் சுக்கிரீவனுக்கும் உண்டான பிரியாநட்பு, வாலி சுக்கிரீவ யுத்தம், வாலிவதம், சுக்கிரீவனுடைய பட்டாபிஷேகம், தாரையின் புலம்பல், இராமரும் சுக்கிரீவனும் செய்து கொண்ட வாக்குத்தத்தம், மழைக்காலத்தை அவ்விடத்தில் இராமர் கழித்தல், சுக்கிரீவனை இராமர் கோபித்தல், சைநியத்தைச் சேர்த்தல், வாநரர்களைத் திக்குகள்தோறும் விடுத்தல், பூமியின் அமைப்பைக் கூறல், தமது முத்திரை மோதிரத்தை இராமர் அநுமானிடம் கொடுத்தல், ஜாம்பவான் சுயம்பிரபை பிலத்தைக் காணல், சமுத்திரதீரத்தில் வாநர சைநியம் விரதங்கொண்டாடல், சம்பாதியின் வரவு, சமுத்திரத்தைத் தாண்ட அநுமான் மலையேறுதல்.

சமுத்திரத்தைத் தாண்டுதல், சமுத்திரராஜனுடைய ஏவுத

சுந்தர காண்டம். லால் மைநாகம் என்னும் மலை சமுத்திரத்திலிருந்து எழும்புதல், சிம்மிகையின் வதை, இலங்கையைச் சேர்தல், இரவில் உட்புகுதல், அநுமான் விசாரமுறுதல், அநுமான் இராவணனையும் அவனது புஷ்பகவிமானத்தையும் காணல், ராக்ஷஸர்கள் கள் குடிக்கிற இடத்தை அடைதல், அந்தப்புரத்தைக் காணுதல், அசோகவனத்திற் புகுதல், அவ்விடத்தில் சீதையைக் காணல், அடையாள மோதிரத்தைக் கொடுத்தல், இராவணனை அங்கு அநுமான்காணல், ராக்ஷஸிகள் சீதையைப் பயமுறுத்தல், த்ரிஜடை கனவுகாணல், சீதை தனது சூளாமணியை அநுமானிடம் அடையாளமாகக் கொடுத்தல், அசோகவனத்தையழித்தல், ராக்ஷஸிகள் ஓடுதல், கிங்கரர்களுடைய வதம், அநுமான் கட்டுப்படல், அட்டகாசத்துடன் இலங்கையை எரித்தல், சமுத்திரத்தைத்தாண்டி மீளுதல், வாநரர்கள் மதுவுண்டல், இராமரை அநுமான் தேற்றுதல், சூளாமணியைக் கொடுத்தல்.

யுத்தகாண்டம். இராமர் சமுத்திராசனை அடைந்தது, நளன் சேதுவைக் கட்டியது, அதன் வழியாகச் சமுத்திரத்தைக் கடந்தது, இராத்திரியில் இலங்கையை யடைந்தது, விபீஷணனுடன் சேர்ந்தது, அவன் இராவணனை வதைப்பதற்கு வேண்டும் உபாயங்களை எடுத்துரைத்தது, கும்பகர்ணன் வதை, மேகநாதன்வதை, இராவணன் வதை, சீதையை மீட்டல், விபீஷணபட்டாபிஷேகம், புஷ்பகவிமான தரிசனம், அயோத்திக்கு மீளல், பரதரைச்சந்தித்தல், இராமபட்டாபிஷேக மகோத்ஸவம் சைநியத்துக்கு விடைகொடுத்தனுப்புதல், தமது நாட்டை இராமர் சந்தோஷப்படுத்துதல், சீதாதேவியை இராமர் தம்மைவிட்டு அகற்றல் இவைகளைக் காவியரூபமாகச் செய்ததோடு இனி இராம சம்பந்தமாக நடக்கும் சரித்திரத்தையும் உத்தரகாண்டத்தில் முக்காலங்களையும் அறிந்த வால்மீகிமுனிவர் சொல்லியருளினார்.

## நான்காஞ்சருக்கம் :

### குசலவர்களுக்கு இராமாயணத்தைப் போதித்தல்.

குசலவர்களுக்கு இராமாயணத்தைப் போதித்தது.

இராமர் இராச்சியத்தை அடைந்ததன் பின்னரே இந்தச் சொற்சுவையும் பொருட்சுவையு முள்ள இராமாயண காவியத்தை வால்மீகிமாமுனிவர் இயற்றினார். இந்த மகா புத்திமான் ஏழு காண்டங்களாக இருபத்து நாலாயிரம் சுலோகங்கள் அடங்கியதும் ஐந்நூறு சருக்கங்களையுடையதுமான இந்த இராமாயணமென்னுங் கிரந்தத்தைச் செய்துமுடித்து இனி இராமசரித்திரத்தில் நடக்கப்போகிற விஷயங்களையும் அதில் எடுத்துக்காட்டி, இதை யாருக்குக் கற்பித்துச் சபைகளிற்போய்ப் பிரசங்கிக்கச் செய்யலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருந்தார். அந்த மகாமுனிவர் கடவுளைத் தியானித்துக்கொண்டு இப்படி ஆலோசிக்கையில் குசன், லவன் என்னும் பெயருள்ள தவவேஷம்பூண்ட இரண்டு குமாரர்கள் வால்மீகி மகாமுனிவரை நமஸ்கரித்தார்கள். அவர்களோ முனிகுமாரர்களல்லர் ; அரசிளங்குமாரர்கள் ; தருமமறிந்தவர்கள் ; பெருங்கீர்த்தி பெற்றவர்கள் ; இருவரும் சகோதரர்கள் ; பாட்டுக்கு இசைந்த நல்ல சாரீரமுள்ளவர்கள் ; ஆச்சிரமங்களில் வசிப்பவர்கள் ; செய்யுளின் அருத்தத்தைச் சுலபமாய்க் கிரகிக்கும் சாமர்த்தியமுள்ள புத்திசாலிகள் ; வேதங்களில் நன்றாய்த் தேர்ந்தவர்கள். இத்தன்மையுடையவர்களை அந்தமுனிவர் கண்டவுடன், சீதையின் சரித்திரமும் இராவணனுடைய வதையும் அடங்கியதும் வேதப்பொருளை விளக்கும்பொருட்டுத் தாம் செய்த மகாகாவியமும் படிக்கவும் இராக தாளங்களோடு பாடவும் இனியதும் சிருங்காரம் முதலிய நவரசங்களோடு கூடியதுமான இராமாயணத்தை அவர்களுக்கு முழுதும் கற்பித்தனர்.

நல்ல கானசக்தியுள்ள குசலவர்கள் இராகதாளக் கிரமங்

குசலவர் இராமாயண கானம்.

கள் சிறிதும் தவறுதபடி சுத்தமாய்ப் பாடத் தொடங்கி, வீணை முதலான வாத்தியங்களோடு கானஞ்செய்தார்கள். காந்தருவ சாஸ்திர ரீதியாகத் தாளங்களோடு கானவித்தையை அப்பியசித்தவர்களும், மந்த்ரம், மத்தியமம், தாரம் என்று சொல்லப்படும் இசைவகைகளை ஆராய்ந்தவர்களும், சகோதரர்களும், தத்துவமறிந்தவர்களும், இயல்பாகவே நல்ல ஸ்வரஞானம் உள்ளவர்களும், உருவத்தால் கந்தருவர்கள்போல் இருப்பவர்களும், உருவம் அழகு இவைகளுடன் கூடினவர்களும், மதுரமான ஸ்வரத்தில் பேசுகிறவர்களும், மகாபாக்கியசாலிகளும், சகல லக்ஷணங்களோடு கூடினவர்களும், இராமருடைய தேகத்தின் பிரதிபிம்பங்கள் போல் விளங்குபவர்களுமான அவ்விருவரும் மகாரிஷியினிடம் கற்றுக்கொண்டபடி அக்காவியம் முழுவதையும் பாடஞ்செய்து கொணடு முனிவர்கள் பிராமணர்கள் ஸாதுக்கள் இவர்கள் கூட்டங்களில் தாங்கள் உபதேசம்பெற்றவாறு உள்ளது உள்ளபடி ஊக்கத்தோடு சிறப்பாகப் பாடத்தொடங்கினார்கள்.

முனிவர்கள் புகழ்தல்.

ஒரு சமயத்தில் வெகு பரிசுத்தமான உள்ளமுடைய முனிவர்கள் சேர்ந்திருந்த சபையில் குசலவர்கள் இராமாயணத்தைப் பாடலானார்கள். அதைக் கேட்டு முனிவர்களெல்லாரும் தங்கள் கண்களில் ஆனந்தபாஷ்பம் ததும்ப ஆச்சரியமடைந்து மிகப் புகழலானார்கள். தருமசிந்தையுள்ள அம்முனிவர்கள் எல்லோரும் அவர்களிடத்தில் வெகு பிரீதி பாராட்டி அவர்கள் பாடின திறமைக்காக அவர்களைத் தக்கபடி கொண்டாடினார்கள்: "ஆ! ஆ! பாட்டு எவ்வளவு அழகாயிருக்கிறது! செய்யுள் நடை எவ்வளவு சிறப்பா யிருக்கிறது! விஷயங்கள் நடந்து வெகுநாளாயினும், நாம் இப்பொழுது நேரில் பார்ப்பதுபோ லிருக்கிறது!" என்றார்கள். "இவ்விருவரும்சேர்ந்து மதுரமாகவும், ஆனந்தமாகவும் ஸ்வரம் நிரம்பவும் காவியக்கருத்தை நன்றாக அறிந்துபாடுகிறார்கள்" என்றார்கள். இவ்வாறு தங்களை மிகச்சிறந்த முனிவர்கள் புகழக்கேட்டுக் குசலவர்கள் அதிக உத்ஸாகங்கொண்டு

மிகவுயர்ந்த இராகத்தில் மிகவும் அழகாகப் பாடிவந்தார்கள். அவர்களுடைய பாட்டைக்கேட்டு ஆனந்தமடைந்த முனிவர்களில் ஒருவர் எழுந்து அவர்களுக்கு நல்ல கலசம் ஒன்று கொடுத்தார்; மற்றொருவர் ஒரு மரவுரி கொடுத்தார். முனிவரா லியற்றப்பட்டதும் ஆச்சரியகரமானதும், எல்லாக் கவிகளுக்கும் சிறந்த ஆதாரமா யிருக்கின்றதுமான இந்தக்கிரந்தமானது இவ்வாறு கானம்பண்ணி முடிக்கப்பட்டது. எல்லாவித கானங்களிலும் தேர்ச்சியடைந்த இக்குமாரர்கள் கேட்பவர்களுக்கு ஆயுளைப் பெருகச்செய்ய வல்லதும் தேகத்துக்குப் புஷ்டியைக் கொடுப்பதுமான இவ்விராமாயணத்தை யாவரும்கேட்டு மனமகிழும்படியும் எங்கும் எல்லோரும் கொண்டாடும்படியும் வெகு அழகாகக் கானம் பண்ணினார்கள்.

இராமர் இராமாயணங்கேட்டல்.

அவ்வண்ணம் எல்லாராலும் புகழப்பெற்ற அச்சிறுவர்களை அயோத்திமாநகரத்து வீதியில் இராமர் கண்டு தமது மாளிகைக்கு அழைத்துவந்து தக்கபடி பல ஸம்மானங்கள் செய்து உபசரித்தார். இராமர் தங்கச் சிங்காதனத்தின் மேல் வீற்றிருந்து, மந்திரிமார்கள் சூழ்ந்துநிற்க, உடன் பிறந்தவர்களான பரதர், லக்ஷ்மணர், சத்துருக்கினர் என்னும் மூவரையும் பார்த்து "வெகு யுக்தியாய்ச் செய்யுள் நடையில் அமைக்கப்பட்டிருக்கிற இராமாயணக் கிரந்தத்தைத் தெய்வவொளிபொருந்திய இவ்விரு சிறுவரும் பாட நீங்கள் எல்லாரும் கேளுங்கள்" என்று சொல்லிக் குசலவர்களைப் பாடக் கட்டளையிட்டனர். உடனே அவர்கள் வெகுமதுரமாயும், உருக்கமாயும், இலகுவாயும், மநோகரமாயும், தெளிவாயும், உரத்தகுரலோடு வீணைவாசிப்பது போலப் பாடினார்கள். அந்தச்சபையிலிருந்த எல்லாருடைய தேகங்களையும், மனங்களையும், அவ்விருவரும் காதுக்கினிமையாய்ப்பாடியபாட்டு சந்தோஷப்படுத்தியது. உடனே இராமர் சபையைப்பார்த்து "குசன் லவன் என்னும் இவ்விருவரும் பார்வைக்கு முனிகுமாரர்கள்போல் தோற்றினும் இராஜலக்ஷணங்கள் பொருந்தினவர்களா யிருக்கிறார்கள்; இவர்கள் கானமோ எனக்கு

வெகுபிரியமா யிருக்கிறது. இவர்கள் பாடும் இராமாயணத்தை நீங்கள் எல்லாரும் வெகு ஸாவதானமாகக் கேளுங்கள்'' என்றார். அவ்வாறு இராமர் சபையைப்பார்த்துச் சொன்னதை அவ்விரு குமாரரும் கேட்டு உத்ஸாகங் கொண்டவர்களாய், சங்கீத சாஸ்திரமார்க்கம் தவறாதபடி இராமசரித்திரத்தை மீட்டும்பாட ஆரம்பித்தார்கள். இராமர் சபை மத்தியில் வீற்றிருந்து, அதனைக் கேட்பதிலேயே முழுதும் முழுகியிருந்தனர்.

## ஐந்தாஞ்சருக்கம் :

### அயோத்திநகரச் சிறப்பு.

இக்ஷ்வாகு வம்சம்.

வைவஸ்வத மநுவிடமிருந்து உற்பத்தியான வெற்றி பொருந்திய மன்னவர்களுடைய வமிசத்தைச் சேர்ந்ததாய் இவ்வுலகம் முழுமையுமிருந்தது. அவ்வரசர்கள் சந்ததியில் ஸகரன் என்ற அரசன் தோன்றினன். அவன், தன்பெயரைக் கொண்டே ஸாகரம் என்று இன்றைக்கும் சொல்லப்படும் கடலை இந்தப் பூமியில் வெட்டுவித்தவன். அவன் வெளியிற் புறப்பட்டால் அவனுடைய அறுபதினாயிரம் குமாரர்களும் அவனைச்சூழ்ந்து புறப்படுவார்கள். அவ்வளவு பெருமைதங்கிய இக்ஷ்வாகுவமிசத்து அரசர்களுடைய பிரசித்தமான சிறந்த சரித்திரமாகிய இராமாயணத்தை ஆதிதொடங்கி முழுவதும் நான் இப்பொழுது வெளியிடுகிறேன். அந்தச் சரித்திரமோ தருமார்த்தகாமங்களைக் கொடுக்க வல்லது. ஆகையால் எல்லோரும் அசூயையின்றிக் கவனமாய்க் கேட்கவேண்டும்.

அயோத்தி.

சரயூ என்னும் நதியின் கரையில் கோசலம் என்ற ஒரு பெரிய தேசமுண்டு. அது தனதானியங்களால் எப்பொழுதும் செழித்திருக்கும். அதிலுள்ள ஜனங்கள் எப்பொழுதும் சந்தோஷத்தோடு செழித்திருப்பார்கள். அந்தத் தேசத்தின் பிரதான நகரம் அயோத்தி என்பது. அது

உலகமெல்லாம் கீர்த்திபெற்ற நகரம். ஆதி புருஷனான மநு என்ற சூரியவம்சத்து அரசனால் உண்டாக்கப்பட்டது. பன்னிரண்டு யோஜனை நீளமும் மூன்று யோஜனை அகலமுமுள்ளது. செல்வம் நிறைந்து விசாலமான வீதிகளாலும் வழிகளாலும் விளங்குவது.

**வீதிகள்.**

அந்நகரத்து இராஜமார்க்கங்களெல்லாம் எப்பொழுதும் நன்றாய்த்தண்ணீர் தெளிக்கப்பட்டு எங்கும் மலர்கள் இறைக்கப்பட்டிருக்கும். தேவலோகத்தை இந்திரன் ஆளுவதுபோல் அந்த அயோத்தியை மகாத்துமாவும் இராச்சியத்தை விருத்திபண்ணுகிறவருமான தசரதமகாராஜா ஆண்டு வந்தார். அந்த நகரத்தில் ஒவ்வொரு வீட்டுக் கதவுகளும் நிலைகளும் விசித்திரவேலை செய்யப்பட்டு வெகு அழகாய்ச் சோபிக்கும். கடைவீதிகள் நன்றாய் நிருமிக்கப்பட்டிருக்கும்.

**ஆயுதங்கள் முதலியன.**

எல்லாவிதமான ஆயுதங்களும், யந்திரங்களும் அந்தப்பட்டணத்திலுண்டு. எல்லாவிதமான கைத்தொழிலிலும் பெயர்பெற்ற சிற்பிகள் அவ்விடம் வசித்துக்கொண்டிருப்பார்கள். ஒப்பில்லாத ஒளியையுடைய சிறந்த அந்த நகரம், அரசரைத் துதித்துப்பாடுபவர்களான சூதர்களாலும், குலமுறை கூறிப்புகழ்ந்து அரசரைத் துயிலெழுப்புபவரான மாகதர்களாலும் நிறைந்துள்ளது. அயோத்தியின் உன்னத மாளிகையின்மீது கொடிகள் எப்பொழுதும் பறந்துகொண்டேயிருக்கும். அப்பட்டணத்தின் நான்கு பக்கங்களிலும் சதக்கினி என்ற பீரங்கிகள் நகர ரக்ஷணத்தின்பொருட்டு வைக்கப்பட்டிருக்கும். பெண்களுக்கு நர்த்தனம் பயிற்றுகிற நடர்கள் அவ்விடமிருந்தார்கள். அரசர்கள் விளையாடத்தக்க அநேக சிங்காரவனங்களும் ஜனங்கள் உலாவிச் சுகமடையத் தக்க பல மாஞ்சோலைகளும் அங்கு உண்டு.

**கோட்டை.**

நான்கு பக்கங்களிலும் மதில்களால் சூழப்பட்ட ஒரு பெருங்கோட்டையும், அக்கோட்டையைச் சுற்றி ஆழமாக வெட்டப்பட்ட பெரிய அகழியுமிருக்கிறபடியால் சத்துருக்கள் அந்நகரத்துள் வருந்தியும் புகுவது அரிது.

நல்ல சாதிக் குதிரைகளும், யானைகளும், பசுக்களும், ஒட்டகங்களும், கோவேறு கழுதைகளும் அவ்வூரில் அதிகமாக உண்டு. நாடோறும் கப்பங்களைக் கட்டுவதற்காகச் சிற்றரசர்கள் அநேகர் அவ்வூருக்கு வந்து போய்க்கொண்டிருப்பார்கள். நாலா தேசங்களிலிருந்தும் அநேக வியாபாரிகள் அங்குவந்து குடியேறி வாணிகத்தில் விருத்தியடைந்து வந்தார்கள். இரத்தினங்கள் இழைத்துக் கட்டப்பட்ட மாளிகைகளாலும் செய்குன்றுகளாலும் உள்வீடுகளாலும் நிறைந்து இந்திரனுடைய அமராவதிநகரம்போல விளங்குவது அந்நகரம். ஆச்சரியகரமாயும், சொக்கட்டான் கட்டம்போல வடிவமமைந்தும், சிறந்த ஸ்திரீசமூகத்தோடு கூடியும், எல்லாவகை இரத்தினங்களும் நிறைந்தும், தேவ மாளிகைபோன்ற இராசமாளிகைகள் விளங்கப்பெற்றும், இடைவிடாது நெருங்கியவீடுகளையுடையதாயும், சமபூமியில் ஏற்படுத்தப்பட்டும், குற்றமில்லாமலிருக்கிறது அந்நகரம்.

நீர்வளம்.

செந்நெலரிசிவளமும் கரும்பின் இரசம்போலிருக்கிற தீர்த்தமும் அவ்வூரிலுண்டு. வெகு நாகரிகம் பொருந்திய பட்டணமாதலால் மிருதங்கம், வீணை முதலிய வாத்தியங்களை விசித்திரமாக வாசிப்பவர்கள் பலர் அங்கே உண்டு. சுருக்கிச் சொல்லில் அந்நகரம் அநேக சித்தர்கள் பல நூறாண்டு தவம்புரிந்து தங்களுடைய தபோ மகிமையால் எல்லா விதத்திலும் சிலாக்கியரான மனிதர்களால் நிரம்பிய ஒரு திவ்விய விமானத்தைப் பெற்று அதையே அயோத்தி என்று பெயரிட்டுப் பூலோகத்தில் வைத்தாற்போல் காணப்பட்டது என்னலாம். அவ்வயோத்தியில் தசரதமகாராஜாவானவர், மகாரதர்கள் என்று கீர்த்தியடைந்த போர்வீரர்கள் ஆயிரக்கணக்காய் நிரம்பிச் சூழ வீற்றிருந்தார். அவர்கள் வில்வித்தையிலும் மற்றுமுள்ள போருக்குரிய வித்தைகளிலும் வெகு தேர்ச்சி அடைந்தவர்கள். அவர்கள் காட்டில் மனஞ்சென்றபடி அட்டகாசம்பண்ணிக்கொண்டு சஞ்சரிக்கிற சிங்கங்களையும் புலிகளையும் பன்றிகளையும் தேகபலத்தாலும், ஆயுத பலத்தாலும் தைரியத்தோடு

சேனை.

கொன்று வீழ்த்துஞ் சாமர்த்தியமுள்ளவர்கள். ஆனால் தரும யுத்தம் பண்ணுகிறவர்களாகையால், சண்டையில் புறங்காட்டிப் பயந்தோடுகிறவர்களையும் துணைவலியற்றவர்களையும் சந்ததியில்லாதவர்களையும் கண்ணெதிரில் நில்லாதவர்களையும் தொடமாட்டார்கள். அவ்விடமிருந்த பிராமணர்கள் எப்பொழுதும் யஜ்ஞ யாகங்கள் செய்துகொண்டும், தருமத்திலேயே சிந்தையைச் செலுத்திக்கொண்டும், வேதங்களையும் கற்றுக் கரைகண்டும் சத்தியந்தவறாது உத்தம குணங்கள் பொருந்தி இல்லறத்திலிருந்தாலும் மாமுனிவர்கள்போலிருந்தார்கள். இவ்வித மகிமைபொருந்தியது அயோத்திமாநகரம்.

---

## ஆறுஞ்சருக்கம் :

### அரசியற்சிறப்பு.

*தசரதர்.*

அயோத்திமாநகரத்தை ஆண்டவர் தசரதமகாராஜர் என்று பெயர் கூறப்படுவர். அவர் நான்கு வேதங்களையும் நன்றாக ஓதி உணர்ந்தவர்; எல்லோரையும் தம்வசப்படுத்துகிறவர்; பின்வருங்காரியங்களை முன்பாகவே வெகு கூர்மையாய் ஊகித்தறிபவர்; வெகு பராக்கிறமசாலி, நாட்டிலும் நகரத்திலும் வசிக்கும் ஒவ்வொரு மனிதரிடத்தும் நண்புள்ளவர்; இக்ஷ்வாகு வமிசத்தில் அதிரதர் என்று கீர்த்திபெற்றவர்; அநேக யாகங்களையும் தருமங்களையும் தினந்தோறும் பண்ணிக்கொண்டிருப்பவர்; மனம் அடங்கினவர்; ஐம்புலன்களையும் தமக்குள் அடக்கினவர்; மகாமுனி என்று சொல்லும்படியான கடோரதபசி; மூவுலகத்திலும் கீர்த்திபெற்ற இராஜரிஷி; வெகு பலசாலி; சத்துருக்களை நாசம் பண்ணினவர்; அனேக மித்திரர்களோடு கூடியவர்; ஐசுவரியங்களில் இந்திரனையும் குபேரனையும் போன்றவர்; ஆதிமநு எவ்வண்ணம் குடிகளை ரக்ஷித்தாரோ அவ்வண்ணம் குடிகளை ரக்ஷிப்பவர்; சொன்ன சொல் தவறாதவர்; தாம் செய்ய

வேண்டிய தொழிலைச் சந்தோஷத்துடன் எக்காலத்துஞ் செய்பவர். இந்திரன் அமராவதி என்னும் நகரத்தை ஆள்வதுபோல அவர் அயோத்தியை ஆண்டுவந்தார்.

குடிகளின் சிறப்பு.

அவர் காலத்தில் அந்நகரத்திலுள்ள குடிகளெல்லாம் வெகு சந்தோஷமுடையவர்களாயும், தரும சிந்தையுள்ளவர்களாயும், அநேக சாஸ்திரங்களை யுணர்ந்தவர்களாயு மிருந்தார்கள். ஒவ்வொருவரும் தமக்கிருக்கும் பொருளைக்கொண்டு மனத் திருப்தியடைந்து பிறர் பொருளின்மேல் சிறிதேனும் ஆசையென்பதில்லாமல், சத்தியம் தவறாதவராயிருந்தனர். அந்நகரத்தில் இல்லை என்ற சொல்லே யில்லாமல் ஒவ்வொருவரும் எல்லாப்பொருள்களையும் அடைந்தவராயிருந்தார்கள். ஒவ்வொரு வீட்டிலும் பசுக்கள், குதிரைகள், தனம் தானியம் ஆகிய இவைகள் நிறைந்திருந்தன. நெறி நீங்கிய நடைத்தையுள்ளவர்கள் அவ்விடத்தில் ஒருவருமில்லை. தேடிப்பார்த்தாலும், கண்களுக்கு அருவருப்பான தோற்றமுள்ள உருவம் அவ்வூரில் அகப்படாது. அற்ப குணமுள்ளவர்களும், படியாத பாமரர்களும், ஈசுவரனில்லை என்று நாஸ்திகவாதம் பண்ணுபவர்களும் அங்கு மருந்துக்குங் கிடைக்கமாட்டார்கள். அப்பட்டணத்தில் வசித்த ஒவ்வொரு புருஷரும் ஒவ்வொரு மாதரும் உத்தமரும் உத்தமியுமாய்த் தருமங்களை நடத்திக்கொண்டும் நல்வழியில் நடந்துகொண்டும் இருந்தனர். அவர்களை நல்லொழுக்கத்தால் ரிஷிகள் ரிஷிபத்தினிகள் என்று சொல்லவேண்டுமே யல்லது வேறன்று. ஆனால் அவர்கள் உலகவாழ்க்கையைத் துறந்தவர்களல்லர். ஒவ்வொருவரும் தமக்கு உரிய குண்டலங்கள், கிரீடங்கள், ஆரங்கள், தோள்வளைகள், கைவளைகள் முதலான உயர்ந்த ஆபரணங்களை அணிந்தவராகியே யிருப்பர். ஒவ்வொருவரும் தம்தேகத்தை எப்பொழுதும் பரிசுத்தமாக வைத்துக்கொண்டிருப்பர். அவர்கள் மேனியில் வாசனைப் பொருள்களைப் பூசிக்கொள்வார்கள். பூமாலைகளைத் தரித்துக்கொள்வார்கள். அவர்கள் புசிக்கும் ஆகாரம் வெகு பரிசுத்தமாயும் ருசிகரமாயுமிருக்கும். ஒவ்வொரு

வரும் கேட்டவர்களுக்கு இல்லை என்னுமல் வேண்டுமட்டும் பொருள் கொடுக்குந் தருமசிந்தை யுள்ளவர். இவற்றோடு ஒவ்வொருவரும் தம் தம் மனத்தை அடக்கி யாளுபவரா யிருந்தனர். நித்திய ஹோமம் செய்யாதவர்களும், யாகங்கள் பண்ணுதவர்களும் அவ்விடத்தில் இல்லை. அற்ப புத்தியும், திருட்டும் உடைய மானிடப்பதர்கள் அவ்விடத்தில் வசித்ததேயில்லை. ஆசாரமற்றவனும், ஜாதி தப்பி விவாகஞ் செய்பவனும் அவ்வூரி லில்லை. அவ்வூரில் ஒவ்வொரு வீட்டிலுமிருந்த அந்தணர்கள் தங்கள் ஐம்புலன்களையும் வென்றவர்களாய், தங்கள் காரியங்களைச் சரிவர நடத்திக்கொண்டு, தானம் அத்தியயனம் முதலிய ஒழுக்கங்கள் தவறுதவர்களா யிருந்தார்கள். நாஸ்திகன், பொய் பேசுபவன், கொஞ்சம் படித்தவன், படியாத மூடன், வலியற்றவன், வல்லமையற்றவன் ஆகிய இவர்கள் அவ்வூரில் தேடிப்பார்த்தாலும் அகப்படார்கள். அவ்வூரில் வேதமோதாமலும், தருமத்தைச் செய்யாமலும, கேட்டவர்களுக்குக் கொடாமலுமிருப்பவர்களும், கெட்ட எண்ணமும் கெட்ட புத்தியுமுள்ளவர்களும், சித்தப் பிரமை முதலிய பிணியால் வருந்துகிறவர்களுமான பிராமணர்கள் இல்லை. ஒவ்வொருவரும் அரசரிடம் மேலான அன்பு வைத்திருந்தார்கள். நான்கு வருணத்தார்களும் தேவ பக்தியும் அதிதிபூஜையும் பொருந்தியவர்களாயும், வெகு கீர்த்தி பெற்றவர்களாயும், நன்றி மறவாதவர்களாயும், கொடையாளிகளாயும இருந்தார்கள்; அவர்கள் தங்கள் தங்கள் தொழிலைத் தைரியத்துடனும் சந்தோஷத்துடனும் செய்துகொண்டு நெடுங்காலம். வாழ்ந்திருந்தார்கள்; பிள்ளை பேரன் முதலிய சந்ததிகளுக்கு ஒரு விதமான குறைவுமின்றித் தமது மனைவிகளோடு என்றும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

க்ஷத்திரியர்கள் பிராமணர்களிடம் வெகு மரியாதை வைத்திருந்தார்கள். வைசியர்கள் க்ஷத்திரியர்களுக்கு அடங்கியிருந்தார்கள். சூத்திரர்களும் தங்கள் தொழிலைச் சரியாய் நடத்திக்கொண்டு மற்ற மூன்று சாதியார்க்கும் உபசாரம் செய்துகொண்டிருந்தார்கள். மநுசக்ரவர்த்தி ஆதிகாலத்தில் எவ்விதம் ஆண்டு

வந்தாரோ அவ்விதம் இக்ஷ்வாகு வமிசத்திலுதித்த தசரதரும் வெகு விமரிசையாய் அயோத்தியில் ஆண்டு வந்தார். மலைக் குகை சிங்கங்களால் நிறைந்திருப்பதுபோல அயோத்தி நகரம் நல்ல தீரர்களும் சூரர்களும் முகத்தில் பொறி பறக்கும்படியான கோப முள்ளவர்களும் படித்தவர்களுமான போர் வீரர்களால் நிறைந்திருந்தது. காம்போஜம், பாஹ்லீகம், வநாயு முதலிய தேசங்களிலிருந்தும், சிந்துநதிக் கரையிலுள்ள ஊர்களிலிருந்தும் வந்த உயர்ந்த குதிரைகள் இந்திரன் குதிரைபோல் அவ்வூரில் விளங்கின. அன்றியும் விந்தியபர்வதம் இமாசலம் முதலிய இடங்களிலிருந்து வந்த உத்தம யானைகளும் அவ்வூரிலிருந்தன. ஐராவதம், புண்டரீகம், அஞ்சனம், வாமனம் முதலிய திக்கஜங் களின் வமிசங்களில் தோன்றினமையும், பத்ரம், மந்த்ரம், மிரு கம் என்ற ஜாதிகளில் சேர்ந்தவையும், இந்த மூன்று ஜாதிகளும் கலந்துண்டான பத்ரமந்திரம், பத்ரமிருகம், மிருகமந்திரம் என்ற இனங்களில் பிறந்தவையுமான யானைக் கூட்டங்கள் அவ்வூரில் எங்கும் மலிந்து மலைகளுக்கொப்பாய் வளர்ந்து எப்பொழுதும் மதங்கொண்டு விளங்கின. அப்பட்டணம் இப்படி சதுரங்க சேனைகள் நிறைந்து நெருங்கியதனால் தனது எல்லைக்கு அப்பா லும் இரண்டுயோஜனை தூரம்பரவி, போரில் எவராலும் வெல்ல முடியாததாய் அயோத்தியை என்ற பெயரை உண்மையாகவே அடைந்து விளங்கிற்று. தேவேந்திரனுக்குச் சமானராய் விளங்குகிற தசரத மகாராஜர் பகைவர்களை யெல்லாம் வென்று அடக்கி, தன் பெயருக்குத் தக்கபடி பலமான கோட்டைக் கதவு களாலும் தாழ்களாலும் காக்கப்பட்டு மாடமாளிகை கூட கோபு ரங்களாலும் அநேக குடிகளாலும் நிறைந்த அயோத்திமா நகரை சந்திரன் நக்ஷத்திரங்களை ஆளுவதுபோல அனைவரையும் சந் தோஷப்படுத்திக்கொண்டு, ஆண்டு அரசு புரிந்திருந்தார்.

## ஏழாஞ்சருக்கம்:

### மந்திரிகள் சிறப்பு.

மந்திரிகளின் பெயர்.

தசரத மகாராஜருக்கு எட்டு முக்கிய மந்திரிகளிருந்தார்கள். அவர்கள் ஆலோசனையைச் சேர்ந்த விஷயங்களில் தேர்ச்சி யடைந்தவர்கள்; குறிப்பறிந்து நடப்பவர்கள்; வெகு ஆசாரசீலர்கள்; யஜமான விசுவாசம் அதிகமுடையவர்கள்; எப்பொழுதும் இராஜக் காரியத்திலேயே கண்ணுயிருப்பவர்கள். அவர்கள் பெயர் திருஷ்டி, ஜயந்தர்; விஜயர், சித்தார்த்தர், அர்த்தசாதகர், அசோகர், மந்திரபாலர் சுமந்திரர் என்பனவாம். இவர்களன்றி மிகுந்த நம்பிக்கையுள்ள இரண்டுமுக்கிய புரோகிதர்களும உண்டு: அவர்கள் குலகுருவாகிய வசிஷ்ட மகாரிஷியும், வாமதேவ மகாரிஷியும். இவர்களல்லாமல் வேறு அநேக மந்திரிகளும் புரோகிதர்களும் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் கல்வியில் சிரமப்பட்டவர்கள்; வெகு மாளிகள்; சாமர்த்தியசாலிகள்; ஐம்புலன்களேயும் அடக்கினவர்கள்; சகல சம்பத்தும் பொருந்தியவர்கள்; நற்குண நற்செய்கை யுள்ளவர்கள்; சாஸ்திரங்கள் யாவும் நன்குய் உணர்ந்தவர்கள்: அதிபலசாலிகள்; வெகுகிர்த்தியடைந்தவர்கள்; இராச்சியகாரியத்தில் எப்பொழுதும் கண்ணுள்ளவர்கள்; தாம் சொன்னபடி நடப்பவர்கள்; பராக்கிரமத்திலும், பொறுமையிலும் பேர்பெற்றவர்கள்; எப்பொழுதும் புன்னகையுடன் பேசுபவர்கள்; கோபத்திலாவது, காமத்திலாவது இலாபத்திலாவது ஒருபொழுதும் பொய் பேசாதவர்கள். தமது இராச்சியத்திலும் அயல் இராச்சியங்களிலும் நடந்தவையும் நடக்கின்றவையும் நடக்கவிருப்பவையுமான செய்திகளில் ஒற்றர்கள் முகமாக அவர்கள் அறியாதது ஒன்றுமில்லே. அவர்கள், நிச்சயித்த விஷயங்களே ஒழுங்காக எடுத்துக்கூற வல்லவர்கள்; முதலில் சோதித்து அறிந்து பின்பு உயிர்தோழர்களான மந்திரிகள் என்று அரச

அவர்களின் குணங்கள்.

ரால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்கள்; குற்றம் செய்தவர் தங்கள் புத்திரரா யிருந்தாலும் பக்ஷபாத மில்லாமல் தண்டனை விதிக்கும் சித்தமுள்ளவர்கள்; எப்பொழுதும் பொக்கிஷம் நிரம்பி யிருக்கவேண்டிய மார்க்கத்தையும் சைநியங்களைச் சேர்க்கும் வழியையும் தேடிக்கொண்டே யிருப்பவர்கள். சத்துருக்களா யிருந்தாலும் குற்றமற்றவர்களாயின் அவர்களிடம் அம்மந்திரி கள் கெட்ட எண்ணம் வைக்கிற வழக்கமேயில்லை. அவர்கள் மிக்க வீரர்களாயும், எப்பொழுதும் உத்ஸாக குணத்தோடு கூடினவர்களாயும், இராஜ தந்திரத்தை வழுவாமல் நடத்துபவர் களாயும், நல்லவர்களுக்கு நல்லவர்களாயும், பிராமணர்களையும் க்ஷத்திரியர்களையும் ஒருபொழுதும் வருத்தாதவர்களாயும், குற் றத்துக்குத் தக்க தண்டனை விதிப்பவர்களாயு மிருந்தார்கள்.

இத்தகைய நல்ல மந்திரிகள் ஒரே மனமுள்ளவர்களாய் இராஜகாரியத்தை வகித்துவந்ததனால் அந்தப் பட்டணத்திலும், அதைச்சேர்ந்த தேசத்திலும் பொய் சொல்லுகிறவன் ஒருவ னும் இல்லை. அதுபோலவே துஷ்டனும், பிறன் மனைவிமேல் ஆசைவைப்பவனும் இல்லை. இராச்சியம் முழுவதும் சாந்த மாகவே யிருந்தது. அம்மந்திரிகள் எல்லோ ரும் நல்ல ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டு, நல்லொழுக்கம் உள்ளவர்களாயும், மன்னவர் நன்மையை நாடியவர்களாயும், இராஜ காரியத்தில் வெகு ஜாக்கிறதை யுள்ளவர்களாயும் நடந்துவந்தார்கள்; அப் படியாயினும், நியாயந்தவறி நடவார்கள். அவர்கள் தங்களு டைய மேலான குணத்திற்காக அரசனால் ஆராய்ந் தெடுக்கப் பட்டவர்கள். அவர்களுடைய புத்தி பல விஷயங்களிலும் சக்தி யுள்ளதா யிருந்தபடியால் அயல் நாடுகளிலேயும் அவர்கள் புகழ் பரவியது. அவர்கள் சந்தி, விக்கிரகம் என்ற இராச்சிய தந்திரத்தின் உண்மையைச் செவ்வையாய் அறிந்தவர்களாயும், பரம்பரையான பெருந்தகைமையை யுடையவர்களாயும், தங்கள் ஆலோசனைகளைத் தங்களுக்குள்ளேயே காரியம் முடியும் வரை யில் ரஹஸ்யமாய் வைத்துக்கொள்ளுங் குணமுடையவர்களா

அவர்களின் பெருமை.

யும், ஒவ்வொரு விஷயத்தையும் தீர்க்கமாய் ஆலோசிக்கும் நுட்பபுத்தி யுள்ளவர்களாயும், நீதி நூல்களை நன்றாய்ப் பகுத்தறிந்தவர்களாயும், எல்லாருக்கும் அநுகூலமாகப் பேசுபவர்களாயு மிருந்தார்கள்.

தசரதர் அரசாட்சி.

இத்தன்மையராகிய மந்திரிமார்களால் சூழப்பட்டுத் தசரதமகாராஜர் தமது தேசத்தின் ஒவ்வொரு பாகத்தையும் தூதர்கள் என்ற கண்ணால் எப்பொழுதும் பார்த்துக்கொண்டும், குடிகளுடைய க்ஷேமத்தில் எப்பொழுதும் திருஷ்டிவைத்துக்கொண்டும், குடிகளை எப்பொழுதும் சந்தோஷப்படுத்திக்கொண்டும், நீதிதவறாது பூமியை ஆண்டு செங்கோல் செலுத்திக்கொண்டிருந்தார். அவர் பெருங்கீர்த்தி மூன்றுலோகங்களிலும் பரவிற்று. தருமசிந்தை யுள்ளவர் என்றும், கொடையாளி என்றும், சொன்னசொல் தவறாதவர் என்றும் சொல்லப்பெற்றுப் புருஷசிங்கம்போல் அரசாண்டுவந்த காலத்தில் அவர் தமக்குச் சமமான அல்லது தமக்கு மேலான பராக்கிரமமுள்ள சத்துருவைச் சந்தித்ததேயில்லை. எப்பொழுதும் அவர் நண்பர்களாலும் தமக்குள்ளடங்கிய சிற்றரசர்களாலும் சூழப்பட்டு, இந்திரன் தேவலோகத்தை யரசாளுவதுபோல் பூலோகத்தை ஆண்டு, உலகுக்கு நேருந் தீங்குகளாகிற முட்களைத் தமது பிரதாபத்தினால் களைந்தெறிந்துகொண்டிருந்தார். அரசருடைய க்ஷேமத்திலேயே கண்ணாயிருந்துகொண்டும் அவரிடம் அன்பு வைத்துக்கொண்டும் புத்திமான்களாயும் சமர்த்தர்களாயுமுள்ள மந்திரிகளால் சூழப்பட்டு அந்தத் தசரதமகாராஜர் தமது சத்துருக்களையடக்கி உலகத்தை ரக்ஷித்தது, சூரியன் தனது கிரணங்களால் சூழப்பட்டு உலகத்தை ரக்ஷிப்பதுபோலிருந்தது.

## எட்டாஞ்சருக்கம்.

### புத்திரகாமேஷ்டி.

தசரதர் அசுவமேதம் செய்ய விரும்பியது.

இவ்வளவு நீதியோடும் பராக்கிரமத்தோடும் அரசாண்டிருந்த தசரதமகாராஜர் அநேகவித தருமங்கள் செய்தும் புத்திரபாக்கியம் இல்லாமலிருந்தார். பலவாறு ஆலோசனை செய்து முடிவில் அவர் "புத்திர சம்பத்தை யடையும்பொருட்டு நாம் ஏன் அசுவமேதயாகம் பண்ணக்கூடாது" என்று கருதினர். அது அவர் தமக்குள்ளே செய்துகொண்ட ஆலோசனையன்று; தம்மைச் சூழ்ந்த மகா தருமசீலர்களாகிய மந்திரிகளுடன் கலந்துசெய்த ஆலோசனை. இவ்வித உறுதி மனத்திலுதித்தவுடன் அவர் முக்கிய மந்திரியான சுமந்திரரைப் பார்த்து "நீர் தாமதமின்றி நமது குருக்களையும் புரோகிதர்களையும் அழைத்து வாரும்" என்று கட்டளையிட்டார். அவர் விதித்தபடியே சுமந்திரர் விரைவாகச்சென்று வேதவித்துக்களான அம்மகான்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு வந்தனர். அவ்விதம் வந்தவர்கள் சுயஜ்ஞர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், புரோகிதராகிய வசிஷ்டர், இன்னுமுள்ள முக்கியமான பிராமணர்கள். தசரதர் வந்தவர்கள் எல்லாருக்கும் தக்க மரியாதை செய்து வந்தனம்பண்ணி நீதிமுறை வழுவாத தருமார்த்த காமங்களைக் குறித்த சில விஷயங்களை வெகு மதுரமாய்ப் பேசலுற்றவராய், "புத்திரபாக்கியமில்லாமல் பரிதபிக்கிற எனக்குச் சுகம் என்பது ஒரு சிறிதுமில்லை; இந்தக் குறையைநீக்க நான் சாஸ்திரவிதிப்படி அசுவமேதயாகம் பண்ணுவதாக நிச்சயித்திருக்கிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன? எவ்விதமாய்ச் செய்தால் என்மனோரதம் கைகூடுமோ அவ்விதத்தை ஆலோசித்துச் சொல்லவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

இவ்வாறு தசரதர் சொல்லியதைக் கேட்டு அங்கு வந்திருந்த வசிஷ்டர் முதலாகிய எல்லாப் பிராமணர்களும் அரசர்

கொண்ட எண்ணம் நியாயமான எண்ணம் என்று அங்கீ கரித்து மகிழ்ச்சியடைந்தவர்களாய் அவரைப் பார்த்து "மகாராஜாவே! யாகத்தை நடத்து வதற்கு அவசியமான பொருள்களைச் சேரும். அசுவத்தைச் செலுத்தும். புத்திர சம்பத்தை அடையவேண்டு மென்ற விஷயத்தில் உண்மையான தருமசிந்தையுடன் நீர் அபிப் பிராயம் வைத்திருக்கிறபடியால் உமக்குத் தப்பாமல் இஷ்டப் படி நல்ல புத்திரர்களுண்டாவார்கள்" என்றார்கள். இவ்வண் ணம் பிராமணர்கள் சொன்ன சொல்லைக் கேட்ட தசரதர் சந்தோ ஷத்தினாலே கண்களில் ஆனந்தபாஷ்பம் ததும்பத் தமது மந்திரி களைப் பார்த்து "குருக்கள் கட்டளையிடுகிற வண்ணம் எல்லாப் பொருள்களையும் சேருங்கள். உபாத்தியாயருடன் தகுந்த வீரர் கள் பாதுகாத்துப் பின் செல்ல அசுவத்தைச் செலுத்துங்கள். சரயுநதியின் வடபுறத்தில் யாகசாலையை நிர்மாணஞ் செய்யுங் கள். எவ்வண்ணம் செய்தால் யாதொரு விக்கினமுமில்லாமல் எடுத்த காரியம் முடியுமோ அவ்வண்ணம் சாந்திமுதலிய சாஸ் திரீயமான சடங்குகளை நடத்துங்கள். அசுவமேதமென்பது சாதாரணமாய் எல்லா அரசர்களாலும் எளிதாக நடத்தப்படும் யாகமன்று. அதை நடத்துவதிலும் ஒருவித மான குற்றமுங் குறையுமின்றி நடத்துவது தான் கீர்த்தி. இவ்விதமான நற்காரியங்களுக்கு விக்கினங்கள் எங்கென்றுகாத்திருக்கும்; கல்வியில்தேர்ந்த பிரமராக்ஷஸர்கள் என்ற துர்த்தேவதைகள் எந்த வேளையில் ஒரு குற்றம் நேரும் என்று பார்த்துக்கொண்டேயிருப்பார்கள். சாஸ்திரப்பிரகாரம் சடங்கு களை நடத்துவதில் ஏதாவது ஒருசிறுபிழை நேர்ந்தால் உடனே அந்தத் துர்த்தேவதைகள் யாகத்தை அழித்துவிடுவார்கள். யாகத்தைச் செய்கிறவனும் உடனே மாண்டுபோவான். ஆதலால் நான் ஆரம்பிக்கும் யாகம் சாஸ்திரப்பிரகாரம் நிறைவேறும் படி உங்களுடைய மேலான புத்திவல்லமையைக் கொண்டு நீங் கள் தக்க முயற்சி செய்யவேண்டும்" என்று சொன்னார்.

முனிவர்களின் அநுமதி.

யாகம் வழுவில் லாமல் நடக்க வேண்டு மென்றது.

அரசர் மனைவிகளுக்குத் தம் எண்ணத்தைத் தெரிவித்தது.

இவ்விதமாய்க் கட்டளையிடப்பட்ட மந்திரிகள் எல்லோரும் "அப்படியே" என்று ஒப்புக்கொண்டார்கள். அதன் பின் அரசரை வாழ்த்தி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு எல்லா வேதோத்தமர்களும் தத்தம் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். அவர்கள் போனபின் தசரத மகாராஜர் தம் மந்திரிமார்களுக்கும் விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தமது அரண்மனைக்குச்சென்று, அரசியர்களிருக்கும் அந்தப்புரத்தினுள்ளே புகுந்து, உயிருக்குச் சமானரான தம்முடைய மனைவிமார்களை நோக்கி "நமக்குப் புத்திரபாக்கியமில்லையே; அதை அடைய நான் அசுவமேதயாகம்பண்ண எத்தனித்திருக்கிறேன்" என்றார். அந்தச் சந்தோஷ சமாசாரத்தைக் கேட்டவுடன் அவர்கள் முகங்கள் பனிக்காலம் முடிந்தபின் தாமரை மலர்கள் மலர்வனபோல் விளங்கின.

---

## ஒன்பதாஞ்சருக்கம்:

---

### புத்திரகாமேஷ்டி சம்பந்தமான சுமந்திரர் வாக்கியம்.

ரிசிய சிருங்க முனிவர் சரித்திரம்.

புத்திரகாமேஷ்டி சம்பந்தமாய் நடந்த பிரஸ்தாபங்களையெல்லாம் கேட்டுச்சுமந்திரர், தசரதர் ஏகாந்தத்தில் இருந்தபொழுது அவரைப் பார்த்துப் பின் வருமாறு சொல்லலாயினர். மகாராஜாவே! வசிஷ்டர் முதலான ரித்துவிக்குகள் உபதேசித்த இந்தப் புத்திரகாமேஷ்டி விஷயமாய் நான் ஒருவரலாறு முன்னே கேள்வியுற்றிருக்கிறேன். உமக்குப் புத்திரபாக்கியம் உண்டாகவேண்டிய விஷயமாய்ச் சனத்குமாரர் என்ற பெரியவர் முனிவர்கள் முன்னிலையில் ஒருவரலாறு சொல்லியிருக்கிறார். அவர் சாதாரண முனிவரல்லர்; மூன்று காலங்களுமுணர்ந்தவர். அவர் சொன்னது யாதெனில்:—காசியபமகாரிஷிக்கு விபண்டகர் என்றொரு குமாரரிருக்கிறார். அவர் வெகு

பிரசித்தர். இவருக்குப் புத்திரராக ரிசியசிருங்கர் என்னும் பெயரோடு மிக்க கீர்த்தியுள்ள முனிவர் ஒருவர் அவதரிப்பார். அவர் உலக வியவகாரமே இன்னதென்று தெரியாமல் வளர்ந்து அரணியத்திலேயே வசித்துக் கொண்டிருப்பார். அந்த ரிசிய சிருங்கர் தந்தை சொல்லுகிறதைக்கேட்டு நடப்பதேயன்றி வேறொன்றும் தெரியாதவரா யிருப்பார். அவர் பிரமசாரியா யிருந்து கொண்டே அக்கினிகாரியங்களை அநுஷ்டிப்பதும் தம் தந்தையாருக்கு ஊழியஞ்செய்வதும் தவிர வேறுவிதமான தொழி லில்லாதவராய் மகாத்துமாவாகத் தம் வாழ்நாட்களைக் கழித்துக் கொண்டிருப்பார். அக்காலத்தில் அங்கதேசத்தில் உரோம பாதர் என்று ஓர் அரசர் வெகு சிறப்புடன் அரசாட்சி செய் வார். அவர் ஏதோ ஒரு சமயத்தில் நீதியிலிருந்து தவறுவார்.

அங்கதேசத் தில் மழையில் லாமை.

அந்தப் பாபத்தினால் அவர் தேசத்தில் மழை யில்லாமல் எல்லா உயிர்களும் மிக வருத்தப் படும். அப்பொழுது உரோமபாதர் வெகு துயரப்பட்டு ஞானவ்ருத்தர்களான பிராமணர் களைச் சபையில் கூட்டி "மழை உண்டாக என்ன உபாயஞ் செய்தால் பலிக்கும்? நீங்கள் எல்லாரும் உலகநீதியை நன்றாய் ஆராய்ந்து அறிந்தவர்கள்; என்ன பிராயச்சித்தம் பண்ணினால் மழை யுண்டாகுமோ அதைச்சொல்லுங்கள்" என்று கேட் பார். அவர்கள் "விபண்டகர் குமாரரான ரிசியசிருங்கரை எப்படியாவது அங்கநாட்டுக்குக் கொண்டுவந்தால் மழை பெய்யும். அவரை அங்க நாட்டுக்குக் கொண்டுவந்து அவ ருக்குத் தக்க மரியாதை பண்ணிச் சாந்தை என்னும் உமது கன்னிகையை விவாகஞ் செய்துகொடும்" என்று சொல்வார் கள். அவர்கள் சொன்ன சொல்லைக்கேட்டு உரோமபாதராஜா "பிரமசாரியாயிருக்கும் அம்முனிவரை நானிங்கு எந்த உபா யத்தினால் கொண்டுவருவேன்" என்று கவலை யடைவார்.

"அதன் பின்பு அவ்வேந்தர் அந்தணர்களைக் கொண்டே அவ்வந்தணரை அழைக்கக் கருதித் தமது மந்திரிகளையும் புரோகிதர்களையும் அவரிடம் செல்ல வேண்டிக்கொள்வார்.

ரிசியசிருங்கரை அழைத்துவரும் உபாயங் கூறல்.

அவர்கள் அரசர் சொல்லைக்கேட்டுத் துயர மடைந்து முகம்வாடி "நாங்கள் அம்முனி வரை அழைத்துவரச் செல்லமாட்டோம்: எங்களுக்கு அச்சமுண்டாகின்றது; ஆனால் அவரை அழைத்துவரும் வகையை விசாரித்துச்சொல்லுகின் ரும்" என்பார்கள். பின்பு சற்று ஆலோசித்து அவர்கள் அரசரிடம் "ரிசியசிருங்கருடைய பிரமசரிய விரதத்திற்கு யாதொரு தோஷமும் உண்டாகாத வண்ணம் நாங்கள் வேறு உபாயத்தினால் அவரை அழைப்பிக்கிறோம்; நீர் சஞ்சலப்பட வேண்டாம்" என்பார்கள். அதன் பிறகு அங்கதேசத்தரசர் கணிகைகளைக்கொண்டு அம்முனிகுமாரரைத் தம் நாட்டிற்கு அழைத்துவருவார், அவர் அந்நாட்டில் புகுந்ததும், மழை பொழியும். சாந்தையும் அவருக்கு விவாகஞ்செய்து கொடுக் கப்படுவாள். மருமகராகிய ரிசியசிருங்கர் உமக்குப் புத்திரர் கள் உண்டாகும் யாகத்தைச் செய்துவைப்பார்" என்று சனத் குமாரர் சொல்லியதை நானிப்பொழுது உமக்குச் சொன் னேன்" என்று சுமந்திரர் சொல்லிமுடித்தனர். அதைக்கேட் டுத் தசரதர் ஆனந்தமடைந்து சுமந்திரரை நோக்கி "எவ்வித மாய் ரிசியசிருங்கரை அழைத்து வந்தார்கள்; அதை விரிவாகச் சொல்லும்" என்று வேண்டிக்கொண்டார்.

---

## பத்தாஞ்சருக்கம்:

---

### உரோமபாதர் ரிசியசிருங்கரை வரவழைத்தல்.

கணிகைகளை ஏவுதல்.

அவ்வாறு தசரதர் வினவச் சுமந்திரர் பின்வருமாறு சொல்லலுற்றார்:— "மந்திரிகள் ரிசியசிருங் கரை அழைத்துவந்த உபாயத்தைச் சொல்லு கிறேன்; கேளும். மந்திரிகளும் புரோகிதரும் உரோமபாதரை நோக்கி "ஒருவித சங்கடமுமில்லாத உபாய மொன்றை நாங்கள் ஆலோசித்திருக்கிறோம். ரிசியசிருங்கர்

எப்பொழுதும் அரணியத்திலேயே சஞ்சரித்துக்கொண்டு தவம் புரிவதிலேயே தமது காலத்தைக் கழித்துவருகின்றார். அவர் பெண்களையும் சிற்றின்பத்தையும் அறியார். ஓர் உபாயத்தினால் நாங்கள் அவரை விரவில் இந்நகரத்துக்கு அழைத்துவருகின்றோம்; அதாவது: அழகிற் சிறந்த கணிகைகளை அங்குப்போகும்படி செய்யவேண்டும்; அவர்கள் பலவித உபாயங்களால் அவரை வஞ்சித்து, மரியாதையுடன் அழைத்துவருவார்கள்'' என்றார்கள். அவர்கள் சொன்னதை அரசர் கேட்டு அப்படியே செய்யுங்களென்று சொன்னார். புரோகிதரும், மந்திரிகளும் அவ்வாறே செய்யக் கணிகைகளை ஏவ, அந்தக் கணிகைகள் அவர்களுடைய சொற்படி அந்த வனத்திற் புகுந்து, அவ்வாச்சிரமத்திற்குச் சமீபத்தில் இருந்து கொண்டு, எப்போதும் ஆச்சிரமத்திலேயே வசிப்பவராயிருந்த அம்முனிகுமாரரைக் காணவேண்டிய பிரயத்தனங்கள் செய்துகொண்டிருந்தார்கள். எப்பொழுதும் தமது தந்தைக்கு ஊழியம் செய்வதிலேயே மனக்களிப்படைந்திருந்த அந்த முனிகுமாரர் தமது ஆச்சிரமத்தை விட்டு வெளியில் புறப்படவே யில்லை. அவர் தாம் பிறந்த நாள் முதல், ஸ்திரீகளையாவது, புருஷர்களையாவது நாடுநகரங்களிலுள்ள மற்றைப் பொருள்களையாவது பார்த்ததேயில்லை.

பின்பு ஒருநாள் அம்முனிகுமாரர் அக்கணிகைகளிருந்த இடத்திற்குத் தன்னடைவிலேவந்து அவர்களைப்பார்த்தார். வெகு அழகாய் ஆடை ஆபரணங்கள் அணிந்திருந்த அந்தக் கணிகையர்கள் இனிமையான குரலில் பாடிக்கொண்டு அவரிடம் வந்து ''ஐயா! அந்தணரே, நீர் யார்? நீர் இங்கு ஏனிருக்கிறீர்? நாங்கள் இதை அறியவிரும்புகிறோம்.

ரிசியசிருங்கர் கணிகைகளைக் கண்டு உபசரித்தல்.

ஒருவருமற்ற பயங்கரமான இக்காட்டில் நீர் தனிமையாக ஏன் திரிந்துகொண்டிருக்கிறீர்? எங்களுக்குச் சொல்லவேண்டும்'' என்றார்கள். அதுவரையில் தாம் காணாத அழகிய அக்கணிகைகளின் உருவங்களைக் கண்டவுடனே அம் முனிகுமாரர் அவர்களிடம் அதிக அன்பு உள்ளவராய்த் தம்முடைய தந்தை

யின் பெயரை அவர்களிடம் சொல்லவேண்டுமென்று எண்ண முற்று "விபண்டகர் என்பவர் என்னுடைய தந்தை. நான் அவருடைய குமாரன். என்பெயர் ரிசியசிருங்கன். எனது பெயரும், என்னுடைய செய்கையும், உலகமெல்லாம் தெரிந்திருக்கலாம். அழகுள்ளவர்களே! இவ்விடத்திற்குச் சமீபத்திலேயே எங்கள் ஆச்சிரமமிருக்கின்றது. அவ்விடத்திற்குத் தயைசெய்து நீங்கள் வரவேண்டும். சாஸ்திரப்பிரகாரம் உங்களுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளை நான் அங்குச் செய்கின்றேன்" என்றார். அம்முனிகுமாரர் அவ்வாறு சொல்லவே அவர்கள் அவருடைய ஆச்சிரமத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையோடு அவருடன் அவ்விடஞ் சென்றார்கள். அவ்வண்ணம் வந்த அவர்ளுக்கு அந்த முனிகுமாரர் இது "அருக்கியம், இது பாத்தியம், இவை கிழங்குகள், இவை கனிகள்" என்று சொல்லிக்கொடுத்து உபசரித்தார்.

அவர்கள் அந்த உபசாரங்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு, விபண்டகருக்குப் பயந்து திரும்பிப்போக மனோவேகங் கொண்டவர்களாய் அம்முனிவரை நோக்கி "ஐயா! அந்தணரே! எங்களிடமும் முக்கியமான சில பழங்களிருக்கின்றன. அவைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று சொல்லி அதிக சந்தோஷத்துடன் அந்த முனிகுமாரரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, மோதகங்களையும் பலவித பக்ஷணங்களையும் அதிகமாகக் கொடுத்தார்கள். அரணியத்தில் எப்பொழுதும் வசித்துக்கொண்டிருக்கின்றவர்களுக்கு அரியவையும், அதுவரையில் தாம் புசிக்காதவையுமான அவைகளையெல்லாம் பழங்களென்றே கருதி அவர் புசித்தார்.

கணிகைகள் ரிசியசிருங்கரை உபசரித்தல்.

அதன்பின்பு அவர்கள் அம்முனி குமாரருடைய தந்தைக்குப் பயந்தவர்களாய் அவ்வந்தணரிடம் விடை பெற்றுக்கொண்டு தங்களுக்கு ஏதோ ஒரு விரத மிருக்கின்றதாய்ச் சொல்லி அவ்வேதுவால் அவ்விடம் விட்டுத் தாங்களிருந்த இடத்திற்குத் திரும்பி வந்தார்கள். அவர்கள் அவ்விதமாய்த் திரும்பிப்

கணிகைகள் சொற்படி ரிசியசிருங்கர் புறப்படல்.

போனபின்பு ரிசியசிருங்கர் சற்று மனங்கலங்கியவராய்த் துயரப்பட்டுக் கொண்டிருந்தார். மறுநாள் ரிசியசிருங்கர் அழகான அந்தக் கணிகைகள் இருந்த இடத்திற்குச் சென்றார். அவ்வாறு வந்த அந்தணரை அக்கணிகைகள் பார்த்ததும் மனக்களிப்படைந்து, அவரை எதிர்கொண்டு சென்று இனிய சொற்களால் "நண்பரே! எங்களுடைய ஆச்சிரமத்திற்கு வாரும்; அங்கு விசேஷமாக உபசரிக்க இருக்கிறோம்" என்று சொன்னார்கள். அம்மடந்தையருடைய இனிமையான சொற்களைக்கேட்டு, அவர்கள் கேட்டுக்கொண்டபடி அவர்களுடன் புறப்பட அவர் இசைந்தார். அப்படியே ரிசியசிருங்கரை அந்த வேசையர் வழிகாட்டி அழைத்துக் கொண்டே வந்துவிட்டார்கள்.

அங்க நாட்டில் ரிசியசிருங்கர் புகுதல்.

மகாத்மாவாகிய அவ்வந்தணர் அங்கதேசத்தில் புகுந்தவுடன் இந்திரன் எல்லாருடைய உள்ளத்தையும் குளிரச் செய்யும் மழையைப் பொழியச்செய்தான். மழையுடன் தமது நாடுபுகுந்த அவ்வந்தணரை அங்கதேசத்தரசர் எதிர்கொண்டு சென்று தலைவணங்கி நமஸ்காரஞ் செய்தார். அன்றியும் அவ்வேந்தர் வெகு பக்தியுடன் அம்முனிவருக்கு அருக்கியங் கொடுத்து அவர் உள்ளம் கோபமடையாமலிருக்கும்படி அவரருளை வேண்டிக்கொண்டார். பின்பு அவ்வேந்தர் ரிசியசிருங்கரைத் தம்முடைய அந்தப்புரத்திற்கு அழைத்துக் கொண்டுபோய்ச் சாஸ்திரப்பிரகாரம், வெகு சாந்தமான உள்ளத்துடன் சாந்தை என்னும் தம்முடைய பெண்ணை அவருக்கு விவாகஞ்செய்து கொடுத்து மகிழ்ச்சி யடைந்தார். அவ்வந்தணரும் வேண்டியவைகளை யெல்லாம் அரசர் தமக்கு அளிக்க அங்க நாட்டில் வாசஞ்செய்து கொண்டிருக்கின்றனர்."

## பதினோராஞ்சருக்கம் :

### ரிசியசிருங்கர் அயோத்தி புகுதல்.

சனத் குமாரர் தசரத ருடைய புத்திர பாக்கிய விஷயமாய்ச் சொல்லியது.

" இன்னும் சனத்குமாரமகாமுனிவர் அக்காலத்தில் கதையோடு கதையாக உங்கள் நன்மையைப்பற்றி என்ன சொல்லியிருந்தாரோ அதையும் நான் சொல்லுகிறேன். மகாராஜாவே! கேளுங்கள். இக்ஷ்வாகு வமிசத்தில் வெகு சத்தியசந்தராயும், தருமசிந்தை யுள்ளவராயும் தசரதர் என்ற ஓர் அரசர் பிறப்பார். அவருக்கும் அங்கதேசராஜருக்கும் பிரியாநட்பு உண்டாகும். அங்காராஜபுத்திரரான அந்த உரோமபாதருக்குச் சாந்தை என்ற ஒரு பெண் உண்டாவாள். ஒரு சமயத்தில் உரோமபாதரிடம் தசரதர் சென்று " என் அன்பனே! நான் பிள்ளையில்லாமலிருக்கின்றேன். சாந்தைக்குக் கணவரான ரிசியசிருங்கர் நான் நடத்தும் புத்திரகாமேஷ்டியை என் வமிசம் விளங்கும்படி நடத்திவைக்க வேண்டும்; அந்தப்படி நீர் அவருக்குச்சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொள்வார். உரோமபாதர் அதைக்கேட்டுச் சிறிதுநேரம் ஆலோசித்துப்பார்த்து ரிசியசிருங்கரிடம் போய், சாந்தையுடன் அயோத்திமாநகர் சென்று தசரதமகாராஜாவின் புத்திரகாம யாகத்தை நடத்திவைக்கும்படி கேட்டுக்கொள்வார். தசரதர் தம் மனக்கவலை ஒருவாறு நீங்கிச் சந்தோஷமாய் அவருடன் அயோத்திவந்து தமது புத்திரகாமேஷ்டியை ஆரம்பித்து, அதற்குச் சகல விஷயங்களையும் முறையே நடத்த ரிசியசிருங்கரை யஜமானனாக நியமிப்பார். தசரதர் அந்த முனிவருடைய பிரஸாதத்தால் எடுத்த கருமத்தை முழுதும் முடித்து, தங்கள் குலத்தை என்றும் நிலை நிறுத்தக்கூடியவர்களும் பராக்கிரமத்திலும் கீர்த்தியிலும் உலகமெங்கும் பெயர் பெற்றவர்களுமான நான்கு புதல்வரைப்பெறுவார்" என்று சனத்குமாரமாமுனிவர் முன்பு சொல்லியிருக்கிறார். ஆகலால், நீரே, யானை குதிரை முத

லிய சகல பரிவாரங்களோடும் உடனே அங்கநாடு சென்று அந்த முனிவரை வணங்கி அயோத்திநகரத்துக்கு அழைத்துவரவேண் டும்" என்று சுமந்திரர் சொன்னார்.

*தசரதர் ரிசிய சிருங்கரை அழைக்கச் சென்றது.*

சுமந்திரர் வாக்கியத்தைக்கேட்டுத் தசரதர் வெகுசந்தோஷ மடைந்து வசிஷ்டராகிய தமது குருவினிடம் எல்லா விஷயங்களையுஞ் சொல்லி விடைபெற் றுக் கொண்டு தமது மனைவிமார்களுடனும் மந் திரிகள் முதலிய சகல பரிவாரங்களுடனும் புறப் பட்டு வழியில் அநேகமான காடுகளையும் ஆறு களையுங் கடந்து அங்கநாடடைந்தார். அங்கு உரோமபாதருக் கருகில் தமது தபோமகிமையால் பிரகாசித்துக்கொண்டு தழல் போல் விளங்குகிற ரிசியசிருங்கரைத் தரிசித்தார். உரோமபாதர் தமது உயிர்த்தோழரான தசரதரைக் கண்டதும் வெகு ஆநந்த மடைந்து தாம் அவரிடம் வைத்துள்ள அபிமானத்தால் உலக வழக்கத்துக்கு அதிகமாகவே வெகுவித மரியாதை செய்தார். தமக்கும் தசரத மகாராஜருக்கும் உள்ள சம்பந்தத்தையும் நட் பையும் உரோமபாதர் ரிசியசிருங்கரிடம் சொல்ல அவரும் தச ரதருக்கு மரியாதை பண்ணினார். இவ்வண்ணம் உரோமபாதர் என்ற அரசரால் வெகு விசுவாசத்துடன் உபசாரஞ் செய்யப் பட்டுத் தசரதர் ஏழு எட்டு நாள் அங்கநாட்டில் வாசம்பண் ணினார்.

*அம்முனிவரை அழைத்தது.*

ஒருநாள் தசரதர் உரோமபாதரை நோக்கி "என்மித்திரரத் தினமே! உமது புத்திரி சாந்தை தன்கணவரு டன் என்னுடைய நகரத்துக்கு வரவேண்டும். நான் யாகம் ஒன்று நடத்தப்போகிறேன். அதை நடத்திவைக்கும்படி நீர் ரிசியசிருங்கரிடம் சொல்லவேண் டும்" என்று கேட்டுக்கொள்ள, உரோமபாதர் ரிசியசிருங்கரைப் பார்த்து "நீர் பத்தினி சகிதராய் அயோத்தி போய் யாகத்தைச் செய்விக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று சொன்னார். அவ்வாறு செய்வதில் தமக்குச் சந்தோஷமே யல் லது வேறில்லை என்று அம்முனிவரும் ஏற்றுக்கொண்டார்.

அந்தச் சந்தோஷத்தினால் உரோமபாதரும் தசரதரும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு ஆனந்தக்கடலில் மூழ்கினார்கள். பின்பு தசரதர் தம் நண்பரிடம் விடைபெற்று அங்கதேசத்தை விட்டுப் புறப்பட்டார். அவருடன் தமது மனைவியையும் கூட அழைத்துக்கொண்டு ரிசியசிருங்கரும் பிரயாணமானார். தசரதர், அதி வேகமாய்ப் போகவல்ல தூதர்களிடத்தில், பட்டணமெங்கும் நன்றாய்ச் சிங்காரித்து வாசனைத்தூபங்கள் இட்டு நீர் தெளித்துத் தூசியடக்கிக் கொடிகள் எங்கும் கட்டிவைக்கும்படி அயோத்திக்குக் கட்டளை அனுப்பினார்.

ரிசியசிருங்கர் அயோத்தி அடைதல்.

அரசர் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த குடிகள் வெகு சந்தோஷத்துடன் மகாராஜர் விடுத்த உத்தரவின்படி நகரத்தைச் சிங்காரித்து வைத்துக்கொண்டிருந்தார்கள். ரிசியசிருங்க மகா முனிவர் முன்செல்ல, நான்கு பக்கங்களிலேயும் சங்கம் துந்துபி என்ற மங்கள வாத்தியங்கள் கோஷிக்க, தசரதர் அயோத்தியில் பிரவேசித்தார். மிக்க கீர்த்திபெற்ற இந்திரனுக் கொப்பான தசரதர் மகாராஜாவால் அவ்வித மரியாதையுடன் அழைத்து வரப்பட்ட முனிபுங்கவராகிய ரிசியசிருங்கரை அந்நகரத்துச் ஜனங்கள் தரிசித்துப் பெருங் களிப்படைந்தார்கள். தசரதர் முனிவரைத் தமது அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போய் அவருடைய மகிமைக்குத் தக்கவாறு உபசாரங்கள்செய்து அவர் தம்மனையில் பிரவேசித்ததையே தமது பாக்கியமென்று தாம் நினைத்த காரியம் கைகூடும் அடையாளமென்றும் கருதினார். அந்தப்புரத்தில் ராஜஸ்திரீகளும் தங்கள் மனைக்குச் சாந்தை என்னும் மாது சிரோமணி வரும்படி தாங்கள் அடைந்த பாக்கியத்திற்காகக் களித்தார்கள். அப்பெண்மணியும் தன் நாயகராகிய அம் முனிவருடன் அரசராலும் அரசர் மனைவிமார்களாலும் கொண்டாடப்பட்டுச் சிலகாலம் அயோத்தியில் சௌக்கியமாக வாசஞ்செய்தாள்.

## பன்னிரண்டாஞ்சருக்கம்:

### யாக சங்கற்பம்.

இவ்வாறு சிலநாள் சென்றபின் வசந்தகாலம் ஆரம்பித்தது; ஆரம்பிக்கவே, தசரதருக்கு இதுதான் நாம் நினைத்த யாகத்தை முடிக்கத் தகுந்தகாலம் என்னும் எண்ணம் உண்டாயிற்று. உடனே அவர் காந்தியில் தேவர்களுக்கொப்பாயிருக்கும் ரிசியசிருங்கரை வணங்கி, தமக்குப் புத்திர பாக்கியமில்லாத குறையை நீக்குதற்பொருட்டு யாகத்தை ஆரம்பித்து நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர் "அதற்கென்ன தடை? அப்படியே யாகட்டும்" என்று உடன்பட்டு "யாகத்துக்குவேண்டும் பொருள்கள் எல்லாவற்றையும் சேர்க்கும்படியும், அசுவத்தை அவிழ்த்து ஓட்டிவிடும்படியும் கட்டளையிடலாம்" என்று கூறினர்.

ரிசியசிருங்கர் யாகத்தை நடத்தச்சம் மதித்தல்.

உடனே தசரதர் தமது முக்கியமந்திரியான சுமந்திரரை நோக்கி "ஐயா சுமந்திரரே, நீர் இந்தக்ஷணமே வேதவேதாங்களைக் கரைகண்ட சுயஜ்ஞர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், வசிஷ்டர் முதலான நமது குருக்களையும் மற்றைய உத்தமப் பிராமணர்களையும் அழைத்துக்கொண்டு வாரும்" என்று கட்டளையிட்டார். அவர் அப்படியே செய்ய, அரசர், வந்த வேதியர்கள் எல்லோருக்குந் தகுந்த மரியாதைசெய்து, அவர்களைப் பார்த்து, "புத்திரபாக்கிய மில்லாமல் பரிதபிக்கும் எனக்குச் சுகமென்பது ஒரு நாளு மில்லாம லிருக்கிறது. அசுவமேதம் செய்தாலாவது இக்குறை நீங்காதா என்று என்னுடைய மனம் எண்ணுகின்றது. ரிசியசிருங்கருடைய மகிமையால் என் மனோரதம் நிறைவேறுமென்ற நம்பிக்கையு மிருக்கின்றது" என்றிவ்வாறு சொல்ல, அச்சபையிலிருந்த வசிஷ்டர் முதலான அந்தணரெல்லோரும் அரசர் கொண்ட கருத்து உத்தமமானது என்று மெச்சினர்கள்.

வசிஷ்டர் முதலிய குருக்கள் சம்மதித்தல்.

அந்தணர்கள் ஆசீர்வாதம்.

பின்பு அவர்கள் ரிசியசிருங்கரை முன்னிட்டுக் கொண்டு தசரதரைநோக்கி "யாகத்துக்கு வேண்டும் சகல வஸ்துக்களையும் சேர்த்துக்கொள்ளும்: குதிரையை அவிழ்த்து ஓட்டிவிடும்; புத்திரரில்லாக்குறையை நீக்க நீர் இந்த வைதிக காரியத்தில் பிரவேசிக்கிறபடியால் உமக்கு அதிபராக்கிரமசாலிகளான நான்கு சற்புத்திரர்கள் உண்டாவார்கள்" என்று சொன்னார்கள்.

யாகவிஷயமாகத் தசரதர் செய்த கட்டளை.

இவ்வண்ணம் அந்தணர்கள்செய்த ஆசீர்வாதத்தைக்கேட்டு அரசர் வெகு சந்தோஷத்தோடு தமது மந்திரிமார்களைப் பார்த்து "நமது புரோகதர்கள் கட்டளையிடுகிறபடி விரைவில் யாகத்துக்கு வேண்டும் சகல வஸ்துக்களையும் சேருங்கள், நல்ல போர்வீரர்கள் சூழ்ந்து செல்ல உபாத்தியாயர்கள் உடன்செல்ல அசுவமேதக் குதிரையை அவிழ்த்து விடுங்கள். சரயுநதியின் வடகரையில் யாகசாலை கட்டுங்கள். சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற விதிப்படி எவ்வித பூஜைகள் பண்ணினால் நாம் ஆரம்பிக்கும் கருமம் இடையூறின்றி முடிவுபெறுமோ அவ்வித சாந்திகளை எல்லாம் முதலில் செய்து முடித்துக் கொள்ளுங்கள். நாம் தொடங்குங் காரியம் எல்லா அரசர்களாலும் செய்யக் கூடிய காரியமேயல்லது வேறன்று. ஆனால், ஆரம்பித்தகாரியத்தை இடையூறும் ஊனமு மில்லாவண்ணம் முடிப்பதுதான் உத்தமர்களுக்கு லக்ஷணம். அந்த விஷயத்தில் நீங்கள் எல்லாரும் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். ஏனெனில், மிகவும் சிரமப்பட்டு அதிக ஜாக்கிரதையாக நடத்தப்படும் யாகங்களிலும் குற்றங்காண எண்ணங்கொண்டு எப்பொழுது சமயம் வாய்க்குமென்று பிரமராக்ஷஸர்கள் என்னும் துர்த்தேவதைகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கிரமப்பிரகாரம் நடத்துவதைவிட்டுச் சிறிது தவறினும் யாகத்தைச் செய்பவன் உடனே நாசமடைவான். ஆகையால் நாம் இப்பொழுது தொடங்கும் அசுவமேத யாகம் விதிப்பிரகாரம் நடந்து முடிவுபெற யாது செய்யவேண்டுமோ அதைத் தவறாது செய்யுங்கள்" என்றார்.

மந்திரிகள் அரசர் செய்த கட்டளைப்படியே எல்லாக் காரியங்களிலும் அதிக கவனமாகவிருந்து யாகத்தை நடத்துவதாக ஏற்றுக்கொண்டு அப்படியேசெய்யத் தொடங்கினார்கள். இவ்விதமாகத் தசரதர் செய்த நியமனங்களுக்காக அங்கு வந்திருந்த வேதியர்கள் எல்லாரும் அவரைப்புகழ்ந்து அவரிடம விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடஞ் சென்றார்கள். அவர்கள் போனபின் தசரதர் மநதிரிமார்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டுத்தமது அரண்மனைக்குச் சென்றார்.

மந்திரிகள் யாகத்தை நடத்த ஏற்றுக் கொண்டது.

## பதின்மூன்றாஞ்சருக்கம்.

### யாகாரம்பம்.

இவ்விதம் தசரதமகாராஜர் அசுவமேத யாகத்தை நடத்தச சகல வஸ்துக்களையும சேர்க்கும்படி நியமித்த * ஒரு வருஷத்துக்குப் பிறகு மறுபடியும் வசந்தகாலம் வந்தது. அவர் எப்பொழுது நாம் இந்த யாகத்தை முடிக்கப்போகிறோம், எப்பொழுது நமக்குப் புத்திரபாக்கியம் உண்டாகப் போகிறது என்று கவலையுற்றவராய் வசிஷ்டரிடஞ் சென்று நமஸ்கரித்து "முனிவர்களுள் சிரேஷ்டரே, எனது யாகத்தை எவ்வாறு நடத்தினால் அதனுடைய ஒரு கிருத்தியத்திலாவது ஒருவித விக்கினமும் வரமாட்டாதோ அவ்

யாகத்தை நடத்துவிக்கத் தசரதர் வசிஷ்டரை வேண்டுவது.

* அரசர்கள் அசுவமேதம் செய்யும்போது முதலில் வசந்தருதுவில் சித்திரைமாதப் பௌர்ணமியில், யாகத்துக்கு வேண்டும் திரவியங்கள் சேர்த்தலாகிய சங்கிரகணயாகம் என்பதை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு மறுநாள் குதிரையை விதிப்படி பூசைசெய்து அவிழ்த்து அநேக போர்வீரர்களுடனும் புரோகிதருடனும் பூமிப்பிரதக்ஷிணம் செய்வதற்காக விடவேண்டும். பின்பு சரியாய் ஒரு வருஷம்வரைக்கும் சூரியனைக்குறித்துத் தினந்தோறும் தவறாது ஹோமம் செய்யவேண்டும்.

வாறு நீர் நடத்துவிக்கவேண்டும். எனது நண்பர்களுள் சிறந்தவரும், குருக்களுள் தலைமையானவரும் நீரே. நான் தொடங்குகிற இந்த யாகத்தின் விஷயமான பாரத்தை முழுதும் வகிக்கவேண்டியவர் நீரே" என்றார். அதைக்கேட்ட அந்த வேதிய சிரோமணி "அப்படியே ஆகட்டும்; உமது கருத்துக்கு ஒருவிதமான குறைவும் வராதபடி எல்லாவிஷயங்களையும் நடத்துவிக்கிறேன்" என்று விடையளித்தனர்.

குருவின் கட்டளை.

பின்பு வசிஷ்டமுனிவர் அவ்விடம் வந்திருந்த, அநேக யாகங்கள் செய்துவைத்துப் பழகித் தேர்ந்தவர்களும் பிராயம் முதிர்ந்தவர்களும் யாகத் திரவியங்கள் சேர்க்க நியமிக்கப் பட்டவர்களுமான வேதியர்கள், வேலைக்காரர்கள், சிற்பியர், தச்சர்கள், கிணறெடுப்போர், கணக்கர், சித்திரக்காரர், நடர்கள், நர்த்தகர்கள் முதலானவர்களை நோக்கி "நீங்கள் எல்லாரும் அரசரிட்ட கட்டளைப்படி யாககாரியத்தை நடத்த வேண்டும். பல ஆயிரக்கணக்காக முதலில் செங்கற்கள் வந்து சேரவேண்டும். யாகத்தைப் பார்க்க வரும் அரசர்களுக்காகச சகல சௌக்கியங்களுமுள்ள மாளிகைகள் சீக்கிரத்தில் நிருமிக்கவேண்டும் வேதியர்கள் வசிக்க நூற்றுக்கணக்காக விசாலமான வீடுகள் உடனே அமைக்க வேண்டும் அவைகளில் அன்னம், பானம், பக்ஷணம் முதலிய போஜந பதார்த்தங்களை நிரப்பி வைக்க வேண்டும். அநேக நகரங்களிலிருந்து ஜனங்கள் ஆயிரக்கணக்காக வருவார்கள். அவர்கள் தங்குதற்கு விசாலமான இடங்கள் அமைக்கவேண்டும். அவை ஒவ்வொன்றிலும் அன்னபானங்களுக்கு யாதொரு குறைவுமின்றி எல்லாப் பண்டங்களும் நிறைந்திருக்க வேண்டும். கிராமத்துச் ஜனங்கள் அநேகர் யாகத்தைப்பார்க்க வருவார்கள். அவர்களுக்கும ஒருவிதமான குறைவும் இல்லாமல் மரியாதை செய்து அன்னம் அளிக்கவேண்டும். அந்த விஷயத்தில் அலக்ஷ்யமாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு சாதியாரையும் விதிப்பிரகாரம் உபசரித்து மரியாதை பண்ணி அவரவர்கள் மனங்கோணுதவண்ணம் நடக்க வேண்டும். காமத்தாலாவது

கோபத்தாலாவது ஒருபொழுதும் ஒருவரையும் மரியாதைக் குறைவாக நடத்தக்கூடாது. யாகத்தில் அதிக கவலையாக வேலை செய்கிற சிற்பிகளுக்கும் விசேஷமாக மரியாதை செய்யவேண்டும். நன்றாக உணவளித்து வெகுமதி செய்வதால் அவர்கள் மனத்தைக் களிப்பிக்க வேண்டும். ஆகையால், நீங்கள் எல்லோரும் இந்தக் காரியத்தில் மனத்தை முழுதும் வைத்து அன்புடனும் அபிமானத்துடனும் எல்லாவற்றையும் செய்துமுடித்து, எவ்வாறு நடந்து கொண்டால் ஒவ்வொருவரும் திருப்பதியடைவரோ அவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்" என்றார்.

யாகத்திற்கு அரசர்களை வரவழைத்தது.

இவ்விதமாய் வசிஷ்டமுனிவர் சொன்னவுடன் எல்லாரும் அவரைப் பார்த்து, "நீங்கள் இப்பொழுது கட்டளையிட்ட எல்லாவிஷயங்களையும் நாங்கள் ஒரு குறையும் இல்லாது செய்து நிறைவேற்றுகிறோம்" என்றார்கள். உடனே வசிஷ்டர் சுமந்திரரை நோக்கி "ஐயா, நீர் இவ்வுலகத்திலிருக்கிற தருமசிந்தையுள்ள எல்லா அரசர்களையும் அழைப்பிக்க வேண்டும். ஆயிரக்கணக்காக, பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் எல்லாரையும் எல்லாத் தேசங்களிலிருந்தும் தக்க மரியாதையோடு அழைப்பிக்கவேண்டும். மிதிலை நகரத்தில் ஆண்டுகொண்டிருக்கிற தருமசீலரும், சூரரும், வேதங்களையும் தரும சாஸ்திரங்களையும் ஆராய்ந்தறிந்தவருமான ஜனக மகாராஜாவை நீரேநேரிற்சென்று அழைத்துவரவேண்டும்; அவர் நமது முதற் சம்பந்தி என்று அறிந்து நான் அவரை முதலில் குறிப்பிட்டேன். அதன்பின் காசி தேசாதிபதியை அழைத்து வரவேண்டும்; அவர் எப்பொழுதும் நமக்கு நண்பர்; எப்பொழுதும் நமது நன்மையை நாடிப்பேசுபவர்; நமது மன்னவருக்குத் தோழர். அவரையும் நீரே நேரில் சென்று அழைத்து வரவேண்டும். அதன் பின்பு, கேகயநாடுசென்று, நமது அரசருக்கு மாமனாரும், வெகு தருமசிந்தையுள்ளவராயும், வெகு பெரியவராயுமிருக்கிற கேகயராஜரைக் குமாரருடன் அழைத்து வரவேண்டும். அங்கநாட்டரசரும், மகாபாக்கியசாலியும், கீர்த்திமானும்,

நமது மன்னவருக்கு நண்பருமான உரோமபாதரையும் வெகு மரியாதையுடன் அழைத்துவரவேண்டும். அதன்பின்பு, கீழ் நாடு, சிந்துநாடு, சௌவீரநாடு, சௌராஷ்டிர நாடு, தென்னாடு முதலான எல்லா நாடுகளிலு மிருக்கிற நமக்கு வேண்டியவர்களாயுள்ள அரசர்க ளெல்லாரையும் அவர்களைச் சேர்ந்தவர்களுடனும் அவர்கள் பந்துக்களுடனும் அழைப்பிக்கவேண்டும்" என்றார். இவ்வாறு வசிஷ்டர் சொல்லலும், சுமந்திரர் எல்லாரையு மழைத்துவரத்தக்க மனிதர்களை உடனே அனுப்பினார். அன்றியும் தாம் நேராகப் போகவேண்டிய இடங்களுங்குத் தாமே நேராகச் சென்றார்.

வசிஷ்டர் செய்த விசேஷ எச்சரிப்பு.

சிற்பி முதலிய வேலைக்காரர்கள் வசிஷ்டரிம் வந்து தாம் தாம் செய்து முடித்த வேலைகளை யெல்லாம் தெரிவித்தார்கள். அது கேட்டுத் திருப்தியடைந்தவராய், வேதிய சிரோமணியான வசிஷ்டர் அவர்களைப் பார்த்து "நீங்கள் யாருக்காயினும் ஏதாவது கொடுக்கும்போது அலக்ஷ்யமாயும், அவமரியாதையாயும் கொடுக்கக்கூடாது. அப்படி கொடுக்கப்படும் தானம் தானஞ் செய்கிறவர்களையே அழித்துவிடும்" என்றார்.

அரசர்கள் யாகத்துக்கும்பொருள் கொண்டு வந்தது.

அதன் பின்பு அநேக திசைகளியிலிருந்து இரவும் பகலும் அரசர்கள் பலர் தசரதமகாராஜாவுக்குப் பற்பல திரவியங்களையும் ஆபரணங்களையும் எடுத்துக் கொண்டு வந்துசேர்ந்தார்கள். அவர்கள் வந்ததும் வசிஷ்டர் வெகு சந்தோஷமடைந்து தசரதமகாராஜரைப் பார்த்து "அரசரே, உம்முடைய கட்டளைப்படி அநேக தேசத்தரசர்கள் இங்கு வந்திருக்கின்றார்கள். நான் அவர்களைத் தகுந்த மரியாதையுடன் உபசரித்து அவரவர்கள் விடுதியில் இறக்கி யிருக்கிறேன். விதிகளை நன்றுயறிந்தவர்களால் யாகத்துக்கு வேண்டியவைகள் எல்லாம் சித்தஞ் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. நீர் இனி யாகசாலை புகுந்து யாகத்தை ஆரம்பிக்கலாம். அங்கே போய்ப்

பார்க்கும்போது உமதிஷ்டப்படி எல்லாப்பொருள்களும் அமைந் திருக்கின்றனவென்று நீரே காண்பீர்" என்றார்.

யாகாரம்பம்.

பின்பு தசரதர் சுபதினம், சுபநக்ஷத்திரம் கூடிய ஒரு சுபமுகூர்த்தத்தில் வசிஷ்டர் ரிசியசிருங்கர் முதலிய பெரியோர்களுடைய அநுமதி பெற்று அவர்கள் தொடர்ந்துவர யாகசாலைக்குச்சென்றார். அங்கே ரிசியசிருங்கரை முக்கிய குருவாக நியமித்து, வசிஷ்டர் முத லிய எல்லோரும் அசுவமேத யாகத்துக்கு வேண்டும் காரியங் களைச் சாஸ்திர விதிப்பிரகாரம் செய்யத்தொடங்கினார்கள்.

## பதினான்காஞ்சருக்கம் :

### அசுவமேதயாகம்.

யாகஞ்செய் தல்.

குதிரை தானாக ஒருவருடைம் சஞ்சரித்துத் திரும்பி வந் தது. தசரதமகாராஜர் சரயுநதியின் வடகரை யில் கட்டியயாகசாலையிலே அசுவமேத யாகத் தைச்செய்ய ஆரம்பித்தார். ரிசியசிருங்கரைத் தலைமையாக வைத்துக்கொண்டு எல்லாப் பிராமணர்களும் யாகத்தைச் சாஸ்திரப்பிரகாரம் நடத்த, ஒவ்வொரு காரியத்துக் கும் வரிக்கப்பட்ட ஒவ்வொருவேதியரும் தாமொத்துக்கொண்ட ஒவ்வொரு கிரியையையும் வேத சாஸ்திர விதிப்படி செய்யத் தொடங்கினார்கள். எல்லா ரிஷிகளும் கூடிக்கொண்டு பிராதக் காலயஜ்ஞம் முதலாக யாகசம்பந்தமான ஒவ்வொரு கிரியையை யும் வெகு விமரிசையாக நடத்தினார்கள்; இந்திரனை உத்தே சித்து அக்கினியில் நெய்யை ஆகுதிபண்ணியும் சோமலதையை விதிப்படி உபயோகித்தும் காலந்தவறாதபடி மத்தியான வேளை யில் நடக்கவேண்டிய கிரியைகளை நடத்தினார்கள். அந்தப்படியே சாயங்காலத்திலும் அந்தணர்கள் மூன்றும் ஸவநம் என்ற கிரியை யையைச் சாஸ்திரவிதிப்படி செய்து முடித்தார்கள். மந்திரத்தி லும், தந்திரத்திலும் ஓர் அணுவும் தவறின்றிச் சகலகிரியைக

ளும் நடந்து வந்தன. ஒன்றுவது விடப்படவில்லை. யாகம் நடந்துவந்த தினங்களில் ஒருவராவது பசி தாகங்களோடு கூடியிருக்கவில்லை ; யாவரும் அன்ன பானுதிகளால் வெகுதிருப்தராயிருந்தார்கள். நன்றுய் வேதத்தை ஒதியுணராத பிராமணரும் அநேக சிஷ்யர்களுடன் கூடியிராத அந்தணரும் அங்கில்லை.

யாகத்தில் நடந்த சமாராதனை.

அந்தத் தினங்களில் மிகவும் பெரிய சமாராதனை செய்தார்கள். அதில் பிராமணர்கள், சூத்திரர்கள், முனிவர், சந்யாசிகள், நோயாளிகள், பெண்கள், முந்தியர்கள், சிறுவர்கள் ஆகிய எல்லாரும் அவரவர்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த இடங்களில் காலைமுதல் மாலைவரையில் போஜனஞ் செய்துகொண்டேயிருந்தார்கள். ஒவ்வொருவரும் வயிறுநிரம்ப உண்டிருக்கவும் " இன்னும் கொஞ்சம் உண்ணுங்கள் இன்னுங் கொஞ்சம் உண்ணுங்கள்" என்று மிகுதியாக உபசரிக்கப்பட்டார்கள். அந்நாள்களில் " அவருக்கு அன்னம் இடு, இவருக்குத் துணிகொடு, அந்தப்பெண்ணுக்கு வயிறுநிரம்ப அமுதளி, இந்த அம்மாளுக்குப் பட்டுப் புடவைகொடு" என்ற சத்தங்கள் எப்போதும் காதில் விழுந்துகொண்டேயிருந்தன. இந்த அதிகாரத்தில் நியமிக்கப்பட்டிருந்தவர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்ட வேலைகளை வெகு உதாரமாய் நடத்தினர்கள். பாகமுறைமைப்படி நன்றுகச் சமைக்கப்பட்ட அன்னக்குவியல்கள் மலைகள்போல நாள்தோறும் எங்கும் மிகுதியாகக் காணப்பட்டன. பல தேசங்களிலிருந்துவந்த ஆண், பெண், குழந்தைகள் எல்லாரும் திருப்தியாகிறமட்டும் நன்றுய்ப் புசித்தார்கள். புசித்த பிராமணர் ஒவ்வொருவரும், "எவ்வளவு உபசாரத்துடன் அன்னமளிக்கின்றுர்கள்! எவ்வளவு ருசி ! நாங்கள் நன்றுகத் திருப்தியடைந்தோம் ; உங்களுக்கு க்ஷேமமுண்டாகுக" என்று சொன்னதைத் தசரதர் கேட்டார். எங்கே பார்த்தாலும் நல்ல ஆடை ஆபரணங்களைத் தரித்த பிராமணர்கள் மற்றைப் பிராமணர்களை உபசரித்துக் கொண்டே யிருந்தார்கள். யாகத்தில் ஒரு சடங்கைமுடித்து மற்றொருசடங்கு தொடங்குமுன்னே அங்குவந்திருந்த சாஸ்

திரிகள் பலர் ஒருவரை யொருவர் மேலிட ஆவல்கொண்டவர்களாய் அநேகவித சாஸ்திரவாதங்கள் பண்ணிக்கொண்டிருந்தார்கள். நாடோறும் யாகம் நடந்தகாலத்தில் ஒவ்வொரு வேதியரும் தாம் கைக்கொண்ட காரியத்தை ஒருகுறையுமில்லாமல் வெகு நன்றாய்ச் செய்துமுடித்தார்கள். வேதங்கள் வேதாங்கங்களான சாஸ்திரங்கள் இவைகளை யறியாதவர்களும், விரதங்களை அநுஷ்டியாதவர்களும், சாஸ்திரக் கேள்வியில்லாதவர்களும், சாஸ்திரவாதம் பண்ணத் தெரியாதவர்களும் அங்கே கிரியைகள் நடத்தின வேதியர்களுள் இல்லை.

யூபஸ்தம்பங்கள்.

யூபஸ்தம்பங்கள் நாட்டப்படும்வேளையில் முன்னமே வில்வமரத்தால் சித்தஞ்செய்து வைக்கப்பட்டிருந்த ஆறு ஸ்தம்பங்களை முதலில் நட்டார்கள். அதன் பிறகு அவைகளுக்குச் சமீபத்தில் கருங்காலியால் செய்யப்பட்ட ஆறு யூபஸ்தம்பங்களை நாட்டினார்கள். அதன்பின்பு பலாசமரத்தால் செய்யப்பட்ட ஆறு யூபஸ்தம்பங்களும், நறுவிலி மரத்தால் செய்யப்பட்ட ஒரு யூபஸ்தம்பமும், தேவதாருவால் செய்யப்பட்ட இரண்டு யூபஸ்தம்பங்களும் நிறுத்தினார்கள். சாஸ்திரங்களை நன்றாய் ஆராய்ந்தறிந்த பெரிய சிற்பிகளால் இவ்வாறு இருபத்தொரு ஸ்தம்பங்கள் விதிப்படி இடையிட்டு நாட்டப்பட்டவுடன் அவைகளைப் பொன்னாபரணங்களினாலும், புஷ்பங்களினாலும், வஸ்திரங்களினாலும், சுகந்தப் பொருள்களினாலும் அலங்காரம் பண்ணினார்கள். அவ்வாறு அலங்கரிக்கப்பட்ட இருபத்தொரு யூபங்களும் ஆகாசத்தில் ஸப்தரிஷி மண்டலம்போல் விளங்கின.

வேதிகள்.

அங்குச் செங்கற்களால் யாக வேதிகள் கட்டப்பட்டிருந்தன. பதினெட்டுச் செங்கற்களால் கட்டப்பட்டுப் பொற்றகடுகளால் அலங்கரிக்கப்பட்டு அக்கினிக் கிருப்பிடமாக விருந்த வேதி, தனது பொற்சிறகை விரித்துக்கொண்டிருக்கும் கருடனைப்போல விளங்கிற்று.

அந்த யூபஸ்தம்பங்களில் அந்த அந்தத் தேவதைக்கு

ஓமம் பண்ணவேண்டிய விலங்குகள், பாம்புகள், பக்ஷிகள் என்னு மிவை விதிப்படி கொணர்ந்து கட்டிவைக்கப்பட்டன. அவ்வண்ணமே அசுவ

அசுவ பசு.

மேதத்துக்கு வேண்டிய குதிரையும், ஆமை முதலிய ஜல ஜந்துக்களும், மற்றும் உரிய பசுக்களும் ஆகிய எல்லாம் அந்தணர்களால் விதிப்படி கட்டப்பட்டன. யூபங்களில் முந்நூறு பசுக்கள் தசரதருடைய அசுவமேதக் குதிரையுடன் கட்டப்பட்டிருந்தன. பின்பு கௌஸல்யை அந்த அசுவத்துக்குச் செய்ய வேண்டிய பூஜைகளைச் சரிவர நடத்தி வெகு உத்ஸாகத்துடன் அக்குதிரையை வாளால் சில துண்டுகளாக வெட்டி வீழ்த்தினாள். அன்றியும் ஸ்திர சித்தத்துடன் அவள் புத்திரபாக்கியம் அடையும் விருப்பத்தால் சாஸ்திர விதிப்படி அன்றிரவு முழுதும் அவ்வசுவத்தின் அருகே இருந்தாள். ஹோதா, அத்வர்யு, உத்காதா முதலிய யாக கர்த்தாக்கள் உரிய தக்ஷிணைகளைப் பெற்று ராஜபாரியைகளுடன் இருந்து சடங்கு நடத்தினார்கள். பின்பு அத்வர்யு அசுவத்தின் வபையை எடுத்து ஸ்திர சித்தத்துடன் சாஸ்திர விதிப்படி நன்றாகப் பாகம் பண்ணினான். அவ்வபை அக்கினியில் ஓமம் பண்ணப்பட்டபொழுது உண்டான புகையின் வாசனையைத் தசரதர் தமது பாவத்தைப் போக்கும் பொருட்டு விதிப்படி குறித்த காலத்தில் மோந்து நின்றார். ருத்துவிக்குகளான பதினாறு வேதியர்கள் அசுவமேத யாகத்துக்கு முக்கியமாகிய அசுவ பசுவினுடைய அவயவங்களை யெல்லாம் விதிப்படி மந்திரத்தோடு அக்கினியில் ஓமஞ்செய்தார்கள். மற்ற யாகங்களில் ஹவிஸ்ஸானது இறலிமரத்தாற் செய்யப்பட்ட கரண்டிகளால் அக்கினியில் இடப்படுகிறது; அசுவமேத யாகத்திலோ வஞ்சிமரத்தாற் செய்யப்பட்ட கரண்டியால் இடப்பட வேண்டும் என்பது விதி. கல்பசூத்திரப்படி அசுவமேதயாகம் மூன்றுநாளில் நடத்தப்பட்டது. முதல் நாளில் சதுஷ்டோமமும், இரண்டாவது நாளில் உக்தமும், மூன்றுநாளில் ஸர்வஸ்தோமமுமாக முறைப்படி சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. அன்றியும் பின்பு ஜ்யோதிஷ்டோமம், ஆயுஷ்டோமம்,

அதிராத்திரம், அபிஜித், விசுவஜித், அப்தோர்யாமம் என்ற மகாயாகங்களும் உடன் நடத்தப்பட்டன.

தசரதர் குருக்களுக்குத் தக்ஷிணை கொடுத்தல்

ஆதிகாலத்தில் பிரமதேவரால் உண்டாக்கப்பட்ட அசுவமேத மகாயாகத்தை நடப்பித்ததற்காக, இக்ஷ்வாகு குல விளக்கான தசரதர், தமது தேசத்தை நான்காகப் பகுத்து, கிழக்குப் பாகத்தை ஹோதாவுக்கும், மேற்குப் பாகத்தை அத்வாயுவுக்கும், தெற்குப் பாகத்தைப் பிரஹ்மாவுக்கும், வடக்குப் பாகத்தை உத்காதாவுக்குமாக நியதிப்படி தானஞ்செய்தார். தீவினை தீர்ந்த தசரதரைப் பார்த்துக் குருக்கள் எல்லாரும் "மன்னவரே, உலகத்தை யாளுகை அரசர்க்கே உரியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அரசராகிய நீங்களன்றோ உலகத்தை ஆளவேண்டும். வைதிக விருத்தியிலிருக்கிற எங்களுக்கு எங்கள் தொழிலன்றோ இயல்பு. எங்களைப் பூமியை ஆளச்சொன்னால் நாங்கள் எவ்வாறு ஆளுவோம்? ஆகையால், பூமியை நீங்களே வைத்துக்கொண்டு அதற்கு ஈடாக ஸ்வர்ணம், இரத்தினம், பசுமுதலான வேறுவித சம்பாவனையை எங்களுக்குச் செய்தால் அது ஒத்ததாயிருக்கும்" என்றார்கள்.

இவ்வண்ணம் அந்தணர்கள் சொன்னதைக் கேட்டு அரசர் அவர்களுக்குப் பத்துலக்ஷம் பசுக்கள், பத்துக் கோடி பொன், நாற்பதுகோடி வெள்ளி ஆகிய இவைகளைத் தானஞ்செய்தார். அந்தப் பொருள்களையெல்லாம் வசிஷ்டர், ரிசியசிருங்கர் முதலிய யாவரும் கிரமப்படி பங்கிட்டுக்கொண்டு தாங்கள் மிகவும் திருப்தியடைந்ததாக அரசரிடம் தெரிவித்தார்கள்.

தானம்.

மற்றைப் பிராமணர்களுக்கும் அரசர் கோடிக்கணக்காகப் பொருளைத் தானஞ்செய்தார். இப்படி தமது செல்வம் முழுவதையும் தானஞ் செய்துவிட்ட பின்பு வந்து தனக்குத் தானம் வேண்டும் என்று யாசித்த ஒரு ஏழைப்பிராமணனுக்கு அவர் தாம் கையில் அணிந்துகொண்டிருந்த கடகத்தைக் கழற்றிக் கொடுத்தார்.

இவ்விதமாய் எல்லாப் பிராமணர்களுக்கும் யதேஷ்டமாய்த் தானம்பண்ணவே, அவர்கள் எல்லாரும் வெகு திருப்தியடைந்து அரசர்முன் வந்து அநேக விதமாக ஆசீர்வாதம் பண்ணினார்கள். அந்தணர்களிடம் எப்பொழுதும் அன்புள்ள அம்மன்னவர் அவர்களெல்லாரும் திருப்தி யடைந்தவுடனே சந்தோஷத்தால் தமது கண்களில் நீர் ததும்ப அவர்களுக்கு நமஸ்காரம் பண்ணினார். அவ்வேதியர்களும் விதிப்படி ஆசீர்வசனங்கள்கூறி, உதாரராய் வீரராய்ப் பூமியில் விழுந்து நமஸ்காரம் செய்த அவ்வேந்தரை வாழ்த்தினார்கள். ஓர் அரசனாலாவது சுலபமாகச் செய்து முடிக்கக்கூடாததும், பாவத்தைப் போக்குவதும், சுவர்க்கத்தைப் பெறுவிப்பதுமான மிகச் சிறந்த அசுவமேதத்தைத் தசரதர் சரியாய்ச் செய்து முடித்தவுடன் ரிஸியசிருங்கரை நோக்கி, "என் வம்சத்தை விருத்தி செய்விக்கும்படியான சடங்கைச் செய்தற்கு உரியவர் நீரே" என்றார். அதற்கு அவர், "அப்படியே ஆகட்டும்; உமது குலத்தை நிலைநிற்கச்செய்ய நான்கு சற்புத்திரர்கள் உமக்கு உண்டாவார்கள்" என்றார்.

ரிஸியசிருங்கர் ஆசீர்வசனம்.

## பதினைந்தாஞ்சருக்கம்:

### இராவணனை வதைப்பதற்கு உபாயம்.

மகா புத்திசாலியும், வேதங்களை அறிந்தவருமான ரிஸியசிருங்கர் சற்று ஆலோசித்துத் தசரதரை நோக்கி, "உம்முடைய மனோரதமாகிய புத்திரலாபத்திற்காக, அதர்வணவேதத்தில் சொல்லியிருக்கும் மந்திரங்களுடைய பலத்தால் இன்னமொரு யாகம் பண்ணிவைக்கிறேன்" என்று சொல்லி, உடனே அந்த யாகத்தையும் செய்யத்தொடங்கி, மந்திர சாஸ்திரவிதிப்படி அக்கினியில் ஓமஞ்செய்யலானார். அப்பொழுது நேரில்நின்று அவிர்ப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுத் தேவர்களும், கந்தர்வர்களும், சித்தர்களும், மகாரிஷிகளும் அங்குவந்து கூடினார்கள்.

புத்திரகாம இஷ்டி.

பிரமதேவரிடம் தேவர்கள் இராவணன் கொடுமையைக் கூறல்.

அவர்கள் எல்லாரும் அவ்விடத்தில் ஒரு சபையாகச் சேர்ந்து, உலகத்தைச் சிருஷ்டித்தவரான பிரம தேவரைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்கள். "பிரமதேவரே உம்மிடமிருந்து வரம் பெற்றதனால் அதிபராக்கிரமசாலியான இராவணன் என்னும் அரக்கன் எங்களையெல்லாம் வருத்துகிறான். அவனையடக்க எங்களில் ஒருவராலும் முடியவில்லை. நீர் ஒரு சமயத்தில் அவனிடம் சந்தோஷமடைந்து அவனுக்கு வரங் கொடுத்துவிட்டபடியால் அதற்கு நாங்கள் பயந்து அவன் செய்கிறதை எல்லாம் சகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. துர்ப்புத்தியுள்ள அவனே மூன்று உலகங்களையும் லோகபாலகர்களையும் எப்போதும் பீடித்துக்கொண்டேயிருக்கிறான். வரத்தின் செருக்கால், தேவர்களுக்கெல்லாம் அரசனான தேவேந்திரனையும் திருணமாக எண்ணி அவனைத் தனக்குக் கீழ்ப்படியும்படி செய்கிறான். தன்னை ஜயிப்பவரெவருமில்லாமையால் மிகவும் கர்வங்கொண்டு அவன் அதேவிதமாக ரிஷிகள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், பிராமணர்கள், அசுரர்கள் முதலான எல்லாரையும் வருத்தப்படுத்துகிறான். அவனைக்கண்டு சூரியன்கூட நடுங்கி அவன்மேல் மிருதுவாக வெயில்படும்படி பிரகாசிக்கிறான். வாயுபகவானும் அவன் சமீபத்தில் மெதுவாக உலாவுகிறான். கொந்தளித்து அலைகளுருந்தன்மையுள்ள கடலும் அவனைக் கண்டால் அஞ்சி அலைவீசாமல் அமர்ந்து நின்றுவிடுகிறது. அந்தப் பாவியாக்கனால் எங்கள் எல்லாருக்கும் உண்டாகும் பயத்துக்கு அளவேயில்லை. ஆகையால், அவனைக்கொல்ல எப்படியாவது நீர் ஓர் உபாயந் தேட வேண்டும்."

இப்படி எல்லாத் தேவர்களும் சொன்னதைக் கேட்டுப் பிரமதேவர் சிறிதுநேரம் ஆலோசித்துப் பின்வருமாறு சொல்லலானார். "அந்தத் துராத்துமாவை வதைப்பதற்கு உபாயம் ஒன்று முன்னமே தானாய் அமைந்திருக்கின்றது. அவன் வரங் கேட்டகாலத்தில் கந்தர்வர்களாலும், யக்ஷர்களாலும், தேவர்க

ளாலும், அசுரர்களாலும், ராக்ஷஸர்களாலும் தனக்கு மரணம் சம்பவிக்கக்கூடாவண்ணம் வரமளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அப்படியே ஆகட்டும் என்று நானும் வரமளித்தேன். மனிதரால் தனக்கு மரணம் உண்டாகாமலிருக்க வேண்டும் என்று அவன் அலக்ஷ்யத்தால் கேட்கவில்லை. அதுதான் இப்பொழுது நமக்கு உபாயம். மனிதரால் இராவணன் மாய உபாயந் தேடவேண்டும் இதைத்தவிர நமக்கு வேறுமார்க்கமில்லை" என்றார்.

*மானிடனால் இராவண வதையாமென்று பிரமதேவர் சொல்லுவது.*

இவ்வண்ணம் ஒருவித நம்பிக்கையைச் சுட்டிப்பிரமதேவர் சொன்னதைக் கேட்டு அங்கிருந்த தேவர்களும், முனிவர்களும் மிக்க சந்தோஷத்தை அடைந்தார்கள். அத்தருணத்தில், அங்கே, பீதாம்பரந் தரித்துக்கொண்டு கைகளில் சங்கு, சக்கரம், கதை என்னும் படைக்கலங்களை ஏந்தி மிகவும் விளங்குகின்ற திருமேனியுடன் ஜகத்பதியான விஷ்ணுபகவான் வந்தனர். எல்லாத் தேவர்களும் எழுந்து வணங்கா நிற்க, அவர் காரியத்தை முடிக்கிற கருத்துடையவராய்ப் பிரமதேவரருகில் போய் வீற்றிருந்தார்.

*விஷ்ணுவின் வரவு.*

அவர் ஆசனத்தில் எழுந்தருளியிருந்தவுடன் தேவர்களெல்லாரும் அவருக்குச் சாஷ்டாங்க தண்டன் சமர்ப்பித்து எழுந்து ஸ்தோத்திரம் பண்ணி, "ஐயா, விஷ்ணு பகவானே, உலகங்களினுடைய க்ஷேமத்தின் பொருட்டே நாங்கள் இப்பொழுது உம்மை ஒரு காரியத்துக்காகத் தூண்டுகிறோம்; தருமங்களை அறிந்தவராயும், உதாரகுணமுடையவராயும், மகாமுனிவர்க்கொப்பான தேஜோமயராயும் தசரதர் என்னும் அரசர் ஒருவர் அயோத்திமாநகரத்தில் அரசாட்சி செய்துகொண்டிருக்கிறார்கள். நாணம், செல்வம், புகழ் என்பவைகளே உருக்கொண்டு வந்தாற்போல மூன்று மனைவிகள் அவருக்கிருக்கிறார்கள். நீர் அந்த மூன்று

*தேவர்கள் விஷ்ணுவைத் தசரதர் குமாரராக அவதரிக்க வேண்டிக் கொள்ளல்.*

பெண்மணிகளுடைய வயிற்றில் உம்மை நான்குபாகமாகப் பண்ணிக்கொண்டு மனிதரூபமாகப் பூலோகத்தில் அவதாரம் பண்ணி, உலக கண்டகனுயிருந்துகொண்டு செழித்து ஒருவராலும் தன்னையடக்க முடியாதென்று வெகு இறுமாப்புடன் எல்லாரையும் துன்பப்படுத்துகிறவனும் தேவர்களால் வெல்ல முடியாதவனுமான இராவணனைப் போர்செய்து கொல்லத் திருவுளஞ் செய்யவேண்டும். நீரே எங்களுக்குக்கதி. மூர்க்கனுன அந்த இராவணனே தேவர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள் மகா முனிவர்கள் இவர்களெல்லாரையும் தனது வல்லமையின் இறுமாப்பால் இம்சிக்கிறான். இன்னும் கொடியனுன அவன் ரிஷிகளையும் தேவலோகத்தில் நந்தனவனத்தில் விளையாடிக்கொண்டிருக்கிற கந்தர்வர்களையும் அப்ஸர ஸ்திரீகளையும் வருத்துகிறான். ஆபத்தி லகப்பட்டுத் தஞ்சம் என்று வந்து அடைகிறவர்களைக் காப்பாற்றுவதும், சத்துருக்களை நாசம்பண்ணுவதும் உம்முடைய கடனன்றோ. எங்களுடன் முனிவர்கள் சித்தர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள் இவர்களெல்லாரும் உம்மைச் சரணமடைந்திருக்கிறார்கள். ஆகையால் தேவசத்துருக்களாயிருக்கிற இராவணாதியாரைச் சங்கரிக்க நீர் மனுஷ்யாவதாரம் செய்யவேண்டும்" என்று பலவிதமாகப் புகழ்ந்து பிரார்த்தித்தார்கள்.

விஷ்ணு இராவணனைக் கொல்வதாக வாக்களித்தது.

இவ்வாறு தேவர்கள் பிரார்த்தித்தவுடனே, தேவ தேவரும் ஸர்வலோக சரண்யருமான திருமால் பிரமதேவருடன் விளங்கும் அந்தத் தேவசபையைப் பார்த்து, "தேவர்களே, உங்கள் பயத்தை விட்டுவிடுங்கள். இன்று முதல் உலகத்துக்கு க்ஷேமம் வந்துவிட்டது என்று நிச்சயமாய் எண்ணுங்கள். உங்களுடைய நன்மைக்காக இராவணனை அவனுடைய பிள்ளைகள், பேரன்மார்கள், மற்றைத் தாயாதிகள், பந்துக்கள், சினேகிதர்கள், மந்திரிகள் முதலான எல்லாருடனும் நான் வதைசெய்கிறேன். அவன் வெகு குரூரனுய்த் தேவர்களையும் ரிஷிகளையும் உபத்திரவம் பண்ணிக்

கொண்டிருக்கிறான். நான் ஒரு மானிடனாய் அவதாரம் பண்ணிப் பூலோகத்தைப் பரிபாலித்துக்கொண்டு பதினோராயிரம் வருஷ காலம் வாசம்பண்ணப் போகிறேன்" என்றார்.

இவ்விதம் தேவர்களுக்கு வரங் கொடுத்துவிட்டுத் திருமால் தாம் மநுஷ்யராக அவதரிப்பதைப்பற்றிச் சற்று ஆலோசித்து உடனே தாம் நான்கு அம்சமாய்த் தசரதரைத் தந்தையாகக்கொண்டு தோன்றுவதாக நிச்சயித்தார்.

விஷ்ணு தசரதரிடம் அவதரிக்க நிச்சயித்தது.

முன்னமே மது என்னும் அசுரனைச் சங்காரம்பண்ணி உலகத்துக்கு க்ஷேமத்தைச் செய்த அத்திருமாலைக் குறித்து அங்கிருந்த தேவர்களும், கந்தர்வர்களும், ருத்திரர்களும், அப்ஸர கணங்களும் ஸ்தோத்திரஞ்செய்யலானார்கள். "மிக்க பலசாலியாய்த் தேவர்களுக்கெல்லாம் சத்துருவாகி மூவுலகங்களையும் கண்ணீர்விட்டழக் கலக்கி முனிவர்மனங்களை நடுங்கச் செய்துகொண்டு இறுமாப்புடன் திரியும் இராவணனைச் சங்கரித்து, அவனுடைய வம்சத்தையும் நாசம்பண்ணி, உலகத்தைத் துன்பத்திலிருந்து நீக்கி, எல்லாருடைய மனங்களையும் களிக்கப்பண்ணி, மறுபடி உமது பரமபதத்தை அடைந்தருள்வீர்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

தேவர்கள் விஷ்ணுவைத் துதித்தல்.

## பதினைஞ்சருக்கம்:

### பாயசோத்பத்தி.

இவ்வாறு தேவர்களால் தூண்டப்பட்ட நாராயண மூர்த்தியானவர் தாம் இராவண வதையை நடத்தத் தக்க வழியை நன்றாய் அறிந்திருந்தும், அவர்களைப்பார்த்து "தேவர்களே, எவ்விதமாக இந்தக் காரியத்தில் நான் பிரவேசித்தால், முனிவர்களை இம்சிக்கிற பாவியாகிய அந்த இராவணனைக் கொல்லலாம் என்று உங்களுக்குப் புலப்படுகிறது?"

விஷ்ணு பகவான் மானிட அவதாரஞ் செய்வதாகக் கூறுதல்.

என்று மதுரமாக வினவினர். இவ்வண்ணம் அவர் வினவ, தேவர்கள் "சுவாமி, நீர் மனித வுருவங்கொண்டுதான் அவனைப் போரில் வதைசெய்ய வேண்டும். அவனோ அநேக ஆயிரவருஷங்கள் கடுந் தவம்புரிந்து, பிரமதேவர் மனத்தை வஞ்சனையாற் களிக்கச்செய்து, தனக்குப் பலவகைப் பிராணிகளாலும் மரணம் உண்டாகக்கூடாதென்று அவரிடத்தில் வரம் பெற்றுக் கொண்டான். அவன் அப்பொழுது எல்லாப் பிராணிகளையும குறிப்பிட்டுச் சொல்லி மனிதரைமட்டும் அலக்ஷ்யத்தால் சொல்லாது விட்டான். இப்படிப்பட்ட வரம் தனக்குக் கிடைத்திருக்கிறதால் ஒருவித பயமும் இல்லை என்ற கருவங்கொண்டு எப்பொழுதும அவன் மூன்று உலகங்களும் வருத்தச்செய்வதையும் அங்கங்குள்ள உத்தம ஸ்திரீகளை மானபங்கப்படுத்தி எடுத்தோடுவதையும தன் தொழிலாகக் கொண்டிருக்கிறான். ஆதலால், அவனை வதை செய்யவேண்டு மென்றால், மனிதராக நீர் அவதாரஞ் செய்வதுதான் பொறுத்தமென்று எங்களுக்குத் தோன்றுகிறது" என்றார்கள் அவர்கள் சொன்ன மொழியை வெகு சாந்தமூர்த்தியான நாராயணக்கடவுள் கேட்டு, அவ்வாறே ஒரு மானிடனாய் அவதாரஞ்செய்ய நிச்சயித்து, புத்திரனில்லாக் குறையை நீக்கப் புத்திரகாமேஷ்டி யாகத்தை வெகு சிறப்பாய் நடத்தி முடிக்கிற தசரதமன்னரையே தமக்குத் தந்தையாகக்கொண்டு பூலோகத்தில் உதிக்கக் கருத்துக்கொண்டார். இவ்வாறான நிச்சயத்தோடு பிரமதேவரிடம செய்தி சொல்லிவிட்டு, அங்குள்ள தேவர்களும் முனிவர்களும் துதிக்கத் திருமால் மறைந்தருளினார்.

பாயசம் உண்டானது.

அவர் மறைந்தவுடனே, தசரதர் ஓமம் பண்ணி முடித்த யாககுண்டத்திலிருந்து மிக்க காந்தியுடன் ஒரு பெரிய உருவம் வெளிப்பட்டது. உலகத்தில் எக்காலத்திலும் பார்த்திராத மிக்க பலமும் வீரியமும் அதனிடங் காணப்பட்டன. அதன் மேனி கறுத்தும் முகம் சிவந்துமிருந்தது. அது உடுத்திருந்த வஸ்திரத்தின் நிறம் சிவப்பாயிருந்தது. அதன் குரல் பேரிகை

வாத்தியத்தின் ஒலிபோலிருந்தது. அதன் உடம்பிலும் மீசையிலும் முடியிலுமுள்ள மயிர்கள் சிங்கத்தினது உரோமம்போல் விளங்கின. அவ்வண்ணமிருந்தும், அது, அணிந்திருந்த திவ்வியாபரணங்களினாலும், சுபலக்ஷணங்களினாலும் பார்ப்பதற்கு வெகு அழகாகவேயிருந்தது. அது ஒருமலைச் சிகரம்போல உயரமாயும் கொழுத்தபுலிபோலக் கம்பீரமாயும் காணப்பட்டது. அதனுடைய காந்தி, சூரியப்பிரகாசத்துச் சமானமாயும் கொழுந்துவிட்டெரியும் அனலுக்கொப்பாயுமிருந்தது. அது அக்கினிகுண்டத்தை விட்டு வெளிக் கிளம்பும்பொழுது, வெள்ளிமூடி மூடப்பட்டதும் தேவலோகத்துப் பாயசம் நிரம்பினதுமான பெரிய தங்கக் கிண்ணம் ஒன்றை, தனது அன்புள்ள மனைவியையே மாயையால் அவ்வுருவாக்கிக்கையிற் பிடித்ததற்கொப்பாய்ப் பிடித்துக்கொண்டு வந்தது. அவ்வண்ணம் தோன்றிய அவ்வுருவம் தசரதமகா ராஜாவைப்பார்த்து "ஓ வேந்தே, பிரமதேவரிடமிருந்து உமது சந்நிதிக்கு வந்த புருஷன் நான்" என்றது. அதைக் கேட்டு அரசர் தமது இருகைகளையும் கூப்பி அதற்கு நமஸ்காரஞ்செய்து, "ஸ்வாமி, உமது வரவு நல்வரவாகுக. நான் உமக்கு என்ன செய்யவேண்டும்? கட்டளையிட்டபடி நடந்துகொள்ளக் காத்திருக்கிறேன்" என்றார். அவ்வாறு அவர் சொன்னதைக் கேட்ட அவ்வுருவம் தசரதரைப் பார்த்து "மன்னவரே, தேவர்களை நன்றாய் ஆராதித்த பாக்கியத்தால் நீர் இப்பொழுது இந்தப் பொருளைப் பெற்றீர். இந்தத் தேவலோக பாயசத்தைக் கைப்பற்றும் இதன் மூலமாகவே நீர் புத்திரப்பேறும், மற்றைப் பாக்கியமும், ஆரோக்கியமும் ஆகிய இவைகளை அடையப்போகிறீர். இதை உமக்கு உரிய மனைவிகளிடங் கொடுத்து உண்ணச் சொல்லும். அவர்கள் வயிற்றினின்றும் உமக்குப் புத்திரர்கள் பிறப்பார்கள். எந்தக் குறையை நீக்குதற்கு நீர் இவ்வளவு சிரமப்பட்டு யாகம் பண்ணினீரோ அந்தக்குறை உமக்கு நீங்கிவிடும்" என்றது. உடனே தசரதர் "உமது உத்திரவின்படியே செய்கிறேன்" என்று சொல்லி, தேவர்களால் நிருமிக்கப்பட்ட அந்தப் பாயசம்

அடங்கிய பொற் கிண்ணத்தை அன்போடு கைபற்றித் தமது சிரத்தின்மேல் வைத்துக்கொண்டார்; வெகு ஆச்சரியமாய்த் தோன்றித் தமக்கு ஆனந்தத்தை அளித்த அவ்வுருவை வணங்கி, மிக்க களிப்புடன் அதனை அடிக்கடி பிரதக்ஷிணஞ்செய்து வந்தார்; ஆனந்தக் கடலில் மூழ்கினார்; மிக்க வறுமையுடையவனுக்குப் புதையிலகப்பட்டால் அவன் எவ்வாறு களிப்பானோ அவ்வாறு களித்தார். அதிககாந்தியால் விளங்கிக்கொண்டு வெகு அற்புதமாய்த் தோன்றிய அந்தப் பூதம்தான் வந்தகாரியத்தைச் செய்துவிட்டு உடனே தான் நின்ற விடத்திலேயே மறைந்து விட்டது.

தசரதர் மனைவியருக்குப் பாயசம் கொடுத்தது.

தசரதர் பாயசத்தை எடுத்துக்கொண்டு தமது அந்தப்புரத்தை நோக்கித் திரும்பினார். அப்பொழுது அவர் முகத்தில் காணப்பட்ட சந்தோஷத்தாலுண்டான காந்தியால் அந்த அந்தப்புறம் முழுதும் அழகான சரத்கால சந்திரிகையால் விளங்கும் ஆகாசம்போலப் பிரகாசித்தது. அந்தப்புரத்துள் புகுந்தவுடனே தசரதர் கௌஸல்யையைப் பார்த்து "உனக்குப் புத்திரபாக்கியம் உண்டாகும்; இப்பாயசத்தை நீ கைப்பற்று" என்றார். அப்படிச் சொல்லி, தாம் கொண்டுவந்த பாயசத்தில் பாதியை அவளுக்கு மன்னவர்கொடுத்தார்; எஞ்சிய பாயசத்தில் பாதியைச் சுமத்திரைக்குக் கொடுத்தார்; நின்ற பாயசத்தில் பாதியைக் கைகேயிக்குக் கொடுத்தார்; அதன்பின் மிகுந்து நின்ற பாயசத்தைக் கொஞ்சநேரம் ஆலோசனை செய்து சுமித்திரைக்குக் கொடுத்தார்; புத்திரருண்டாகவேண்டுமென்று இவ்வாறு பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட தேவாமிருதத்துக்கொப்பான பாயசத்தைத் தசரதர்மனைவிகள் கொண்டாட்டத்தோடு பெற்றுக் கொண்டு தனித்தனி புசித்து வெகு சந்தோஷமடைந்து தங்கள் மனோரதம் எல்லாம் நிறைவேறினதாய் எண்ணினார்கள். சக்கரவர்த்தி தமக்குப் பாயசம் பங்கிட்டுக்கொடுத்த முறையைக் குறித்து அவர்களிலெவரும் சிறிதேனும் அத்ருப்திப்படவில்லை. அதைத் தமது தகுதிக்கு ஏற்றவிதமென்றே கருதிக் களிப்

படைந்தார்கள். அந்தத் தேவபாயசத்தைப் புசித்த சிலகாலத்துக்குள் அவர்கள் கர்ப்பவதிகளானார்கள். அவர்களுடைய தேஜசு அக்கினிபோலவும் சூரியன்போலவும் விளங்கிற்று. தசரதர் தமது மனைவியர் மூவரும் கருவுற்றதை அறிந்து கவலை ஒழிந்து, தேவலோகத்தில் தேவர்களாலும் சித்தர்களாலும் முனிவர்களாலும் பூசிக்கப்பட்டு விளங்குகிற இந்திரனைப்போல மிகுந்த ஆனந்தத்தை அடைந்தார்.

---

## பதினேழாஞ்சருக்கம்:

### வானரோத்பத்தி.

தேவர்களைப் பூலோகத்தில் அவதாரஞ்செய்யப் பிரமதேவர் கட்டளையிட்டது.

நாராயணமூர்த்தி அந்த மகாத்துமாவான தசரத மன்னவரிடம் புத்திரராய் அவதாரம் பண்ணச் சென்றவுடன் பிரமதேவர் தேவர்களெல்லாரையும் பார்த்து "சொன்ன சொல்தவறாத வீரரான விஷ்ணுபகவான் நமக்கெல்லாம் நன்மை செய்யும் பொருட்டுப் பூலோகத்தில் அவதாரஞ் செய்கின்றாரன்றோ. அவருக்கு நாம் சகாயம் பண்ணவேண்டுமே. அதன் பொருட்டு நீங்கள் எல்லோரும் பலபராக்கிரமசாலிகளான அநேகரை உண்டாக்கவேண்டும். மாயைகளை அறிந்தவர்களாகவும், சூரர்களாகவும், காற்றுக்கொப்பான வேகமுள்ளவர்களாகவும், நீதிகளை யுணர்ந்தவர்களாகவும், புத்திமான்களாகவும், விஷ்ணுவுக்கு ஒப்பான சக்தியுள்ளவர்களாகவும், எவராலும் வதஞ் செய்யக் கூடாதவர்களாகவும், சகல உபாயங்களையும் அறிந்தவர்களாகவும், சிங்கங்கள்போலப் பலமுள்ளவர்களாகவும், அழகான மேனியுள்ளவர்களாகவும், எவ்வித அஸ்திரங்களையும் தெரிந்தவர்களாகவும், அமிருத முண்டவர்போல் அழியாத ஆயுள் பொருந்தினவர்களாகவும், உங்களுக்கொப்பான பராக்கிரமமுள்ளவர்களாகவும், வானரவுருவங்கொண்ட புத்திரர்களைச் சிறந்த அப்ஸர ஸ்திரீகளிடத்தும் கந்தருவ ஸ்திரீகளிடத்தும் உலகத்தில் உண்டாக்கக்

கடவீர்கள். நானும் அவ்வாறே முன்னொரு காலத்தில் ஜாம்பவான் என்ற கரடிவேந்தனை எனது கொட்டாவியிலிருந்து உண்டாக்கியிருக்கின்றேன்" என்றனர்.

பிரமதேவர் அவ்வாறு கட்டளையிடலும் தேவர்கள் எல்லாரும் அவருக்தரவின்படியே வானரரூபமாக அநேக வம்சங்களை உண்டாக்கினார்கள். மகாத்துமாக்களான ரிஷிகள், சித்தர்கள், வித்தியாதரர்கள், நாகர்கள், சாரணர்கள் முதலானவர்களும் வனத்தில் சஞ்சரிக்கும்படியான அநேக வீரர்களை உண்டாக்கினார்கள். இந்திரனுக்குப் பிள்ளையாய், மகேந்திர மலைக்கொப்பான வாலி யென்ற சிறந்த வானர வீரன் இவ்வுலகத்தில் பிறந்தான். சூரியன் மைந்தனாய்ச் சுக்கிரீவன் ஜனித்தான். பிருகஸ்பதியின் பிள்ளையாய், எல்லா வானரர்களிலும் அதிக புத்தி நுண்மையுள்ள தாரன் என்ற வீரன் தோன்றினன். குபேரனுடைய புதல்வனாய்க் கந்தமாதனன் என்பவன் பிறந்தான். விசுவகர்மாவினிடமிருந்து நளன் என்னும் வானரன் தோன்றினன். அக்கினிபகவானிடமிருந்து, அனலைப்போல் விளக்குகிற அழகான நீலன் உண்டானன்; அவன் தேஜசிலும், சக்தியிலும், வீரியத்திலும் எல்லா வானரர்களைக் காட்டிலும் அதிக மகிமையுள்ளவன். அழகையே பாக்கியமாகப்பெற்ற அசுவினீதேவர்களிடமிருந்து மைந்தன், துவிதன என்ற இரண்டு வானர வீரர்கள் உண்டானர்கள். வருணன் ஸுஷேணன் என்ற வானரவீரனைப் பெற்றன். மழைக்கடவுள் மகாபலசாலியான சரபனைப் பெற்றன். வாயுதேவனிடம், வச்சிரத்துக் கொப்பான சரீரமுள்ளவனுகவும் கருடனுக்கொப்பான வேகமுள்ளவனுகவும் அநுமான் தோன்றினன். இவ்விதம் பல ஆயிரக்கணக்காய் வானரவீரர்கள் இராவணனுடைய வதையின்பொருட்டுப் பூலோகத்திலுதித்தார்கள். இவர்கள் எல்லாரும் அளவிடமுடியாத பலமுள்ளவர்கள்; சிறந்தவீரர்கள்; வெகு பராக்கிரமசாலிகள்; தங்களுக்கு இஷ்டமான உருவங் கொள்ள வல்லவர்கள். கொழுத்த சரீரமமைந்து மேரு மலை

தேவர்கள் வானரர்களாய்ப் பிறந்தது.

போலவும், மந்தர மலைபோலவு மிருப்பவர்கள். இவ்வாறு ரிக்ஷர்களும் வாநரர்களும், கோபுச்சர்களுமாகப் பலர் வெகு சீக்கிரத்தில் உண்டானார்கள். எவரெவர் எந்த எந்தத் தேவதையிடமிருந்து பிறந்தனரோ அவரவர் அந்த அந்தத் தேவதையின் உருவம், வேஷம், பராக்கிரமம் ஆகிய எல்லாம் அமைந்தவராய் அத்தேவதைக்குச் சமானராயிருந்தனர் கோலாங்கூலம் ரிக்ஷம் கின்னரம் இவ்வினங்களினின்று பிரசித்தமான பராக்கிரமமுள்ள சிலவாநரவீரர்கள் தோன்றினார்கள். புகழ்பெற்ற தேவர்களும், மகாமுனிவர்களும், கந்தர்வர்களும், கருடர்களும், யக்ஷர்களும், நாகர்களும், கிம்புருஷர்களும், சித்தர்களும், வித்யாதரர்களும், உரகர்களும் முக்கியமான அப்ஸர ஸ்திரீகளிடமும், வித்யாதரப் பெண்களிடமும், நாககன்னிகளிடமும், கந்தர்வமாதர்களிடமும் பெரியவடிவமுள்ள அநேக வாநரர்களை மகிழ்ச்சியோடு ஆயிரக் கணக்காக உண்டாக்கினார்கள். அவர்கள் எல்லோரும் தங்களுக்கு இஷ்டமான உருவங்கொள்ள வல்லவர்கள்; பலசாலிகள்; தங்களுக்கு இஷ்டமான இடங்களில் சஞ்சரிக்கவல்லவர்கள் ; பலத்தாலும், செருக்காலும் சிங்கங்களுக்கும், புலிகளுக்கும் ஒப்பானவர்கள் ; மலைகளைப் பிடுங்கி மேலெறியவல்லவர்கள் ; மரங்களைக் களைந்து எடுத்துக்கொண்டு போர் புரியவல்லவர்கள் ; நகங்களையும் பற்களையும் ஆயுதங்களாகக்கொண்டு சண்டைசெய்பவர்கள் ; எல்லாவித அஸ்திரங்களையும் அறிந்தவர்கள். அவர்கள் மலைகளை அசைப்பார்கள் ; பெரியவிருக்ஷங்களைப் பிளப்பார்கள் ; சமுத்திரத்தைக் கலக்கிச் சேறாக்கிவிடுவார்கள் ; அவர்கள் ஓர் உதை உதைத்தால் பூமி பிளவுபடும்; சமுத்திரத்தைத் தாண்டிக் குதிப்பார்கள் ; ஆகாயத்தில் பறந்து சென்று மேகத்தைப் பிடித்துக்கொண்டுவந்து சேர்ப்பார்கள்; காட்டில் மதம்பிடித்துத் திரியும் மதயானைகளைக் கைப்பிடியாய்ப் பிடித்து இழுத்துவரக் கூடிய சாமர்த்திய முள்ளவர்கள் ; அவர்கள் ஒரு கர்ச்சனை செய்தால் ஆகாயத்தில் பறக்கும் பறவைகள் யாவும் கீழேவிழும். அவர்கள்தாம் வாநரசேனைத் தலைவர்களாயும், தங்களுக்கு இஷ்டமான உருவங்கொள்ளவல்லவர்களான வெகுகீர்த்தி பெற்ற வாந

ரப் போர்வீரர்களாயும் உலகத்தில் பல நூறாயிரக் கணக்காக வந்து தோன்றித் தாங்களும் வானர சேனைத் தலைவர்களை உண்டாக்கினார்கள்.

வானர சேனாபதிகள்.

இவ்வானரங்களில் சிலர் ரிக்ஷவான் என்னும்மலையின்சாரல்களில் வசித்தார்கள். வேறு சிலர் மற்றும் பல மலைகளிலும், காடுகளிலும் குடிபுகுந்தார்கள். இவர்கள் எல்லோரும் சூரிய புத்திரனான சுக்ரீவனையும் அவனுடைய தமையனாகிய இந்திரபுத்திரனான வாலியையும் தங்களுக்குத் தலைவராகக்கொண்டார்கள். நளன், நீலன், அநுமான் முதலிய சில வானரவீரர்களும் தலைமைபெற்று விளங்கினர். கருடனுக்கொப்பான வலிமையுள்ளவர்களும் போர் செய்யவல்லவர்களுமான இவர்கள் எல்லாரும் கொழுத்துச் சிங்கங்களையும் புலிகளையும் மகாசர்ப்பங்களையும் நசுக்கிக்கொண்டு சஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள். இவ்விதமாய் உண்டான ரிக்ஷர்கள், கோபுச்சர்கள், வானரர்கள் இவர்களெல்லாரையும் வெகுபராக்கிரமசாலியாகிய வாலி தனது புஜபலத்தால் அடக்கி அரசாண்டுவந்தான். மலைகள், காடுகள், சமுத்திரங்கள் நிரம்பிய இப்பூதலம், இவ்வாறு வானர வீரர்களால் நிறைந்தது. வெகு சூரர்களாய் பலவகை வடிவமுள்ளவர்களாய், தங்கள் தங்களுக்குரிய பலவகை அடையாளங்களுள்ளவர்களாய், மேகக்கூட்டங்களுக்கும் மலைச்சிகரங்களுக்கும் ஒப்பானவர்களாய், பயங்கரமான சரீரமுள்ளவர்களாய், மகாபலசாலிகளாய், வானரவீரர்கள் இராமருக்கு உதவிசெய்ய உண்டானார்கள்.

## பதினெட்டாஞ்சருக்கம் :

### இராமாவதாரம்.

தசரதர் யாக சாலையிலிருந்து அயோத்தி சேர்ந்தது.

மகானாகிய தசரதருடைய அசுவமேதயாகம் முடிவுபெற்றவுடன் தேவர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் அவிர்ப்பாகங்களைப் பெற்றுக் கொண்டவர்களாய்த் தேவலோகம் போனார்கள். இராஜாவும் எல்லா வைதிக காரியங்களையும் பூர்ணமாய் முடித்து அவபிருதஸ்நானஞ்செய்து தமது

மனைவிமார்களோடும், பரிவாரங்களோடும், சேனைகளோடும், வாகனங்களோடும் நகரம் சேர்ந்தார். யாகத்துக்குவந்த அரசர்கள் எல்லாரும் தசரதர் தங்களுக்குத் தக்கபடி செய்த வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டு மனங்களித்து முனிவர்களுள் உத்தமராகிய ரிசியசிருங்கரை வணங்கி விடைபெற்றுத் தங்கள் தங்கள் நகரஞ் சென்றார்கள். தசரதமன்னர் கொடுத்த அழகான ஆடை முதலியவற்றை அணிந்துகொண்டு வெகு சந்தோஷத்துடன் தங்கள் தங்கள் நகரங்களுக்குப் பிரயாணப்பட்ட அரசர்கள் சேனைகள் வெகு அழகாக விளங்கின. அரசர்கள் போனபின் தசரதரும் வேதியர்களை முன்னிட்டுக்கொண்டு தம் அரண்மனை சேர்ந்தார். சேர்ந்தவுடன் அவர் ரிசியசிருங்கருக்குத் தக்க வெகுமதிகள் பண்ணினார். அவரும் தசரதர்செய்த பூஜைகளை ஏற்றுக்கொண்டு அவரிடம் விடைபெற்றுத் தமது மனைவியாகிய சாந்தையையும் அழைத்துக்கொண்டு, பரிவாரங்களோடுகூடிய ரோமபாத ராஜனுடன் தம் இருப்பிடத்தை நோக்கி புறப்பட்டுச் சென்றார். இப்படி எல்லாரையும் அனுப்பியபின் தசரதர் தம் மனோரதங்கள் எல்லாம் நிறைவேறினதற்காக அதிகசந்தோஷமடைந்து மிகச் சௌக்கியமாய்ப் புத்திரப்பேற்றைச் சிலகாலம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

இராமர் அவதாரம்.

யாகம்முடிந்து ஆறுருதுக்கள் கழிந்தபின் பன்னிரண்டாம் மாதத்தில் கௌஸல்யை சித்திரை மாதத்துச் சுக்கிலபக்ஷ நவமி திதியில், புனர்வசு நக்ஷத்திரத்தில், கர்க்கடலக்கினத்தில், ஐந்து கிரகங்கள் உச்சமாய் நிற்க, லக்கினத்தில் சந்திரனும் குருவும் சேர்ந்திருக்க, எல்லாராலும் வணங்கப்படுகிறவரும் ஜகந்நாதரும் ஸர்வலக்ஷணங்களும் பொருந்தியவருமான இராமர் என்ற குழந்தையைப் பெற்றாள். விஷ்ணு பகவானுடைய பாதி அம்சமாய் இக்ஷ்வாகு வமிசம் விளங்கத் தோன்றிய மகாபாக்கியசாலியான இராமராகிய அளவில்லாத தேஜசுடன் விளங்கிய அக்குழந்தையைப் பெற்ற கௌஸல்யாதேவி, வச்சிராயுதத்தைக் கையில்தரித்த தேவேந்திரனை ஈன்ற அதிதி தேவியைப்போல

விளங்கினாள். வெகு சத்தியசந்தனும், எல்லா நற்குணங்களையு முடையவனும் விஷ்ணுவின் அம்சத்தில் நான்கில் ஒரு பங்கு அம்சமுள்ளவனுமான பரதனைக் கைகேயி பெற்றாள். வீரர்களாயும் எல்லா அஸ்திரவித்தைகளிலும் வல்லவர்களாயும்விஷ்ணு பகவானுடைய அம்சமாயும் விளங்கும் லக்ஷ்மணன், சத்துருக்கினன் என்பவர்களைச் சுமித்திரைபெற்றாள். களங்கமற்ற புத்தியையுடைய பரதன் புஷ்யநக்ஷத்திரத்தில் மீனலக்கினத்திலே ஜனித்தான். லக்ஷ்மணனும, சத்துருக்கினனும் ஆயிலிய நக்ஷத்திரத்தில் கர்கடலக்கினத்தில் பிறந்தார்கள்.

புத்திரோத்ஸவங் கொண்டாடல்.

இவ்வண்ணம், மகாத்துமாக்களாயும், நற்குணமுள்ளவர்களாயும, ஒருவருக்கொருவர் சமமான அழகுள்ளவர்களாயும் நான்கு குமாரர்கள் பூரட்டாதி நக்ஷத்திரங்கள் போல் அதிககாந்தி பொருந்தியவர்களாகத் தசரதருக்குப் பிறந்தார்கள். அவர்களுடைய ஜன்மதினத்தில் கந்தருவர்கள் மதுரமாகப் பாடினார்கள்; அப்ஸரகணங்கள் கூத்தாடினார்கள்; ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழங்கின; புஷ்பமாரி பொழிந்தது. எங்கே பார்த்தாலும அந்தத் தினம் ஒரு பெரிய உத்ஸவ தினமாயிருந்தது. அயோத்திமாநகர் வாசிகள் எல்லாரும் அன்று திருவிழாக் கொண்டாடினார்கள். ஊர் வீதிகளெல்லாம் நர்த்தன சாலைகளாக விளங்கின; சிலர் மதுரமாகக் கானஞ் செய்தார்கள்; சிலர் வாத்தியங்களை வாசித்தார்கள் ஸ்தோத்திராவளி கூறினவர்களுக்கெல்லாம் தசரதர் விலையுயர்ந்த வெகுமதிசெய்தார். அவர் அன்றைத்தினம் பிராமணர்களுக்குக் கோதானமும், சுவர்ணதானமும், ஆயிரக்கணக்காகச் செய்தார்.

குழந்தைகள் பிறந்து பதினொருநாள் சென்றபின்பு மகாராஜா தமது குழந்தைகளுக்கு வெகு சிறப்பாக நாமகரணம் செய்யலானார். மூத்த குமாரனுக்கு இராமன் என்றும், கைகேயினிடம் பிறந்தவனுக்குப் பரதன் என்றும், சுமித்திரையின் குழந்தைகளிவருக்கும் லக்ஷ்மணன் சத்துருக்கினன் என்றும் வசிஷ்ட முனிவர் வெகு அன்புடன் பெயரிட்டார். தசரதர்

அந்த உத்ஸவத்துக்கு வந்த உள்ளூரார்களுக்கும், வெளியூரார்களுக்கும் வெகு திருப்தியாக விருந்திட்டார். இவ்வண்ணம் அந்தணர்களுக்கு விருந்திட்டதோடு அளவில்லாத நாநாவித ரத்தினங்களைத் தானஞ்செய்தார். இப்படி வெகு சிறப்பாக ஜாதகருமம் முதலிய எல்லா உத்ஸவங்களும் நடந்தன.

புத்திரர்களின் கல்வியும் குணமும்

அப்புதல்வர்களுள் மூத்தவரான இராமர், த்வஜம்போல விளங்குபவராய்த் தமது தந்தையின் சந்தோஷத்தைப் பெருகச் செய்துகொண்டு பிரமதேவர்போல எல்லாருக்கும் வேண்டியவராயிருந்தார். அந்நால்வர்களும் வேதங்களில் வெகு சமர்த்தர்களாயும், சூரர்களாயும், எப்பொழுதும் உலகத்துக்கு நன்மை செய்வதிலேயே திருஷ்டி யுள்ளவர்களாயும், ஞானம் நிரம்பியவர்களாயும், எல்லாவித நற்குணங்களும் பொருந்தியவர்களாயும் இருந்தார்கள். சந்திரன் எவ்வாறு எல்லாருடைய மனத்தையும் களிப்பிக்கும் குணமுடையவனாய் விளங்குகிறானோ அதுபோல அவர்களுள் இராமர் எல்லாருக்கும் மிகவும் இஷ்டராய் விளங்கினார். யானையேற்றம், குதிரையேற்றம், தேரேற்றம் இவைகளில் இராமர் வெகு தேர்ச்சியடைந்தவர்; அதுபோலவே வில்வித்தையிலும் தந்தைசொற்படி நடப்பதிலும் கீர்த்திபெற்றவர். எல்லா அழகும் நிரம்பப்பெற்ற லக்ஷ்மணர் இளமைமுதல் தமது தமையனாராகிய இராமரிடம் அதிக அன்பும், எப்பொழுதும் அவருக்குப் பணிசெய்யுங் கருத்தும் உள்ளவராய் அது விஷயமாய்த் தமக்கு உண்டாகும் சிரமத்தைச் சிறிதும் நினையாதவராயிருந்தார். இராமருடைய பிராணனே வெளியில் உருவெடுத்து வந்ததுபோல் லக்ஷ்மணர் விளங்கினார். இராமரில்லாமல் அவருக்கு நித்திரையும் வராது; தமக்கு யாராவது பக்ஷ்யங்கள் கொடுத்தால் அவற்றை முதலில் இராமருக்குப் பங்கிட்டுக் கொடுக்காமல் அவர் சிறிதேனும் தாம் புசியார். ஏதாவது ஒரு வேளையில் இராமர் குதிரையின்மேலேறிக் காட்டுக்கு வேட்டையாடச் சென்றால் லக்ஷ்மணரும் அவரைப் பிரியாது கையில் விற்பிடித்துப் பாதுகாத்துக்கொண்டு பின் செல்

வார். லக்ஷ்மணருக்கு இளையவரான சத்துருக்கினரும் இவ்வாறே பரதரிடம் அதிக அன்பும் விசுவாசமும் வைத்து, தமது பிராணனுக்கு மேலாகப் பரதர் தம்மை எண்ணும்படி செய்து கொண்டார். திக்பாலகர்களான தேவர்களைப் பிரமதேவர் படைத்து அதனால் எவ்வண்ணம் ஆனந்தக் கடலில் முழுகினரோ அவ்வண்ணம், இவ்வருமைப் புத்திரர்களைத் தாம் பெற்றதனால் தசரத மகாராஜாவும் வெகு சந்தோஷமடைந்தார். அந்நால்வரும் நாளுக்குநாள் பேரறிவினர்களாயும், குணவான்களாயும், தம்மையறியாமல் ஏதாவது செய்யக் கூடாத காரியஞ் செய்துவிட்டால் அதை நினைத்து அருவருப்புறும் இயல்புள்ளவர்களாயும், கீர்த்தியுடையவர்களாயும், எல்லாம் அறிந்தவர்களாயும், பின் வரப்போகிற பலனை முன்னமே அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்பவர்களாயும், ஓங்கி விளங்கும் திருமேனியுள்ளவர்களாயும் வளர்ந்து வருவதைக் கண்டு தசரதர் பிரமதேவர்போல ஆனந்தமடைந்தார். அன்றியும் அவர்கள் வேதாகங்களான சாஸ்திரங்களைப் படிப்பதில் எப்பொழுதும் ஊக்கமுடையவர்களாயும், வில்வித்தையில் தேர்ந்தவர்களாயும், தமது தந்தைக்குப் பணிவிடைசெய்வதிலே எப்பொழுதும் பிரியமுடையவர்களாயுமிருந்தார்கள்.

*விசுவாமித்திர முனிவரின் வரவு.*

இவ்விதமான புத்திரர்களைத் தாம் அடைந்த சந்தோஷத்தை முற்றும் அனுபவிக்க, அவர்களுக்குத் தகுந்த பெண்களைப் பார்த்து விவாகம் பண்ணி வைக்கவேண்டுமென்று, தசரத மகாராஜர் தமது புரோகிதர்களோடும் பந்துக்களோடும் ஆலோசித்தனர். அவ்வாறு அவர் மந்திரிகள்சூழ ஆலோசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் மிக்க தேஜசுள்ள விசுவாமித்திரமகாமுனிவர் தசரதரைக்காண விரும்பியவராய்த் தாமாகவே அரண்மனைவாசலில் வந்து, அவ்விடமிருந்த சேவகர்களை நோக்கி, குசிககுலத்தவரும் காதிகுமாரரான தாம் வந்திருப்பதை உடனே உட்சென்று அரசரிடந் தெரிவிக்கவேண்டுமென்று சொன்னார். அதைக்கேட்டு அவர்கள் அச்சத்தோடு

வெகுபரபரப்பாய் விரைந்தோடி அரன்மனையினுட்சென்று அரசர்முன் நின்று விசுவாமித்திரமாமுனிவர் வந்திருப்பதை அறிவித்தார்கள்.

தசரத விசுவாமித்திரர் சல்லாபம்.

அவர்கள் சொன்னதைக்கேட்டு அரசர் வெகு ஆனந்தத்துடன் தமது புரோகிதரையுங் கூட அழைத்துக்கொண்டு, பிரமதேவரைக்காண இந்திரன் போவதுபோல் எதிர்கொண்டு போய், மிக்க காந்தியோடு விளங்கும் அம் முனிவரை வணங்கி வெகு மரியாதையுடனும், விசுவாசத்துடனும் வசிஷ்டர்மூலமாக அவருக்கு அர்க்கியங்கொடுத்தார். அவ்வாறு விதிப்படி கொடுக்கப்பட்ட அர்க்கியத்தை முனிவர் பெற்றுக்கொண்டு இராஜாவைப்பார்த்து அவருடைய க்ஷேமலாபங்களைக் குறித்து விசாரித்தார். நகரம், நாடு இவைகளின் க்ஷேமத்தையும், பொக்கிஷத்தின் விருத்தியையும், பந்துக்கள் சிநேகிதர்கள் இவர்களுடைய சௌக்கியத்தையும், முதலில் விசாரித்து, பின்பு "சிற்றரசர்கள் எல்லோரும் உமக்குள் அடங்கியிருக்கிறார்களா? நீர் உமது சத்துருக்களை யெல்லாம் அடக்கிவிட்டீரா? நீர் செய்யவேண்டிய தேவகாரியங்கள், மநுஷ்ய காரியங்கள் இவைகளெல்லாம் சரிவர அநுஷ்டிக்கப்படுகின்றனவா?" என்று வினவினர். அதன்பின் அம்முனிவர் வசிஷ்டர் முதலான ரிஷிகளைப்பார்த்து அவர்களுடைய யோகக்ஷேமத்தை விசாரித்தார். அவ்விதமாய் வெகு மரியாதையுடன் தசரத மகாராஜாவினால் அழைக்கப்பட்டு விசுவாமித்திர முனிவர் வெகு சந்தோஷமாய் எல்லாருடனும் அரண்மனையில் நுழைந்து அங்குத் தமக்குத் தகுந்த ஆசனத்தில் வீற்றிருந்தார். அவருக்கு வேண்டிய உபசாரஞ்செய்துமுடித்து அரசர் அவரைப்பார்த்து வெகு ஆனந்தத்துடன் வணக்கமாய் "முனிபுங்கவரே! இன்று நீர் இங்குவர நான்பெற்ற பாக்கியமானது அமிருதங் கிடைக்கப்பெற்றால் எவ்வண்ணமிருக்குமோ அவ்வண்ணமிருக்கின்றது; மழையில்லாமல் தவிக்கும் தேசத்தில் மிகுதியாக மழை பெய்தால் எவ்வித சந்தோஷ முண்டாகுமோ அவ்வித சந்தோஷம்

எனக்கு உண்டாயிருக்கின்றது; புத்திரபாக்கிய மில்லாதவ னுக்குத் தனக்குச் சரியான மனைவியிடம் புத்திரோற்பத்தியா னால் அவனுள்ளம் எப்படிக் களிக்குமோ அப்படி என் மனம் ஆனந்தமடைகிறது; பெரு நஷ்டமடைந்தவனுக்கு இலாபங் கிடைத்தால் எவ்விதமான திருப்தி உண்டாகுமோ அவ் விதமான திருப்தி எனக்கு உண்டாயிருக்கிறது. பெரிய உத்ஸவத்தால் எவ்விதமான சந்தோஷ முண்டாகுமோ அவ்விதமான சந்தோஷத்தை நான் அடைகிறேன்; உமக்கு அந்தக் காரியம் எந்த விதமாய் முடியவேண்டுமோ, அந் தக்காரியத்தை அந்த விதமாகவே நான் மகிழ்ச்சியோடு செய்துமுடிக்கக் காத்திருக்கிறேன். தானங்களைப் பெறுதற்கு உத்தம பாத்திரமானவர் நீர்தாம். எனது பாக்கிய விசே ஷத்தாலேயே நீர் இங்குவந்தீர். இப்பொழுது உமது வரவால் என் ஜன்மம் ஸபலமாயிற்று. என்பிழைப்பும் நற்பிழைப்பா யிற்று. முதலில் ராஜரிஷியாயிருந்து பின்பு கடினமான தவம் புரிந்து பிரமரிஷிப்பட்டம் பெற்ற உம்மை நான் பலவிதமாகப் பூசிக்க வேண்டியவனா யிருக்கிறேன். நீர் இவ்விடம் வந்தது வெகு ஆச்சரியம். இன்று உம்மைத் தரிசித்தது ஒன்றே எனது பிறப்பை மிகவும் பரிசுத்தமாகப் பண்ணிவிட்டது. உமது வரு கையால் இந்த க்ஷேத்திரம் புண்ணிய க்ஷேத்திரமாயிற்று. நீர் காரியம் எதையாவது உத்தேசித்து வந்திருந்தால் அதைச்சொல் லியருள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். எவ்வித மாயாவது நான் உமக்கு ஊழியஞ்செய்ய அதிக ஆசையுடவனா யிருக்கிறேன். நீர் சொன்ன காரியத்தை நான் செய்கிற விஷ யத்தில் நீர் சிறிதும் சங்கிக்கவேண்டியதில்லை. நீரே எனக்குக் கடவுளாதலால் நீர் சொல்லும் வேலையையெல்லாம் செய்யச் சித் தனாய் காத்துக்கொண்டிருக்கிறேன். உமது வருகையே எனக்கு இன்றுமுதல் எல்லாவிதமான சம்பத்துகளும் மிகச் சிறந்த தருமங்களும் வந்துவிட்டன என்பதற்கு அடையாளம்" என்றார். இவ்வாறு மனத்துக்கும் காதுக்கும் சுகமாகவும் மனப் பூர்வமாகவும் அரசர் வணக்கத்தோடு சொன்ன சொல்லைக்

கேட்டு, பெருங்கீர்த்திபெற்றவரும் மகாகுணசாலியுமான விசுவாமித்திர மகாரிஷி வெகு திருப்தியடைந்தார்.

---

## பத்தொன்பதாஞ்சருக்கம்:

### விசுவாமித்திரரிஷியின் வாக்கியம்.

விசுவாமித்திரர் தசரதரைப் புகழ்தல்.

இவ்வாறு அரசர் அன்புடன் எல்லாரும் ஆச்சரியப்படும்படியாயும் அநேகபிரகாரமாயும் தம்மைப் பார்த்துச் சொன்னதை விசுவாமித்திரர் கேட்டு மகிழ்ந்து, பின்வருமாறு அரசனை நோக்கிச் சொல்லுகின்றார்:—"இராஜ சிங்கமே, உயர்ந்த குலத்தில் உதித்து வசிஷ்டரைக் குருவாக அடைந்து விளங்கும் உமக்கேயல்லது உலகத்தில் வேறு மன்னவர்க்கு இவ்வகை உபசார வார்த்தைகள் சொல்லத்தெரியுமோ? நான் எதை உத்தேசித்து இங்கு வந்தேனோ அதை இப்பொழுதே தெரிவிக்கின்றேன். அதைச் சத்தியசந்தரான நீர் நிறைவேற்றிவைக்கவேண்டும். நல்ல பேறுபெறும்பொருட்டு நான் ஒரு யாகம் ஆரம்பித்திருக்கிறேன்; அதற்கு விகாதஞ்செய்ய, மாயாரூபங்கொள்ளவல்ல மாரீசன், சுபாகு என்னும் இரண்டு ராக்ஷஸர்கள் தலைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வெகு பலபராக்கிரமமுள்ளவர்கள். யாகமோ பெரும்பாலும் முடிவுபெறும்படியான நிலைமையிலிருக்கிறது. அவ்விருவரும் அதைக்கெடுக்க யாகபூமியில் கூடைகூடையாக மாம்சங்களையும், குடங்குடமாக இரத்தத்தையும் கொண்டுவந்து சொரிகிறார்கள். இவ்வண்ணமாக அவர்கள் என் யாகத்துக்கு இடையூறு செய்வதால் நான் பட்ட சிரமமெல்லாம் வீணானதைப்பார்த்துக் குதூகலம் குன்றி என் ஆச்சிரமத்தை விட்டு வந்துவிட்டேன். யாகத்துக்குத் தீக்ஷைபண்ணிக்கொண்டிருக்கிறவன் கோபத்துக்கு இடங் கொடுக்கலாகாதென்பது விதியாகையால், கோபங்கொண்டு அவர்களைச்சபிக்க எனக்குப் புத்திவரவில்லை.

*விசுவாமித்திரர் இராமரை அழைத்தல்.*

"இந்த விஷயத்தில் என்னைக்காக்க உமது மூத்த குமாரரான இராமரை உம்மைக்கேட்டு அழைத்துக்கொண்டுபோக வந்திருக்கிறேன். அவர் பக்கக் குடுமி வைத்துக்கொண்டிருக்கிற சிறு குழந்தை என்றாலும் ஒப்பற்ற சாமர்த்தியம் உடையவர். அவர் என்னால் பாதுகாக்கப்பட்டு என்னுடைய ஆச்சிரமம் சேர்ந்ததும், அந்த ராக்ஷஸர்களால் உண்டாகும் இடையூற்றைத் தமது திவ்விய தேஜோ மகிமையால் நீக்குவார் என்பது திண்ணம். இதன் மூலமாக அவருடைய பலவகையான மேன்மையும் கீர்த்தியும் மூன்று லோகங்களிலேயும் பரவப் போகின்றன. இந்த விஷயத்தை நிறைவேற்றுவதற்காக நான் அவருக்கு அநேகவிதமான அஸ்திர சஸ்திரங்களை அளிக்கும்படி நேரிடும். இராமர் முன்பு மாரீசன் சுபாகு என்னும் இரண்டு ராக்ஷஸர்களும் ஒரு நிமிஷங்கூட நிற்க மாட்டார்கள். இராமரையல்லது வேறுயாரும் அவர்களை வதைசெய்ய முடியாது. காலன் அவர்களை முன்னரே தனக்கு இரையாக இலக்குவைத்துவிட்டான். அவர்கள் இராமருக்கு எதிராகுந்தரமுடையரல்லர். குழந்தையாயிற்றே என்று நீர் மனம் கலங்க வேண்டாம் இராமர் என் ஆச்சிரமம் வந்ததும் அரக்கர்களிருவரும் மாண்டார்கள் என்பதாக நான் சொல்லுவதை நீர் நிச்சயமாய் நம்பும்.

*இராமர் மகிமை.*

"மகாத்துமாவும் சத்திய பராக்கிரமருமான இராமரை உண்மையாய் அறிந்தவன் நான் ஒருவன்; வசிஷ்டரொருவர்; மற்றும் தவம் புரிந்தவர்களும் இராமரை உள்ளபடி கண்டறிந்திருக்கிறார்கள். உலகத்தில் அழியாத பேரறமும் பெரும்புகழும் அடையவேண்டுமென்று உமக்கு இஷ்டமிருந்தால் உடனே இராமரை நீர் என்னுடன் அனுப்பவேண்டும். அரசரே, இது விஷயமாய் வேண்டுமானால் நீர் வசிஷ்டர் முதலான பெரியவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்கலாம்; அவர்கள் இராமரை என்னுடனனுப்பலாம் என்று சொன்னால் பிறகு உமக்கு என்ன ஆக்ஷேப

பம்? எனது யாகமோ பத்துநாளைக்காரியம். இல்லை என்று சொல்லாமல் இராமரை உடனே என்னுடன் அனுப்ப வேண்டும். யாகத்துக் குரிய காலம் தவறிவிடாதபடி விரைவில் அனுப்பவேண்டும். சிறிய குழந்தையைப் பெரிய காரியத்தில் அனுப்புகின்றோமே என்று உமது மனத்தில் கொஞ்சமேனும் வருத்தப்படவேண்டாம்" என்று இவ்விதமாய் அந்த தர்மாத்துமாவாகிய விசுவாமித்திர முனிவர் தசரதரைப் பார்த்துத் தமது காரியத்தின் பொருட்டும் உலகத்தில் நன்மையின் பொருட்டும் இராமரைத் தாம் அழைத்துக்கொண்டு போக வேண்டிச் சொல்லி முடித்தார். அவர் சொன்னவற்றையெல்லாம் கேட்டுத் தசரதர் மிக்க சோகமும் பயமுமுற்று, தம் பிள்ளையின்மேல் தாம் வைத்திருந்த அதிக ஆசையால், மூர்ச்சையடைந்தார்.

---

## இருபதாஞ்சருக்கம்:

### தசரத வாக்கியம்.

*தசரதர் இராமரை அனுப்ப அஞ்சுதல்.*

விசுவாமித்திரர் வாக்கியத்தைக் கேட்டுத் தசரதர் சிறிது நேரம் ஒன்றுந் தெரியாதவராயிருந்து, பின்பு மூர்ச்சை தெளிந்தவுடன் முனிவரைப் பார்த்து "முனிபுங்கவரே, செந்தாமரைக் கண்ணனை என் குழந்தை இராமனுக்கு இன்னும் பதினாறு பிராயங்கூட ஆகவில்லையே. அவனை ராக்ஷஸர்கள் முன் நின்று போர் புரிய வல்லன் என்று நான் எவ்வாறு நினைக்கக்கூடும்? நானோ அக்ஷௌஹிணிக் கணக்காயுள்ளசேனைக்குத் தலைவனாயிருக்கின்றேன். அப்படி நிறைந்த சேனையோடு நானே நேராகவந்து அவ்வரக்கர்களுடன் போரிடுகிறேன். எனது போர்வீரர்களோ மிகச்சமர்த்தர்கள்; எல்லாவகை அஸ்திரப் பயிற்சியிலும் தேர்ந்தவர்கள், வெகு பலபராக்கிரமசாலிகள்; ராக்ஷஸ சமூகத்தோடு போரிடத்தக்கவர்கள். இராமனை மாத்திரம் விட்டு அவர்கள்

எல்லாரையும் அழைத்துக்கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டால் உடனே நான் புறப்பட்டுவிடுகிறேன். நானே கையில் விற்பிடித்து யாகத்தைப் பாது காத்துக்கொண்டு நின்று எனது உயிருள்ளவளவும் போர்புரிகிறேன். இராமனைமட்டும் அழைத்துப் போதல் தகாது. நானே நேர்நின்று உம்முடைய யாகம் இடையூறடையாதவண்ணம் நன்றாகப் பாதுகாத்துவிட்டுத் திரும்புகிறேன். இராமனை மாத்திரம் இங்கு விட்டருளுவீர். அவனோ குழந்தை; ஆயுதப்பயிற்சி நன்றாக இன்னுங் கைவந்தவனல்லன்; அரக்கர்களுடையவும் தன்னுடையவும் பலாபலங்களைப் பகுத்தறியுந் திறமில்லாதவன்; அஸ்திரபலம் பொருந்தியவனல்லன்; இன்னும் அவன் போரையே கண்டறியான்; அவன் அரக்கர்கள் முன் நின்று சண்டையிட வல்லனோ? அவர்கள் வெகு கபடமாக யுத்தம் பண்ணுகிறவர்களன்றோ! இராமனைப் பிரிந்து நான் ஒரு நிமிஷங்கூட என் பிராணனை வைத்திருக்கமாட்டேனே; ஆதலால், ஓ முனி ரத்தினமே, என் குழந்தையை அழைத்துப் போகவேண்டாம்; முடியாது. அவனை அழைத்துக்கொண்டுதான் போகவேண்டுமென்பது உமது நிச்சயமானால், என்னையும் என்னுடைய சதுரங்கசைநியத்தையும் அவனோடு அழைத்து வர விடை கொடுத்தருள்வீர். எனக்கே பிராயம் அறுபதினாயிரம ஆய்விட்டது. இந்த வயதில் நான் எவ்வளவோ சிரமப்பட்டுப் புத்திர காமேஷ்டிபண்ணிப் பெற்ற பிள்ளை இவன். அதற்காகவாவது மனமிரங்கி அவனை விட்டுவிடும். எனக்குக் குழந்தைகள் நால்வர்கள் இருந்தாலும் இராமனிடம் எனக்கு விருப்பம் அதிகமாகவிருக்கின்றது. அதன் பொருட்டாவது, தருமகுணங்களையுடையவனும் மூத்தவனுமான அவனை அழைத்துப் போகவேண்டாம்.

தசரதர் அரக்கர்களை விசாரித்தல்.

" அவ்வரக்கர்கள் யாவர்? அவர்கள் எந்த ராக்ஷஸவம்சத்தில் பிறந்தவர்கள்? அவர்கள் பல பராக்கிரமம் எப்படிப்பட்டது? அவர்களுக்கு உதவி செய்பவர் யாவர்? அவர்கள் உருவம் எவ்விதமாயிருக்கும்? எவ்வாறு அவர்களை இராமனைக்

கொண்டு வதைக்க நீர் உத்தேசித்திருக்கிறீர்? நானாவது என் சைநியமாவது கபடமாக யுத்தம் பண்ணுகின்ற கொழுத்த கொடிய அவர்கள் முன் நின்று சண்டைசெய்து அவர்களை வதை செய்யும் உபயம் என்ன? இந்த விஷயங்களெல்லாவற்றையும் பற்றி விவரமாகச் சொல்லவேண்டும்" என்று தசரதர் கேட்டார்.

சுபாகு மாரீசர்களைக் குறித்து விசுவாமித்திரர் சொல்லுதல்

அதற்கு விசுவாமித்திர முனிவர் "புலஸ்தியர் வம்சத்தில் பிறந்த இராவணன் என்னும் பெயருடைய ஒரு ராக்ஷஸனிருக்கின்றான், அவன் பிரமதேவரிடம் பல வரங்கள்பெற்று அதிக பல பராக்கிரமசாலியாய் அநேக ராக்ஷஸர்களுடைய உதவியுடன் மூன்று உலகங்களையும் எப்பொழுதும் தைரியமாய் எதிர்த்து மிகவும் உபத்திரவம் செய்து கொண்டு வருகின்றான். அவன் குபேரனுடைய தம்பி, பெருந்தவமுள்ள விசிரவ முனிவருடைய பிள்ளை. அவன் தான் யாகங்களைக் கெடுக்க முயலுகிறவனைக் காட்டிக்கொள்ளுகிறதில்லை. ஆனாலும், அவனுடைய ஏவுதலால் சுபாகு, மாரீசன் என்ற கொடிய பராக்கிரமமுள்ள இரண்டு ராக்ஷஸர்கள் எப்பொழுதும் யாகத்தை கெடுப்பதிலேயே நோக்கமுள்ளவர்களாக இருக்கின்றார்கள்" என்றார்.

தசரதர் இராமரை அனுப்பேன் என்றது.

அதைக் கேட்ட தசரதர் திகைத்து "ஐயோ அந்த இராவணனுக்கு எதிரில் நின்று நான் போர் செய்ய வல்லனல்லேன். என் சிறு குழந்தையிடம் நீர் மனமிரங்கவேண்டும். நீரே எனக்குத் தெய்வம்; நீரே எனக்குக் குரு; தேவர்கள், தானவர்கள், கந்தருவர்கள், யக்ஷர்கள், கருடர்கள், நாகர்கள் முதலிய பெயர்பெற்றவர்களும் அந்த இராவணன் முன்போரில் நிற்கமாட்டார்களே; மனிதர்கள் எவ்வாறு எதிர் நிற்பார்கள்? அவனே வீரர்களுக்குள் வீரனையும் ஒரு நொடியில் வெல்ல வல்லவன். அவனுடனாவது, அவன் சைநியத்துடனாவது, போர் செய்ய என்றால் முடியாது. மாமுனிவரே, என் குழந்தைகளையோ அல்லது என் சைநியங்களையோ அழைத்துக்கொண்டு

சென்றாலும் என்ன செய்யமுடியும்? தேவர்களுக்கொப்பான வனும், போர் என்பதை இன்னு மறியாதவனுமான என் குழந் தையைக் கொடேன். சுந்தன், உபசுந்தன் என்றவர்களுடைய குமாரர்களன்றோ உமது யாகத்தைக் கெடுக்க எத்தனித்திருக்கி றார்கள்; அவர்கள் யுத்தத்தில் யமன் போன்றவர்கள்; பலத்தி லும், ஆயுதப்பயிர்ச்சியிலும் சிறந்தவர்கள். நான் ஒருபொழு தும் என் பிள்ளையை அனுப்பேன்; ஆனால் அவ்விருவரில் ஒருவனுடன் போர்புரிய நானும் என் சைநியமும் வருகின்றோம், அதற்கு நீர் எப்படியாவது இசையவேண்டும். நான் இரந்து கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார்.

விசுவாமித்திரர் கோபம் கொள்ளல்.

இவ்வாறு தசரதர் சொல்லச்சொல்ல விசுவாமித்திர மா முனிவருக்குக் கோபம் பொங்கி யாகத்தில் நன் றாக நெய் விடப்பட்டுத் தாவும் ஓமத்தீப்போ லக் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

---

## இருபத்தோராஞ்சருக்கம்:

### வசிஷ்டர் வாக்கியம்.

விசுவாமித்திரர் தமது கோபத்தை வெளியிடுதல்.

புத்திரவாஞ்சையால் தசரதர் இவ்விதமாய் வெகு மனோ வியாகுலத்துடன் குழறிக்கொண்டு சொன்ன சொல்லை விசுவாமித்திரர் கேட்டுக் கோபா வேசங்கொண்டு வேந்தரைப் பார்த்து "நான் கேட்டதைத் தப்பாமல் கொடுப்பதாய் முதலில் சொல்லிவிட்டு இப்பொழுது இப்படித் தவறிச் சொல்லுகிறது உமக்குத் தருமமன்று. இது இரகுவம்சத் தரசர்கள் கொண்ட நோன்புக்கே விரோதமான காரியம். இப்படிச் சொல்வது உமக் குத் தகுதியாகுமானால் நான் வந்தவழியே திரும்பிச்செல்லுவ றேன். சொன்னசொல் தவறின நீர்தாமே பந்துக்களோடு சுகமாக வாழும்" என்று கூறினர். அப்பொழுது அவருக்கு உண்

டான கோபத்தைப் பார்த்துப் பூமிமுழுவதும் நடுங்கிற்று; தேவர்கள் எல்லாரும் அஞ்சினார்கள். இப்படி உலக முழுதும் மிகவும் அஞ்சி நடுங்கியதை முக்காலங்களையுமறிந்த தைரியசாலியான வசிஷ்டமாமுனிவர் பார்த்துத் தசரதரைநோக்கி "மகாராஜாவே, நீரோ இக்ஷ்வாகு வமிசத்தில் பிறந்து இரண்டாவது தருமதேவதை போல விளக்குகின்றீர்; மனோதைரியத்தையும், நல்ல நோன்பையும் கைப்பற்றியிருக்கும் நீர் உமது குலாசாரத்தை இப்பொழுது விட்டுவிடுவது நியாயமன்று. நீர் தருமாத்துமா என்பது மூவுலகமும் பரவியிருக்கிறது; ஆகையால் உமது குலதருமத்தைக் கைப்பற்றும்; தருமம் தவறி நடப்பது உமக்கு நியாயமன்று. "இன்னபடி நடக்கிறேன்" என்று வாக்குக் கொடுத்தால் அதற்கேற்றபடி நடக்கவே வேண்டும். அப்படி நடவாத பக்ஷத்தில், செய்த தருமங்களெல்லாம் பலனில்லாதனவாம். ஆதலால் இராமனை அனுப்பும். அஸ்திர சாஸ்திர வித்தைகளில் இராமன் தேர்ந்தவனானாலும் இல்லை என்றாலும் விசுவாமித்திருடைய பாதுகாப்பிலிருக்கிறவரையில் அவனை ஒருவராலும் ஒன்றுஞ் செய்யமுடியாது; அக்கினி சக்கரம் அமிருதத்தைக் காப்பதுபோல விசுவாமித்திரர் இராமனைக் காக்கும்பொழுது அரக்கர்கள் அவனை என்ன செய்ய முடியும்?

இராமனை அனுப்பும்படி வசிஷ்டர் தசரதருக்குக் கூறல்.

"இம்முனிவரோ தருமதேவதையே உருவெடுத்து வந்ததுபோலிருக்கின்றார்; பராக்கிரமசாலிகளுக்குள் உத்தமர். புத்தியில் இவருக்கு மேற்பட்டவர் இவ்வுலகத்திலே இல்லை. தவத்திற்கு இவரே இருப்பிடம். எல்லாவித அஸ்திரசாஸ்திரங்களையும் இவர் நன்றாய்க் கற்றுணர்ந்ததுபோல ஒருவரும் இதுவரையில் இம் மூவுலகத்திலும் அறிந்ததில்லை; அறியப்போகிறதுமில்லை. தேவர், முனிவர், அசுரர், ராக்ஷஸர், கந்தருவர், யக்ஷர், கின்னரர், உரகர் முதலிய யாவரும் இவரறிந்த அஸ்திரங்களை அறியமாட்டார்கள். எல்லா அஸ்திரங்களும்

விசுவாமித்திருடைய யோக்கியதை.

பிருசாசுவ முனிவருடைய குமாரர்கள்; விசுவாமித்திரர் முன்பு அரசாண்டு வந்தகாலத்தில் அந்த அஸ்திரங்களையெல்லாம் பிருசாசுவர் விசுவாமித்திரருக்குக் கொடுத்தருள, அவர் அவற்றை இராஜ்யத்தைப்போலவே பரிபாலித்து வருகிறார். அந்தப் பிருசாசுவருடைய குமாரர்கள் தக்ஷருடைய குமாரிகளிடமிருந்து பிறந்தவர்கள்; அவர்கள் பலவகை உருவமும் அதிகபலமும் ஒளியும் ஜயமும் அமைந்தவர்கள். தக்ஷருடைய கன்னிகைகளான அழகிய ஜயை என்பவளும் ஸுப்பிரபை என்பவளும் அதிக ஒளி பொருந்திய நூறு அஸ்திர சஸ்திரங்களைப் பெற்றார்கள். முன்பு அசுர சேனையை நாசம்பண்ணும்பொருட்டு, அளவிடக்கூடாத வல்லமையுள்ளவர்களும் தங்களுக்கு இஷ்டமான உருவங் கொள்ளக்கூடியவர்களுமான ஐம்பது பிள்ளைகளை ஜயையென்பவள் பெற்றாள். பின்பு ஸுப்பிரபை என்பவளும் ஒருவராலும் தகையமுடியாதவர்களும் எங்கும் பழுதுபடாதவர்களும் வெகு பலசாலிகளும் ஸம்ஹாரர்கள் என்று பெயருள்ளவர்களுமான ஐம்பது பிள்ளைகளைப் பெற்றாள். இவ் விசுவாமித்திரர் அந்த அஸ்திரங்களையெல்லாம் அறிந்திருக்கின்றார். அவ்வளவேயன்றித் தாமே புதிதாக அநேக அஸ்திரங்களையும் உண்டாக்க வல்லவர். இவருக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை. ஆகையால், இராமன் அவருடன் புறப்பட்டுப் போவதில் கொஞ்சமேனும் உமக்கு அச்சம் வேண்டாம். அரக்கர்களைத் தாமாகவே கொல்ல விசுவாமித்திரரால் முடியும் என்பது உமக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கட்டும். இவர் எப்பொழுது உம்மை அடைந்து இராமனை யாசிப்பதெல்லாம் இராமனுடைய நன்மைக்காகவேயல்லது வேறன்று" என்று வசிஷ்டர் சொல்லத் தமது மனக்கலக்கம் நீங்கினவராய்த் தசரதர் அதிக சந்தோஷமடைந்து, விசுவாமித்திரருடன் தமது குமாரரைப் பயமில்லாமல் அனுப்பலாம் என்று நிச்சயித்தார்.

## இருபத்திரண்டாஞ்சருக்கம்:

### தசரதர் இராமலக்ஷ்மணர்களை அனுப்புதல்.

இராம லக்ஷ்மணர்களை விசுவாமித்திருடன் அனுப்புதல்.

இவ்வாறு வசிஷ்டர் சொல்லியதைக் கேட்டுத் தசரதர் வெகு சந்தோஷத்தோடு இராமரை லக்ஷ்மணருடன் தம்முன்னே அழைத்துவரக் கட்டளையிட்டார். அவர்கள் வந்ததும், தசரதரும் அவர் மனைவிகளும் அவர்களை உச்சிமோந்து அநேக ஆசீர்வாதஞ் செய்ய, புரோகிதரான வசிஷ்டமகாமுனிவரும் அக்குமாரர்களுக்கு மந்திரபூர்வமாகமங்கல வாழ்த்துக் கூறினர். அதன்பின், தசரதர் ஒருவிதமான கவலையுமில்லாமல் மனப்பூர்வமாய் அவ்விருவரையும் விசுவாமித்திரரிடம் ஒப்பித்தார்.

இராமலக்ஷ்மணருடன் முனிவர் புறப்படல்.

விசுவாமித்திரர் இராமரைக் கைப்பற்றியபோது நல்ல தென்றற்காற்றுத் தூசி யில்லாமல் வெகு சுகமாக வாசனையுடன் குளிர்ச்சியாய் வீசிற்று. ஆகாயத்திலிருந்து மிக்க பூமாரி பொழிந்தது; தேவதுந்துபி முழங்கிற்று. அவர் குழந்தைகளை யழைத்துக்கொண்டு புறப்படும்பொழுது சங்கமும் துந்துபி வாத்தியமும் முழங்கின. முதலில் விசுவாமித்திரர் நடந்தார். அவருக்குப் பின் கையில் வில்லைப் பிடித்துக்கொண்டு இராமர் சென்றார். அவருக்குப்பின் பக்கக்குடுமிகள் தரித்தவரும் விற்பிடித்தகையருமான லக்ஷ்மணர் போயினர். அம்பறாத்தூணிகளைக் கட்டி, கைகளில் விற்பிடித்து, தங்கள் தேககாந்தியால் பத்துதிசைகளையும் ஒளிவிளங்கச் செய்துகொண்டு, அவ்விருவரும் இரண்டு முத்தலை நாகங்கள்போல, அம்மகாத்துமாவான விசுவாமித்திர முனிவரைத் தொடர்ந்தார்கள். ஒளிநிரம்பிய அழகுள்ள சரீரத்துடன் அவ்விரண்டு இராஜ குமாரரும் போருக்கு வேண்டிய கருவிகள் பலவற்றை எடுத்துக்கொண்டு விசுவாமித்திரமுனிவரைத் தொடர்ந்தது, பிரமதேவனை அழகான

அசுவினி தேவர்கள் தொடர்ந்தது போலவும் சங்கரனைக் கந்தனும் விசாகனும் தொடர்ந்தது போலவு மிருந்தது.

அரையோஜனை தூரம் வழிநடந்து அவர்கள் சரயுநதியின் தென்கரை சேர்ந்தார்கள். அப்பொழுது விசுவாமித்திரர் அன்புடன் இராமரை அழைத்துப் பின் வருமாறு சொல்லலானார்:—"குழந்தாய், சீக்கிரம் ஆசமனம்பண்ணு. கால விளம்பஞ் செய்யவேண்டாம். எல்லா மந்திரங்களும் அடங்கிய பலை அதிபலை என்னும் இரண்டு வித்தைகளை நான் உனக்கு உபதேசிக்கிறேன். அவைகளை நீ பெற்றுக்கொள். உனக்கு அவைகளின் மகிமையால் களைப்புத்தோன்றாது; பிணி அணுகாது; உடம்பு வாடாது; நீ தூங்கினாலும் சோர்ந்திருந்தாலும் அரக்கர்களால் உனக்கு ஒருவித அபாயமும் உண்டாகாது; இவ்வுலகத்திலும் மற்றவுலகங்களிலும் உன் புஜபலத்துக்கு ஒப்பான வீரன் ஒருவனும் இருக்கமாட்டான். அவ்வாறே அழகிலும், சாமர்த்தியத்திலும் ஞானத்திலும் ஆராய்ந்து துணிதலிலும், வினாவுக்கேற்ற விடை கூறுதலிலும், நீ ஒப்பற்றவனென்று புகழ்பெறுவாய். இவ்விரண்டு வித்தைகளையும் நீ கற்றுக்கொண்டால் உனக்கு நிகர் ஒருவருமில்லை. பலை அதிபலை என்னும் இவ்விரண்டு வித்தைகள் தாம் எல்லா ஞானங்களுக்கும் தாய்கள். இவைகளை நீ ஜபித்தால் வழியில் உனக்குப் பசிதாகங்கள் இருக்கமாட்டா. இவைகளை உச்சரித்தால் ஒருவனும் உன்புகழுக்கு நிகராகமாட்டான். மகிமையுள்ள இவ்விரண்டு வித்தைகளும் பிரமனிடமிருந்து உண்டானவை. இவைகளை அடைய உன்னைத்தவிர வேறு ஒருவனுந் தக்கவனல்லன். உன்னிடத்தில் முன்னமே பலவகைக் குணங்களும் அமைந்திருந்தாலும், இவற்றையும் ஏற்றுக்கொள்; இவைகளினால் உனக்கு வெகு நன்மையுண்டு. உனக்கு உபதேசிக்கப்பட்டதனால், இந்த வித்தைகளும் விருத்தியடையட்டும்" என்று இவ்வாறு விசுவாமித்திரர்சொல்லலும், இராமர் விதிப்படி ஆசமனம் பண்ணி வெகு ஆசாரத்துடனும் சந்தோஷத்துடனும் அம்முனி

முனிவர் இராமருக்கு மந்திரங்களை உபதேசித்தல்.

வரிடமிருந்து அந்த வித்தைகளை உபதேசம் பெற்றுக்கொண் டார்.

*சரயுநதிக் கரையில் இரவைக் கழித்தல்.*

அந்த இலாபம் அவருக்குக் கிடைத்ததும் அவருடைய காந்தியானது சரத்காலத்தில் விசேஷமாகப் பிரகாசிக்கிற சூரியபகவானுடைய காந்திக்கொப்பாக விருந்தது. அதன்பின்பு அன்று சாயங் காலம் தமது குருவாகிய விசுவாமித்திரருக் குச் செய்யவேண்டிய வழிபாடுகளில் ஒன்றும்விடாது இராமர் செய்துமுடித்தார். பிறகு அம்மூவரும் அன்றிரவைச் சரயு நதிக்கரையிலே இனிமையாகக் கழித்தார்கள். நல்ல பஞ்சணை மெத்தையின்மீது படுத்துறங்கிப் பழகிய அவ்விரண்டு அரசி ளங் குமாரரும் அன்று தருப்பைப்புல்லாற் செய்யப்பட்ட பாயில் படுத்துக்கொண்டார்கள்; ஆயினும் அவர்கள் விசுவா மித்திரருடைய இனியவசனங்களினால் ஆனந்த மடைந்து அவ் விரவைச் சுகமாகவே கழித்தார்கள்.

---

## இருபத்துமூன்றாஞ்சருக்கம்:

---

### தாணுவாச்சிரம வாசம்.

*கங்கையும் சரயுவும் கூடுமிடத்தில் ஓர் ஆச்சிரமங் காணல்.*

இரவு கழிந்து பொழுது விடிந்தவுடனே தருப்பைப் படுக் கையில் படுத்துத் தூங்கும குழந்தைகளாகிய அந்தக் காகுத்தவமிசகுமாரரிருவரையும் விசு வாமித்திரர் வெகு அன்புடன் எழுப்புபவராய், "கௌஸல்யையினுடைய செல்வக்குமாரா, இராமா, மானிடசிங்கமே, எழுந்திரு; காலைச் சந்தியாகாலம் நெருங்கிற்று. தேவர்கள் கடமையும் தினக்கட மையும் சீக்கிரஞ் செய்து முடிக்கவேண்டும்" என்று சொன் னார். இங்ஙனம் முனிவர் வெகு கம்பீரமாகச் சொன்னதைக் கேட்ட இராம லக்ஷ்மணர்கள் எழுந்திருந்து ஸ்நானம் சந்தியா வந்தனம் முதலியவைகளை முடித்து ஜபங்களுக்குள் உயர்ந்த

தாகிய காயத்திரி ஜபத்தைச் செய்தார்கள். இப்படி நித்திய நியமங்களைச் செய்து முடித்தவுடன் அவர்கள் அந்தத் தபோநிதியாகிய முனிவரைத் தண்டனிட்டு அவ்விடம்விட்டுப் புறப்படுவதற்குத் தங்களால் ஒருவிதமான தாமதமுமில்லை என்று மகிழ்ச்சியோடு அறிவித்தார்கள். உடனே விசுவாமித்திரர் அவர்களுடன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். அம்மூவரும் சரயுநதிக் கரை வழியே போகும்போது அந்நதி கங்கையோடு கூடும் இடத்தை அடைந்து, அங்கே வெகு அழகான ஆச்சிரமம் ஒன்றைக் கண்டார்கள். அது அநேக ஆயிரவருஷகாலந் தவம்புரிந்து வெகு பரிசுத்தத்தை அடைந்திருக்கிற முனிவர்கள் வசிக்கும் ஆச்சிரமம். அந்தப் பரிசுத்தமான இடத்தைச் சிறுவர்கள் பார்த்தவுடன் விசுவாமித்திர மாமுனிவரை நோக்கி "பகவானே, இந்த ஆச்சிரமம் வெகு அழகாயிருக்கிறதே! இது யாருடையது? இதில் இப்பொழுது யார் வசிக்கின்றார்? இவைகளைப் பற்றி எங்களுக்குக் கேட்க ஆசையாயிருக்கின்றது. தயைசெய்து சொல்லவேண்டும்" என்றார்கள்.

தாணு ஆச்சிரமம்.

அவர்கள் சொன்னதைக் கேட்ட முனிவர் புன்னகை செய்து "இராமா, கேள், இது முன்பு இன்னாருடைய ஆச்சிரமம் என்பதைப்பற்றிச் சொல்லுகிறேன்: காமனென்று சொல்லப்படுகிற மன்மதன் முன்னொரு காலத்தில் யாவராலும் காணப்படும் வடிவமுடையவனாயிருந்தான். தாணுவாகிய சிவபிரான் ஒரு சமயத்தில் இவ்விடத்தில் வந்து யாதோ உத்தேசத்தால் தவம்புரிந்து கொண்டு தமது கணங்களுடனிருக்கும்பொழுது அவர் தவத்தை அந்த மூடன் கெடுக்க முயன்றான். அவர் காலாக்கினிருத்திரராதலால் தமது மூன்றாங் கண்ணைத் திறந்தார். உடனே காமன் தனது உருவமே இல்லாமல் நீறாயினான். அவர் கோபத்தால் காமன் தன் அங்கத்தை இழந்தபடியால் அன்று முதல் அவனுக்கு அநங்கன் என்று ஒருபெயர் உண்டாயிற்று. அவன் தன் அங்கத்தை இவ்விடத்தில் இழந்தபடியால் இந்த நாட்டுக்கு அங்கநாடு என்று பெயர் வந்தது. இந்த ஆச்சிரமம் சங்கரபக

வானுடையது. இங்கே தவம்புரிபவர்கள் எல்லாரும் பாபம் என்பது இன்னதென்றறியாத பரமாத்துமாக்கள் ; எப்பொழுதும் இடைவிடாது தவஞ் செய்பவர்கள். அப்பா இராமா, இந்தப் பரிசுத்தமான ஆச்சிரமத்திலே இன்றிரவை நாம் கழித்து நாளைக்கு நதியைத் தாண்டுவோம். இதுவோ இரண்டு புண்ணிய நதிகள் கலக்கும் பிரதேசமா யிருக்கின்றது. கால்கைகளைச் சுத்தஞ்செய்துகொண்டு ஆசமனஞ் செய்துவிட்டு ஆச்சிரமத்துக்குள் புகுவோம். அதிபரிசுத்தமான இவ்விடத்தில் நாமும் ஸ்நாநம், அநுஷ்டானம், மந்திரஜபம் முதலியவைகளை நடத்த வேண்டும் " என்றார்.

அவ்விடத்தில் மூவரும் தங்கியது.

இவர்கள் இவ்வாறு அங்குப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே அவ்வாச்சிரமத்தினுள்ளிருந்த ரிஷிகள் தங்களுடைய ஞானதிருஷ்டியால் வந்திருக்கின்றவர்கள் இன்னார் என்று ஒரு நொடியில் அறிந்து கொண்டு ஆனந்த மடைந்து விரைவாக எதிர்கொண்டு அருக்கியம் முதலிய உபசாரங்களை முதலில் விசுவாமித்திரருக்குச் செய்து, பின்பு இராஜ குமாரர்களையும் ஆராதித்தார்கள். விசுவாமித்திரர் அந்த முனிவர்களை யோகக்ஷேமம் விசாரித்த பின்பு, அவர்கள் அநேக கதைகள் கூறி, வந்தவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தார்கள். பின்பு முனிவர்களால் சாயங்கால நியமங்கள் நிறைவேற்றப்பட்டன. யாதொரு குறையுமில்லாமல் வெகு சௌக்கியமாய்ப் போஜனம் முதலியவைகளைப் பண்ணிவிட்டு அம்முனிவர்கள் கூட்டத்தில் தங்களுக்குத் தகுந்த இடத்தில் தசரதமகாராஜருடைய புதல்வர்கள் அன்றிரவைப் போக்கினார்கள். கதை சொல்லுவதில் வெகு சமர்த்தரான விசுவாமித்திரர் அக்குமாரர்களுடைய மனத்தைப் பற்பல கதைகளைச் சொல்லிக் களிக்கச்செய்தார்.

## இருபத்துநான்காஞ்சருக்கம்:

### தாடகையின் வனம் புகுதல்.

*கங்கையைக் கடக்க ஓடம் ஏறுதல்.*

பொழுது விடிந்தவுடன் அவ்வாச்சிரமத்தை விட்டு விட்டு இராமலக்ஷ்மணர்களும், விசுவாமித்திர மகா ரிஷியும் தங்கள் தங்கள் நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு நதிக் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்த ரிஷிகள் எல்லோரும் அவர்களுடன் வந்து நல்ல ஓடம் ஒன்றை வரவழைத்து விசுவாமித்திரரைப் பார்த்து "நீர் இராஜ குமாரர்களை முன்னிட்டுக்கொண்டு, ஓடமேறி, வழியை இனிது கடந்து செல்வீராக; காலதாமதம் வேண்டாம்" என்றார்கள். விசுவாமித்திரரும் "அப்படியே" என்று சொல்லி, வழிவிடவந்த ரிஷிகளை மரியாதைசெய்து அனுப்பிவிட்டு, கடலைநோக்கி ஓடும் அக்கங்கைநதியை அந்த இராஜகுமாரரிருவருடன் கடத்தற்கு ஓடத்தை ஓட்டக் கட்டளையிட்டார்.

*நதிசங்கமத்தின் ஒலி கேட்டல்.*

ஓடம் ஏறி நடுநதியில் அவர்கள் போகும்போது, அங்கே வெகு கம்பீரமாயும் மனோகரமாயும் நன்றாகக் கேட்கிற சத்தம் என்னவென்று இராமரும் லக்ஷ்மணரும் வெகு ஆவலுடன் விசுவாமித்திரரைக் கேட்டார்கள். முனிவர் அந்தச் சத்தத்தின் உண்மையைத் தெரிவிக்கத் தொடங்கி அவர்களைப் பார்த்து "கேளுங்கள், சொல்லுகிறேன். கைலாசமலையிலே பிரமதேவர் தம்மனத்தாலே நினைத்து உண்டாக்கின மானஸ சரசு என்று ஒரு பெரிய மடுவிருக்கிறது, அந்த மானஸ சரசிலிருந்துதான் நமது அயோத்திக்கருகில் ஓடும் சரயுநதி உற்பத்தியாகின்றது. அந்த நதி கங்கையுடன் கலக்கும்போது இரண்டு நீரும் ஒன்றுடன் ஒன்று மோதலால் இந்தச் சத்தம் உண்டாகின்றது. அவ்விருநதிகளையுங் குறித்து மனப்பூர்வமாக நமஸ்காரஞ் செய்க" என்றார். அப்படி அவர் சொல்லக் கேட்ட அந்த இராஜகுமாரர்கள் உடனே வெகு ஆனந்தத்தோ

டும் வணக்கத்தோடும் நமஸ்காரம்பண்ணி, கங்கையைக் கடந்து தென்கரை சேர்ந்து அப்பால் நடக்க ஆரம்பித்தார்கள். அவர்களெதிரில் வெகு விசாலமாயும் பயங்கரமாயும் ஜன ஸஞ்சாரமில்லாத ஓர் அரணியம் காணப்பட்டது. அதைப்பார்த்தவுடன் இராமர், முனிவரை நோக்கி "இவ்வனத்தின் பெயர் என்ன? எங்கே பார்த்தாலும் 'கொய்' என்று கத்திக் கொண்டிருக்குஞ் சிள்வண்டுகளாலும், பயங்கரமாய் ஒலித்துக் கொண்டிருக்குங் கொடிய மிருகங்களாலும், கோரமாகக் கூவும் பற்பல துஷ்டப் பறவைகளாலும் நிரம்பி, எவ்விடத்திலும் பன்றியும், புலியும், யானையும், சிங்கமும் செய்யும் கர்ச்சனை எப்பொழுதும் கேட்டுக்கொண்டேயிருக்கிறதே; எங்கே திரும்பினும் அரசும், புரசும், வில்வமும், தேக்கும், பாதிரியும், இலந்தையும், ஆகாயத்தை அளாவி நிற்கின்றனவே!" என்றார்.

*பயங்கரமான ஓர் அரணியங் காணல்.*

உடனே விசுவாமித்திரமுனிவர் இராமரை நோக்கி "கேள் குழந்தாய், இக்கொடியவனம் இன்னாருடையது என்பதைச் சொல்லுகிறேன். முற்காலத்தில் தேவர்களால் உண்டாக்கப்பட்ட வெகு சுபிக்ஷமான மலதம், கருசம் என்ற இரண்டு நாடுகள் இவ்விடத்திலிருந்தன. முன்பு இந்திரன் விருத்திராசுரனை வதை செய்தவுடன், அந்த இந்திரனைப் பிரமகத்தி பிடித்துக்கொண்டு பாவத்தாலும், பசியாலும் பீடிக்கத்தொடங்கிற்று. அதைக் கண்டு தேவர்களும் முனிவர்களும் பரிதபித்து அவனை இவ்விடத்தில் கொண்டுவந்து வைத்துக் கங்காதி தீர்த்தங்களைக், குடங் குடமாக மந்திரம் ஓதி அவன் தலையில் சொரிந்து அவனுடைய பாபத்தை இந்நாடுகளில் கழித்துவிட்டார்கள். இப்பூமியில் இந்திரன் இவ்வாறு தனது பாவத்தையும் பசியையும் தன் சரீரத்திலிருந்து நீக்கி வெகு சந்தோஷமடைந்து "என் பாவமும் பசியும் இங்கு நீங்கினபடியால் இந்நாடுகளுக்கு மலதம், கருசம் என்று பெயர் உண்டாகுக. இந்நாடுகள் வெகு செழிப்பாக ஒரு குறைவும் இல்லாமல் விளங்குக" என்று

*மலத கருச நாடுகள்.*

ஆசீர்வாதம் பண்ணினான். தேவர்களும் " அப்படியே ஆகுக " என்று ஆசீர்வதித்தார்கள். அதனால் இந்தத் தேசங்கள் வெகு காலம் மிக்க செழிப்புடன் விளங்கித் தனதானியங்கள் நிறைந்து அதிக புஷ்டியாயிருந்தன.

தாடகை வனம்.

பின்பு ஒரு காலத்தில் இவ்விடத்தில் ஒரு யக்ஷிணி பிறந்தாள். அவள் ஆயிரம் யானை பலமுள்ளவள். நினைத்த உருவங் கொள்ள அவளுக்கு வல்லமையுண்டு. அவள் பெயர் தாடகை. அவள் சுந்தன் என்ற அரக்கனை மணந்தாள். பலத்தில் இந்திரனுக்கு ஒப்பான மாரீசன் என்னும் அரக்கன் அவ்விருவருடைய குமாரன். கடைசல் பிடித்தவை போன்ற அவனுடைய கைகள் மிகப்பருத்தவை; அவன் வெகு பலம் உள்ளவன்; அவனுடைய முகம் வெகு பெரிதானது; தேகம் மிகப்பருத்தது. இவ்விதம் பயங்கரமான உருவத்துடன் அவன் தினந்தோறும் மனிதர்களைப் பயமுறுத்திக் கொண்டேயிருக்கின்றான். தாடகை இந்தப் பிரதேசத்தை நாடோறும் நாசஞ்செய்துகொண்டேயிருக்கின்றாள். அவளிப்பொழுது நமக்கு அரையோஜனை தூரத்தில் நமது வழியை மறைக்கப்போகிறாள். நாமும் அவளிருக்கும் காட்டு வழியாகத்தான் அவசியம் போகவேண்டும். அந்தத் தீயசெய்கையுள்ள ராக்ஷசியை உன் புஜபலத்தால் நீதான் வதைக்கவேண்டும். இதுதான் நான் உனக்கு முதலிலிடும் கட்டளை. இதைச் செய்து இந்த அரணியத்தின் பயத்தை நீ முதலில் வேரோடு களையவேண்டும். அவள் இங்கு இருக்கிறாள் என்ற பயத்தால் இவ்விடத்தில் ஒரு பிராணியும் வருகிறதில்லை. அவள் கொடுமை இதுவரையில் ஒரு நிமிஷமாவது குறையவேயில்லை. நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன் " என்றார்.

## இருபத்தைந்தாஞ்சருக்கம்:

### தாடகை வதம்.

சுகேது.

விசுவாமித்திர முனிவர் இவ்வாறு சொன்னவைகளைக் கேட்டுஇராமர் வெகு வணக்கத்துடன் "முனி சிரேஷ்டரே, யக்ஷர்களுக்கு அதிக • பலம் இல்லையென்றன்றோ நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தப் பெண்ணுக்குமட்டும் எவ்வாறு ஆயிரம் யானைகளுடைய பலம் வந்தது" என்று வினவினர். இவ்வண்ணம் இராமர் தம்மைக் கேட்க, விசுவாமித்திரர் "அவளுக்கு வரத்தினல் இவ்வளவு ஆச்சரியமான பலம் வந்தது. அதைச் சற்று விவரித்துச் சொல்லுகின்றேன், கேள் : முற்காலத்தில் வெகு பல பராக்கிரமசாலியான சுகேது என்றொரு பெரிய யக்ஷன் இருந்தான். அவனுக்குப் புத்திரர்கள் இல்லாமலிருந்ததனல் அவன் வெகு ஆசாரசீலனுயிருந்து கடுமையான தவம் புரிந்தான். அவன் செய்த தவத்தைக் கண்டு பிரமதேவர் மிக்க சந்தோஷமடைந்து அவனுக்குத் தாடகை என்ற ஒரு பெண்ணைக்கொடுத்து அவளுக்கு ஆயிர யானைகளின் பலத்தையுங் கொடுத்தார். இவ்வளவு செய்தவர் அந்தயக்ஷனுக்குப் புத்திரப்பேற்றைக் கொடுக்கவில்லை.

தாடகைக்கு அகஸ்தியரிட்ட சாபம்.

அவள் நாளுக்குநாள் நன்றாக வளர்ந்து யௌவனபருவமடைந்தாள். அவளைச் சுகேதுவானவன் ஜர்ஜன் என்ற யக்ஷனுடைய குமாரனை சுந்தனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான். விவாகம் நடந்த சிலநாளைக்குப் பின்பு அவளுக்கு மாரீசன் என்ற வெகு பலவானுன ஒருபிள்ளை பிறந்தான். அவன் ஒரு சாபவிசேஷத்தால் ராக்ஷசனுனன். சுந்தன் என்பவன் அகஸ்தியரால் சபிக்கப்பட் டிறந்தான். அதன்பிறகு தாடகையும் அவள் மகனும் இந்த மகாரிஷியை உபத்திரவம்பண்ண ஆரம்பித்தார்கள். தாடகை ஒரு பெரிய அட்டகாசம் பண்ணிக் கொண்டு அகஸ்தியமாமுனிவரை விழுங்க ஓடிவந்தாள். அவள்

அவ்வாறு ஓடிவருவதைக் கண்டு அகஸ்தியர் மிக்க கோபங் கொண்டு அவளையும், அவள்மகனையும் சபிக்கத்தொடங்கி, மாரீசனைப்பார்த்து "நீ ராக்ஷசனாகக்கடவாய்" என்றார். தாடகையைப்பார்த்து "மனிதனைப் புசிக்க ஆசைகொண்டு யக்ஷிணி உருவத்துடன் நீ இவ்வளவு உபத்திரவம் பண்ணுகிறபடியால் உன் நிஜரூபத்தை விட்டு வெகு பயங்கரமான உருக்கொள்ளக் கடவாய்" என்றார்.

தாடகையை வதைக்க இராமருக்கு முனிவர் கட்டளையிடுதல்.

அவளும் அகஸ்தியர் சாபத்தால் அப்படியே ஆகி வெகு கோபங் கொண்டவளாய் அவரை ஒன்றுஞ் செய்ய முடியாமல் அவர் இங்கிருந்தபடியால் இக்காட்டை உபத்திரவப் படுத்திக்கொண்டிருக்கின்றாள். ஓ இராமா, மிகவும் பயங்கரையான இந்தத் துஷ்ட யக்ஷிணியை நீ வதை செய்யவேண்டும். அப்பொழுதுதான் பசுக்களுக்கும் பிராமணர்களுக்கும் நன்மையுண்டாகும். சாபத்தாற் பற்றப்பட்டிருக்கும் இந்த யக்ஷிணியை வதைசெய்கிறவர் உன்னைத் தவிர இம்மூவுலகத்திலும் ஒருவருமில்லை. நீ தாடகையைப் பெண்பால் என்று கருதி அவளை வதைப்பதில் அருவருப்பு வைக்கக்கூடாது. பெண்பாலைக் கொல்லுவது வீரர்களுக்கு அநீதி என்றாலும், நீ இராஜகுமாரனாகையால் நான்கு சாதியார்களுடைய க்ஷேமத்துக்காக இக்காரியத்தைச்செய்தே தீர்க்கவேண்டும். ஏதாவது ஒருகாரியஞ்செய்வதனால் ஜனங்களுக்கு நன்மை உண்டாகுமானால் அக்காரியம் கொஞ்சம் கெடுதலாயிருந்தாலும், சிறிது நியாயமும் தருமமும் இல்லாமலிருந்தாலும் அதை அரசன் அவசியமாகச் செய்யவேண்டும் என்பது முறை. உலகத்தைப் பாதுகாத்தலையே நோன்பாகக் கொண்ட அரசர்களுக்கு இதுதான் குலாசாரம். ஆகையால் இந்த கொடிய அரக்கியை நீ கொன்றே தீர்க்கவேண்டும். ஏனெனில் இவளிடம் ஒருவித நீதியுமில்லை. இப்படி வேறு யாராவது செய்ததுண்டா என்று நீ கேட்கலாம். முன்னொருகாலத்தில் இவ்வுலகத்தை நாசஞ்செய்ய யத்தனித்த விரோசனனுடைய பெண்ணாகிய மந்த்ரையை இந்திரன் பெண்

என்று பாராமல் கொன்றான். அன்றியும் முன்னொருகாலத்தில் இவ்வுலகத்தில் இந்திரனில்லாமல் தொலைத்துவிட வேண்டுமென்று யத்தனித்த பிருகுவின் மனைவியும் சுக்கிரனுடைய தாயுமாகிய கியாதி என்பவளை ஸ்ரீ மகாவிஷ்ணுவே வதைத்தார். இன்னும்,பல சிறந்த இராஜகுமாரர்களும் துஷ்டப்பெண்களை வதை செய்திருக்கிறார்கள் ” என்றார்.

---

## இருபத்தாறுஞ்சருக்கம் :

---

### தாடகை வதம்.

இவ்விதமாக விசுவாமித்திரர் தைரியமாய்ச் சொன்னதைக் கேட்டு இராமர் தமது இருகரங்களையுங் கூப்பிக்கொண்டு முனிவரைப் பார்த்து ‘‘ எனது தந்தையார் இட்ட கட்டளையின்மேல் நான் வைத்திருக்கிற விசுவாசத்தாலும், கௌரவத்தாலும், இக்கட்டளை கௌசிகரிடம் கட்டளை என்பதாலும் நீங்கள் என்ன சொன்னாலும் விசாரியாமலே செய்யக் காத்திருக்கிறேன். அயோத்தியில் நாம் புறப்படும்பொழுது பல பெரியோர்கள் முன்னிலையில் என்னிடம் என் தந்தையாராகிய தசரத மகாராஜர் ‘விசுவாமித்திர மாமுனிவர் என்ன சொல்லுகிறாரோ அது உன்னால் அவசியம் செய்யப்படவேண்டும்’ என்று கட்டளையிட்டிருக்கிறார். அது தள்ளத்தக்கதன்று. ஆகையால் நான் என் தந்தை சொற்படி தங்கள் கட்டளையை மேற்கொண்டு தாடகையை வதைக்கிறேன்; பசுக்களுக்கும், பிராமணர்களுக்கும், இந்த நாட்டுக்கும் வெகுவித நன்மை யுண்டாகும்பொருட்டுத் தருமர்த்துமாவாகிய உமது சொற்படி நடக்கச் சித்தனாயிருக்கிறேன் ’’ என்றார்.

இராமர் தாடகை வதத்திற்குச் சம்மதித்தல்.

இப்படிச் சொல்லி முடித்து இராமர் தமது கையால் வில்லின் மத்தியை உறுதியாகப் பற்றி நன்றாக நாணேற்றி நாணைத்

தாடகையைக் காணல்.

தெறித்தார். அதிலிருந்து உண்டான ஒலி பத்துத் திக்குகளிலும் பரவி அத்தாடகையி னது காட்டில் வசித்துக் கொண்டிருந்த ஒவ்வொரு பிராணியின் மனத்திலும் பயத்தை யுண்டாக்கிற்று. தாடகையும் அவ்வொலியைக் கேட்டு திகைத்து வெகு கோபங் கொண்டு சத்தமுண்டான திக்கை நோக்கி ஓடிவந்தாள். சீறிக் கொண்டு கோரமான ரூபத்துடனும் முகத்துடனும் வெகு நெடியவளாய்த் தாவிக்கொண்டு வரும் அந்த ராக்ஷஸியை ராமர் பார்த்து "அப்பா, லக்ஷ்மணா, பார்ப்பவர்கள் மனதில் அச்சத்தையுண்டாக்கும் இந்த யக்ஷிணியின் குரூரமான உருவத்தைச் சற்று நிதானித்துப் பார். கொஞ்சம் அதைரிய நெஞ்சமுள்ள வர்கள் இவளைக் கண்டமாத்திரத்தில் மனமழிந்திடுவார்கள். மாயாபலமுள்ள இவளுடைய மூக்கையும், காதுகளையும் நான் ஒரு நொடியில் சேதிக்கிறேன் பார்! என்ன என்றாலும் பெண் பாலாகையால் இவளைக் கொல்ல என் மனம் வெட்கப்படு கிறது. ஆனாலும் இவள் பராக்கிரமத்தையும் வேகத்தையும் இப்பொழுதே வாங்கிவிடவேண்டும் என்று எனக்குத் தோன்று கிறது" என்றார்.

இவ்வாறு இராமர் தம் தம்பியினிடம் சொல்லிக் கொண்டி ருக்கும் பொழுதே தாடகையானவள் கோபாவேசங் கொண்டு

தாடகை யுத்தம்.

மேகம்போல் கர்ச்சித்து அட்டகாசம் பண்ணிக் கைகளை உயர எடுத்துக்கொண்டு இராமரை நோக்கி அவரை அடிக்க வெகு சமீபத்தில் வந்துவிட்டாள். அப்படி வந்த தாடகையைப் பிரமரிஷியான விசுவாமித்திரர் "ஹூம்" என்று அதட்டிவிட்டு, "இரகுவம் சத்தில் பிறந்த இவ்விரண்டு இராஜகுமாரர்களுக்கும் க்ஷேம முண்டாகக்கடவது; இவர்கள் வெற்றிபெறக்கடவர்" என்று ஆசீர்வாதம் பண்ணினார். இதற்குள் தாடகையும் புழுதியை மிகுதியாய் வாரி இறைத்து ஒரு நிமிஷத்தில் அவ்விரு இராஜ குமாரர்களும் இருந்த இடமே புலப்படாதபடி செய்தாள். அதன் பிறகு அவள் அவர்கள் கண்களுக்குத் தோன்றாமல் மாயையில்

மறைந்து நின்றுகொண்டு மலைகளையும், குன்றுகளையும் பிடுங்கி அவர்கள் மேல் எறிந்தாள். இராமர் மிகு கோபங்கொண்டு தமது வில்லினின்றும் பாணங்களை மாரிபோலப் பொழிந்து அத்தனை மலைகளையும், குன்றுகளையும் பொடிப் பொடியாக்கி அவளிருக்கைகளையும் பாணங்களால் துணித்தெறிந்தார். கைகள் துணியுண்டு களைத்துச் சமீபத்தில் கர்ச்சித்துக்கொண்டு நின்ற தாடகையை லக்ஷ்மணர் பார்த்து தாங்கக்கூடாத கோபமடைந்து அவள் மூக்கையும், காதுகளையும் துணித்தெறிந்தார். அவள் வெகு மாயைவல்லவளாகையால் உடனே வேண்டியபடி அநேகவித உருவங்கொண்டு ஆகாயத்தில் மறைந்து நின்று மாயையால் மயக்குபவள்போலப் பலவிதமாக இராசகுமாரர்களோடு மீட்டும் போர்செய்ய ஆரம்பித்து, கல்மழை பொழிந்துகொண்டு வெகு பயங்கரமாய்ப் போர் புரிந்தாள்.

தாடகைவதம்.

இப்படி அவள் செய்ததைப் பார்த்து, விசுவாமித்திரர் இராமரை நோக்கி "இராஜகுமாரா, இவள் பெண்பால், கொல்லலாகாது என்ற அருவருப்பை நீ விட்டுவிடு. இவளோ மிக்க பாவமுடையவள். எப்பொழுதும் தீமையையே செய்துகொண்டிருக்கிறவள். யாகங்களுக்குண்டாகும் இடையூறுகளுக்கெல்லாம் மூலம் இந்த யக்ஷிணிதான். இவளுக்கு மாயையின் பலம் வெகு அதிகம். பொழுது போகுமுன் இவளைச் சீக்கிரமாகக் கொல்லு. ராக்ஷசர்களுக்குச் சாயங்கால சமயத்தில் பலம் அதிகமாய்விடும்" என்றார். முனிவர் சொன்னதைக்கேட்டதும் இராமர், கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து நின்று மலைகளை எடுத்து எறிந்துகொண்டிருக்கும் அவளைப் பிடித்துவரும்படி 'சப்தவேதி' என்னும் பாணத்தைப் பிரயோகித்தார். அந்தப்பாணம், அவள்மேல் விழுந்து அவளை வலைபோட்டுப் பிடிப்பதுபோல் பிடித்திழுத்தது. அவள் மிகவும் சினங்கொண்டு இராமரையும், லக்ஷ்மணரையும் ஒரே அறையில் அழிக்கக் கருதி இடிபிடிப்பதுபோல் கர்ச்சித்துக்கொண்டு ஓடிவரும்பொழுது நேராக அவள் மார்பைக்குறித்து

இராமர் ஒரு பாணம் விடுத்தார். அவளும் பூமியில்விழுந்து மாண்டாள்.

தேவர்கள் புகழ்தல்.

அதைப்பார்த்துத் தேவேந்திரன், தேவர்கள் கூட்டத்துடன் ஓடி வந்து "வெகு நன்றாயிற்று; வெகு நன்றாயிற்று" என்று இராமரைப் புகழ்ந்தான். விசுவாமித்திரரைப் பார்த்து, "கௌசிகமா முனிவரே, நல்ல காரியஞ் செய்தீர். எல்லாத் தேவர்களும் சந்தோஷித்தார்கள். பிருசாசுவருடைய புதல்வர்களாகப் பிறந்தனவும் ஒப்பற்ற பராக்கிரம மமைந்தனவும் தவத்தின் பலத்தால் வளர்க்கப்பட்டனவுமான அஸ்திரங்களின் வித்தையை இராமருக்குச் சீக்கிரம் நீர் உபதேசிக்கவேண்டும். உம்மிடத்திலிருந்து அவைகளை வாங்கிக்கொள்ள அவருக்கு யோக்கியதை யிருக்கிறது. உம்மை அநுசரிப்பதில் உறுதியுள்ளவர் இராமர். தேவ காரியத்துக்காகவே இராமர் அவதாரஞ் செய்திருக்கிறார்" என்று சொல்லி, விசுவாமித்திரரைப் புகழ்ந்துவிட்டு மகிழ்ச்சியோடு எல்லாத் தேவர்களும் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சென்றார்கள். அதற்குள் பகற்பொழுதும் சென்றது. இராமர் செய்த பராக்கிரமமான காரியத்தைப் பார்த்து விசுவாமித்திரர் ஆனந்தமடைந்து இராமரை உச்சிமோந்து "அப்பா, என் இராமா, நாம் இன்றிரவு இங்கேயே வசிப்போம். நாளைக்காலையில் நமது ஆச்சிரமம் போவோம்" என்றார்

தாடகை வனத்தில் அவர் வசித்தல்.

அவ்வாறே அன்றிரவை அம்மூவரும் தாடகை வனத்திலேயே சுகமாகக் கழித்தார்கள். அப்பொழுது முதல் அவ்வனத்தில் உபத்திரவம் சிறிது மில்லாமல் நீங்கிவிட்டபடியால் அது குபேரனுடைய சைத்திரரதமென்ற உத்தியானவனம் போல் அழகியதாய் விளங்கிற்று. இவ்வாறு இராமர் அந்தத் தாடகையைக் கொன்றதற்காகத் தேவர்களும், சித்தர்களும் புகழ்ந்து கொண்டாட, இராம லக்ஷ்மணர் விசுவாமித்திர

மாமுனிவரோடு அன்றிரவு அவ்வாரணியத்திலேயே வசித்தார்கள். இரவுகழிந்து பொழுது விடிந்தவுடன் முனிவரும் குமாரர்களை நித்திரையிலிருந்து எழுப்பினர்.

## இருபத்தேழாஞ்சருக்கம் :

### விசுவாமித்திரர் அஸ்திரங் கொடுத்தல்.

அஸ்திரங்களின் பெயர்.

அவ்விரவுகழிந்ததும் மிக்க கீர்த்தி பெற்ற விசுவாமித்திரர் புன்னகையுடன் இராமரைப் பார்த்து வெகு இனிமையாகப் பின்வருமாறு சொல்லலுற்றார் :—“ பெருங் கீர்த்தி பெற்ற அரசகுமாரனே, நீ செய்த காரியங்களால் நான் வெகு சந்தோஷமடைந்திருக்கிறேன். உனக்கு எக்காலங்களிலேயும் க்ஷேமமுண்டாவதாக. என் மனத்திலுண்டான சந்தோஷத்தினால் நான் உனக்கு அநேக அஸ்திரங்களை உபதேசஞ் செய்கிறேன் உனக்குச் சத்துருக்களாக அசுரர்கள், கந்தருவர்கள், உரகர்கள் இவர்களுடன் தேவர்கள் சேர்ந்துவந்து போரில் உன்னை எதிர்த்தாலும் நீ அவர்களையெல்லாம் அடக்கி வெற்றிகொள்வாய். அவ்விதமான தேவாஸ்திரங்கள் எல்லாவற்றையும் நான் உனக்குக் கொடுக்கின்றேன். அவைகளை அடைந்து நீ க்ஷேமம் அடைவாய். தண்டசக்கரம், தருமசக்கரம், காலசக்கரம என்ற உயர்ந்த சக்கரங்களை நான் உனக்குக் கொடுக்கின்றேன். அவ்வாறே விஷ்ணுசக்கரம் என்ற கொடிய சக்கரம், இந்திராஸ்திரம், வச்சிராஸ்திரம, சிவசூலம், பிரமசிரம்என்ற அஸ்திரம், ஐஷீகாஸ்திரம், மிக உயர்ந்ததான பிரமாஸ்திரம் இவைகளையெல்லாம் நான் உனக்குத் தருகின்றேன்.

புருஷ சிங்கமே, வெகு கொடியவையாகிய மோதகீ, சிகரீ என்ற பெயருள்ள இரண்டு கதைகளை நான் உனக்குக் கொடுக்கின்றேன். இராமா, தருமபாசம், காலபாசம், வருணபாசம், வெகு உயர்ந்ததான வருணாஸ்திரம் இவைகளையும் நான் உனக்

குக் கொடுக்கின்றேன். இராகவா, சுஷ்காசநி, ஆர்த்ராசநி என்ற இரண்டு அசநி அஸ்திரங்கள், பிநாகாஸ்திரம், நாராயணாஸ்திரம், பிரியமான ஆக்கிநேயாஸ்திரம்; சிகராஸ்திரம், முக்கியமான வாயவியாஸ்திரம், ஹயசிரஸ் என்ற அஸ்திரம் கிரௌஞ்சம் என்ற அஸ்திரம், விஷ்ணுசக்தி, ருத்திரசக்தி என்ற இருசக்தி (சூலங்கள்) இவைகளையெல்லாம் நான் உனக்குக் கொடுக்கின்றேன். அன்றியும் அசுரர்கள் உபயோகிக்கின்ற அஸ்திரங்களான கங்காளம், பயங்கரமான முஸலம், காபாலம், கங்கணம் இவ்விதமான எல்லா அஸ்திரங்களையும் நான் உனக்குக் கொடுக்கின்றேன். வித்தியாதராஸ்திரம், நந்தனம் என்று பெயர் அமைந்த உயர்ந்த வாளாயுதம் இவைகளை எல்லாம் நான் உனக்குக் கொடுக்கின்றேன். காந்தருவம், மாநவம், பிரஸ்வாபனம், பிரசமனம், சௌரம் என்ற அஸ்திரங்களையும் கொடுக்கின்றேன். தர்ப்பணம், சோஷணம், ஸந்தாபநம், விலாபநம் என்ற அஸ்திரங்களையும் மன்மதனுக்குப் பிரியமான மதநம் என்ற அஸ்திரத்தையும் நான் உனக்குக் கொடுக்கின்றேன். மோகநம் என்ற பைசாசாஸ்திரத்தையும நான் உனக்குத் தருகின்றேன். பெரும்புகழ்பெற்ற இராஜ சிங்கமே, இவைகளையெல்லாம் நீ என்னிடமிருந்து பெற்றுக்கொள். தாமஸம், ஸௌமநம், ஸம்வர்த்தம், மௌஸலம், சத்தியம், மாயாதரம், என்ற உயர்ந்த அஸ்திரங்கள், சத்துருக்கள் தேஜசுகளை இழுக்கும் பயங்கரமான தேஜப்பிரபம் என்ற அஸ்திரம், சிசிரம் என்று பெயருள்ள ஸோமாஸ்திரம், சுதாமநம் என்ற துவஷ்டாவின் அஸ்திரம், சீதேஷு என்று பெயருள்ள வெகு கொடியதான மாநவாஸ்திரம் இவைகளையெல்லாம் நான் உனக்குத் தருகின்றேன். புஜபராக்கிரமமமைந்த இராமா, இவ்வஸ்திரங்கள் யாவையும் தங்களுக்கிஷ்டமான உருவங்கொள்ள வல்லமையுள்ளவை; வெகுபலமுள்ளவை. சடிதியில் நீ இவைகளை என்னிடமிருந்து பெற்றுக்கொள்" என்று சொல்லி விசுவாமித்திரர் வெகு ஆசாரசீலராய்க் கிழக்கு முகமாயிருந்துகொண்டு விதிப்பிரகாரம் இராமருக்கு எல்லா அஸ்திரங்களையும் அன்போடு உபதேசித்துக் கொடுத்தார்.

முனிவருடைய அருளால் இராமர், தேவர்களும் அடையாத அஸ்திரலாபங்களை அடைந்தார். விசுவாமித்திரர் ஒவ்வொரு அஸ்திரத்தையும் உத்தேசித்து மந்திரம் ஓதும்போது அவை ஒவ்வொன்றும் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு மகிழ்ச்சியோடு இராமர் முன்வந்து நின்று "நாங்களெல்லாம் உமது அடிமைகள்; எங்களால் உமக்கு என்ன ஆகவேண்டுமோ அதை நிறைவேற்றக் காத்துக்கொண்டிருக்கிறோம்" என்றன. அவைகளையெல்லாம் இராமர் கையால் தொட்டு வெகுசந்தோஷத்துடன் தம்வசமாக்கிக்கொண்டு "உங்களுக்கெல்லாம் நமஸ்காரம். நீங்கள் உங்களிஷ்டப்படி போய் வரலாம். நான் எந்தவேளையில் உங்களை நினைப்பேனோ அப்பொழுது நீங்கள் எல்லோரும் என்னிடம்வந்து சேருங்கள் என்றார். அவைகளும் ஆஜ்ஞையைப் பெற்றுக்கொண்டு மறைந்துவிட்டன. இராமரும் தமக்குக் கிடைத்த பாக்கியத்தைக் கண்டு வெகு சந்தோஷமடைந்து தமக்கு இவ்வளவு உபகாரஞ் செய்த விசுவாமித்திரரை வணங்கித் தாடகைவனத்தை விட்டுப் புறப்படச் சித்தராக விருந்தார்.

இராமர் அஸ்திரம் பெறுதல்.

---

## இருபத்தெட்டாஞ்சருக்கம்:

---

### இராமர் ஸம்ஹார மந்திரம் பெறுதல்.

அஸ்திரங்களை அவ்வாறு விசுவாமித்திரரிடமிருந்து அடைந்த பிறகு வெகு சந்தோஷமாய்த் தமது முகம்விளங்க இராமர் வழிநடக்கும் பொழுதே முனிவரை நோக்கி "முனிபுங்கவரே, நான் இன்று அடைந்த பாக்கியமே பாக்கியம். தேவர்கள்கூட இனி என்னை வெல்லொணாது. விடுத்த அஸ்திரங்களை மறுபடி இழுத்துக்கொள்ளும் வித்தையையும் கற்றுக்கொடுக்கவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, வெகு பரிசுத்தரான விசுவாமித்திர முனிவர் அவருக்கு ஸம்ஹார வித்தை முழுவதையும் கற்றுக்கொடுத்தார்.

இராமருக்கு ஸம்ஹார வித்தையை உபதேசித்தல்.

ஸம்ஹார மந்திரங்களின் பெயர்.

"ஸத்தியவத், ஸத்தியகீர்த்தி, த்ருஷ்டம், ரபஸம்; ப்ரதிஹாரதரம், பராங்முகம், அவாங்முகம், லக்ஷாக்ஷ விஷமங்கள், த்ருடநாபம், சுநாபம், தசாக்ஷம், சதவக்திரம், தசசீர்ஷம், சதோதரம், பதுமநாபம், மகாநாபம், துந்துநாபம், சுநாபம், ஜ்யோதிஷம், கிருசநம், நைராச்யம், விமலம், யோகந்தரம், ஹரித்ரம் என்ற அசுராஸ்திரங்களைச் சங்காரம்பண்ணும் மந்திரங்களிரண்டு, ஸார்ச்சிமாலீ, த்ருதிர்மாலீ, வ்ருத்திமாந், ருசிரம், பித்ரியம், ஸௌமநஸம், விதூதம், மகரம், கரவீரகரம், தநம், தாந்யம், காமரூபம், காமருசி, மோகம், ஆவரணம், பிருசாசுவமுனிவரிடமிருந்து தோன்றிய ஜிரும்பகம், ஸர்வநாபம், ஸந்தாநம், வரணம் என்று சொல்லப்படுகின்ற மந்திரங்கள், இவைகளை யெல்லாம் நான் உனக்கு உபதேசிக்கின்றேன். இவையெல்லாம், வேண்டியவடிவங்கொள்ள வல்லவையாய் விளங்குபவை. இவற்றை ஏற்றுக்கொள். உனக்கு க்ஷேமம் உண்டாகக் கடவது. இம்மந்திரங்களைப் பெற்றுக்கொள்ள நீதான் தகுந்த பாத்ரம்" என்று விசுவாமித்திரர் சொல்லினர்.

இராமரும் தாமடைந்த சந்தோஷத்தின் குறி தமது முகத்தில் விளங்க "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லிப் பெற்றுக்கொண்டார்.

அஸ்திரங்கள் பிரசன்னமாகுதல்.

அஸ்திரங்கள் யாவும் வந்து நின்றன. சில கொழுந்துவிட்டெரியும் தீப்போல் விளங்கின. சில அக்கினியிலிருந்து உண்டாகும் புகை நிறமாகவிருந்தன. சில சந்திர சூரியர்கள்போல் பிரகாசித்தன. எல்லா அஸ்திரக் கூட்டங்களும் இராமரை வணங்கி "இதோ நாங்கள் வந்திருக்கிறோம்; எப்படி கட்டளையோ அப்படி நடக்கக் காத்திருக்கிறோம்" என்றன. அதை இராமர் கேட்டுக் களித்து "நீங்கள் எல்லாரும் இப்பொழுது உங்களிஷ்டப்படி சொல்லலாம். வேண்டும்பொழுது நான் நினைத்தமாத்திரத்தில் வந்துசேர்ந்து உதவுங்கள்" என்றார். உடனே அந்த அஸ்திரக் கூட்டங்களும் இராமரை

வலம்வந்து நமஸ்கரித்து "அப்படியே நடந்துகொள்ளுகிறோம்" என்று சொல்லி மறைந்தன.

சித்தாச்சிரமங் காணுதல்.

இவ்வண்ணம் எல்லா அஸ்திரங்களையும், அவைகளுடைய பிரயோக ஸம்ஹார மந்திரங்களையுங் கற்றுக் கொண்டு ஆனந்தத்துடன் இராமர் வழிநடக்கும்போது ஒரு பர்வதப் பிரதேசத்திற்குச் சமீபத்தில் மேகம்போல் விளங்குகின்ற அழகான ஒரு சோலையைக் கண்டு "முனிவரே, இது யாருடைய வனம்? தோப்பும், நாநாவிதமான இனிய குரலுள்ள பக்ஷிகளும், மானும் நிறைந்து சந்தோஷித்துக்கொண்டிருக்க வெகு குளிர்ச்சியாய்ப் பார்ப்பதற்கு மிக்க ஆனந்தமாயிருக்கிறதே; இதுயாருடைய வனம்?" என்று கேட்டார். அன்றியும் "நாம் இதுவரையில் வழி நடந்துவந்த காடோ பார்ப்பவர் மனம் பதைக்கச்செய்யும் பாலை வனமாயிருந்தது. அதைக்கடந்து இப்பொழுது வெகு ரமணீயமான வனம் வந்திருக்கிறோம். இது யாரதுவனம்? பார்க்கப் பார்க்க மனம் ஆனந்தமடைகிறது. இது ஓர் ஆச்சிரமமென்று நினைக்கிறேன். தங்கள் வனம் எங்கிருக்கிறது? நித்தியம் யாகஞ் செய்கிறவர்களைக் கெடுத்துக்கொண்டும், அநேக பாபஞ்செய்து கொண்டுமிருக்கிற அந்தச்சண்டாளர்கள் எங்கிருக்கிறார்கள்? எந்த வனம்போய் நான் அந்த ராக்ஷசர்களை வதைசெய்யவேண்டுமோ அந்தவனம் எது? அவ்விடத்தில்தானே நீர் யாகம் பண்ண நினைக்கிறீர். அப்பொழுதுதானே நான் உம்முடன் சகாயமாக நின்று அரக்கர்களை வதைக்கவேண்டும். இவைகளெல்லாவற்றைப்பற்றியும் தங்களிடமிருந்து நான் கேட்க விரும்புகிறேன்" என்று வினவினர்.

---

## இருபத்தொன்பதாஞ்சருக்கம்:

---

### சித்தாச்சிரமத்தின் வரலாறு.

மனத்தால் அளவிடமுடியாத மகிமையையுடைய இராமர் இவ்விதம் கேட்கவே, வெகு தேஜஸ்வியான விசுவாமித்திரர் அவரைப் பார்த்துப் பின்வருமாறு விஸ்தாரமாகச் சொல்லத்

தொடங்கினர். தேவாதிதேவரும் மகாப் பிரபுவுமான விஷ்ணு பகவான் இவ்விடத்தில் அநேக யுககாலம் தவஞ்செய்துகொண்டு வசித்திருந்தனர். இது முதலில் மகாத்துமாவாகிய விஷ்ணுவின் ஆச்சிரமமாயிருந்தது. பின்பு மகாதபஸ்வியான காசியபர் இங்குத் தமது தவத்தின் சித்தியை அடைந்தபடியால் இதற்குச் சித்தாச்சிரமம் என்று பெயராயிற்று.

முதலில் விஷ்ணுவின் ஆச்சிரமமாயிருந்தது.

விஷ்ணு இங்குத் தவஞ்செய்துகொண்டிருக்கிற காலத்தில் தான் விரோசனனுடைய மகனை பலிசக்கரவர்த்தி என்பவன் இந்திரன் தேவர்கள் முதலான எல்லாரையும் தனது பராக்கிரமத்தால் வெற்றிகொண்டு மூன்று உலகங்களிலும் கீர்த்திபெற்றவனாய்த் தனது அரசாட்சியை எங்கும் வெகு பிரபலமாகத் தாபித்து நின்றான். அந்த அசுரராஜன் ஒருபெரியயாகம் பண்ணினான். அந்தச் சமயத்தில் அக்கினி முதலான எல்லாத் தேவர்களும் இவ்வாச்சிரமத்துக்கு விரைந்தோடி வந்து, விஷ்ணுவை வணங்கி "பகவானே, விரோசனனுடைய குமாரனை பலிசக்கரவர்த்தி வெகு பிரபலமாக ஒரு யாகம் செய்கிறான். அவன் அதைச்செய்துமுடிக்குமுன் நீர் உமது காரியத்தைநிறைவேற்றிக்கொள்ளவேண்டும். அவன் யார் வந்து எதைக் கேட்டாலும் இல்லையென்னுமல் தானங்கொடுக்கிறான். ஆதலால், நீர் மாயாசக்தியால் வாமனர் என்ற ஒரு வேற்றுருவங்கொண்டு தேவர்களுக்கு மிக்க நன்மையைச் செய்தருளுவீர்" என்றார்கள். அந்தச் சமயத்தில் பெருந்தவத்தினரான காசியபமகாரிஷியும் தமது மனைவி அதிதியுடன் தாம் அநேககாலமாய்ச் செய்து வந்த தவத்தை முடித்து விஷ்ணுவைக் குறித்து "தவத்தால் ஆராதிக்க வேண்டியவராய், தவத்தின் குவியல் போன்றவராய் ஞானத்தின் சொரூபமாய், தவத்தின் சுபாவமாய் விளங்கும் புருஷோத்தமரான கடவுள் நீரென்று நான் நன்றாகச் செய்த தவத்தால் ஆராய்ந்தறிந்து கொண்டேன். பிரபுவே, எல்லா உலகங்களும் உம்முடைய சரீரத்தில் அடங்கியிருப்பதை நான் பார்க்கின்றேன். நீர் தாம் ஆதி என்பதில்லாத தெய்வம்; உற்பத்

தியற்றவர். இவ்வண்ணமுள்ளவர் என்று குறிப்பிடக் கூடாத வர் நீர். நான் உம்மைச் சரணமாக அடைந்தேன்" என்று துதிக்கலானார். அவர் செய்த தோத்திரத்தால் விஷ்ணு மன மகிழ்ந்து, பாவத்தைவிட்டு நீங்கிய அக்காசியபரைப் பார்த்து, "உமக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக் கொள்ளும்; உமக்கு நான் வரம் கொடுக்கலாம் என்று நினைத்திருக்கிறேன்" என்றார். அதைக் கேட்டு மரீசிகுமாரரான காசியபமுனிவர். "அதிதி, தேவர்கள், நான்ஆக எங்கள் எல்லாருடைய வேண்டுகோளின் படி நீர் வரமளிக்க வேண்டும். நீர் அதிதிக்கும் எனக்கும் பிள் ளையாக வந்து பிறக்கவேண்டும். இந்திரனுக்குத் தம்பியாக வேண்டும். அசுரர்களைச் சங்காரம் பண்ணவேண்டும். சோகத் தால் வருந்தும் தேவர்களுடைய காரியங்களை அதன் மூலமாகச் செய்து முடிக்கவேண்டும். உமது அருளால் எனது தவம் இங்குச் சித்திபெற்றால் இந்த ஆச்சிரமத்துக் குச் சித்தாச்சிரமம் என்று பெயர் விளங்கும். நீர் எனது புத்திராதற்குப் புறப்படவேண் டும்" என்று பிரார்த்தித்தார்.

*பிறகு சித்தாச் சிரமமாவது.*

அவர் கேட்டுக்கொண்ட வண்ணம் விஷ்ணுபகவானும் அதிதி வயிற்றில் வாமனுவதாரம் செய்து, பலிச்சக்கரவர்த்தி யிடஞ்சென்று முதலில் மூன்றடி மண் யாசித் துப் பெற்றுக்கொள்ளுமளவில் எல்லாப் பிரா ணிகளுடைய நன்மைக்காக உலகம் முழுதும் வியாபித்து நின் றார். பலிசக்கரவர்த்தியை அடக்கிய பிறகு மூன்று லோகங்களை யும் மகேந்திரனுக்குத் தானம்பண்ணினார். எல்லாவிதமான சோர் வுகளையும் போக்கும் இந்த ஆச்சிரமத்தில் முதலில் அவர் வாசஞ் செய்தார். அந்த வாமனுவதாரம் பண்ணின விஷ்ணுவினிடம் பக்திவைத்து, நான் இப்பொழுது இங்கு வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆச்சிரமத்தைத் தான் ராக்ஷசர்கள் அடிக்கடி உபத்திரவம் பண்ணிக்கொண் டிருக்கிறார்கள். இவ் விடத்தில் நீ அவ்வரக்கர்களைக் கொல்லவேண்டும். நாம் இப் பொழுது ஒப்புயர்வற்ற இந்தச் சித்தாச்சிரமத்தில் பிரவேசிப்

*வாமனுவதாரம்.*

போம். இந்த இடத்தில் எனக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உனக்குமுண்டு" என்று சொல்லி அம்முனிவர் இராம லக்ஷ்மணர்களுடன் தமது ஆச்சிரமத்தினுள் வெகு சந்தோஷமாய்ப் புகுந்து, பனியால் மறைக்கப்பட்ட சந்திரன் பனி நீங்கிப் புனர்பூச நக்ஷத்திரங்களுடன் விளங்கினாற்போல விளங்கினார்.

இராகவர்கள் சித்தாச்சிரமம் சேர்தல்.

சித்தாச்சிரமத்தில் வசித்துக் கொண்டிருந்த எல்லா முனிவர்களும் விசுவாமித்திரரைக் கண்டவுடன் மேல்மேல் விரைந்தோடி வந்து அவருக்குச் செய்யவேண்டிய மரியாதை செய்தார்கள்; அவ்வாறே இராஜ புத்திரர்களுக்கும் அதிதிபூஜை செய்தார்கள். அக்குமாரர்கள் ஒரு முகூர்த்த நேரம் அங்கு இருந்து தங்கள் களைப்பை நீக்கிக்கொண்டு அதன்மேல் எழுந்திருந்து அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு விசுவாமித்திர முனிவரைப் பார்த்து "இப்பொழுதே நீர் யாகம் செய்யத் தொடங்கலாம். இந்த இடத்தின் பெயர் சித்தாச்சிரமமன்றோ. அது உண்மையாயிருக்கும்படி உமது யாகம் சித்திபெறும். உமது சொல் உண்மையாக முடியும்" என்றார்கள். அவர்கள் சொன்னதைக்கேட்டு மிகுந்த சந்தோஷமடைந்து விசுவாமித்திரர் யாகஞ் செய்யத் தொடங்கினர். சிவகுமாரர்கள் போன்ற அந்த இராஜ குமாரரிருவரும் சுகமாய் அன்றிரவு தூங்கிக் காலையில் எழுந்திருந்தார்கள்; எழுந்தவுடன் தங்கள் காலைக் கடனை முடித்து வெகு ஆசாரத்துடன் ஜபதபங்களை நிறைவேற்றி, ஓமஞ் செய்து கொண்டிருந்த விசுவாமித்திரரிடம் வந்து வணங்கி நின்றார்கள்.

---

## முப்பதாஞ்சருக்கம்:

### விசுவாமித்திரர் யாகம்.

இராமர் பரபரப்பு.

காலமும் இடமும் அறிந்து அவைகளுக்குத் தகுந்தபடி பேசுவதில் வல்லவர்களான அவ்வரசகுமாரர்கள் தக்க சமயத்தில் தக்க இடத்தில் விசுவாமித்திரரைப் பார்த்து "பகவானே, எந்தக்

காலத்தில் எந்தச் சமயத்தில் நாங்கள் அரக்கர்களை எதிர்பார்க்க வேண்டுமோ அதைச் சொல்லக் கேட்டுக் கொள்ளுகிறோம். அந்தச்சமயம் தவறாமல் ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமன்றோ! தயைசெய்யவேண்டும் " என்று வேண்டினார்கள். இவர்களிருவரும் இவ்வளவு ஊக்கத்தோடு யுத்தத்துக்குத் துடித்துக்கொண்டிருப்பதை அங்கிருந்த ரிஷிகளெல்லாரும் பார்த்து மகிழ்ந்து அவர்களைப் புகழ்ந்து அவர்களை நோக்கி " இன்று முதல் ஆறு நாள் வரையில் நீங்கள் அரக்கர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்றவேண்டும் விசுவாமித்திரர் யாகத்துக்காகத் தீக்ஷை பண்ணிக்கொண்டிருக்கிறபடியால் அவர் மௌன விரதத்திலிருக்கிறார்; வாய்திறந்து பேசார் " என்றார்கள். அவர்கள் சொன்னதைக்கேட்டு இராம லக்ஷ்மணரிருவரும் நித்திரையின்றி வெகு முயற்சியுடன் வில்லேந்தியவர்களாய் யாகம் நடக்கும் அந்த ஆச்சிரமத்தை ஆறுநாள் இரவும் பகலும் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆறாம்நாள் வந்ததும் இராமர் லக்ஷ்மணரை நோக்கி " வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டிரு " என்றார்.

முனிவர்யாகம் செய்தது.

அரக்கர்களுடன் போரிடத் துடித்துக்கொண்டு இராமர் அவ்வாறு சொல்ல, விசுவாமித்திருடன் ரித்துவிக்குகளாகிய முனிவர்களும் யாககுண்டம் கொழுந்து விட்டெரிய, தர்ப்பம், பானபாத்திரம், ஓமபாத்திரம், சமித்து, புஷ்பம் முதலியவைகளால் அக்குண்டத்தை அலங்கரித்து விதிப்படி மந்திரபூர்வமாக ஓமம் பண்ணினார்கள். அப்படி யாகம் நடக்கும்பொழுது ஆகாசத்தில் எல்லாருடைய உடம்பும் மயிர்க்கூச்செறிய ஒரு பெரிய அட்டகாசமுண்டாயிற்று. நல்ல மழைக்காலத்தில் ஆகாசத்தில் கார்மேகம் பலமாகத் தோன்றி மறைத்துக்கொள்ளுவது போல, மாயத்தோற்றத்தை உண்டாக்கிக்கொண்டு அதன் வழியாக மாரீசன் சுபாகு என்ற அரக்கரிருவர் மற்ற அரக்கர்களுடன் கோரரூபத்தோடு தோன்றி யாகபூமியில் இரத்தத்தைக் குடங் குடமாய்க் கொட்டினார்கள். வேதியில் இரத்தத்தைக் கண்டு வேகங்

அரக்கர்கள் தோன்றல்.

கொண்ட இராமர் தலை நிமிர்ந்து ஆகாயத்தை நோக்கித் திரும்பி லக்ஷ்மணரைப்பார்த்து "இதோ, மாநவாஸ்திரத்தால், காற்றானது மேகங்களை ஒதுக்குவதுபோல், மாமிசத்தைப் புசித்துக்கொண்டு துஷ்ட கிருத்தியங்கள் செய்யும் இவர்களை ஒதுக்கி விடுகிறேன்" என்று சொல்லி, உடனே மாரீசன் மார்பை நோக்கி அதிக பலமும் பிரகாசமுமுள்ள மாநவாஸ்திரத்தை மிக்க கோபத்தோடு விடுத்தார். அது அவனை ஒரு நூறுயோசனை தூரத்துக்கப்பால் தூக்கிக்கொண்டுபோய்ச் சமுத்திரத்தில் தள்ளிவிட்டது. பாணத்தால் அடிபட்ட படியால் ஒன்றுந்தெரியாமல் அங்கு அவன் புத்தியற்று ஜலத்தில் முழுவதுகுதை இராமர் அறிந்து கொண்டு லக்ஷ்மணரைப்பார்த்து "பார் தம்பி, இந்த மாநவாஸ்திரம் மாரீசனுடைய உயிரை வாங்காது, அவனுடைய புத்தியை மயக்கி அவனைப் பலயோசனை தூரத்துக்கப்பால் தூக்கிக்கொண்டு போய்த் தள்ளிவிட்டது. மற்ற அரக்கர்களையும் நான் விடுகிறதில்லை. அவர்கள் வெகு துஷ்டர்கள்; தயை சிறிது மில்லாதவர்கள்; பாவகாரிகள்; யாகவிரோதிகள்; இரத்தங்குடிப்பவர்கள்; அவர்களையெல்லாம் இதோ ஒரு நொடியில் வதைக்கிறேன்" என்றார். என்று சொல்லி உடனே இராமர் திவ்வியமான ஆக்கினேயாஸ்திரம் ஒன்றை ஆச்சரியகரமாகத் தமது வில்லில் தொடுத்து அதனால் சுபாகுவை ஆச்சிரமத்துக்கு வெளியில் விழச்செய்தார். வாயவியாஸ்திரத்தைப் பிரயோகித்து மற்ற அரக்கர்களையும் கொன்றிட்டார். இராமருடைய பராக்கிரமத்தைப் பார்த்து எல்லா முனிவர்களும் சந்தோஷ மடைந்தார்கள்.

*மாரீசன் கதி.*

*சுபாகு விழுந்தது.*

இவ்வாறு எல்லா ரிஷிகளுடைய மனமும் குளிரும்படி வெகு கம்பீரரான இராமர் யாகத்துக்கு இடையூறு செய்த அரக்கர்களை யெல்லாம் கொல்லவே, எல்லா முனிவர்களும் அவரைப் பூசித்தார்கள். அவரும் அவர்கள் மத்தியில் அசுர

*முனிவர் இராமரைப் புகழ்ந்தது.*

விஜயஞ்செய்து இந்திரன் விளங்கியதுபோல் விளங்கினார். உபத்திரவம் ஒழிந்து யாகம் முடிந்ததும் விசுவாமித்திர மகாமுனிவர் இராமரைப்பார்த்து "நீர் செய்த உபகாரத்தால் என்யாகம் நன்றாய் நிறைவேறிற்று, நீர் பிதிருவாக்கிய பரிபாலனம் நன்றாகச் செய்தீர். உம்முடைய மகத்தான பராக்கிரமத்தால் இந்த இடம் உண்மையாய்ச் சித்தாச்சிரமம் என்ற பெயரை உறுதியாக்கிக்கொண்டது" என்று சொல்லிக் கொண்டாடினார்.

## முப்பத்தோராஞ்சருக்கம் :

### மிதிலைக்குப் பிரயாணம்.

ஏற்றுக்கொண்ட காரியத்தைச் செய்துமுடித்த இராம லக்ஷ்மணர்கள் அன்றிரவு வெகு சந்தோஷமாகக் கவலையற்று நித்திரை செய்தார்கள். பொழுது விடிந்ததும் அவர்கள் எழுந்திருந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு விசுவாமித்திரரும் மற்ற ரிஷிகளும் இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அக்கினிபோல் மிக்க ஒளியோடு விளங்குகிற விசுவாமித்திர மாமுனிவரை வந்தனம்பண்ணி வெகு கம்பீரமாயும் மதுரமாயும் பின்வருமாறு சொல்லலுற்றார்கள் :—"நாங்களிருவரும், நீர் கட்டளையிடும் வேலையைச் செய்யக் காத்திருக்கிறோம். இன்னும் எங்களாலாகவேண்டியவை என்ன, கட்டளையிடலாம்" என்று அவர்கள் சொன்னதைக் கேட்டு, விசுவாமித்திரர் அங்கிருந்த மற்றை மகாரிஷிகளுடனே இராம லக்ஷ்மணரைப் பார்த்து "மிதிலை நகரத்து மன்னவரான ஜநகமகாராஜர் வெகு பிரசித்தமான யாகமொன்று செய்ய யத்தனிக்கின்றார். நாங்கள் அவ்விடம் போகிறோம். நீங்களும் அங்கு எங்களுடன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். அங்கு

ஜநகருடைய யாகத்தின் ஸமாசாரம்.

வெகு ஆச்சரியமான ஒரு தனுசு இருக்கிறது. மிகுந்த பலமும் காந்தியும் பொருந்திய அந்தத் தனுசு ஒரு யாகத்தில் ஜநகருக்குத் தேவதைகளால் சபையில் கொடுக்கப்பட்டது. அதை

வளைத்து நாணேற்றினவர் இதுவரையில் ஒருவருமில்லை; தேவர்கள், கந்தருவர்கள், அசுரர்கள், ராக்ஷசர்கள், மானிடர்கள் ஒருவராலும் நாணேற்ற முடியாமலிருக்கிறது. வெகு பலசாலிகளான அநேக அரசர்களும் இராஜகுமாரர்களும் வந்து அதை நாணேற்ற முயன்றும் தங்களாலாகாமல் அவமானப்பட்டுப் போயிருக்கிறார்கள். மானிட சிங்கமே, நீர் எங்களுடன் புறப்பட்டு வரவேண்டும். யாகத்துக்குப் போனது போலவுமிருக்கும். ஆச்சரியகரமான தனுசையும் பார்க்கலாம். முன்னொருகாலத்தில் மிதிலையரசர் யாகம் பண்ணும்போது, பிடிக்குமிடம் அழகாக விளங்கும் இந்தத் தனுசைத் தாம் அடைவதையே யாகத்தின் பயனாகக் கேட்டுக் கொண்டார். தேவர்களும் அவ்வாறே அதை அவருக்கு அளித்தார்கள். ஜநகர் தலைமையாகக் கொண்டாடத் தக்க அந்தவில்லைத் தம்வீட்டில் வைத்துக் கொண்டு நித்தியம் அதை நாநாவிதமான சுகந்த தூப தீபங்களினால் ஆராதித்துக்கொண்டு வருகிறார்" என்று சொன்னார்.

முனிவர் மிதிலைக்குப் புறப்படுதல்.

இப்படிச் சொல்லி முடித்து விசுவாமித்திரர் இராசகுமாரர்களைத் தம்முடன் அழைத்துக்கொண்டு முனிவர் கூட்டத்தோடு புறப்பட்டார். புறப்படும்போது அம்முனிவர் வனதேவதைகளைக் குறித்து "தேவதைகளே, மங்களமுண்டாக. இவ்விடத்தில் என்காரியம் செவ்வையாய் முடிந்துவிட்டதனால், இங்கிருந்து புறப்பட்டுக் கங்கைக்கு வடகரையாய் இமயபருவதத்துக்குச் செல்லுகிறேன்" என்று சொல்லி, அந்தச் சித்தாச்சிரமத்தை வலம்வந்து, மற்றரிஷிகள் எல்லாரும் தொடர்ந்துவர, வடக்கு முகமாய்த் திரும்பி அக்கினிஹோத்திர சாமான்கள் ஏறிய வண்டிகள் நூற்றுக் கணக்காய் உடன் வர நடந்தனர். அவர்மேலிருந்த விசுவாசத்தால் சித்தாச்சிரமத்திலிருந்த மிருகங்களும் பறவைகளுங் கூட அவரைத் தொடர்ந்து சென்றன. கொஞ்சதூரஞ் சென்றபிறகு விசுவாமித்திரர் பறவைகளையும் மிருகங்களையும் மீண்டு தமதிடஞ்செல்லும்படி அநுமதி கொடுத்தனுப்பினர். வெகு தூரம் வழிநடந்து சூரியாஸ்

தமனவேளையில் இவர்கள் எல்லாரும் சோணை நதிக்கரை சேர்ந்தார்கள்.

சோணை நதிக்கரையில் தங்கியது.

தினகரன் அஸ்தமித்தவுடன் ஸ்நானம் சந்தி முதலியவைகளை அவர்கள் எல்லாரும் விதிப்படி முடித்து அவ்வாற்றங்கரையில் தங்குவதற்கு ஓர் ஆச்சிரமத்தை யடைந்து அங்குத் தங்கினார்கள். இராமரும் லக்ஷ்மணருடன் தம் காரியங்களை முடித்துக்கொண்டுவந்து முனிவர்கள் எல்லாரையும் நமஸ்கரித்து விசுவாமித்திருக்குச் சமீபத்தில் வந்து உட்கார்ந்தார். பிறகு இராமர் அந்த மாமுனிவரைப்பார்த்து, ஆசையுடன் "பகவானே, இது என்ன தேசம்? செழிப்பான சோலைகளோடுகூடி வெகு அழகாக விளங்குகிறதே இந்தத்தேசத்தின் வரலாற்றைக் கேட்க எனக்கு அதிக ஆசையாயிருக்கிறது" என்றார். இவ்வாறு இராமர் கேட்க, முனிவர் இராமர் ஆசையைத் தீர்ப்பதற்காக எல்லா ரிஷிகளும் கூட உட்கார்ந்திருக்கப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்.

---

## முப்பத்திரண்டாஞ்சருக்கம்:

---

### விசுவாமித்திரருடைய வமிசம்.

குசர்.

முன்னொருகாலத்தில் பிரமாவினுடைய குமாரராகிய குசர் என்றொரு பிரசித்த தபோநிதி இருந்தார். அவர் தமது நோன்புகளைத் தவறாது நடத்திக்கொண்டும், தருமங்களை யெல்லாம் அறிந்துகொண்டும், பெரியவர்களை உபசரித்துப் பூசிப்பதைப் பெரிய கடமையாகச் செய்துகொண்டு மிருந்தார். அவர் ஒரு பெரிய வமிசத்தில் பிறந்தவளும் எல்லாவித நற்குண நற்செய்கைகள் பொருந்தியவளுமான வைதர்ப்பி என்னும் ஒரு பெண்மணியை மணந்தார். அவள் வயிற்றில் அவருக்குத் தம்மைப்போல் அதிக ஆசாரமும் பராக்கிரமு

முள்ள நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். அவர்கள் பெயர் குசாம்பன், குசநாபன், அதூர்த்தரஜஸ், வசு என்பன. க்ஷத்திரிய தருமத்தைக் குறைவுபடாதபடி நடத்த ஆவல்கொண்ட குசர் வெகு காந்தியும், ஊக்கமும், உண்மையும், தருமமும் பொருந்திய தமது குமாரர்களைப் பார்த்து "புத்திரர்களே, நீங்கள் இவ்வுலகத்தை வெகு தருமத்தோடு ரக்ஷித்து ஜனங்களுக்கு நன்மையை விளைவியுங்கள்" என்றார்.

குசாம்பன் முதலியவர்கள்.

இவ்வாறு தந்தையார் கூறியதைச் சற்புத்திரர்களான அந் நால்வரும் கேட்டுத் தங்கள் தங்கள் இராச்சிய பாகத்தை ஒருவிதமாக வரையறை செய்து கொண்டு ஆள ஆரம்பித்தார்கள். குசாம்பன் தனது பிரதான பட்டணமாகக் கௌசாம்பி என்னும் நகரத்தைக் கட்டிக்கொண்டான். மஹோதயம் என்னும் பட்டணத்தைக் குசநாபன் உண்டாக்கிக்கொண்டான். அதூர்த்தரஜஸ் என்பவன் தர்மாரண்யம் என்னும் நகரத்தைத் தனது தேசத்துக்கு முக்கிய பட்டணமாகச் செய்துகொண்டான். வசுவுக்குக் கிரிவிரஜம் என்பது தன் தேசத்து நகரங்களுக்குள் உத்தம நகரமாக விளங்கிற்று. இந்த வசுவின் பட்டணத்துக்கு வசுமதி என்ற மற்றொரு பெயருமுண்டு. அதைச்சுற்றி வெகு அழகாக ஐந்து மலைகள் அமைந்திருக்கின்றன. இவ்வைந்து மலைகளிலிருந்தும் உற்பத்தியாகி மகததேசத்துக்கு மாலைபோட்டதுபோல் ஓடும் மாகதி என்னும் இச்சோணை நதியானது இந்நாட்டைச் செழிக்கச்செய்கிறது. இந்த மாகதி வசுமன்னனைச் சேர்ந்தது. கிழக்கிலிருந்து வருகிற இந்நதியின் கரைகளிலுள்ள சிறந்த கழனிகளிலெல்லாம் நெற்பயிர் வெகு செழிப்பாக வளரும்.

குசநாபனுடைய நூறு குமாரிகள்.

குசநாபன் என்ற இராஜரிஷிக்குக் கிருதாசி என்னும் மனைவி வயிற்றில் ஒப்பற்ற அழகுள்ள நூறு பெண்குழந்தைகள் உண்டானார்கள். ரூபவதிகளான அந்த நூறு பெண்களும் யௌவனப் பருவமடைந்த பிறகு ஒருநாள் தங்கள் மேனியை வெகு அழகான ஆபரணங்களினால் அலங்காரஞ்செய்து

கொண்டு, மழைக்காலத்திலுண்டாகும் மின்னற்கொடிகள்போல விளங்கிக்கொண்டு, ஒரு சிங்கார வனத்துக்குட் சென்று அங்கு ஆடுவதும் பாடுவதும் வீணைமுதலிய வாத்தியங்களை வாசிப்பது மாகத் தங்கள் காலத்தைக் களிப்பில் கழித்துக்கொண்டிருந்தார் கள். இனிமையான எல்லா அவயங்களையும் உடையவர்களும் அழகில் ஒப்பற்றவர்களுமான அவர்கள் அந்தச் சோலையில் அங்கும் இங்கும் உலாவிக்கொண்டு விளையாடியது ஆகாயத்தில் நக்ஷத்திரக் கூட்டங்கள் பிரகாசிப்பதுபோலிருந்தது.

குசநாபனுடைய குமாரிகளை வாயுபகவான் பார்த்து மோகித்தது.

இப்படி எல்லாவிதமான லக்ஷணங்களுடனும், நற்குணங்களுடனும், யௌவனத்துடனும் விளங்கும் இப்பெண்களை, எல்லாப் பிராணிகளுக்கும் இன்றியமையாதவனான வாயுபகவான் பார்த்து "பெண்மணிகளே, உங்களெல்லாரையும் நான் விரும்புகிறேன். நீங்கள் என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளுங்கள். மனிதவடிவு நீங்கித் தேவ உருவம் உங்களுக்கு வரும்படி நான் வரங்கொடுக்கிறேன். நீங்கள் மரணமே யில்லாமல் என்னுடன் வாழலாம். மனித சன்மத்தில் யௌவனப் பருவம் நீடித்து நிற்கிறதில்லை. என்னை மணப்பீர் களானால் நீங்கள் அமரமகளிர்களாகிவிடுவீர்கள். இளமைப்பருவமும் உங்களை விட்டு நீங்காமல் நிலைநிற்கும்" என்றார்.

வாயுபகவான் அவமானப்பட்டது.

தடுத்தற்கரிய தொழிலையுடைய வாயுபகவான் இவ்வாறு பேசியதை அந்த நூறு கன்னிகைகளும் கேட்டுச் சிரித்து அவரைப்பார்த்து "எல்லாப் பிராணிகளுடைய உடம்பினுள்ளும் புகுந்து சஞ்சரிக்கும் தெய்வமன்றோ நீர்! தேவ சிரேஷ்டரே, உமது மகிமை எங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அப்படி யிருந்தும் நீர் இவ்வாறு எங்களை அவமதித்துப் பேசினது எங்களுக்கே ஆச்சரியமாக விருக்கிறது. நாங்களெல்லாம் குசநாப மகாராஜாவின் பெண்கள் என்பது உமக்குத் தெரியாத விஷயமா? எங்களை அவமானம் பண்ணு

கிற நீர் தெய்வமாயிருப்பினும் உம்மை எங்களுடைய தபோமகி மையால் ஒரு நொடியில் அவமானஞ் செய்விக்க எங்களுக்குச் சாமர்த்தியமுண்டு. ஆனால் அப்படிச் செய்வதால் எங்கள் தவம் என்னும் பொருள் குறைந்துவிடுமே என்று பயப்படுகிறோம். துர்ப்புத்தியுள்ளவரே, எங்கள் பிதா உம்மை நாசஞ்செய்யும்படி நீர் நடந்து கொள்ளவேண்டாம். நாங்கள் எங்கள் தகப்பனுருக் குத் தெரியாமலும் அவர் சொற்படி கட்டுப்படாமலும் எங்க ளிஷ்டப்படி புருஷனைத் தேடிக்கொள்ளுபவர்கள் என்று நீர் எண்ணவே வேண்டாம். எங்களுக்கு எங்கள் தகப்பனார்தாம் தலைவர். சத்தியவாதியான அவரே எங்களுக்குச் சிறந்த தெய் வம். அவர் எங்களை யாருக்கு விவாகஞ்செய்து கொடுப் பாரோ அந்தப் புருஷன்தான் எங்களுடைய புருஷன்" என் ருர்கள்.

இப்படி அப்பெண்கள் சொன்ன சொல்லை வாயுபகவான் கேட்டு மிக்க கோபங் கொண்டு அவர்கள் ஒவ்வொருவர் உடம் பிலும் தாம் புகுந்து அவயவங்களை முடமாக் கினர். இவ்வாறு தங்களுக்குச் சம்பவித்த சங் கடத்தைப் பார்த்து, தங்கள் அழகானமேனி அவலக்ஷணமாய்ப் போனதற்காக வெட்கமும் விசனமுமடைந்து மனங் கலங்கிக் கண்ணீரு குத்து அந்த நூறு பெண்களும் வெகு சிரமத்தோடு தங்கள் தகப்பனர் வீட்டில் வந்து விழுந்தார்கள். இவ்வாறு மீண்டுவந்த அருமைக் குழந்தைகளை அரசன் கண்டு திடுக்கிட்டு "என் குழந்தைகளே, இஃது என்ன! தருமத்தை அவமானம் பண்ணு கிறவனும் உண்டா? இவ்வுலகத்தில் உங்களை இவ்வாறு கூனு கச் செய்தவன் யார்? துக்கப்பட்டுக்கொண்டே ஏன் வாய்திற வாமலிருக்கிறீர்கள்" என்று வினவிப் பெருமூச்செறிந்து, குழந்தைகள் சொல்லுவதை ஆசையுடன் கேட்கும்பொருட்டு அவர்களெல்லாரையும் தனக்கு அருகில் சேர்த்துக்கொண் டான்.

வாயுபகவான் குசநாபனு டைய குமாரிக ளின் அழகைக் குலைத்தது.

## முப்பத்துமூன்ருஞ்சருக்கம் :

### குசநாபன் பொறுமை.

குசநாபன் இவ்வாறு உரைக்கக்கேட்ட பெண்கள் நூற்றுவரும் பிதாவின் பாதங்களை வணங்கி, "எங்கள் அருமைத் தந்தையே, எல்லாருடைய உடம்பினுள்ளும் உள்ளவனை வாயுபகவான் தருமமார்க்கத்தை அனுசரியாமல் பலாத்காரமாக எங்களை அவமானஞ்செய்யமுயன்ருர். நாங்கள் "நீர் செய்வது தருமமன்று. எங்கள் பிதா எங்களுக்குத் தலைவர். நாங்கள் எங்களிஷ்டப்படி நடப்பவர்களல்லோம். அவரைப் போய்க்கேளும். அவர் உமக்கு எங்களை விவாகம் செய்து கொடுப்பாராளுல் நாங்கள் உமக்கு உரியவர்களாவோம்" என்ருேம். அதருமமார்க்கத்தை அநுசரித்த வாயுபகவான் அதைக் கேட்டு கோபமடைந்து எங்கள் வார்த்தையை ஏற்றுக்கொள்ளாமலே இவ்வாறு எங்களைச் செய்தார்" என்ருர்கள். அவர்கள் சொன்னதைக் கேட்டவுடன் வெகு தருமிஷ்டனை குசநாபன் அந்த நூறு அருமைப் பெண்களையும் பார்த்து "என் குழந்தைகளே, பொறுமை என்பது பெருந்தன்மையின் அணிகலம்; அதை நீங்கள் சிறுபிராயமுள்ளவர்களாயிருந்தும் பெரியோர்கள் போலவே நன்ருகத் தரித்துக் கொண்டிருக்கிறீர்கள். நமது குலத்தின் கௌரவத்தை நீங்கள் எல்லாரும் காப்பாற்றினீர்கள். இவைகளையெல்லாம் நோக்க எனக்கு வெகு சந்தோஷமாக இருக்கிறது. ஆணாயினும் சரி; பெண்ணாயினும் சரி; யார்க்கும் பொறுமையே அழகு செய்வது. பொறுமை யென்பது அரியகுணம்; அதிலும் நீங்கள் பலவிதத்திலும் சிறந்த தேவர்கள் விஷயத்தில் பொறுமை கொண்டிருந்தது விசேஷம். அதன்மேலும் உங்களெல்லாருக்கும் ஒரே மனமாகப் பொறுமை உண்டானது வெகு சிலாக்கியம். பொறுமை என்பது சில சமயத்தில் தேவர்களிடத்தில்

குசநாபன் தனது பெண்களுக்கு வரன் தேடுவது.

கூட இல்லாமல் போய்விடுகிறது. உங்களிடத்தி லிருக்கும் பொறுமை நமது வமிசத்தில் ஒவ்வொருவருக்கும் உண்டாகட்டும். பொறுமையால் ஒருவன் தானத்தாலடையும் பயனை அடைவான் ; யாகம் பண்ணின புண்ணியத்தைப் பெறுவான் ; சத்தியத்தாற் பெறும் நன்மையைச் சேர்வான். பொறுமை என்பது அதை உடையவர்களுக்கு எல்லாவற்றினும் பெரிய கீர்த்தி. பொறுமைமட்டும் இருந்தால் எல்லாத் தருமங்களும் அவர்களிட மிருப்பதற்குச் சமானம். பொறுமையினாலேயே உலகம் நிலைநிற்பது" என்று சொல்லித் தமது பெண்களை யனுப்பி விட்டு 'இனி நாம் நமது பெண்களை விவாகமில்லாமல் வீட்டில் வைத்திருத்தல் கூடாது ; நமக்குத் தகுந்த குலம் கோத்திரம் பார்த்து நல்ல முகூர்த்தத்தில் இவர்களை நல்ல இடத்தில் விவாகஞ்செய்து கொடுக்கவேண்டும்' என்ற விஷயமாக மந்திரிமார்களுடன் அரசன் ஆலோசிக்கலானான்.

அந்தக் குசநாபன் காலத்தில், சூளி என்ற ஒரு மாமுனிவர் தவம் புரிந்துகொண் டிருந்தார். அவர் வெகு ஆசாரசீலர் ; பிரமசரிய விரதானுஷ்டானத்தோடு பிரஹ்மத்தியானஞ் செய்பவர். அவர் தவம்புரியுங்காலத்தில் ஊர்மிளையின் மகளான சோமதை என்ற ஒரு கந்தர்வப்பெண் அவருக்குப் பணிவிடை பண்ணிக் கொண்டிருந்தாள். அவள் தம்மிடத்தில் வெகு விசுவாசமாய் மிகுந்த வணக்கத்தோடு செய்த பணிவிடையைச் சூளி பார்த்துச் சந்தோஷமடைந்து ஒரு காலத்தில் அவளை நோக்கி "சோமதையே, நீ என் பணிவிடை விஷயமாய் வெகு சிரமப்பட்டாய். அதற்கு நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன் உமக்கு நான் என்ன உபகாரம் செய்யவேண்டும்?" என்றார். தனது யஜமானர் உண்மையாகவே தன் ஊழியத்தைக் கண்டு சந்தோஷமடைந்திருக்கிறார் என்பதைத் தெரிந்துகொண்ட சோமதை அதிக சந்தோஷமடைந்து வெகு மதுரமாகவும் வணக்கமாகவும் "சுவாமி, பிரஹ்ம சம்பந்தமான தவத்தில் சித்திபெற்றுப் பிரம தேஜசுடன் கூடி விளங்குகிற உம்மைப் பார்த்தால் நேராகப் பிரம

சூளி.

தேவரைப் பார்ப்பது போலிருக்கிறது. இப்படிக் காந்தியும் தபோமகிமையுமுள்ள ஒரு குமாரன் எனக்கு உண்டாகவேண்டும். நானோ நல்லநடையுள்ள கன்னிகையா யிருக்கிறேன். தருமிஷ்டரான உம்மையே சரணமடைந்த எனக்கு நீர் தவமகிமையால் சற்புத்திரனை அருளக்கடவீர்" என்றாள். இவ்வாறு இவள் சொன்னதைக் கேட்ட சூளி சோமதையின் நற்குண நற்செய்கைகளை நன்றாயறிந்திருந்தபடியாலும் அவள் தம்மிடம் வைத்திருந்த பக்தியையும் விசுவாசத்தையும் நன்றாக உணர்ந்திருந்தவராதலாலும் அவளை மிக மெச்சித் தமது தபோமகிமையால் மனத்தினால் சங்கல்பித்துப் பிரமதத்தன் என்ற ஒரு சிறந்த ஆண்குழந்தையை அவளுக்கு அளித்தார்.

*பிரமதத்தன் குசநாபனுடைய குமாரிகளை மணந்தது.*

அந்தப் பிரமதத்தன் என்பவன் க்ஷத்திரிய ஜாதியளான சோமதையினிடம் பிறந்தவனாதலால் அரசனாய்த் தேவலோகத்தைத் தேவேந்திரன் ஆள்வதுபோல் காம்பிலி நகரத்தில் மிக்க வைபவத்துடன் அரசாண்டிருந்தனன். அந்தப் பிரமதத்தனுக்குத் தனது நூறு பெண்களையும் விவாகஞ்செய்து கொடுப்பதாகக் குசநாபன் நிச்சயித்து உடனே பிரமதத்தனை வெகு மரியாதையுடன் வரவழைத்து வெகு சந்தோஷமாக நல்ல சுபமுகூர்த்தத்தில் தனது நூறு கன்னிகைகளையும் அவனுக்குப் பாணிக்கிரகணம் செய்வித்தான். தேவேந்திரனுக் கொப்பான பிரமதத்தன் பாணிக்கிரகண சமயத்தில் கிரமப்படி மந்திரம் சொல்லி ஒவ்வொருத்தியையாகக் கைப்பற்றும்பொழுது ஒவ்வொருத்தியும் கூனும் குரூபமும் நீங்கி முன்போல் ஒப்பற்ற அழகிய உருவங் கொள்ளவே, அவரெல்லாரும் தங்கள் தங்கள் மனக்கவலையையும் துக்கத்தையும் நீக்கினார்கள்.

*வாயுபீடை நீங்கியது.*

இவ்வாறு வாயுபகவானால் தனது பெண்களுக்குண்டான அவமானம் நீங்கிவிட்டதைக் குசநாபன் கண்டு வெகு சந்தோஷமடைந்து ஆனந்தக் கடலில் முழுகினான். மணமகனாகிய பிரமதத்தனுக்கு மாமனாராகிய குசநாபன் வெகு மரியாதை செய்து

அவனை அவன் மனைவிமார்களோடும், பிராமணர்களோடும் அவனுடைய நகரத்துக்கு அனுப்பினான். சோமதை, தனது மகன் தனக்கு ஒப்பான பெண்களை மணந்து சிறப்புடன் திரும்பி வந்ததைக் கண்டு களித்துத் தனது மருகியர்களைத் தழுவியணைத்துக் குசநாபனைப் புகழ்ந்து மனம்பூரித்து ஆனந்தக்கடலில் மூழ்கினாள்.

## முப்பத்துநான்காஞ்சருக்கம்:

### விசுவாமித்திரருடைய வரன்முறை.

காதியின் உற்பத்தி.

இவ்வாறு பிரமதத்தனுக்குத் தனது நூறு குமாரிகளையும் விவாகஞ்செய்து கொடுத்தனுப்பி விட்டுக் குசநாபன் தனக்குப் புத்திரன் இல்லையே என்ற துக்கத்தால் வருந்தப் புத்திரகாமேஷ்டி பண்ணினான். யாகம் நடந்தபொழுது பிரமபுத்திரரான குசர் என்பவர் குசநாபனிடம் வந்து "அப்பா, மகனே, உனக்கு உன்னைப் போல மிகவும் தருமிஷ்டனான காதி என்ற பெயருள்ள மகனொருவன் உண்டாவான். அவனால் நீ உலகத்தில் என்றும் நிலைபெற்ற கீர்த்தியைப் பெறுவாய்" என்று ஆசீர்வாதம் பண்ணி விட்டு ஆகாசமார்க்கமாகப் பிரமலோகம் சென்றனர். அவரநுக்கிரகித்த பிரகாரம் சில நாட்களுக்குள் குசநாபனுக்கு மிக்க ஆசார சீலனான காதி என்னும் மகன் பிறந்தான். ஓ, இராமா, அவர் எனக்குத் தந்தை. நான் குசருடைய வமிசத்தில் பிறந்தவன் ஆகையால் என்னைக் கௌசிகன் என்றும் கூப்பிடுவார்கள்.

சத்தியவதி.

எனக்கு முன்பிறந்தவள் ஒரு பெண் உண்டு. அவள் பெயர் சத்தியவதி என்பதாம் அவள் மகா ஆசார சீலை. அவளை என் தகப்பனார், ரிசீகர் என்ற ரிஷிக்குக் கல்யாணம்பண்ணிக் கொடுத்தார். அவள் தன் புருஷனோடு நிஜ சரீரத்துடன் சுவர்க்க லோகம் சென்றாள். அதன்மேல் அவள் தனது பதிவிரதா தருமத்தால் பெரிய நதி

ரூபமாக உருமாறித் திவ்வியமான புண்ணிய தீர்த்தமாக இமய மலையை அடைந்து அங்கிருந்து புறப்பட்டு மிகுந்த கருணை யோடு உலகத்தைப் பரிசுத்தஞ் செய்துகொண்டு எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை விளைவித்துப் பார்ப்பதற்கு இரமணீய மாகக் கௌசிகி என்ற பெயருடன் ஓடிக்கொண்டிருக்கிறாள். நானும் என் தமக்கையிடம் எனக்குள்ள அன்பால் எப்பொழுதும் இமயமலைச் சாரலிலேயே வசித்துக் கொண்டிருக்கின்றேன். சத்தியத்திலும் தருமத்திலும் கற்பிலும் நிலை நின்ற மகா பாக்கியசாலியான அவள் நதிகளுக்குள் உத்தம நதியாக விளங்குகிறாள். என் யாகத்தை முடிக்கும் பொருட்டே நான் என் தமக்கை நதிரூபமாக ஓடும் பிரதேசத்தை விட்டுச் சித்தாச்சிரமம் சென்று சிறிது காலம் வசித்துக்கொண்டிருந்தேன். ஏ இராமா, உம்முடைய பராக்கிரமத்தால் என் காரியமும் சித்தியடைந்தது.

நிசிகால வருணனை.

இதுதான் என் வம்சத்தினுடைய வரலாறு. இதுதான் எனது உற்பத்தியின் கதை. இதுதான் இந்தத் தேசத்தின் சரித்திரம். நீர் கேட்டதை விஸ்தாரமாகச் சொல்லிவிட்டேன். நான் கதை சொல்லிக்கொண்டே யிருந்துவிட்டேன். நிசிராத்திரியாகிவிட்டது. நாளைக்கும் வழி நடக்கவேண்டும். சிரமம் மேலிடாமலிருக்க இனியாவது சீக்கிரம் நித்திரைக்குச் செல்லும். விருக்ஷங்கள் அசைவற்றுத் தூங்குவனபோல் தோன்றுகின்றன. மிருகங்களும் பக்ஷிகளும் அடங்கித் தூங்குகின்றன. எல்லாத் திக்குகளையும் இருள் மூடிக்கொண்டிருக்கிறது. நடு இரவு ஆயிற்று. அதிகமாய் நக்ஷத்திரங்களும் தாரகைகளும் கிரகங்களும் அடர்ந்து விளங்கப்பெற்ற ஆகாயம், முழுவதும் பல கண்களைப் பெற்று விழிப்பதுபோலப் பிரகாசிக்கிறது. சந்திரன் தனது குளிர்ச்சியான கிரணங்களால் உலகத்து இருளை ஒழித்துக்கொண்டு பிராணிகளுடைய மனத்தைச் சந்தோஷப் படுத்திக்கொண்டும் உதித்திருக்கிறான். இரவில் சஞ்சரிக்கும் எல்லாப் பிராணிகளும் யக்ஷ ராக்ஷச சமூகமும் பூத பிசாசங்

களும் நான்கு பக்கங்களிலேயும் சஞ்சரிக்கின்றன" என்று விசுவாமித்திர முனிவர் சொல்லிமுடித்தார். அங்கிருந்த முனிவர்கள் எல்லாரும் "கதை மிகவும் நன்றாயிருக்கிறது" என்று கௌசிகரைக் கொண்டாடி, "குசிக வமிசமே உத்தமவமிசம்; அதில் பிறந்தவர்கள் எல்லாரும் பிரமதேவருக்கு ஒப்பான மகாத்துமாக்கள்; பெருங் கீர்த்தி பெற்ற விசுவாமித்திர முனிவரே, நீர் வெகு சிரேஷ்டர்; உம்முடைய குலத்தை விளங்கச் செய்கிறவளான கௌசிகி உத்தம நதி" என்று புகழ்ந்தார்கள். அந்த மாமுனிவரும் இவ்வாறு எல்லா ரிஷி சிரேஷ்டர்களாலும் புகழப்பட்டு, சூரியபகவான் அஸ்தமிப்பதுபோல நித்திரை கொண்டார். இராமரும் லக்ஷ்மணரும் முனிவரைக் கொண்டாடிக் களிப்புடன் நித்திரையின் சுகத்தை நன்றாக அனுபவிக்கச் சென்றார்கள்.

---

## முப்பத்தைந்தாஞ்சருக்கம்:

---

### கங்கையின் மகிமை.

இவ்வாறு சோணைநதியின் கரையில் அவ்விரவின் மிச்சத்தை விசுவாமித்திரரானவர் ரிஷிகளோடு கழித்து, பொழுது விடிதலும் இராமரிடஞ் சென்று "இராமரே, எழுந்திரும், எழுந்திரும்; இரவு கழிந்து சூரியோதயமாகிறது; காலைச் சந்தியாவந்தனம் செய்யுங்காலம் வந்துவிட்டது; சீக்கிரம் காலையில் வழி நடப்போம்" என்றார். அவர் சொன்னதைக் கேட்டு இராமரும் உடனே எழுந்திருந்து காலைக் கடனை முடித்துப் பிரயாணத்துக்குச் சன்னத்தராய் "இங்கு காணப்படுகிற சோணை என்னும் மகாநதி வெகு அழகாய் அநேக மணல் திட்டுக்களோடு விளங்குகிறது; எந்த வழியாக இதை நாம் தாண்டுவோம்" என்றார் இதைக்கேட்ட விசுவாமித்திரர் "ரிஷிகள் எல்லாரும் வழக்கமாய்ப் போகிற இவ்வழியாகத்தான் சோணையைக் கடக்கவேண்டும்" என்றார்.

அவ்வாறே செய்து எல்லாரும் வெகு வேகமாக நடந்து

கங்கையைக் காணல்.

வழியில் பல சோலைகளைப்பார்த்துக்கொண்டே வெகுதூரம் கடந்து மத்தியான காலம் நெருங்கும்பொழுது எல்லா ரிஷிகளாலும் வணங்கப்படும் சிறந்த நதியாகிய கங்கையைக் கண்டார்கள். அன்னப் பறவைகளாலும் சாரசங்களினாலும் நிறைந்து புண்ணியதீர்த்தமுடையதாய் விளங்கும் அந்தக் கங்கையைப் பார்த்ததும் எல்லாரும் மனங்களித்தார்கள். அந்நதிக் கரையில் ஓரிடம் பார்த்துத் தங்கினார்கள். அந்தப் புண்ணியதீர்த்தத்தில் அவர்கள் எல்லோரும் விதிப்படி நீராடித் தேவர்களையும் பிதிருக்களையும் தர்ப்பணங்களால் திருப்தி பண்ணிவைத்து, அக்கினி ஹோத்திரம் முதலிய கடன்களை முடித்து அதற்கு நிவேதனம் செய்யப்பட்ட அவிஸ்ஸை அமிருதத்துக்குச் சமானமாக எண்ணிப் புசித்து வெகு சந்தோஷமடைந்தவர்களாய் விசுவாமித்திர மாமுனியைச் சூழ்ந்து உட்கார்ந்தார்கள். இராம லக்ஷ்மண ரிருவரும் அம்முனிக்குச் சமீபத்தில் வந்து இருக்கலானார்கள்.

இவ்வண்ணம் எல்லாரும் எல்லாவேலைகளையும் முடித்துக்கொண்டு சுகமாகச் சிரமத்தைப் போக்க உட்கார்ந்ததும், இராமரானவர் மாமுனியாகிய விசுவாமித்திரரைப் பார்த்து "முனிசிங்கமே, கங்காதேவி எவ்வாறு மூன்று உலகங்களிலேயும் சஞ்சரித்துச் சமுத்திரத்தில் போய்ச் சேருகிறாள். மூன்றுவழியாகச் செல்லுகிற கங்காநதியின் வரலாற்றைக் கேட்க வெகு ஆவலுடையவனாக இருக்கிறேன்" என்று வேண்டிக் கொண்டார். அதைக்கேட்டு விசுவாமித்திரர் கங்கையினுடைய உற்பத்தி, கதி, முதலிய சகல சிறப்புகளையும் பற்றிச் சொல்லத்தொடங்கினார்.

கங்கையின் உற்பத்தி.

"சகல லோஹங்களுக்கும் உற்பத்தி ஸ்தானமான பெரிய இமவான் என்ற பருவதராஜரிருக்கிறார். அவருக்கு ஒப்பற்ற ரூபவதிகளான இரண்டுகுமாரிகள் தோன்றினார்கள். அவர்களுடைய தாய் மேருவின்மகளும் இமவானின் பிரியமுள்ள பத்தினியுமாகிய

வெகு லாவண்ணியம் பொருந்திய மனோரமை என்பவள். அவளுடைய மூத்த பெண் கங்கை இரண்டாவது பெண் உமை. முன்னொரு காலத்தில் தேவர்கள் எல்லாரும் இமவானையடைந்து "உங்கள் குமாரியாகிய கங்கை என்பவள் சுவர்க்கமும் பூமியும் பாதாளமுமாகிய மூன்று இடங்களில் ஓடவேண்டும். அதனால், தேவர்களுக்குச் சில காரியங்களாகவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள். அவரும் மூவுலகத்துக்கும் நன்மைசெய்ய விரும்பி அன்போடு அவ்வாறே அநுமதி கொடுத்தனர். கங்கையும் மூவுலகிலும் ஓடி உலகத்தைப் பரிசுத்தம் செய்து வைத்தாள். தேவர்களும் தாங்கள் கொண்ட கருத்து நிறைவேறவே வெகு சந்தோஷமடைந்தார்கள். இமவானுடைய மற்றொரு பெண்ணான உமைஎன்பவள் விரதாநுஷ்டானத்துடன் வெகு கடோரமான தவம் புரிந்து தந்தையால் கன்னியாதானஞ் செய்யப்பட்டு ஈசுவரனை மணந்து உலகம் வணங்கத்தக்கவளாயினாள். கங்காநதியும் உமாதேவியும் ஆகிய இவ்விருவரும் பருவதராசனுடைய இரண்டு பெண்கள்; உலக முழுவதும் கொண்டாடத்தக்க பெருமை பெற்றவர்கள். நடை யழகுடைய இராமமூர்த்தியே, கங்கை மூவழியாய் ஓடும் காரணத்தை நான் சொல்லிவிட்டேன். கங்கை ஆகாசத்தில் சஞ்சரித்துப் பிறகு சுவர்க்கலோகஞ் சென்றாள்.

---

## முப்பத்தாறுஞ்சருக்கம்:

---

### உமையின் செய்தி.

*கங்கையின் கதை.*

முனிவர் அவ்வாறு சொன்னதும் வீரர்களான இராமலக்ஷ்மணரிருவரும் அவர்சொன்ன கதையைக் கேட்டுச் சந்தோஷமடைந்து மறுபடியும் அவரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்கள்:—"முனிவரே, நீர் சொன்ன இக்கதை வெகு புண்ணிய கதையாக இருக்கின்றது. பருவதங்களுடைய மன்னவரான இமவானுடைய மூத்தகுமாரியாகிய கங்கையைப்பற்றி விஸ்தார

மாக நீர் சொல்லவேண்டும். தேவலோகத்திலும் மநுஷ்யலோகத்திலும் நடந்த அவள் செய்தியை யெல்லாம் கூறவேண்டும். எல்லாவற்றையும் விஸ்தாரமாக அறிந்தவரன்றோ நீர்! உலகம் முழுவதையும் பரிசுத்தம் பண்ணி வைக்கும் கங்கை எக்காரணத்தால் மூன்று வழியாகச் சஞ்சரிக்கலானாள்?" இன்னும் அந்தக் கங்கை மூன்று உலகங்களிலும் எந்தெந்தத் தொழில்களால் உத்தமநதியென்று பிரசித்திபெற்றாள்?" என்றார்கள். இராமர் அவ்வாறு கேட்கவே விசுவாமித்திர மாமுனிவர் அக்கதை முழுவதையும் முனிவர்கள் நடுவிலிருந்து கொண்டு பின்வருமாறு சொல்லத் தொடங்கினார் :—

மகாதேவர் காதல்.

"முன்னொரு காலத்தில் வெகு பெரிய தவசியான சிவபெருமான் உமையை மணந்து அவள்மேல் காதல் கொள்ளலானார். தேவர்களுடைய வருஷங்களில் நூறு வருஷங்கள் இவ்வாறு காதல் கொண்டிருந்த போதிலும் அவளிடம் ஈசுவரருக்குக் குழந்தை உண்டாகவில்லை. * * * * * * *
* * * * * * *

---

## முப்பத்தேழாஞ்சருக்கம்:

### குமாரோத்பத்தி.

* * * * * * *

குமாரர் உத்பத்தி.

"தேவதைகள் நினைத்த காரியம் என்ன என்று கேட்டாலோ, அது ஈசரிடம் தங்களுக்குச் சேனாபதியான ஒரு குழந்தையை யடைந்து உலகத்தை அசுர பீடையிலிருந்து ரக்ஷிக்க வேண்டும்

---

* இங்கிருந்து இச்சருக்கம் முழுவதும், அடுத்த சருக்கத்தின் முதல் பாகமும் மொழிபெயர்க்காமல் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் கதையின் தொடர்ச்சி விடப்படவில்லை. வால்மீகி மகாமுனிவர் எழுதியுள்ளபடி அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் வடமொழி முதனூலில் பார்த்துக் கொள்ளவேண்டும்.

என்பதாம். அக்கருத்தை நிறைவேற்றும் பொருட்டுக் கங்கையின் வயிற்றில் ஈசுவரருக்கு ஒரு குழந்தை பிறந்தது. ஈசுவரர் அக்கினி ரூபமாகக் கங்கையை அடைந்து வெகு தேஜோமயமான ஒரு புத்திரனை அவளுக்கு அளித்தார். குழந்தை பிறந்ததைத் தேவர்கள் கண்டு தங்கள் மனோரதம் நிறைவேறினதாக எண்ணிக் கிருத்திகா நக்ஷத்திரங்களை அழைத்து அக்குழந்தையை எடுத்து வளர்க்கக் கேட்டுக்கொண்டார்கள். அப்படியே, அவர்களும் மிக்க ஆனந்தத்துடன் ஒப்புக்கொண்டு அக்குழந்தைக்குப் பால்புகட்டி வளர்த்து வந்தார்கள். சிறு வயதிலேயே அக்குழந்தைக்குக் கார்த்திகேயர் என்று பெயரிட்டுத் தேவதைகள் அவரைத் தங்களுக்குச் சேனாபதியாகப் பட்டாபிஷேகம் செய்வித்தார்கள். அவரும் ஒரு நிமிஷத்தில் அசுரர்களோடு போர் புரிந்து அவர்களுடைய தீச்செய்கைகளை அடக்கினார். கார்த்திகேயரிடம் பக்தி யுள்ளவர்கள் இவ்வுலகத்தில் எல்லாவித சம்பத்தையும் அடைகிறார்கள் என்பதற்குச் சந்தேகம் உண்டோ!"

## முப்பத்தெட்டாஞ் சருக்கம்:

### சகரனுக்குப் பிள்ளைகளுண்டானது.

கங்கையின் வரலாற்றை அவ்வாறு சொல்லிப் பின்பு விசுவாமித்திரர் இராமரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:—

சகரனுக்குப் பிருகுமாமுனி வரமளித்தல்.

"அயோத்தியில் முன்னொரு காலத்தில் சகரன் என்ற ஒரு அரசன் வெகு பராக்கிரமசாலியாகவும், தரும சிந்தையுள்ளவனாகவும், குடிகளைப் பாதுகாப்பதிலேயே கருத்துள்ளவனாகவும் இருந்தான். அவனுக்குப் பிள்ளை வேண்டும் என்ற ஆசை அதிகமாக இருந்த போதிலும் அவனுக்குப் புத்திர பாக்கியம் இல்லாமலே யிருந்தது. விதர்ப்பதேசத்து அரசன் குமாரியாகிய கேசினி என்றவள் அவனுடைய மூத்தமனைவி. அவள் வெகு

உண்மை பொருந்தியவளாயும் பதிவிரதையாயும் இருந்தாள். அவனுடைய மற்றொரு மனைவி காசியபருடைய குமாரியான ஒப்பற்ற ரூபமுடைய சுமதி என்பவள். இவ்விரு மனைவிகளோடும் சகரமகாராஜன் இமயபருவதஞ் சென்று பிருகுப் பிரசிரவணம் என்ற அம்மலைச் சாரலில் நூறு வருஷம் தவம் புரிந்தான். அங்கிருந்த பிருகு மகாரிஷி இவன் நூறுவருஷஞ் செய்த தவத்தால் சந்தோஷமடைந்து இவனுக்கு வரமளிப்பாராகி முன்னர்த் தோன்றி "உனக்கு ஒப்பற்ற அநேக புத்திரர்களுண்டாவார். உனது கீர்த்தியும் உலகமெங்கும் பரவும். உனது மனைவியர் இருவருள் ஒருத்திக்கு வம்சத்தை விளங்க வைக்கும் ஒரு புத்திரனுண்டாவான். மற்றொருத்திக்கு அறுபதினாயிரம் புத்திரர்களுண்டாவார்கள்" என்று வரமளித்தார். இப்படிப் பிருகு மகாரிஷி சொல்லலும் ராஜஸ்திரீகள் இருவரும் அஞ்சலி செய்துகொண்டு "மகாரிஷியே, நீர் சொல்லுஞ் சொல் வீண் போகாது. எங்களிருவருள் யாருக்கு ஒரு குழந்தை யுண்டாகும்; யாருக்குப் பல குழந்தைகள் உண்டாகும்" என்று கேட்டார்கள். இவர்களிப்படிச் சொல்லக் கேட்ட பிருகு மகாரிஷி இவர்களை நோக்கி "உங்களுக்குள யாருக்குக் குலத்தை நிலைநிறுத்திவைக்க ஒரு குழந்தை வேண்டும்? யாருக்கு ஒப்பற்ற பலமும் கீர்த்தியும் உத்ஸாகமுமுடைய பல குழந்தைகள் வேண்டும்? அதை நீங்களே சொல்லுங்கள்" என்றார். அப்பொழுது கேசினி என்பவள் குலத்தை விருத்தி செய்துவைக்க ஒரு குழந்தையை யாசித்தாள், கருடன் தங்கையாகிய சுமதி சிறந்த அறுபதினாயிரம் வீரர்களை மைந்தர்களாக அடையக் கேட்டுக் கொண்டாள். அவருமப்படியே வரமளிக்க அரசன் ஆனந்தமடைந்து தனது இரண்டு மனைவிகளுடனும் பிருகு மகாரிஷியை வலம்வந்து நமஸ்காரம் செய்து பட்டணத்துக்குத் திரும்பிவந்தான்.

அஸமஞ்சன்.

கொஞ்சகாலத்துக்குப் பிறகு அவனுடைய மூத்த மனைவியாகிய கேசினி அஸமஞ்சன் என்ற ஒரு குழந்தையைப் பெற்றாள். இரண்டாம் மனை

வியாகிய சுமதி என்பவள் ஒரு கர்ப்பபிண்டத்தை ஈன்ருள். அதிலிருந்த பலகருக்களை நெய்நிறைந்த பாத்திரங்களி விட்டுச் செவிலித்தாய்மார் பலர் வெகுகாலம் காப்பாற்றி வரும்போது அவற்றி னின்று அறுபதினுயிரம் குழந்தைகளுண்டாயின. எல்லாரும் வெகு செல்வத்துடன் வளர்ந்து இளமைப் பருவம் அடைந்து மிக்க அழகோடு விளங்கினுர்கள். அவர்களுள் மூத்தவனை அஸம்ஞ்சன் என்ற இராஜ குமாரன் கெட்ட செய்கையுள்ளவனுகிப் பொல்லாத பெயர் பெற்ருன். தினந் தோறும் இளங் குழந்தைகளைப் பிடித்துத் தூக்கிச் சரயூநதியில் போடுவதும் அவர்கள் சலத்தைக் குடித்துத் தத்தளித்துப் பரித பித்து முழுகும்போது வேடிக்கைப் பார்ப்பதும் சிரிப்பதுமாக இருந்தான். இவ்வளவு துஷ்டன் அரசன் மகனுக இருந்த போதிலும் இவன் கெட்ட காரியத்தைப் பொறுக்காமல் குடிகள் பரிதபித்தார்கள். அயோத்தி நகரமுழுவதும் இவன் செய்கை யைப் பார்த்து அலறிற்று. இதைச் சகர மகாராஜன் கண்டு, இனி இவனை நகரத்தில் வைத்திருக்கக்கூடா தென்றெண்ணிக் காட்டுக்குத் துரத்தி விட்டான்.

அம்சுமான்.

அஸமஞ்சனுக்கு அம்சுமான் என்ற ஒரு பிள்ளை பிறந் தான். அவன் தகப்பனைப்போ லல்லாமல் வெகு நீதிமானுகவும் பலவானுகவும் இருந் தான். அவன் நற்குணத்துக்காக எல்லாரும் அவனிடம் அன்பு பாராட்டி வந்தார்கள். அவன் எல்லாரிடத்திலும் வெகு அன்பாகப் பேசுபவன்.

நெடுநாள் சென்ற பிறகு சகரமகாராசனுக்கு அசுவமேத யாகம் பண்ணவேண்டு மென்று ஆலோசனை தோன்றிற்று. அவன் தனது புரோகிதர் முதலான எல்லாரையும் சேர்த்து ஆலோசித்து யாகஞ் செய்யத் தொடங்கினன்.

## முப்பத்தொன்பதாஞ்சருக்கம்:

### சகரபுத்திரர்கள் பூமியைத் தோண்டியது.

சகரன் அசுவமேதம்.

விசுவாமித்திரர் இவ்வண்ணம் சொல்லி நிறுத்தினவுடன் இராமர் மிக்க சந்தோஷத்துடன் அவரைப் பார்த்து "எனது வமிசத்து முன்னவரான சகரர் எவ்வாறு யாகத்தை நடத்தினார், என்பதை விஸ்தாரமாகக் கேட்க ஆவலுடனிருக்கிறேன்" என்றார். உடனே விசுவாமித்திரரும் புன்சிரிப்போடு "கேளும், இராகவரே, சகரன் வரலாற்றை நான் நன்றாகச் சொல்லுகிறேன். இரண்டு பக்கங்களில் தனித்தனி மிகவும் ஓங்கிவளர்ந்து இடையில் தடையொன்றுமில்லாமையால் ஒன்றை யொன்று பார்ப்பதுபோல விளங்குகிற விந்திய பருவதததுக்கும் சிவபிரானுக்கு மாமனாரான இமவத் பருவதத்துக்கும் மத்தியில் அந்த யாகம் நடந்தது. பெரும்பாலும், இந்த இரண்டு மலைகளுக்கும் இடையிலிருக்கும் பிரதேசம் யாகஞ் செய்வதற்குச் சிறந்த இடமன்றோ! அந்த யாகத்தின் அசுவத்தை விடுதலும், சகரனது கட்டளையின்படி அம்சுமான் என்ற இராஜகுமாரன் அம்பும் கையுமாகப் பெரிய இரதத்தின்மேல் ஏறிக்கொண்டு அக்குதிரையை ரக்ஷிக்கும்பொருட்டு அதன்பின் சென்றான். அந்த அசுவமேத யாகத்தைக் கெடுக்க எண்ணங்கொண்ட இந்திரன், ஒருநாள் ராக்ஷச உருவங்கொண்டு ஒருவருக்குந் தெரியாமல் வந்து, யாகத்துக்காக ஓட்டப்பட்ட குதிரையைத் திருடிக்கொண்டு, போய்விட்டான்.

சகரன் யாகம் நின்றது.

இப்படிக் குதிரை போய்விடவே யாகத்தை நடத்திவைக்கும் புரோகிதர்கள் எல்லாரும் சகரனைப் பார்த்து, "மன்னவரே, குதிரையைத் திருடிக் கொண்டு போனவனைப் பிடித்து வதைக்க வேண்டும். குதிரையை மீட்டுக்கொண்டு வரவேண்டும். அப்படிக்கில்லாத பட்சத்தில் நமக்கெல்லாம் கஷ்டகாலம் வந்துவிடும்.

யாகம் நிற்காமல் நடக்கும் வழி என்ன உண்டோ அதைத்தேடுங்கள். இல்லாத பட்சத்தில் வெகு தீங்கு வரும்" என்றார்கள்.

குதிரையைத் தேட அறுபதினாயிரம் பிள்ளைகளைச் சகரன் ஏவியது.

இவ்விதமாக வேதியர்கள் சொன்னதை அரசன் கேட்டுத் தனது அறுபதினாயிரம் குமாரர்களைக் கூப்பிட்டு "எனது வீரக் குழந்தைகளே ராக்ஷசர் நமது அசுவத்தைக் கொண்டுபோயிருப்பார்கள் என்பதாக நான் நம்பவேயில்லை. ராக்ஷசர்கள் நமது யாகத்தை இப்பொழுது கெடுப்பதற்குக் காரணமேயில்லை. ஏனெனில், பரிசுத்தமான அநேகவித மந்திர பந்தனங்களோடு குதிரை புறப்பட்டது. மந்திரத்தை மீறி அரக்கர்கள் வந்திருக்க முடியாது. ஆகையால், நீங்கள் எல்லாரும் இந்த க்ஷணமே சென்று குதிரையைத் தேடுங்கள். கடல் சூழ்ந்த விஸ்தாரமான உலகத்தில் ஓரிடமும் விடாமல் ஓடித்தேடிக் குதிரையைக் கொண்டுவந்து நிறுத்துங்கள். பூலோகத்தின் யோஜனைகளை ஆளுக்கொன்றாகப் பங்கிட்டுக்கொண்டு புரவியைப் பாருங்கள். குதிரையைக் கொண்டுபோனவனைக் கண்டு பிடிப்பதற்காகப் பாதாளலோகம் வரையில் பூமியைத் தோண்டித்தான் ஆகவேண்டுமென்றாலும் அப்படியுஞ் செய்யுங்கள். நானோ இந்த யாகத்துக்காகச் சங்கல்பம் செய்துகொண்டுவிட்டபடியால் இவ்விடம்விட்டுப் புறப்படக்கூடாது. குதிரையைக் காணுமளவும் எனது பேரனுடனும், உபாத்தியாயர்களுடனும் இந்த யாகசாலையில் தானே யிருக்கின்றேன்" என்றான்.

அதனால் பூமிக்கு உண்டான சங்கடம்.

இவ்வாறு தந்தையால் கட்டளையிடப்பட்ட இராஜகுமாரர்கள் வெகு உத்ஸாகத்துடன் குதிரையைத்தேட ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவரும் ஒரு யோஜனைதூரம் தம்பாகமாக வைத்துக்கொண்டு வச்சிராயுதத்துக் கொப்பான தமது நகங்களாலும் ஆயுதங்களாலும் பூமியை வெட்ட ஆரம்பித்தார்கள். இடிக்கொப்பான சூலங்களினாலும் பயங்கரமான கலப்பைகளினாலும் சில சில இடங்களை குத்தியும் உழுதும் பூமியைப்

பேதித்தார்கள். இவ்வாறு பிளக்கப்படும்போது நான்கு பக்கங்களிலேயும் உண்டான பெருஞ் சத்தம் பூமியேகதறினாற்போலிருந்தது. நாகர்களிலும், அசுரர்களிலும், அரக்கர்களிலும், பலர் இம்சிக்கப்பட்டு அலறினார்கள். அவ்வளவில் அடங்காமல் மற்றும் பல பிராணிகளும் மடிந்தன. கேளும், இராஜகுமாரரே, அவர்கள் எல்லாரும் இங்ஙனம் அறுபதினாயிரம் யோசனைதூரம் பூமியைப் பாதாளலோகங் காணப்படும்படி பிளந்தெறிந்தார்கள். இவ்வறுபதினாயிரம் சகர குமாரர்களும் மலைகள் நெருங்கிய ஜம்பூத்வீபம் முழுவதையும் இவ்வாறு தோண்டிவிட்டார்கள்.

தேவர்கள் பயமுறுதல்.

இவர்கள் செய்த அதிசாகசமான வேலையைப் பார்த்துத் தேவர்கள், கந்தர்வர்கள், அசுரர்கள், நாகர்கள் எல்லாரும் நடுநடுங்கிப் பிரமதேவரிடம் ஓடி வணங்கி வாடின முகங்களோடும் வெகுபயத்தோடும் அவரைநோக்கி "கடவுளே, சகர மகாராஜாவினுடைய புத்திரர்கள் பூமி முழுவதையும் பிளந்தெறிகிறார்கள். இப்படி வெட்டுவதனால் எத்தனையோ பெரியவர்களை அவர்கள் கொன்று விடுகிறார்கள். எத்தனையோ பிராணிகள் மாண்டுபோயின. சந்தித்தவர்களை யெல்லாம் 'இவன்தான் நமது யாகத்தைக் கெடுத்தவன் ; இவன்தான் குதிரையைக்கொண்டு ஒளித்திருக்கிறவன்; என்று சொல்லி வதைத்துக்கொண்டே யிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள்.

---

## நாற்பதாஞ்சருக்கம் :

---

### சகரகுமாரர்கள் கபிலரைக்காணல்.

பிரமதேவர் தேவர்களைத் தேற்றுதல்.

இவ்வாறு தேவர்கள் முதலியோர் சொன்னதைப் பிரமதேவர் கேட்டு, யமனைக்கண்டு நடுங்கிப் பயந்து ஓடி வந்தவர்கள்போல் காணப்படும் அவர்கள் எல்லாரையும் பார்த்து "நீங்கள் பயப்படவேண்டாம். இந்தப் பூமிதேவி, எல்லாம் அறிந்தவ

ரான வாசுதேவருடைய மனைவி. அவரோ கபிலமுனி வடிவங் கொண்டு இந்தப் பூமிமுழுவதையும் எப்பொழுதும் தாங்கிவரு கிறார். அவர்முன் அவருடைய கோபாக்கினியினாலே இந்தச் சகரன்மக்கள் அறுபதினாயிரம் பெயர்களும் சாம்பலாகப் போய் விடுவார்கள். இவ்வண்ணம் பூமிபடுகிற இம்சையும் அற்ப ஆயுளுள்ள, இவ்வரச குமாரர்களுக்கு வரப்போகிற நாசமும் முன்னாலேயே ஊகிக்கப்பட் டிருக்கின்றன" என்றார். பிரமதே வர் சொன்னதை முப்பத்து முக்கோடி தேவதைகளும் கேட்டு, வெகு ஆனந்தப்பட்டு விசாரம் ஒருவாறு நீங்கித் தங்கள் தங்க ளிருப்பிடஞ் சென்றார்கள்.

சகர குமாரர்கள் குதிரையின்றித் திரும்பியது.

சகரமகாராஜனுடைய குமாரர்கள் பூமியைப் பிளந்து கொண்டு போகும்போது இடிவிழுந்தாற்போல் ஒரு பெரிய சத்தம் கேட்டது. பூமிமுழுவ தும் தேடிவிட்டதாக அவர்களுக்குத் தோன்றி விட்டது. அவர்கள் எல்லாரும் உடனே தங் கள் தந்தையிடம் திரும்பிவந்து அவனைப்பார்த்து "எங்கள் தந் தையே, நாங்கள் பூமி முழுவதும் குடைந்து பார்த்து விட்டோம். தேவர்கள், அசுரர்கள், ராக்ஷஸர்கள், பிசா சர்கள், நாகர்கள், கின்னரர்கள் முதலான பலசாலிகள் பலரையும் வதைசெய்தும் விட்டோம். என்றாலும் இதுவ ரையில் கெட்டுப்போன குதிரையாவது அல்லது குதிரை யைக் கொண்டுபோன திருடனாவது எங்களுக்கு அகப்பட வில்லை. நாங்கள் இனிமேல் யாது செய்வது? கட்டளை யிடுகிற படி நடக்கச் சித்தராயிருக்கிறோம்" என்றார்கள்.

சகரன் சினங் கொண்டது.

இதைக்கேட்ட சகரன் மிகச் சினந்து "குதிரை யில்லாமல் நீங்கள் மறுபடி திரும்பி வரவேண்டாம். இன் னும் பூமியைப் பிளவுங்கள். எப்படியாவது யாகக் குதிரையைக் கொண்டு வந்து என் யாகத்தை முடித்து வையுங்கள்" என்றான்.

இப்படி இவன் சொல்லிவிட்டவே மறுபடியும் அந்த அறு

மீண்டும்குதிரையைத் தேடுதல்.

பதினாயிரம் பிள்ளைகளும் பாதாள லோகத்தை நோக்கி விரைந்தோடினார்கள். அங்கு இவ்வுலகத்தைத் தன் தலைமேலே தாங்கிக்கொண்டு பெரிய மலைபோல் நிற்கும் விரூபாக்ஷம் என்ற திக்கஜத்தைக் கண்டார்கள். அது எப்பொழுதாவது அதிக சிரமத்தால் இளைப்பாறும் பொருட்டுத் தலையை அசைத்தால் அப்பொழுதுதான் பூகம்பம் உண்டாகிறதென்று ஜனங்கள் சொல்லுகிறது வழக்கம். அந்த விரூபாக்ஷ கஜத்தை வலம் வந்து அதனடியில் பல யோஜனை தூரம் தோண்டிப் பாதாள லோகம் முழுதும் பார்த்தார்கள். அதேபிரகாரம் தெற்கு, மேற்கு, வடக்கு என்ற மூன்று திக்குகளிலும் சென்று ஆங்காங்கிருந்த திக்கஜங்களாகிய மகாபத்மம், சௌமனசம், பத்திரம் என்ற திக்கஜங்களை வணங்கி நமஸ்காரம் பண்ணி அவைகளின் கீழே பிளந்துக் கொண்டு சென்றும் பார்த்தார்கள். குதிரை அகப்படுகிறவழியாயில்லை. அதன் மேலவர்கள் கோபத்தோடு தோண்டிக்கொண்டு வடகிழக்குத் திசையில் தேடிப் போகும்போது அங்கு ஒரு முனிவர் உட்கார்ந்துகொண்டு தவம்புரியக் கண்டார்கள்.

கபிலர் ஹூங்காரம்.

அவர் தாம் கபிலமுனி வடிவங் கொண்ட வாசுதேவர். அது அவர்களுக்குத் தெரியாது. குதிரையைக் கண்டு பிடிக்க வேண்டிய ரோஷம் ஒன்றே அவர்களுக்கு மேலிட்டிருந்தது. அவர்கள் இத்தனை நாள் தேடியகப்படாத குதிரை அங்கு மேய்ந்துகொண்டிருக்கக் கண்டு அடக்க முடியாத சந்தோஷ மடைந்தார்கள். குதிரை மேய்ந்து கொண்டிருப்பதையும் அதன் முன்பு ஒரு முனிவர் உட்கார்ந்திருப்பதையும் அவர்கள் பார்த்தாலும் 'இவன் தான் நமது குதிரையைக் கொண்டுவந்தவன்' என்று எண்ணி அளவிறந்த கோபங் கொண்டார்கள். தங்கள் யாகம் அத்தபசியால் கெட்டது என்ற துக்கம் மூடவே, அவர்கள் கைகளில் மரத்தையும், மண்வெட்டியையும், கலப்பையையும், கல்லையும் எடுத்துக் கொண்டு "நில்லு நில்லு! துஷ்டா, நீயா எங்கள் யாகக் குதிரையைத் திருடிக்கொண்டு வந்தாய்! விட்டோமா

உன்னை! சகர மகாராஜாவுக்குப் பிள்ளைகள் நாங்கள் அறுபதினாயிரம் பேர் என்பது உனக்குத் தெரியாதா" என்று சொல்லிக் கொண்டு கபிலரை ஒரே அடியாய் அடிக்க ஓடி வந்தார்கள். அம்மாமுனிவர் இவர்கள் செய்த சத்தத்தைக் கேட்டுக் கண்ணைத் திறந்துபார்த்து வெகு கோபத்துடன் "ஹூம்" என்று ஒரு ஹூங்காரம் பண்ணினார். உடனே அந்தச் சகரன் மக்கள் எல்லோரும் நிகரற்ற தபோநிதியான கபிலமகாரிஷியின் கோபத்தீயால் ஒரு பெரிய சாம்பற் குவியலாகச் செய்யப்பட்டார்கள்.

---

## நாற்பத்தோராஞ்சருக்கம் :

---

### சகரனுடைய யாகத்தின் ஸமாப்தி.

அம்சுமான் குதிரையைத் தேட ஏவப்பட்டது.

தனது அறுபதினாயிரம் பிள்ளைகளுஞ் சென்று நெடுங் காலமாகியும் திரும்பி வராமலிருக்கக் கண்டு சகரமன்னன் வெகு பராக்கிரமத்தோடும் காந்தியோடும் விளங்கும் தனது பேரனை அம்சுமானைக் கூப்பிட்டு அவனைப் பார்த்து "நீ மகா சூரன். எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி யடைந்தவன். நமது வம்சத்துக்குள்ள குணங்களில் கொஞ்சமாவது குறைந்தவனல்லை. நீ இப்பொழுது புறப்பட்டுப் போய் உனது சிறிய தந்தைகளுக்கு என்ன நேர்ந்தது, குதிரையும் என்ன ஆயிற்று, இவைகளை அறிந்துவா. பூமிக்குள் பலமான பெரிய ஜந்துக்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகள் உபத்திரவம் பண்ணினால் அவைகளை வதைக்கும் பொருட்டு உன் கத்தியையும் வில்லையும் கையில் எடுத்துப்போ. வணங்க வேண்டியவர்களைக் கண்டால் அவர்களுக்கு வணங்கி மரியாதை செய். எதிர்க்கிறவர்களை வதை. நீ உத்தேசித்துப் போகும் காரியத்தைச் செவ்வையாக முடித்து யாகத்தை நிறைவேற்றி வைக்கும் வழியைத் தேடிக்கொண்டு வா" என்றான்.

இவ்வாறு சொல்லியதைக் கேட்ட அம்சுமான் என்

அம்சுமான் குதிரையைக் கண்டது.

பவனும் உடனே கையில் வில்லும், கத்தியும் பிடித்து ஒரு நிமிஷங்கூடத் தாமதியாமல் கிளம்பிவிட்டான். அரசன் சொல்லியிருந்த வழியே போய்த் தனது சிறிய தந்தைகள் குடைந்திருக்கும் துவாரத்தைக் கண்டான். அதன் வழியே ஓடிப் பூமியின் ஒரு முடிவில் போய்ச் சேர்ந்து அங்குத் தேவர்களாலும் அசுரர்கள், கந்தர்வர்கள் முதலான எல்லாராலும் வணங்கப்படும் திக்கஜம் ஒன்றைக் கண்டு அதை வலம் வந்து அதனுடைய க்ஷேமத்தை விசாரித்துத் தனது பாட்டனார் குதிரையும் தனது சிறிய தகப்பன்மார்களும் அடைந்த கதி உனக்குத் தெரியுமா என்று கேட்டான். அந்தத் திக்கஜமும் "அம்சுமானே, நீ போகிறகாரியம் சரிவரமுடிய நீ வெற்றியோடு விரைவில் திரும்பி வருவாய்" என்று சொல்லிற்று. இப்படி இந்தத் திக்குயானை சொல்லியதைக் கேட்டு அம்சுமான் கொஞ்சம் தைரிய மடைந்து மற்றைத் திக்குகளுக்குஞ் சென்று அங்கங்கிருந்த திசையானைகளை வணங்கிக் கேட்டு அவற்றின் ஆசீர்வாதமும் பெற்றுக் கடைசியாகத் தனது சிறிய தந்தைகள் சாம்பற் குவியலாயிருக்குமிடம் வந்து சேர்ந்தான். அதைக்கண்ட அம்சுமான் துக்கம் மிகுதியாகப் பொங்கப்பெற்று அவர்களுக்கு வந்த ஆபத்தை நினைத்து வாய்விட்டுக் கதறத் தலைப்பட்டான். அந்த விடத்தில் யாகக் குதிரை தனியே மேய்ந்துகொண்டிருந்ததையுங் கண்டான்.

கருடபகவான் அம்சுமானுக்கு அவன் முன்னோர்களைக் கரையேற்ற உபாயங் கூறுதல்.

இவ்வண்ணம் மாண்டிருக்கும் தனது சிறிய தந்தைகளுக்கு வாஸோதகம் திலோதகம் முதலிய தருப்பணங்கள் பண்ணி அவர்களை நற்கதி அடைவித்தற்காக அங்கே வெகு தூரம் தேடியும் அவனுக்கு அங்கு நல்ல தீர்த்தம் கிடைக்கவில்லை. இப்படி அவன் அலைந்து திரியும்போது அங்கு இறந்தவர்களுக்கு மாமனும் வாயு வேகமுள்ளவனுமாக கருட பகவானைக் கண்டான். பக்ஷி ராஜனான கருடபகவானும் இவ்வண்ணம் துக்

கப்படும் அம்சுமானைப் பார்த்து "இராசசிங்கமே, நீ துக்கப்பட வேண்டாம். உலகத்தின் நன்மைக்காகவே இவர்கள் தகிக்கப் பட்டார்கள். கபிலர் என்ற மகாரிஷியால் இவ்வாறு சாம்பலா கச் செய்யப்பட்ட இவர்களுக்குச் சாதாரண சலத்தால் தருப் பணம் முதலியவைகள் செய்வித்தால் பிரயோசனமில்லை. இம வான் என்னும் பருவத ராஜனுடைய மூத்தமகளாகிய கங்கை என்பவள்தான் சாம்பலாய்ப் போன இவர்களை நல்ல கதியில் சேர்த்து வைக்க வேண்டும். எப்பொழுது கங்கை என்னும் மகாநதி இந்தச் சாம்பலின்மேல் வந்து விழுமோ அப்பொழுது தான் இந்த அறுபதினாயிரம் பெயர்களும் சுவர்க்கலோகம் சேர் வார்கள். ஆகையால், நீ இப்பொழுது குதிரையை மட்டும் ஓட்டிக்கொண்டு போகலாம்; உனது பாட்டனுடைய யாகத்தை முடித்துவைக்கலாம்" என்றார்.

சகரன் யாகம் முடிவுபெற்றது.

இப்படி வைனதேயன் சொன்னதை அம்சுமான் கேட்டு அதற்குமேல் ஒன்றும் அதிகமாகச் செய்யத் தெரியாதவனாய்க் குதிரையை விரைவாக ஓட் டிக்கொண்டு திரும்பிவந்தான். தீக்ஷை பண் ணிக்கொண்டு காத்திருக்கும் தனது பாட்டனிடம் வந்து கரு டன் சொன்ன சங்கதியைத் தெரிவித்தான். இதைக்கேட்டுச் சகரமகாராஜாவும் வெகு துக்கப்பட்டு, ஆரம்பித்த யாகத்தை நிறுத்த விதியில்லையாகையால் அதைச் செவ்வையாகச் சாஸ் திரப்பிரகாரம் செய்து முடித்தான். அதன்மேல் தனது நகரத் துக்குத் திரும்பிவந்து, எவ்வாறு கங்கையைக் கொண்டுவந்து தனது அறுபதினாயிரம் பிள்ளைகளையும் கரையேற்றுகிறது என்று அவன் வெகுவாக ஆலோசித்தும், அவனுக்கு யாதோரு பாயமும் புலப்படவில்லை. அதேசிந்தையாய் முப்பதினாயிரம் வருஷம் இராச்சிய பரிபாலனம் செய்துவிட்டுச் சகரன் சுவர்க்க லோகஞ்சென்றான்.

## நாற்பத்திரண்டாஞ்சருக்கம்:

### பகீரதன் வரம்பெற்றது.

திலீபன். சகரன் காலஞ்சென்றபிறகு, அவனுடைய மந்திரிகள் மகா தர்மிஷ்டனான அம்சுமானை இராஜாவாக அபிஷேகஞ் செய்தார்கள். அம்சுமானும் வெகு விமரிசையாக நாடாண்டான். அவன் குமாரன் திலீப னென்பவன். அம்சுமான் தனது மகனுக்குப் பட்டஞ் சூட்டிவைத்துத் தவம்புரிய இமய பருவத சிகரத்துக்குச் சென்றான். அங்கு அவன் முப்பத்தீராயிர வருஷம் தவஞ் செய்து பல தவங்களின் சித்தியைப் பெற்று மிக்க புகழடைந்தும் கங்கையைக் கொண்டு வர முடியாமலே சுவர்க்கலோகமடைந்தான். திலீப மகாராஜாவும் தனது முன்னோர்களுக்கு வந்த கதியையும் அவர்கள் இன்னவாறு செய்தால் நற்கதி பெறுவார்கள் என்பதையுங் கேட்டு வெகு துயரமடைந்து ஒரு வழியுந் தோன்றாமல் மயங்கினான். எவ்வாறு கங்கையைப் பூமியின்கண் இறக்குகிறது, எவ்வாறு அந்நதியை பாதாளலோகம் கொண்டுபோகிறது, எவ்வாறு தனது பாட்டன்மார்களுக்குத் தருப்பணம்பண்ணி அவர்களைக் கரையேற்றி வைக்கிறது என்பதே எப்பொழுதும் அவன் கவலையாக இருந்தது. அவன் இப்படிக் கவலையுற்றிருக்கும்போது அவனுக்குப் பகீரதன் என்றொரு பிள்ளை பிறந்தான். திலீப மகாராஜனும் அநேகவித யாகங்களைச் செய்தான்; முப்பதினாயிர வருஷகாலம் அரசாண்டு வந்தான். கங்கையைக் கொண்டுவரும் வழிதெரியாமல் அதேகவலையால் நோயடைந்து திலீபன் பகீரதனுக்கு இராச்சிய பட்டாபிஷேகஞ் செய்து வைத்துவிட்டுக் காலஞ்சென்றான்.

பகீரதன். இவ்வாறு திலீபமகாராஜா இந்திரலோகஞ் சென்றபின் பகீரத மன்னன் அரசாட்சி செய்யலானான். அவன் வெகு தர்மசிந்தையுள்ளவன். அவன் புத்திரனை அடைய வெகு ஆவலுற்றவனாகி யிருந்தும் புத்திர பாக்கிய மில்லாதவனாகி யிருந்தான். நாம் நமது காலத்தில் கங்

கையைக் கொண்டுவந்தாலல்லது நமது முன்னோர்களைக் கடைத்தேறச்செய்ய வேறு வழியில்லை என்று பகீரதன் ஊகித்துக்கொண்டான். உடனே அவன் தனது இராச்சியத்தை மந்திரிமார்களிடம் ஒப்பித்துவிட்டுக் கங்கையைக் கொண்டுவரும்படி தவம்புரிய எண்ணி இமயமலை சென்றான். அவ்விடத்தில் கோகர்ணம் என்ற தாழ்வரையில் கைகளைத் தூக்கினபடியே பஞ்சாக்கினி மத்தியில் நின்று ஐம்புலன்களையும் அடக்கி மாதத்துக் கொருமுறை புசித்துக்கொண்டு அநேக ஆயிரவருஷ காலம் கடுமையான பெருந்தவஞ் செய்தான். அவனது நிஷ்டையின் கடுமையைக் கண்டு, எல்லாப் பிராணிகளுக்கும் தலைவரான பிரமதேவர் வெகு சந்தோஷம் அடைந்து எல்லாத் தேவகணங்களோடும் அவ்விடத்தில் வந்து தோன்றித் தவத்திலிருக்கும் மகாத்மாவாகிய அந்தப் பகீரத மன்னனைப் பார்த்து "மன்னவனே உன்னுடைய தவத்தால் நான் பிரீதி யடைந்திருக்கிறேன். வெகு நியமத்தோடு தவம்புரிகிறாய். உனது இஷ்டத்தை வெளியிடு" என்றார்.

பகீரதன் தவம் புரிதல்.

இதைப் பகீரதன் கேட்டு அஞ்சலிசெய்துகொண்டு "உலகத்தை யெல்லாம் உண்டாக்கின கடவுளே, எனது தவத்தால் நீர் சந்தோஷமடைந்தது உண்மையானால், எனதுதவம் வீண் போகாதென்பது நிச்சயமானால், எனது முன்னோர்களான சகரகுமாரர்கள் நற்பதவி அடையவேண்டும். கங்காநதியின் ஜலம் அவர்கள் சாம்பலாயிருக்குமிடம் வந்து பாய்ந்து அவர்களைச் சுவர்க்கலோகமேற்றி வைக்கவேண்டும், எனது குலமும் சந்ததியற்றுப் போகாமல் எப்பொழுதும் இவ்வுலகத்தில் விளங்க வேண்டும். இதுதான் நான் வேண்டிக்கொள்ளுவது" என்றான்.

இதைக்கேட்ட பிரமதேவர் வெகு மதுரமாகவும் மனோகரமாகவும் மங்களமாகவும் பின்வருமாறு மறுமொழி அளித்தார். "பகீரத வேந்தே, உனது மனோரதம் வெகு சிறந்ததாக இருக்கிறது.

பிரமதேவர் வரமளித்தல்.

அது குறைவில்லாமல் நடக்கப்போகிறது. இக்ஷ்வாகுகுலத்தை விருத்திசெய்ய விரும்பியவனே, உனக்கு க்ஷேமம் உண்டாகும். இமவானுடைய மூத்த குமாரியான இக்கங்கையானவள் பூலோகத்தில் இறங்கினால் இவள்வேகத்தைத் தாங்கப் பூமிதேவியால் முடியாது. ஈசுவரர் ஒருவர் தாம் கங்கையைத் தம் தலையில் தாங்கிக் கீழே இறக்கிவிடவேண்டும். அவர் அப்படிச் செய்வாரானால் கங்கை பூமியில் இறங்க ஆக்ஷேபமில்லை" என்று சொல்லிவிட்டு கங்கையிடத்தில் அரசனைப்பற்றிப் புகழ்ந்து பேசிப் பிரமதேவரும் தேவலோகஞ் சென்றார்.

## நாற்பத்துமூன்றுஞ்சருக்கம் :

### கங்கை இறங்குதல்.

*கங்கை சிவபெருமான் தலையில் இறங்கியது.*

தேவதேவரான பிரமதேவர் இவ்வாறு சொல்லித் தமது உலகஞ் சென்றபின் பகீரதமகாராஜன் விடா முயற்சியைக் கைக்கொண்டவனாகித் தனது கட்டைவிரல் நுனியால் பூமியில் நின்று கொண்டு ஒரு வருஷம் ஈசுவரரை உத்தேசித்துக் கடுந்தவம்புரிந்தான். சரியாய் ஒரு வருஷம் ஆனபின், உலகத்திலுள்ள எல்லாராலும் வணங்கப்பட்ட உமாபதியும், பசுபதியுமான சிவபிரான் பிரசன்னராகி அரசனைப் பார்த்து "மனிதர்களுக்குள் உத்தமனே, உன்னுடைய தவத்தால் என் உள்ளங் குளிர்ந்தது. உனது மனக் கவலையை நான் நீக்கிவிடுகிறேன். கங்கையை என் சிரத்தால் உறுதியாகத் தாங்கிக்கொள்ளுகிறேன்" என்றார். கேளுங்கள் குழந்தைகளே, அதன் பின்பு இமய பருவதத்தின் மூத்த குமாரியாகிய கங்கை தனது உருவத்தை வெகு விசாலமாகச்செய்துகொண்டு வெகுவேகமாக ஆகாசத்திலிருந்து சிவபெருமான் தலையில் இறங்கினாள். இறங்கும்பொழுதே கொஞ்சஞ் செருக்கடைந்து தான் பாதாளலோகம் போகும் தனது வெள்ளத்தின் வேகத்தால் ஈசுவரனையும் அடித்துக் கொண்டு போகலாம் என்று கெட்ட கருத்துக்கொண்ட

டாள். எல்லாருள்ளத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கண்டறியும்சிவபெருமான் அவள் வெகு செருக்காகக்கொண்ட கருத்தை அறிந்து கோபங்கொண்டு அவளையடக்க நிச்சயித்தார். அந்தக் கங்கை அவ்வாறு எண்ணிக்கொண்டு சிவனார் சடையில் வந்து வேகமாக இறங்கினதும் என்ன முயன்று பார்த்தும் கீழே யிறங்க வழியில்லாமல் அங்கேயே சுழன்று கொண்டு சடைக்குள் அடங்கி நின்றாள். அநேக வருஷம் உமாபதியின் சடைகளுள் அடங்கி நிற்கும்படியாக வந்ததேயல்லாமல் அதை விட்டு அங்குமிங்கும் சலிக்க முடியவேயில்லை.

கங்கை ஏழு நதிகளாக ஓடியது.

தான் இவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டு வந்த கங்கையின் கதி இவ்வாறு முடியவே, விடா முயற்சியைக் கைக்கொண்ட பகீரதன் திடுக்கிட்டு மறுபடி தவம் புரியலானான். சிவபெருமானும் அவனிடம் உள்ளங்குளிர்ந்து, கங்கையைத் தம் தலையைவிட்டு இறக்கிப் பிந்துசரோவரத்தின் கண் செலுத்தினார். அவ்விதமாகச் செலுத்தப்பட்ட கங்கை ஏழு நதிகளின் உருவங் கொண்டாள். இவைகளில் மூன்று நதிகள் ஹ்லாதினீ, பாவநீ, நளினீ என்னும் பெயருள்ளவைகளாகக் கிழக்குமுகமாக ஓடின. ஸுசக்ஷு, ஸீதா சிந்து என்ற மூன்று நதிகள் மேற்குமுகமாகச் சென்றன.

கங்கா நதி

ஏழாவது நதி கங்கை என்ற பெயருடன் பகீரத மன்னன் போகும் வழியே ஓடி வந்தது. அவனும் இரதத்தி லேறிக்கொண்டு வெகு வேகமாக முன் சென்றுகொண்டிருந்தான். இப்படி கங்கையானவள் முதலில் ஆகாசத்திலிருந்து சிவபிரான் தலையில் விழுந்து அவ்விடத்தை விட்டுப் பூமியில் குதித்துப் பிறகு பகீரதனுடைய இரதத்தை அவனது தபோமகிமையால் பின் தொடர்ந்தாள். கங்கை ஓடி வரும் சத்தம் இடிமுழக்கம்போல விளங்கிற்று. அதன் நீருடன் வந்த மீன்களாலும், முதலைகளாலும், ஆமைகளாலும் பூமி சோபித்தது. இந்த வேடிக்கையைப் பார்க்கத் தேவர்கள், ரிஷிகள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள் முதலான எல்லாரும் தங்கள் தங்கள் யானை, குதிரை, தேர், விமானம் முதலிய வாகனங்

களிலேறிக்கொண்டு விரைவாக வந்து சேர்ந்தார்கள். யாவரும் வியக்கும்படி கங்கை கீழிறங்குகிறதைப் பார்ப்பதற்கு வந்த தேவர்களின் தேககாந்தியாலும், ஆபரண காந்தியாலும், ஆகாயம் அநேக சூரியர் ஏககாலத்தில் தன்னிடம் உதிக்கப் பெற்றது போல விளங்கிற்று. ஆகாசத்தில் கங்கை இறங்கும்போது மீன் துள்ளுதலாலும் நாகங்கள் ஓடுதலாலும் முதலைகள் நீந்துதலாலும் உண்டான தோற்றம் ஆகாசத்தில் மின்னற் கொடி பாய்வது போல் பிரகாசித்தது. ஜலம் 'சோ' என்று ஆகாசத்திலிருந்து விழும்பொழுது பால் கொட்டுவதுபோல் விளங்கிற்று. நுரைகள் வெள்ளையாகப் பரவுவது, சரத்காலத்து மேகங்களும் அன்னப்பறவைகளும் அவ்விடத்தில் சஞ்சாரம் பண்ணுவது போலிருந்தது. கங்கை பூமியிலிறங்கினதும், சில இடங்களில் வேகமாகவும், சில இடங்களில் கோணலாகவும், சில இடங்களில் நேராகவும், சில இடங்களில் கிடுகிடு என்று கீழே விழுந்து கொண்டும், சில இடங்களில் உயர எழும்பித் தெறித்துக்கொண்டும், சில இடங்களில் மெதுவாகவும், சில இடங்களில் வழிந்து தளும்பித் தத்தளித்துக்கொண்டும், சில இடங்களில் எதிர்த்து ஓடி அலையோடு அலை மோதிக்கொண்டும், பூமியில் ஓடலாயிற்று. முதலில் ஆகாசத்திலிருந்து சிவபிரான் தலையில் தங்கிப் பூமியிற் குதித்த கங்கா நதியின் தெளிவான சலத்தைத் தேவர்கள், முனிவர்கள், கந்தர்வர்கள், பூலோகத்தில் வசிப்பவர்கள் எல்லாரும் புண்ணிய தீர்த்தமென்று பெரிதும் பாராட்டினார்கள்; ஈசுவரனுடைய திருமேனியிலிருந்து விழுந்த தீர்த்தமாகையால் அதை எல்லாப் பாவங்களையும் போக்கும் மகிமையுள்ளதென்று கொண்டாடினார்கள். சிற்சில சாபத்தினால் சுவர்க்கலோகத்தை இழந்து பூமியில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் யாவரும் அதில் ஸ்நானம் பண்ணித் தங்கள் பாவங்களைப் போக்கி மறுபடி சுவர்க்க லோகத்தை அடைந்தார்கள். அந்த அழகான தீர்த்தத்தைக் கண்டு எல்லாப் பிராணிகளும் உள்ளங்குளிர்ந்து அதில் ஸ்நானம் பண்ணித் தங்கள் பாவத்தைப் போக்கிக்கொண்டார்கள். பகீரத மன்னனும் தன்

இரதமேறி முன்செல்லக் கங்கை நதியும் அவன் போகும்வழியே பின் சென்றுகொண்டிருந்தது. கங்கையைத் தொடர்ந்து கொண்டு அதன் நீரோட்டத்தில் தேவர்கள் கந்தர்வர்கள் முத லான எல்லோரும் அதன் ஒப்பற்ற அழகைப் பார்த்துக்களித் துக்கொண்டே அதனுடன் சென்றார்கள். நீர்வாழுயிர்களும் விடாது அதனுடன் சென்றன. எவ்வழிப் பகீரதமன்னன் சென்றானே அவ்வழியே எல்லாப் பாவங்களையும் போக்கும் கங்கையும் தொடர்ந்து ஓடிற்று.

ஜாந்ஹவி.

இப்படி ஓடிக்கொண் டிருக்கும்போது வழியில் ஜந்ஹு என்றொரு புகழ்பெற்ற மாமுனிவர் யாகஞ் செய்துகொண்டிருந்தார். கங்கை நதியானது அவருடைய யாகசாலையில் புகுந்து ஓடி அதனை அழிக்கலா யிற்று. அம்மாமுனி இவ்வளவு அலக்ஷ்யமாகத் தமது யாக சாலையைக் கங்காநதி அவமதித்ததைப் பார்த்துப் பெருஞ்சின மடைந்து அந்நதியின் நீர் முழுவதையும் குடித்துவிட்டார். அதைப்பார்த்த தேவர்கள், முனிவர்கள், கந்தர்வர்கள் முதலிய எல்லோரும் வெகுவியப்புற்று அம்முனிவரை வணங்கி கங்கை யைத் தமது மகளாகக் கருதி அவளை வெளிவிட வெகு விநயத் துடன் கேட்டுக் கொண்டார்கள். அம்முனிவரும் இவர்கள் செய்த உபசாரத்தால் உள்ளங்கனிந்து கங்கையைத் தம் காதால் வெளிப்படுத்தினார். இவ்வண்ணம் ஜந்ஹுமாமுனியால் உட் கொள்ளப்பட்டு அவர் காதால் வெளிவிடப்பட்டபடியால் கங்கைநதிக்கு ஜந்ஹுமகள் என்று அர்த்தங்கொள்ளும் ஜாந் ஹவீ என்று ஒரு பெயர் உண்டாயிற்று. ஜந்ஹு தம் காதால் வெளிவிட்டவுடன் கங்கையும் மறுபடி பகீரதனது இரதத்தைத் தொடர்ந்து ஓட ஆரம்பித்தது, சமுத்திரத்தில் புகுந்து, பகீரதப் பிரயத்தனத்தை நிறைவேற்றும் பொருட்டுப் பாதாளலோகமும் சென்றது. இவ்வாறு வெகு ஜாக்கிரதையா கப் பகீரதமன்னன் கங்கையைத் தனது முன்னோர்கள் சாம்பலா கக் கிடக்குமிடம் கொண்டுவந்து சேர்த்தான். அந்த நீற்றுக் குவியலில் கங்கை ஜலம் விழுந்ததும் சகரனுடைய மக்கள் அறு

பதினாயிரம் பெயர்களும் தங்கள் பாவத்தைப் போக்கிச் சுவர்க்க லோகஞ் சேர்ந்தார்கள்.

## நாற்பத்துநான்காஞ்சருக்கம்:

### பகீரதனுக்கு வரங்கொடுத்தது.

*சகரன் மக்கள் நற்கதி யடைந்தது.*

பகீரத மன்னன் கங்கையுடன் சமுத்திரஞ்சென்று அவ்வழியாய்ப் பாதாளலோகம் சேர்ந்து அதைத் தனது முன்னோர்கள் சாம்பற் குவியலாகவிருக்குமிடங் கொண்டுபோய்விட்டுத் தனது முன்னோர்களைக் கரையேற்றிவிட்டான்.

*பிரமதேவர் பகீரதனைப் புகழ்ந்தது.*

கங்கை ஜலம் சாம்பலில் விழவும் அங்கு இவ்வுலகங்களுக்கெல்லாம் ஈசரானன பிரமதேவர் பிரத்தியக்ஷமாய் அம்மன்னனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார். "விடா முயற்சியின் உருவம் போலிருக்கும் வேந்தே, நீ செய்த சாகச காரியத்தால் சகர ராஜனுடைய அறுபதினாயிரம் பிள்ளைகளும் கரையேற்றப்பட்டார்கள். அவர்கள் எல்லாரும் தேவர்களாகத் தேவலோகம்போய்ச் சேர்ந்தார்கள். கடல் நீர் எந்தக்காலம் வரையில் இவ்வுலகத்திலுளதோ அதுவரையில் தேவலோகத்தில் தேவதைகளாக அவர்கள் வாழப்போகிறார்கள். இக்கங்கையும் இன்று முதல் உனது மூத்த குமாரி என்று உலகத்தில் பெயர் பெறப்போகிறாள். பகீரதமன்னனது குமாரியாகையால் அதற்குப் பாகீரதி என்று பெயரும் அளித்தேன். அது மூவுலகத்திலும் ஓடுகிறபடியால் அதற்கு மூவழியோடும் முக்கியநதி (திரிபதகா) என்று பெயரும் வழங்கும். இந்தக் கங்கை ஜலத்தைக்கொண்டு நீ உனது முன்னோர்களுக்குத் தருப்பணஞ்செய்து உனது பிரதிஜ்ஞையை நிறைவேற்று. உனக்கு முந்தி உனது குலத்தில் உண்டான புகழ்பெற்ற அரசர்கள் என்ன முயன்று பார்த்தும் முடியாத காரியத்தை நீ

இப்பொழுது செய்து முடித்தாய். தருமிஷ்டர்களுள் மிகச் சிறந்தவனும் பெருங் கீர்த்தி பெற்றவனுமான சகரனுக்கும் இந்த எண்ணம் கைகூடாமலே போயிற்று. அப்படியே உலகத்தில் ஒப்பில்லாத ஒளியை யுடைய அம்சுமானும் கங்கையைக் கொண்டுவர முயன்று சித்திபெருமலே சென்ருன். தவத்தில் எனக்கு ஒப்பான மகா பராக்கிரமசாலியும் வெகு தர்மிஷ்டனும் மகாரிஷிகளுக்கும் ஒப்பான ராஜரிஷியும் சூரனும் உனது தகப்பனுமான திலீபமன்னனுலும் கங்கையைக் கொண்டுவர முடியாமற் போயிற்று. அவ்வாறு பெரும்புகழுடையோரான பெரியவர்கள் செய்து முடிக்காத காரியத்தை நீ செய்து முடித்தபடியால் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கீர்த்தியை அடைந்துவிட்டாய். இவ்வளவு சிரமப்பட்டு எவ்வளவோ இடையூறுகளை விலக்கிக் கங்கையைப் பூமியி லிறக்கிவிட்டபடியால் வெகு தர்மத்தை நீ கட்டிக்கொண்டாய். இந்தத் தீர்த்தத்தில் நீயும் ஸ்நானம்பண்ணி உனது தேகத்தைப் பரிசுத்தஞ் செய்துகொண்டு புண்ணிய பதவியை அடையப் போகிருய். இதே ஜலத்தைக் கொண்டு உனது முன்னோர்கள் எல்லாருக்கும் தருப்பணக் கிரியை செய்து முடி, உனக்கு ஒருவித குறைவுமில்லை. நான் என் உலகம் போய் வருகிறேன். நீயும் உனது காரியத்தை முடித்துக்கொண்டு உனது நாட்டிற்கு ஏகு" என்று சொல்லி, தேவர்களுக்கெல்லாம் தேவரும், எல்லாப் பிராணிகளையும் சிருஷ்டித்தவருமான பிரமதேவர் தமது இடஞ் சென்ருர்.

பகீரதன் அரசாட்சி.

கீர்த்தி பெற்ற பகீரத மன்னனும் தனது காரியங்களை நிறைவேற்றித் தருப்பணக் கிரியைகளைச் சரிவரமுடித்துச் சகரன் மக்களைக் கரையேற்றித் தன்னையும் கங்காஸ்நானத்தால் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு தனது நாடுவந்து சேர்ந்து கவலையற்றவனுகி இராச்சிய பரிபாலனம் பண்ணினுன். தர்மசீலனுகிய தங்கள் அரசன் திரும்பி வந்ததைக் கண்டு ஜனங்கள் எல்லாரும் களித்தார்கள். அவன் அரசாண்ட காலத்தில் அவனுடைய குடி

களுக்குத் துக்கமென்பதே யில்லை. பொருள் நிறைந்திருந்தது. ஒருவித பயமும் இல்லாமலிருந்தது.

ஓ இராமரே, இதுதான் கங்கையின் வரலாறு. நானிதை உமக்கு விஸ்தாரமாக எடுத்துச் சொன்னேன். சந்தியா காலம் சமீபித்தது. பொருள், ஆயுள், மக்கட்பேறு, புகழ், சுவர்க்க லோகம், இவை களைத் தரவல்ல இக்கங்கை வரலாற்றைப் பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் எவனொருவன் சொல்லு கிறானோ அவன் தனது பிதிருக்களாலும் தேவர்களாலும் அன் போடு கொண்டாடப்படுகிறான். மங்களகரமான இக்கங்கையின் வரலாற்றைச் சிரத்தையோடு கேட்கிறவனும் தனது மனோரதங் கள் எல்லாவற்றையும் அடைந்து தனது எல்லாப்பாவங்களையும் போக்கிக் கீர்த்திபெற்று வெகுநாள் வாழ்கிறான்.

கங்கையின் மாகாத்மியம்.

---

## நாற்பத்தைந்தாஞ்சருக்கம்:

---

### அமிருதோத்பத்தி.

விசுவாமித்திரர் சொன்ன வரலாற்றைக் கேட்டு இரா மரும், லக்ஷ்மணரும் அதியாச்சரியம் அடைந் தார்கள். "மாமுனியே, தாங்கள் சொன்ன கங்காவதரணமும் அக்கங்கையின் நீர் சாகரத் தை நிரப்பியதும் வெகு அற்புதமாயிருக்கின் றன" என்று இராமர் விசுவாமித்திரரைப் பார்த்துச் சொன்னார். விசுவாமித்திரர் சொல்லிய கதையை நினைத்து நினைத்து ஆனந்தப் படுவதிலேயே இராம லக்ஷ்மண ரிருவர்க்கும் இரவானது ஒரு நொடிபோல் கழிந்துவிட்டது. பிறகு பொழுது விடிந்துவிடவே ஸ்நானஞ் செய்து தமது காலைக் கடன்களைச் சரிவர முடித்த மாமுனியைப் பார்த்து இராமர் "இரவு நல்ல விஷயத்தில் இனிதாகக் கழிந்தது. தங்களிடமிருந்து அவசியம் கேட்க வேண்டியவை பல

இராமலக்ஷ்மணர்கள் கங்கையைத் தாண்டுதல்.

வற்றைக் கேட்டோம். தாங்கள் சொன்ன இந்த வரலாறு முழுவதையும் சிந்திக்கச் சிந்திக்க இரவு கணம் போலக் கழிந்துவிட்டது. இப்பொழுது சீக்கிரமாக இந்தப் புண்ணிய நதியாகிய கங்கையைத் தாண்டுவோம். தாங்களிங்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு அநேக ரிஷிகள் நல்ல மேல்விரி விரித்த விசாலமான படகோடு வந்து தங்களை அழைத்துப் போகக் காத்திருக்கிறார்கள்" என்றார். அதைக்கேட்ட விசுவாமித்திரர் முனிக்கூட்டங்களோடும் இராமலக்ஷ்மணர்களோடும் அந்த நதியைச் சீக்கிரமாகத் தாண்டினார்.

விசாலைக் கருகில் வந்தது.

வடகரைசேர்ந்ததும் தம்மைப் பார்க்கவந்த ரிஷிகளுக்கு மரியாதைசெய்தனுப்பினார். பின்பு விசுவாமித்திரர் முதலானவர்கள் கங்கைக் கரையில் கொஞ்சம் சிரம பரிகாரஞ்செய்ய உட்கார்ந்த பொழுது அவர்கள் எல்லாரும் தங்களுக்குச் சமீபத்தில் விசாலை என்ற ஒரு பெரிய பட்டணத்தைப் பார்த்தார்கள். அதைக் கண்டதும் விசுவாமித்திர முனிவர் எழுந்திருந்து எல்லாருடனும் இராம லக்ஷ்மணர்களையும் அழைத்துக்கொண்டு, சுவர்க்கலோகம்போல மிக அழகிய சிறந்த அந்நகரத்தைநோக்கி நடந்தார். அப்படி போகாநிற்கையில் இராமர் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு விசுவாமித்திரரைப்பார்த்து "முனிபுங்கவ, விசாலையில் இப்பொழுது எந்த இராஜகுலத்தார் அரசாளுகிறார்கள். அவர்கள் சரித்திரத்தைக் கேட்க ஆவலுடனிருக்கிறேன்" என்றார். இவர் இவ்வாறு சொல்லியதை முனிவர் கேட்டு உடனே விசாலையின் பூர்வ சரித்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

பாற்கடலைக் கடைந்தது.

இரகுகுலவீரரே, இப்பட்டணத்தின் கதையையும் இதன் சம்பந்தமான இந்திரன் வரலாற்றையும் நான் சொல்லுகிறேன்; கேளும்; முன்பு கிருதயுகத்தில் மகாபலசாலிகளாகிய திதியினுடைய புத்திரர்களும், பராக்கிரமும் தர்மமும் பொருந்திய அதிதியினுடைய பிள்ளைகளும் "நாம் என்னசெய்தால் நமக்குக் கிழத்

தன்மை, சாவு, நோய் இவைகளில்லாமல் வாழ்ந்துகொண்டிருப்போம்" என்று ஆலோசிக்கத் தொடங்கினார்கள். இப்படி அவர்கள் ஆலோசிக்கும்போது பாற்கடலைக் கடைந்து அதினின்று அமிருதத்தை எடுத்துப் புசித்தால் நமது எண்ணம் நிறைவேறு மென்று அவர்களுக்குத் தோன்றிற்று. அவ்வாறே செய்ய நிச்சயித்து மந்தர பருவதத்தை மத்தாகவும் வாசுகியைக் கடைகயிறாகவும் கொண்டு அவர்கள் சமுத்திரத்தை தங்கள் பலத்தால் கடைய ஆரம்பித்தார்கள். ஓர் ஆயிரவருஷம் இவ்விதமாகக் கடையும்போது கடைகயிறாக இருந்த வாசுகி என்னும் வெகு வீரியமுள்ள சர்ப்பம் தனது வாய்களைத்திறந்து பற்களாற் கற்களைக் கடித்து விஷத்தைக் கக்கிக்கொண்டேயிருந்தது.

*ஹாலாஹலத்தைச் சிவபிரான் பானம் பண்ணியது.*

அப்பொழுது ஹாலாஹலம் என்ற விஷம் கொடிய நெருப்புப்போல் உண்டாயிற்று. அதன் கொடுமை சகிக்க முடியாமல் தேவர்கள், அசுரர்கள் மனிதர்கள் இவர்களோடு மூவுலகங்களும் தீப்பட்டு எரிந்தன. இவ்வண்ணம் உலகம் தீப்பட்டுவேக எல்லாத் தேவர்களும் மகாதேவரான சங்கரரைச் சரணமடைந்து "ஓ பிராணிகளுக்கெல்லாம் நாதரே, உருத்திர மூர்த்தியே, எங்களை ரக்ஷியும், ரக்ஷியும்" என்று முறையிட்டார்கள். இப்படி அவர்கள் முறையிடும்போது, அவ்விடத்தில், தமது கைகளில் சங்கையும் சக்கரத்தையும் ஏந்திய ஸ்ரீ விஷ்ணுபகவானும் வந்து சேர்ந்தார். தேவசிரேஷ்டரான அவரும் புன்னகை செய்து சூலபாணியாகிய ஈசனைப்பார்த்து "தேவசிரேஷ்டரே, எல்லாத் தேவதைகளுக்கும் முதல்வர் நீங்களன்றோ? ஆகையால், தேவர்கள் இப்பொழுது பாற்கடல் கடைவதில் முதல் முதல் தோன்றிய பதார்த்தத்தை நீங்களே புசிக்கவேண்டும். இது அக்கிரபூஜை. ஆகையால் இப்பொழுது ஹாலாஹல விஷத்தை நீங்கள்தாம் வாங்கிக் கொள்ளவேண்டும்" என்று சொல்லி மறைந்தார். தேவதைகள் அடைந்திருக்கும் பயத்தைப் பார்த்தும் விஷ்ணுபகவான்

சொன்ன சொல்லைக் கேட்டும் சிவபெருமான் பயங்கரமான அந்த ஹாலாஹல விஷத்தை உடனே வாங்கி அமிருதத்துக்குச் சமானமாகக் குடித்துவிட்டு மறைந்தார்.

கூர்மாவதாரம்.

பயம் நீங்கிவிடவே மறுபடியும் தேவதைகள் பாற்கடலைக் கடைய ஆரம்பித்தார்கள். வெகு பலமாய்ப் பின்பு கடையும்போது, மந்தர பருவதமாகிற மத்து, பாதாளலோகம் வரையில் சென்று ஆழ்ந்துவிட்டது. அதைப் பார்த்துத் தேவர்கள் தங்கள் கதி இவ்வாருயிற்றே! என்ன செய்கிறது என்று சிந்தித்து நாராயணக் கடவுளைச் சரண் புகுந்தார்கள். "கடவுளே, நீர்தாம் எல்லாப் பிராணிகளுக்கும் கதி. முக்கியமாக, தேவதைகளாகிற எங்களுக்கு நீர்தாம் கதி. எங்களை இப்பொழுது நீர்தாம் ரக்ஷிக்கவேண்டும். அழுந்திப் போன மந்தர பருவதத்தை எப்படியாவது மேலெடுத்துவிட வேண்டும். மறுபடி மலை அழுந்தாதவண்ணம் எங்களுக்கு வழி தேடிக்கொடுக்க வேண்டும்" என்று தேவர்கள் வேண்ட, ஸ்ரீ விஷ்ணுபகவானும் தான் ஒரு பெரிய ஆமையுருவங்கொண்டு சமுத்திரத்தில் இறங்கி மந்தர பருவதமாகிற மத்தைத் தமது முதுகின்மேல் தூக்கி வைத்துக்கொண்டார். அன்றியும், கேசவ மூர்த்தி தாம் வேறொரு உருவங்கொண்டு மந்தரமலையின் சிகரத்தைக் கையால் அழுத்தி நின்று, மற்றொரு வடிவமெடுத்துத் தேவதைகள் மத்தியில் நின்றுகொண்டு சமுத்திரத்தைக் கடைய ஆரம்பித்தார்.

தந்வந்தரி.

இவ்வண்ணம் ஓராயிர வருஷகாலம் சமுத்திரமானது கடையப்பட்டபோது அதிலிருந்து ஒரு கையில் தண்டமும் மற்றொரு கையில் கமண்டலமும் ஏந்திக்கொண்டு தந்வந்தரி யென்னும் மகாபுருஷர் தோன்றினர்.

அப்ஸர மடந்தைகள்.

நீர் கடையப்பட்டபோது அதன் சாரத்திலிருந்து அழகிற் சிறந்த பெண்கள் அநேகர் கிளம்பினார்கள். இவர்களைத் தாம் அப்ஸரஸ் என்று காரணப் பெயராற் சொல்லுகிறார்கள். இவ்விதமாக

எழுந்த அப்ஸரப் பெண்கள் அறுபதுகோடியர் என்னப்படுவர். இவர்கள் உலகத்தில் அழகிற் பெயர்பெற்றவர்கள். அன்றியும் இவர்கள் தேவலோகத்துப் பொதுமகளிராவர். இவர்களுடன் இவர்கள் வேலைக்காரிகளாக அநேக மகளிர்கள் உண்டானார்கள். அவர்களின் தொகையைக் கணக்கிட முடியவில்லை.

வாருணி.

அதன்மேல் சமுத்திரத்திலிருந்து வருணன் மகளான வாருணி என்பவள் உண்டாயினாள். அவள் அதிதியின் பிள்ளைகள் பக்கம் சேர்ந்தபடியால் அதிதியின் பிள்ளைகளுக்குச் சுரர் என்று பெயர் வந்தது. அந்த வாருணியை ஏற்றுக் கொள்ளாமையால் திதியின் பிள்ளைகள் அசுரரெனப்பட்டனர். தேவர்கள் வாருணியிடம் அன்பு பாராட்டி வெகு களிப்புற்றார்கள்.

உச்சைச்சிரவம், கௌஸ்துபம்.

இதற்குப் பிறகு கடையப்பட்ட சமுத்திரத்திலிருந்து உச்சைச்சிரவம் என்ற சிறந்த குதிரையும், கௌஸ்துபம் என்ற மேலான இரத்தினமும் உண்டாயின.

அமிருதம்.

கடைசியாகச் சமுத்திர மதனத்தில், அவர்கள் பல நாளாக எதிர் பார்த்திருந்த அமிருதமும் உண்டாயிற்று. அதை யாரெடுத்துக் கொள்ளுகிறது என்பதைப் பற்றி நடந்த சண்டையில் மாண்ட உயிர்க்குக் கணக்கே யில்லை. அதிதியின் பிள்ளைகளும் திதியின் பிள்ளைகளும் வெகு கோபமாக ஒருவருடன் ஒருவர் சண்டைசெய்ய ஆரம்பித்தார்கள். அசுரர்களுடன் ராக்ஷஸர்களும் வந்து கூடினார்கள். மூன்று உலகங்களும் கலங்கும்படியான பெரிய சண்டை நடந்தது.

மோகினி அவதாரம்.

பற்பலர் மாண்டுவிடவே, ஸ்ரீ விஷ்ணுபகவான் மாயைவடிவான மோகினிவேஷம் பூண்டு அமிருதத்தை எடுத்துக்கொண்டு சென்றார். அந்தச் சமயத்தில் அவரை எதிர்த்தவர்களை யெல்லாம் அவர் வேறுவித உருவங்கொண்டு வதைத்தார். அந்தத் தேவாசுர யுத்தத்தில் திதியினுடைய குமாரர்கள் எல்லாரும் அதிதியினுடைய

பராக்கிரமம் பொருந்திய குமாரர்களால் வதைசெய்யப்பட்டார்கள். இவ்வாறு, திதியின் மக்களை யெல்லாம் அதிதி புத்திரனை இந்திரன் கொன்று தனது இராச்சியத்தை அடைந்து முனிவர்களாலும் சாரணர்களாலும் நிறைந்த உலகங்களை அரசாட்சி செய்து வந்தான்.

## நாற்பத்தாறுஞ்சருக்கம் :

### திதியின் கர்ப்பநாசம்.

திதியின் கர்ப்பம்.

தனது புத்திரர்களெல்லாம் இந்திரனால் கொல்லப்பட்டதைப் பார்த்துத் திதிதேவி மிகவும் வருத்தமடைந்து மரீசி மகாரிஷியின் குமாரரும் தனது கணவருமாகிய காசியபரை நோக்கி "பெரியவரே, தங்கள் பலசாலிகளான குழந்தைகள் என் குழந்தைகளைக் கொன்றுவிட்டார்கள். தங்களுடைய கருணையால் இந்திரனைக் கொல்லும்படியான பராக்கிரமமுள்ள ஒரு குழந்தையை நான் அடையவேண்டும். நான் நெடுநாள் தவஞ்செய்கிறேன். அத்தவத்தின் பயனாக அப்படியே எனக்கு வரமளிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். இதைக் கேட்டுக் காசியபர் அவளிடம் மனமிரங்கி "அப்படியே உனக்கு ஒரு புத்திரனை அளிக்கிறேன். ஆனால் ஓராயிரமாண்டு நீ வெகு ஆசாரத்துடன் இருக்கவேண்டும். அதில் கொஞ்சமேனும் வழுவக் கூடாது. அப்பொழுது இவ்வுலகங்களை யெல்லாம் வென்று இந்திரனைக் கொல்லும்படியான மகனை நீ பெறுவாய்" என்றார். இவ்விதமான வரத்தை அளித்துவிட்டுக் காசியப மகாரிஷி தாம் தவஞ் செய்யச் சென்றார். அவர் போனபிறகு அவர் வரத்தின் மகிமையால் திதியும் கர்ப்பமுற்றாள். வெகு ஆசாரத்துடன் அதைக் காப்பாற்றுவதற்காகத் திதிதேவியும் குசப்லவநம் என்ற ஆச்சிரமத்துக்குச் சென்றாள் ; வெகு தீவிரமான தவங்கள்

புரிந்துகொண்டு ஆசாரத்தில் கொஞ்சமேனும் வழுவாதவளாக அவ்விடம் வசித்தாள்.

இந்திரன் பணிவிடை.

அப்பொழுது இந்திரன் அங்கு வந்து அவளுக்கு வெகு விநயத்தோடு சுசுரூஷை செய்யலானன். அவளுக்கு வேண்டிய அக்கினி, ஜலம், தர்ப்பை, சமித்து முதலியவைகளைத் தேடிக்கொண்டு வந்து வைப்பான். அவள் ஆகாரத்துக்கு வேண்டும் காய் கனி கிழங்குகளைக் கொண்டுவந்து கொடுப்பான். இவ்வாறு பலவிதமாக அவளை உபசரித்தான். அவள் தவம் முடிய ஆயிரம் வருஷங்களுக்கு இன்னும் பத்துவருஷகாலம் மிச்சமாய் நின்றன. இந்திரன் செய்யும்பணிவிடையைத் திதிதேவிகண்டு வெகுசந்தோஷமடைந்து "இந்திரா, இன்னும் என்தவம் பூர்த்தியாகப் பத்து வருஷமே நிற்கிறது. அதன்பிறகு உன்தந்தையின் அருளால் உனக்குத் தம்பி உண்டாவான். நான் உன்னுடைய நாசத்துக்காக ஆயிரம் வருஷத்துக்கப்பால் இந்தக் குழந்தையை அடையப் பிரார்த்தித்திருந்தபோதிலும் அவன் பிறந்தவுடன் அவன் உன்னிடம் என்றைக்கும் அன்பும் ஆதரவுமாக இருக்கும்படி செய்கிறேன். பின்பு நீங்களிருவரும் சேர்ந்து இம்மூவுலகத்தையும் ஆளுவீர்கள். இன்னும் சரியாய்ப் பத்துவருஷம் வழுவில்லாமல் கழியவேண்டும்" என்றாள்.

திதியின் கருப்பத்தை இந்திரன் அழித்தது.

இப்படிச்சொல்லிய திதியானவள் தனது பாக்கியக்குறைவால் அன்று பகல் பதினைந்து நாழிகை வேளையில் தனது படுக்கையில் கால்மாட்டில் தலைவைத்துக்கொண்டு தூங்க ஆரம்பித்தாள். பகல் நித்திரைமுதற் குற்றம். படுக்கையில் தலைமாடு கால்மாடாகப் படுத்தது இரண்டாங் குற்றம். திதிதேவி தனது ஆசாரத்தில் குறைவு பெறவே, இந்தச் சமயத்தை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்திரன் புன்னகையோடு மகிழ்ந்து, பிறகு தனக்குச் சத்துருவாகப் பிறக்கப்போகும் கர்ப்பத்தை ஏழுதுண்டுகளாகும்படி செய்தான். ஆசாரக் குறைவு தன்னிடம் வந்ததைத் திதி அறிந்தாளாகையால் ஒன்றுஞ் செய்யமுடி

யவில்லை. இந்திரனும் அவளை மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

## நாற்பத்தேழாஞ்சருக்கம் :

### விசுவாமித்திரர் சுமதியைச் சந்தித்தல்.

ஸப்த மருத்துக்களின் உற்பத்தி.

தனது கர்ப்பம் ஏழு துண்டுகளானதைக் கண்டு திதிதேவி முதலில் வெகு துக்கப்பட்டு, ஒருவாறாலும், ஜயிக்கக்கூடாத இந்திரனைப் பார்த்து "என் தலைவிதி! கொஞ்சம் ஆசாரக்குறைவு வந்துவிடவே என் கர்ப்பம் ஏழுதுண்டுகளாயிற்று. உன் குற்றம் ஒன்றுமில்லை. ஆனால் இவ்வேழு பிண்டங்களையும் நன்மையையே விளைவிக்கும்படி செய்கிறேன். இவைகள் ஏழும் ஏழுமருத்துக்களாக உருவங்கொண்டு இவ்வுலகங்களை ரக்ஷித்துக்கொண்டு சஞ்சரிக்கட்டும். இவ்வேழு மருத்துக்களில் ஒன்று பிரமதேவன் உலகத்திலும், மற்றொன்று இந்திரலோகத்திலும், மூன்றாவது வானத்திலும் சஞ்சரிக்கட்டும். மற்றைய நான்கு வாயுக்களும் உன்னுடைய கட்டளைக்கு உள்ளடங்கி நான்கு திக்குகளிலும் உலாவுக" என்றாள்.

திதி தன்மக்களுடன் தேவலோகஞ்சேரல்.

இதை இந்திரன் கேட்டுக் கைகூப்பித் திதிதேவிக்கு வந்தனஞ்செய்து, தான் உத்தேசித்து வந்த தனது சத்துருவாகிறவனைத் தனக்கு மித்திரர்களாக்கிக்கொண்டதற்கு உள்ளங்களித்துத் தான் அந்தத் தாயினிடம் உத்தரவு பெற்றுத் தன்னிருப்பிடம் சென்றான். திதியும் அவள் மக்களும் தேவலோகமடைந்தார்கள். ஓ ராமரே, இதுதான் முற்காலத்தில் திதிதேவி தவம் புரியும்போது தேவேந்திரன் வந்து அவளுக்குப் பணிவிடை பண்ணிய இடம்.

முற்காலத்தில் இக்ஷ்வாகு என்ற மன்னனுக்கு அலம்

விசாலையில் அரசாண்ட ராஜவமிசம்.

புஸா என்னும் தேவியின் வயிற்றில் விசாலன் என்ற ஒரு மைந்தன் உண்டானான். அந்த இராசகுமாரன் இங்கு உண்டாக்கின நகரமாதலால் இதற்கு விசாலை என்று பெயர். விசாலனுக்குப் பிற்காலம் அவன் மகன் ஹேமசந்திரன் இங்கு அரசாண்டான். அவனுக்குப் பிறகு சுசந்திரன் பட்டத்துக்கு வந்தான். அவன் மகன் தூம்ராசுவன் என்று பெருங்கீர்த்தி பெற்றவன். தூம்ராசுவன் மகன் சிருஞ்சயன் என்பான். சிருஞ்சயன் பிள்ளை சகதேவன் என்கிற பிரதாபம் பெற்றவன். அவன் பிள்ளை வெகு தர்மிஷ்டனான குசாசுவன். அவன் மைந்தன் மிக்க காந்தியும் கீர்த்தியும் பொருந்திய சோமதத்தன். அவன் புதல்வன் காகுஸ்தன். இப்பொழுது அந்தக் காகுஸ்தனது குமாரனும் ஒருவராலும் போர்புரிந்து வெல்ல முடியாத இந்திரன்போல ஒப்பற்ற வீரியமுள்ளவனுமான சுமதி என்னும் மன்னவன் விசாலையில் அரசாண்டு வருகிறான். இக்ஷ்வாகு மகாராஜாவின் அநுக்கிரகத்தால் இவ்விசாலையில் அரசாளும் எல்லா வேந்தர்களும் நீண்ட ஆயுளுள்ளவர்கள்; காம்பீரியமும் உதாரகுணமும் பொருந்தியவர்கள்; வெகுபல பராக்கிரமசாலிகள்; வெகு தர்மிஷ்டர்கள். நாம் இன்றிரவு இந்த விசாலையில் சுகமாய்த் தங்குவோம்; நாளைக்காலையில் ஜநகமகாராஜாவைப் பார்ப்போம்" என்று விசுவாமித்திரர் இராமரிடம் சொல்லி நிறுத்தினார்.

சுமதி முனிவரையும் இராஜ குமாரர்களையும் உபசரித்தல்.

இதற்குள் விசுவாமித்திரர் தன்னூரை நாடிவரும் சமாசாரத்தைச் சுமதி என்ற மன்னவன் தெரிந்துகொண்டு தனது புரோகிதர்களுடனும் பந்துக்களுடனும் வெகுவித உபசாரங்களோடு எதிர்கொண்டு வந்தான். ரிஷியைப் பார்த்ததும், வேந்தன் அவருக்கு வெகுவித பூஜைகளைச் செய்து அவருடன் வந்தவர்கள் எல்லாரையும் உபசரித்து யோகக்ஷேமம் விசாரித்து அதன்பிறகு தனது இருகரங்களையும் கூப்பி விசுவாமித்திரரை நோக்கி "முனிபுங்கவ, நான் இன்று

வெகு தன்னியனானேன். என் மனோரதங்கள் எல்லாம் நிறைவேறின என்பதற்குச் சந்தேகமில்லை. தாங்கள் எப்பொழுது என் தேசத்தை நாடிவந்தீர்களோ அப்பொழுதே எனக்கு எல்லாச் சம்பத்துக்களும் கை கூடின" என்று களிப்புடன் கூறினான்.

---

## நாற்பத்தெட்டாஞ்சருக்கம்:

---

### அகல்யையின் சாபம்.

*சுமதி இராஜ குமாரர்களை விசாரித்தல்.*

சுமதியென்ற மன்னனும் விசுவாமித்திரரும் சந்தித்த பொழுது பலவிஷயங்களைக் குறித்துப் பேசினார்கள். இவ்வாறு பேசிக் கடைசியில் அம் மன்னன் "மாமுனியே, தேவர்களுக்குச் சமானமான பராக்கிரமும், மத்த யானையையும் சிங்கத்தையும் போன்ற நடையும், புலியையும் ரிஷபத்தையும் போன்ற கம்பீரமான தோற்றமும், நீண்ட விசாலமான தாமரையிதழ் போன்ற கண்களும் உடைய இவ்விரு குமாரர்களும் யாவர்? இவர்கள் கையில் வில்லும் கத்தியும் பிடித்து யுத்தத்துக்குப் பதைத்துக் கொண்டிருக்கும் போர்வீரர்கள் போலத் தோன்றியபோதிலும் சிறுகுழந்தைகள் ஆகையால் ஆகாசத்திலிருந்து பூமியில் குதித்த அழகான அசுவினி நக்ஷத்திரக் குஞ்சுகள்போல் காண்கின்றார்கள். மேலுலகிலிருந்து தற்செயலாய் இறங்கி வந்த தேவர்கள்போன்ற இவர்கள் யாருடைய குழந்தைகள்? என்ன காரியமாக இங்கு வந்திருக்கிறார்கள்? ஏன் இவ்வருமைக் குழந்தைகள் நடத்தற்கு அரிய இவ்வழியில் கால் நடையாக வருகிறார்கள்? சந்திர சூரியர்கள் ஆகாயத்தை அலங்கரிப்பதுபோல இவர்கள் இவ்விடத்தை அலங்கரிக்கிறார்கள்! ஒருவனைப் பார்த்தால் மற்றொருவனைப் பார்க்க வேண்டியதில்லை என்று சொல்லும்படி அவயவங்களிலும் தோற்றத்திலும் செய்கையிலும் இவ்விருவரும் ஒத்

திருக்கிறார்கள். இவர்கள் யார்? இவர்கள் சரித்திரத்தைக் கேட்க எனக்கு வெகு ஆவலாக இருக்கிறது" என்று கேட்க, மாமுனியாகிய விசுவாமித்திரரும் இராம லக்ஷ்மணர்களைப் பற்றிய வரலாறுகளை யெல்லாம் எடுத்துச் சொல்லினர். அவர்கள் சித்தாச்சிரமத்துக்கு வந்த காரியமும், அங்கு ராக்ஷசர்களை நாசம் பண்ணியதும் ஒன்றும் விடாமல் எடுத்துரைத்தார்.

விசாலையை விட்டு மிதிலைக்குப் புறப்பட்டது.

விசுவாமித்திரர் இவ்வாறு சொன்னதை சுமதி கேட்டு அதியாச்சரியமடைந்து உடனே சிறந்த விருந்தினராய் நேர்ந்த தசரத மன்னருடைய இரு குழந்தைகளுக்கும் அவர்களுடைய நிலைமைக்குத் தக்கபடி மரியாதை செய்தான். இவ்வண்ணம் சுமதியால் அநேகவித மரியாதைகளைப் பெற்றுச் சுகமாக அன்றிரவு அவ்விடத்தில் இராம லக்ஷ்மணர்கள் இருவரும் வசித்து மறுநாள் மிதிலைக்குப் புறப்பட்டார்கள். தூரத்திலேயே மிதிலைமா நகரம் காணப்படவே, முனிவர்களெல்லோரும் "ஊர் வெகு அழகாக இருக்கிறது" என்று அதை தூரத்திலேயே நின்றுகொண்டு புகழ்ந்தார்கள். பட்டணத்தை அணுகும்போது இராமர் பழைய குடியற்ற மனோகரமான ஓர் ஆச்சிரமத்தைக் கண்டு மாமுனியை நோக்கி "முனிசிங்கமே, ஒரு காலத்தில் வெகு மேன்மையாக விளங்கியிருக்கலாமென்று தோன்றுகிற இந்தப் பாழ்பட்ட ஆச்சிரமம் யாருடையது? இப்பொழுது இங்கு ஒரு முனிவரும் வசிப்பதாகத் தோன்றவில்லையே. இது முன்னாளில் எந்த ரிஷியின் ஆச்சிரமம்? தாங்கள் விவரமாகச் சொல்லவேண்டும்" என்றார்.

கௌதம ஆச்சிரமங் காணல்.

இதைக்கேட்ட விசுவாமித்திரரும் "நான் சொல்லுவதைக் கேளுங்கள்; இராகவர்களே, இது கௌதம ரிஷியின் ஆச்சிரமம். அவர் சாபத்தால் இவ்வாறாயிற்று. அந்த ரிஷியின் காலத்தில் இவ்விடத்தில் தேவர்களும்வந்து வணங்கி நிற்பார்கள். அவர் இந்த ஆச்சிரமத்தில் அகல்யை என்ற தமது மனைவியோடு ஆயிர வருஷகாலம் தவஞ்செய்துகொண்டிருக்

தார். அகல்யை என்பவள் வெகு இலாவண்ணியம் பொருந்திய வள். அவள்மேல் இந்திரன் ஆசைகொண்டு ஒருநாள் ரிஷி வேஷம் பூண்டு கௌதமரிஷியில்லாத சமயம்பார்த்து இந்த ஆச்சிரமத்துக்கு வந்தான்.

அகல்யையின் சாபம்.

அவன் அகல்யையோடு பேசிக்கொண்டிருந்ததைக் கௌதமர் திடுக்கென்று வந்தபோது கண்டு தம்மனைவியைச் சபித்தார். "நீர் புத்திகெட்டு நல்ல செய்கையிலிருந்து வழுவினபடியால் பல ஆயிரமாண்டு இந்த ஆச்சிரமத்திலேயே ஒருவர் கண்ணுக்கும் படாமல் சாம்பர்க்குவியலில் புரண்டுகொண்டு காற்றுத்தவிரவேறு ஆகாரமில்லாமல் தவிப்பாய். தசரதமன்னனுடைய மைந்தரான இராமர் இந்த ஆச்சிரமம் வரும்போது உன்னை இந்தச்சாபம் விடும். அவர் இங்கு வரும் காலத்தில் நீயும் உன் நிஜ உருவத்தை எப்பொழுதும் போலடைந்து அவரைப் பூஜித்து என்னிடம் சேர்வாய்" என்று வெகு கோபத்துடன் சொன்னார். இந்திரனுக்கும் அவன் தீயசெய்கைக்குத் தகுந்தவண்ணம் சாபமிட்டார். இவ்வாறு சாபமிட்டுக் கௌதமர் சித்தர்களாலும் சாரணர்களாலும் நிறைந்திருக்கும் பரிசுத்தமான இமயமலைச் சிகரத்தை நாடிச்சென்று அங்குத் தவம்புரியலுற்றார்" என்றார்.

---

## நாற்பத்தொன்பதாஞ்சருக்கம் :

---

### அகல்யை சாபம் நீங்கல்.

இராமர் கௌதமருடைய ஆச்சிரமம் புகுதல்.

பின்னும் விசுவாமித்திரர் இராமரைப் பார்த்து "இராமரத்தினமே, நீர் இப்பொழுது இந்த ஆச்சிரமத்துக்குள் சென்று அழகில் தேவஸ்திரீயைப் போல் விளங்கும் அகல்யையை அவளது உருவத்தோடு சேர்த்துவையும்" என்றார். முனிவர்

இவ்வாறு சொன்னவுடன் அவரை முன்னிட்டுக்கொண்டு தமது தம்பியாகிய லக்ஷ்மணருடன் இராமர் கௌதமருடைய ஆச்சிரமத்துக்குள் பிரவேசித்தார்.

அகல்யை சாபம் நீங்கல்.

அங்கு அவர்கள் புகுந்ததும், தனது தவத்தின் பலத்தால் மிருதியாக விளங்கும் அப்பெண்மணியின் உருவத்தை உடனே கண்டார்கள். அவள் மேனியிலிருந்து உண்டான காந்தியானது உலகத்திலுள்ள ஒருவராலும் கூச்சமின்றிப் பார்க்கமுடியாத காந்தியாகப் பிரகாசித்தது. எவ்வளவோ சிரமப்பட்டு நல்ல தாதுக்களையெல்லாம் ஓரிடத்தில் கையால் தொட்டுச் சேர்த்து நிருமித்தால் அழகு குலைந்து விடுமோ என்ற பயத்தால் மனத்தாலேயே சேர்த்துப் பிரமதேவன் ஒரு பெண்மணியை மாயை மயமாகச் சிருஷ்டித்தான் என்று சொல்லும்படி அவள் விளங்கினாள். புகை சிறிது மூடி நீங்கிய பின்பு நன்றாக எரியும் அக்கினிச் சுவாலை போலவும், பனி, மழை இவைகளால் கொஞ்சம் மறைவுபட்டுப் பின்பு அவற்றை நீங்கி வெளிப்படும் பூரண சந்திரனது காந்திபோலவும், கொஞ்சநாழிகை மெல்லிய மேகத்தால் மறைக்கப்பட்டுப் பிறகு கண்ணெடுத்துப் பார்க்கமுடியாதபடி விளங்கும் நல்ல பகற்காலசூரியன்போலவும், கௌதமர் சாபத்தால் மறைக்கப்பட்டிருந்த அகல்யை இராம தரிசனத்தினால் அச்சாபம் நீங்கிவிடவே முன்னினும் அதிக காந்தியுள்ள மேனியுடன் சோபிக்கலானாள். இவ்வளவு தேஜோமயமான உருவத்தை இராமலக்ஷ்மணர்கள் கண்டதும், உடனே சாஷ்டாங்கமாகக் கௌதமர் மனைவிக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். அவளும் முற்காலத்தில் தனது புருஷன் சொல்லியிருந்த சாபம் நீங்கும் காரணம் நினைவிக்கு வந்தபடியால் வந்தவர்கள் இன்னார் என்பதை ஒரு நொடியில் தெரிந்துகொண்டு தான் மிக்க வணக்கத்துடன் "என் சாபத்தை நீக்கின கடவுளே," என்று சொல்லி இராமரை ஆனந்தத்தால் மெய்ம்மறந்து கொண்டாடினாள். உடனே அவர்கள் எல்லாருக்கும் அருக்கியம் முதலிய உபசாரங்களை அளித்தாள். அவர்களும் அம்மாது

செய்த மரியாதையைப் பெற்றுக்கொண்டார்கள். அந்தச்சமயத்தில் ஆகாசத்திலிருந்து புஷ்பமழை பொழிந்தது. தேவதுந்துபி என்ற வாத்தியம் முழங்கிற்று. கந்தர்வர்கள் அப்ஸரசுகள் எல்லாரும் வெகு களிப்படைந்தார்கள். தேவர்களும் "எல்லாம் இராமர் அனுக்கிரகம்! எல்லாம் இராமரனுக்கிரகம்!" என்று கொண்டாடி அகல்யை என்னும் மாதை அவள் செய்த தவத்தால் மறுபடி பரிசுத்தியுள்ள பதிவிரதையாகவும் கௌதமரால் அங்கீகரித்துக்கொள்ளத் தகுந்த யோக்கியதை யுள்ளவளாகவும் ஒப்புக்கொண்டார்கள்.

கௌதமர் வரவு.

கௌதம மகாரிஷியும் தமது ஞானக்கண்ணால் ஸ்ரீராமர் தமது ஆச்சிரமம் வந்திருப்பதையும் அகல்யை சாபம் நீங்கினதையும் அறிந்து அவ்விடம் வந்து இராமரைப் பூசித்தார். பரிசுத்தியை யடைந்த தமது மனைவியை அவர் அங்கீகரித்து அன்றுமுதல் அந்த ஆச்சிரமத்திலேயே தவம்புரியலானார். இவ்வாறு கௌதம முனிவரிடம் உபசாரங்களை விதிப்படி பெற்றுக்கொண்டு இராமர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு மிதிலைக்குச் சென்றார்.

## ஐம்பதாஞ்சருக்கம்:

### விசுவாமித்திரர் ஜநகரிடம் சேருதல்.

மூவரும் ஜநகருடைய யாகசாலையை அடைதல்.

கௌதமருடைய ஆச்சிரமத்தை விட்டு வடகிழக்காக நடந்து மிதிலைக்குச் சமீபத்தில் ஜநக மகாராஜாவின் யாகசாலைக்கு இராமர் லக்ஷ்மணர் விசுவாமித்திரர் என்னும் மூவரும் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அந்த இராஜகுமாரர்களிருவரும் மாமுனியைப் பார்த்து "ஆச்சரியம்! யாகத்துக்காக ஜநகர் வெகு அதிகமான ஏற்பாடுகள் செய்திருக்கிறார். வேதங்களை ஓதி உணர்ந்து பெரும்புகழ் பெற்ற அநேக வேதியர்கள் இவ்விடம் நாநா தேசங்களிலிருந்

தும் வந்திருக்கிறார்கள். அநேக வண்டிகளில் அக்கினிஹோத்திர சாமான்களை ஏற்றிக்கொண்டு ரிஷிகள் அநேகர் இங்கு யாகத்தின் நிமித்தம் வந்திருக்கிறார்கள். நாம் எந்த இடத்திலிறங்கலாம்" என்றார்.

ஜநகர் செய்த உபசாரம்.

இவ்வாறு இராமர் சொல்லலும் விசுவாமித்திரர் அதிக ஜனக்கூட்டம் இல்லாமல் தீர்த்த சௌக்கியமுள்ள ஓரிடத்தைப் பார்த்து அங்கு இராமர் லக்ஷ்மணர்களுடன் இறங்கினார். ஜநகமகாராஜா விசுவாமித்திரர் தமது யாகத்துக்காக வந்த செய்தியைக் கேள்விப்பட்டவுடன் மிகுந்த ஆனந்தமடைந்து தமது புரோகிதரான சதாநந்தரை முன்னிட்டுக்கொண்டு ரித்துவிக்குகள் எல்லாரும் தொடர்ந்து வர அர்க்கியம் பாத்தியம் முதலான உபசாரங்களுடன் வெகு வணக்கமாய் முன்சென்று விசுவாமித்திரருக்கு உபசாரம்பண்ணினார். அம்முனியும் அவர் செய்த உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு அவரை ஆசீர்வதித்து அதன் பிறகு அவர் யோகக்ஷேமத்தையும் யாகம் இடையூறில்லாமல் நடந்தேறி வருகிறதா என்பதையும் விசாரித்தார். மன்னவரும் தமதுபுரோகிதருடன் மாமுனியையும் அவருடன்கூட வந்தவர்களையும் நன்றாக உபசரித்து அவர்கள் ஒவ்வொருவர் வரவையும்பற்றி ஆனந்தமுற்று கொண்டாடினார். எல்லாரையும் அவரவர்களுக்கேற்ற ஆசனத்திலிருக்கக் கேட்டுக்கொண்டார். ஜநகர் சொற்படி எல்லாரும் உட்காரவே, அரசரும் அவருடன்வந்த எல்லா வேதியர்களும் தாங்கள் இருக்கவேண்டிய இடங்களிலுட்கார்ந்துகொண்டார்கள். பிறகு ஜநகர் விசுவாமித்திரரைப்பார்த்து "முனிவரே, இன்றுதான் என் யாகம் முடிவுபெற்றதென்று சொல்லவேண்டும். தாங்களிங்கு வரும்படியான பாக்கியம் பெற்றேன். தாங்கள் இந்த ரிஷிகளுடன் எப்பொழுது என் யாகபூமியை நாடி வந்தீர்களோ அப்பொழுதே என் மனோரதங்கள் யாவும் நிறைவேறின. எனது யாகம் முடிய இன்னும் பன்னிரண்டு நாள்கள் இருக்கின்றன. அதன் முடிவில் தேவதைகள்

தங்கள் தங்கள் அபிர்ப்பாகத்தைப் பெற்றுக்கொள்ள வந்து சேரு வார்கள்'' என்றார்.

பிள்ளைகளைப் பற்றி ஜநகர் விசாரித்தல்.

" பிறகு (சுமதி கேட்டதுபோல,) மிகுந்த அழகும், கம்பீரமும், இளமைப் பருவமும் உள்ளவர்களாயிருப்பினும் வில்லில் தேறின போர்வீரர்களாயும் காணப்படுகின்ற குமாரர்கள் யார்" என்று ஜநகர் விசாரிக்க விசுவாமித்திரரும் (சுமதிக் குச்சொன்னதுபோலவே) தசரதராஜ குமாரர்களுடைய வைபவத்தையும் அவர்கள் சித்தாச்சிரமம் வந்ததும், அதன் காரணமும், அங்கு அரக்கர்களைக் கொன்றதும், அவர்கள் யாத்திரையும், விசாலையில் தங்கினதும், அகல்யையைச் சாபத்திலிருந்து விடுவித்ததும், கௌதமரைக் கண்டதும், மிதிலையிலிருக்கும் அதிசயமான வில்லைப் பார்க்கவந்ததுமாகிய வற்றையும் ஒன்றும் விடாமல் எடுத்துக் கூறினார். ஜநகரும் அவைகள் எல்லாவற்றையுங் கேட்டு ஆச்சரியபரவசராயினார்.

---

## ஐம்பத்தோராஞ்சருக்கம் :

---

### சதாநந்தர் வாக்கியம்.

சதாநந்தர் க்ஷேமம் விசாரித்தல்.

அவ்வாறு விசுவாமித்திரர் சொன்னதைக் கேட்டதும், கௌதமருடைய மூத்த குமாரரும் மகாதபசியும் வெகு காந்திபொருந்தியவருமான சதாநந்தர் என்ற ஜநகமகாராஜருடைய புரோகிதர் அந்த மகாத்துமாவாகிய இராமருடைய வரவால் தமது தாயின் சாபம் நீங்கிற்று என்ற சமாசாரத்தைக் கேட்டு வெகு ஆனந்தத்தையும் மிக்க ஆச்சரியத்தையும் அடைந்தார். இராமரும் லக்ஷ்மணரும் வெகு சுகமாக உட்கார்ந்திருக்கப் பார்த்துச் சதாநந்தர் விசுவாமித்திரரை நோக்கி " நெடு நாளாக இராமர் வரவை எதிர் பார்த்துக்கொண்டு அதற்காக தவம்புரிந்துகொண் டிருந்த என் அன்னையை இராமருக்கு நீர்

காட்டினீரா? என் தாயும் காட்டில் கிடைக்கும் கந்தமூலங்களைக்கொண்டு இராமருக்குத் தக்கபடி உபசாரம் பண்ணினளா? மகாரிஷியே, அவள் சரித்திரத்தை முழுதும் நீர் இராமருக்குச் சொன்னீரா? சாபம் நீங்கவே எனது தந்தை கௌதமர் வந்து என் தாயைக் கண்டனரா? அவரும் இராமருக்குத் தகுந்தபடி மரியாதை செய்தாரா? அம்மரியாதையைப் பெற்றுகொண்டுதான் இங்கு நீங்கள் வந்தீர்களா?" என்று கேட்டனர்.

சதாநந்தர் விசுவாமித்திரரைப் புகழ்தல்.

இதைக் கேட்ட விசுவாமித்திரரும் பேசுவதில் வெகு நிபுணராகையால் "முனிரத்தினமே, செய்ய வேண்டிய விஷயங்களில் ஒன்றாவது குறைவுபடவில்லை. ஜமதக்கினி முனிவருடன் ரேணுகாதேவி மறுபடி சேர்ந்ததுபோல் உமது தாயார் கௌதம ரிஷியுடன் சேர்ந்துவிட்டாள்" என்றார். இதைக் கேட்டுச் சதாநந்தர் சந்தோஷமடைந்து இராமரைப்பார்த்துப் பின் வருமாறு சொல்லலானார். "இராமா, தங்கள் வரவு நல்வரவாகுக, ஏதோ எங்களுடைய புண்ணியத்தால் தாங்கள் எக்காலத்திலும் வெற்றி பொருந்திய விசுவாமித்திர ரிஷியைக்கூட அழைத்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறீர்கள். தவத்தின் பலத்தால் முடியும் என்று ஒருபொழுதும் எண்ணக்கூடாத காரியங்களை யெல்லாம் இந்த விசுவாமித்திரர் செய்து முடித்திருக்கிறார். இவருடைய சாகசமும் தவத்தின் பலமும் வெகு அதிகம். இராஜரிஷியாக இருந்து தமது தவத்தின் பிடிவாதத்தால் பிறகு பிரமரிஷியாக மாறினவர் இவர். இவரை நீங்கள் நம்பினால் ஒரு குறைவும் உங்களுக்கில்லை. உங்களுக்குப் புத்தி சொல்லி ரக்ஷிக்கிறவராக எப்பொழுது விசுவாமித்திரமாமுனி ஏற்பட்டாரோ அப்பொழுதே உங்களினும் பெரும்பாக்கியம் பெற்றவர் வேறொருவருமில்லை என்று நீங்கள் எண்ணிக்கொள்ளலாம். இந்தக் கௌசிகமகாமுனிவரது பலத்தையும் சரித்திரத்தையும் உள்ளபடி சொல்லுகிறேன்; கேளும்.

இம்மகான் வெகுகாலம் இராஜாவாக இருந்து தமது சத்

விசுவாமித்திரர் அரசாண்ட வரலாறு.

துருக்களை வென்றுகொண்டும், தருமம் தவருது நடந்துகொண்டும், எல்லா விஷயத்திலும் தேர்ந்தவராக, மனிதர்களுடைய நன்மையையே எப்பொழுதும் நாடி, இராச்சிய பரிபாலனம் செய்துவந்தனர். இவர் வம்சாவளியைச் சுருக்கிச் சொல்லுகிறேன். பிரமதேவருடைய குமாரர் குசர் என்றொருவரிருந்தார். அவர் வெகு பலபராக்கிரமம் பொருந்திய அரசர். அவர் பிள்ளை வெகு தார்மிஷ்டரான குசநாபர். அவர் குமாரர் பெருங் கீர்த்திபெற்ற காதி. அவர் குமாரர் தாம் மகாகாந்தியுடன்கூடிய இவ்விசுவாமித்திரர். இவரும் பல்லாயிரமாண்டு இவ்வுலகத்தை அரசாண்டு வந்தார். ஒரு சமயத்தில் இவர் தமது சமுத்திரம்போன்ற சேனையைத் தம்முடன் அழைத்துக் கொண்டு உலகத்தை வலஞ் செய்து வருவதற்காகப் புறப்பட்டார். அப்படி இவர் புறப்பட்டு அநேக நாடுகள், நகரங்கள், நதிகள், மலைகள் ஆச்சிரமங்கள் முதலியவற்றைச் சுற்றினார்.

விசுவாமித்திரர் வசிஷ்டருடைய ஆச்சிரமம் புகுதல்.

இப்படிச் சுற்றிக்கொண் டிருக்கும் காலத்தில் திக்கு விசயமடைந்த இந்த விசுவாமித்திரர், எங்கே பார்த்தாலும் நல்ல மரங்களாலும், பூஞ்செடிகளாலும், கொடிகளாலும் நிறைந்து, அநேகவித பக்ஷிகளாலும், மிருகங்களாலும் வாசம் பண்ணப்பட்டு, சித்தர்களும், சாரணர்களும், தேவர்களும், தானவர்களும் கின்னரர்களும், கந்தர்வர்களும் வந்து வணங்கி நிற்கும் ஓர் ஆச்சிரமத்தைக் கண்டார். அது வசிஷ்ட மாமுனிவருடைய ஆச்சிரமம். அங்கு அநேக பிராமணர்கள் வேதகோஷம் செய்துகொண்டும், மான்கள் பயமற்று அசைவு போட்டுக் கொண்டும், பிரமரிஷிகளும் தேவரிஷிகளும் பலர் வசித்துக்கொண்டும், அநேக மகாத்துமாக்கள் ஒன்றையும் லக்ஷ்யம்பண்ணுமல் தவம் புரிந்து கொண்டும், அக்கினிக்கு ஒப்பான அந்தணர்கள் அநேக விரதங்களை நடத்திக்கொண்டும், காற்றையும், நீரையும், சருகையும், காயையும், கிழங்கையும், பழத்தையும், புசித்துக்கொண்டும்,

வாலகில்லியர்கள் வைகானசர்கள் என்ற அநேக ரிஷிகள் மனத்தை அடக்கிக் கோபத்தை யொழித்து ஐம்பொறிகளை வென்று மந்திரங்களை ஓதிக்கொண்டும் ஓமங்களை நடத்திக்கொண்டு மிருக்கக் கண்டார். அவ்வசிஷ்டருடைய ஆச்சிரமம், இரண்டாவது பிரமலோகம்போல் இருந்தது.

---

## ஐம்பத்திரண்டாஞ்சருக்கம்:

---

### விசுவாமித்திரருக்கு விருந்தளித்தல்.

வசிஷ்ட விசுவாமித்திர சல்லாபம்.

விசுவாமித்திர மகாராஜர் இவ்விதமாய் விளங்கின ஆச்சிரமத்தைக்கண்டு மனங்களித்து அதனுட்சென்று தபசிக்குள் முக்கியராகிய வசிஷ்ட முனிவரை வெகு மரியாதையுடன் வணங்கினர். வசிஷ்டரும் " உமது வரவு நல் வரவாகுக " என்று அவரை உபசரித்து அவருக்கு ஆசனம் அளித்து அவரை உட்காரக் கேட்டுக்கொண்டார். அவரும் அப்படியே உட்கார்ந்ததும் கிரமப்படி வசிஷ்டர் அவருக்குக் கந்தமூல பலங்கள் கொண்டு வந்து கொடுத்து உபசாரம் செய்தனர். விசுவாமித்திரரும் அவரிடமிருந்து எல்லா மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு அவருடைய யோகக்ஷேமத்தைப்பற்றி விசாரித்தார். உமது தவமும் அக்கினி ஹோத்திரமும் இடையூறின்றி நடக்கின்றனவா வென்றும், உமது சிஷ்யர்கள் சௌக்கியமாக இருக்கிறார்களா என்றும், உமது ஆச்சிரமத்திலிருக்கும் மரங்கள் காலத்தில் புஷ்பங்களையும் பலங்களையும் செழிப்பாகக் கொடுக்கின்றனவா என்றும் கேட்டார். வசிஷ்டரும் தமக்கு யாதொரு குறைவுமில்லை என்று தெரிவித்தார். அதன் பிறகு, மிக்க தவமகிமை தங்கிய பிரம குமாரரான வசிஷ்ட மகாமுனிவரும் சுகமாக உட்கார்ந்திருக்கும் விசுவாமித்திரரைப்பார்த்து "மன்னவரே, ஒருவிதமான குறைவு மின்றி நீர் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறீரா? எல்லாக்குடிகளையும் நீர் நியாயந்தவறாது ஆளுவதனால் சந்தோ

ஷப்படுத்தி வைக்கிறீரா? உம்மிடத்தில் சம்பளம் வாங்கியுண்ணும் போர் வீரர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் உமது கட்டளைக்கு அடங்கி அபிமானமாய் நடந்து வருகிறார்களா? உமது சத்துருக்கள் எல்லாரையும் வெற்றிகொண்டீரா? உமது சைனியத்தில் ஒற்றுமைக் குறையில்லாமலிருக்கிறதா? உமது கருவூலம், வற்றாமல் வளர்ந்து வருகிறதா? உமது சிநேகிதர்கள் உம்மிடம் உண்மையோடு நடக்கிறார்களா? பிள்ளைகளையும் பேரர்களையும் அடைந்து சந்தோஷமாக நீர் வாழுகிறீரா" என்று பலவித க்ஷேமசமாசாரத்தையும் கேட்டார். அதற்கு வெகு பல பராக்கிரமம் பொருந்திய விசுவாமித்திர மன்னவர் வசிஷ்டரிடம் தமக்கு ஒன்றுங் குறைவில்லை என்று வணக்கத்தோடு சொல்ல, அதன்மேல் அவ்விருவரும் பல விஷயங்களைப்பற்றி வெகு சந்தோஷமாகச் சில நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருவருடன் ஒருவர் சந்தித்து இங்ஙனம் பேசும் பாக்கியத்தைப் பெற்றதற்காக இருவரும் ஆனந்தக் கடலில் முழுகினார்கள்.

வசிஷ்டர் விசுவாமித்திரருக்கு விருந்து செய்ய விரும்புதல்.

இப்படிப் பேசிமுடிந்ததும் வசிஷ்டமாமுனி விசுவாமித்திரரை பார்த்துப் புன்னகையுடன் "மகாராஜாவே, நான் தங்களுக்கும் தங்களுடைய சைனியத்துக்கும் விருந்தளிக்கக் கருத்துக் கொண்டிருக்கிறேன். அப்படியே செய்யத் தாங்கள் எனக்கு விடை கொடுக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களுக்கு எல்லாம் மன்னவரன்றோ தாங்கள். அரசனுக்கு விருந்தளிப்பது எங்களுக்கு முக்கிய காரியமன்றோ. ஆகையால், நான் செய்யப்போகிற விருந்தை ஒப்புக்கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன்" என்றார். இப்படி வசிஷ்டர் சொன்னதைக் கேட்டு விசுவாமித்திரர் "மாமுனியே, தங்களுடைய தேனொழுகும் சொல் ஒன்றே போதும். முன்னரே தாங்கள் எனக்குக் கந்தமூலபலங்கள் கொடுத்ததாலும் அருக்கியம் பாத்தியம் இவைகளளித்தாலும் நான் தாங்கள் விருந்து செய்ததாக எண்ணிவிட்டேன். தங்கள் தரிசனம் ஒன்றே போதும். தங்களுடைய விருந்தை முந்தியே பெற்றுக்கொண்ட

தற்கு நான் அல்லவோ தங்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டியவன். ஆகையால், என்னிமித்தம் இப்பொழுது தங்களுக்கு ஒரு விதமான கவலையும் வேண்டாம். எனக்கு விடை கொடுங்கள். நான் போய்வருகிறேன். என்னிடத்தில் எப்பொழுதும் பிரீதிமட்டும் தவறாதிருக்கவேண்டும். அது ஒன்றே போதும்" என்றார். இவர் என்ன சொல்லியும் அதைக் கேட்காமல் தாம் விருந்திடுவதை அவசியம் ஒப்புக்கொண்டுதான் போகவேண்டும் என்று வசிஷ்டர் விசுவாமித்திர மன்னவரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். அதன்மேல், விசுவாமித்திரரும் "அப்படியே ஆகட்டும். தங்கள் இஷ்டம் எப்படியோ அப்படியே நடத்துங்கள்" என்று அங்கீகரித்தனர்.

வசிஷ்டர் காமதேனுவை விருந்தளிக்கப் பிரார்த்தித்தல்.

அரசர் இவ்வாறு ஒப்புக்கொண்டவுடன், தமது மந்திர பலத்தால் எல்லாவித சித்தியையும் பெற்ற வசிஷ்டர் வெகு சந்தோஷத்துடன் தம்மிடத்திலிருந்த புண்ணியத்தின் வடிவமாக விளங்கும் காமதேனுவை வரவழைத்து அதனிடம் "எனது அருமையான காமதேனுவே, என் மனோபீஷ்டத்தைச் சீக்கிரம் நிறைவேற்றி வைப்பாயாக. நானோ இவ்வரசருக்கும் இவருடைய சேனை முழுவதுக்கும் விருந்தளிக்க எண்ணங்கொண்டிருக்கிறேன். அதை ஒரு குறைவுமின்றி நீ நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். வெகு உயர்ந்த விருந்து இவர்களுக்கு அளிக்கவேண்டும். அறுசுவையுண்டியும் இவர்கள் ஒவ்வொருவருடைய இஷ்டப்பிரகாரம் கொடுத்து இவர்களைத் திருப்தி பண்ணிவைக்க வேண்டும். அன்னம், இரஸம், பாயஸம், பக்ஷ்யம் முதலிய ஒவ்வொரு விதமான உண்டியிலும் ஒரு குறைவும் இல்லாமல் உத்தமமானவைகளை நீ தான் உண்டாக்கிக் கொடுக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்.

## ஐம்பத்துமூன்றுஞ்சருக்கம்:

### வசிஷ்ட விசுவாமித்திர சம்வாதம்.

காமதேனு செய்தவிருந்து.

இவ்வாறு வசிஷ்டரால் கேட்டுக்கொள்ளப்பட்ட காமதேனுவும் யாருக்கு எது இஷ்டமோ அந்தப்பிரகாரம் விருந்துக்கு வேண்டிய பண்டங்களைக் குவிக்க ஆரம்பித்தது. கரும்பு, தேன், பொரி, அமிருதபானங்கள், சுவைமிக்க பக்ஷணங்கள், சுடுகையுள்ள மலைபோன்ற அன்னப் போர்கள், பலவித அன்னங்கள், பருப்புகள், தயிர்க்குடங்கள், அறுசுவைச் சிற்றுண்டிகளடங்கிய தாம்பாளங்கள், சர்க்கரை கலந்த சிற்றுண்டிகளால் நிரம்பிய பாத்திரங்கள் என்னும் இவையாவையும் அளவிலடங்காத வண்ணம் அவரவர்களிஷ்டப்படி வந்து கொண்டேயிருந்தன. இவ்வண்ணம் வசிஷ்டர் அளித்த விருந்தினுல் விசுவாமித்திருடைய சேனை முழுவதும் வெகு திருப்தியை அடைந்தது. விசுவாமித்திர மன்னரும், அவரது மந்திரிகளும் வெகு திருப்தி அடைந்தார்கள்.

விசுவாமித்திரர் காமதேனுவைத் தமக்குத் தரும்படி வேண்டுதல்.

அதன் பிறகு அவர் ஆனந்தமடைந்து வசிஷ்டரைப் பார்த்து "வேதியமணியே, நான் உமக்கு விருந்தளிப்பதுபோக நீர் எனக்களித்த விருந்தால் நான் வெகுதிருப்தி அடைந்துவிட்டேன். ஆனுல் நான் கேட்டுக்கொள்ளுகிறது ஒன்றிருக்கிறது. நான் நூறுயிரம் மாடு உமக்குக் கொடுக்கிறேன். அவைகளை நீர் ஒப்புக்கொண்டு இந்தச் சபலை என்னும் காமதேனுவை எனக்குக் கொடுத்துவிட வேண்டும். சபலை என்பது பசுக்களுக்குள் இரத்தினம் என்று எண்ணப்படுகிறது. அரசன் இரத்தினங்களுக்கு யஜமானன் என்றன்றோ சாஸ்திரம் கூறும். அந்த விதிப்படி சபலை இரத்தினமாகையால் என்னுடையதுதான்" என்றுர்.

இவர் இப்படிச் சொல்லலும், வசிஷ்டர் "வேந்தே, நூறு பிரமல்ல, நூறுகோடி பசுக்கள், மிகப் பல வெள்ளிப் போர்கள் தாங்கள் கொடுத்தாலும் சபலையை நான் கொடுக்கப்போகிறதில்லை. இந்தக் காமதேனுவோ என்னை விட்டு ஒருநாளும் பிரிக்கப்படமாட்டாது. நான் தேவதைகளுக்கும் பிதிருக்களுக்கும் தினந்தோறும் கொடுக்கும் ஹவ்வியகவ்வியங்களும், என் பிழைப்புக்கு வேண்டியவைகளும், எனது ஹோமங்களும், எனது எல்லா வித்தையும், மகிமையும், தவமும், புகழும் எல்லாம் இந்தக் காமதேனுவின் பாக்கியம் ஒன்றே ஒழிய வேறன்று. என் சந்தோஷத்திற்குக் காரணம் சபலையே. அதிகமாக ஏன் சொல்லவேண்டும். எத்தனை காரணங்களோ இருக்கலாம். சபலையை நான் கொடுப்பேன் என்பதை மட்டும் கனவிலும் தாங்கள் எண்ணவேண்டாம்" என்றார்.

வசிஷ்டர் காமதேனுவை ஒருபொழுதும்கொடேன் என்றல்.

விசுவாமித்திர மன்னர் இன்னும் ஆசைவிடாமல் "தங்கக் கழுத்துச் சங்கிலிகளும், தங்க அங்குசங்களும் போடப்பட்ட பதினாலாயிரம் யானைகளும், மணிகள் கட்டி ஒவ்வொன்றிலும் நான்கு வெண்குதிரைகள் பூட்டப்பட்டு விளங்கும் எண்ணூறு பொன் தேர்களும், நல்லதேசத்தில் நற்குலத்தில் பிறந்து விளங்குகிற பதினோராயிரம் குதிரைகளும், பலவருணமுள்ள ஒரு கோடி இளம் பசுமாடுகளும் இவைகளை எல்லாம் நான் உமக்குக் கொடுக்கிறேன். நீர் எனக்குச் சபலையைக் கொடும். உமக்கு எவ்வளவு ரத்தினங்கள் தங்கங்கள் வேண்டுமோ அவ்வளவும் கொடுக்கின்றேன். சபலையை எனக்குக் கொடும்" என்றார். இப்படி விசுவாமித்திரர் சொல்லியும் அவைகளுக்கெல்லாம் வசிஷ்டர் "மன்னவரே, தாங்கள் என்ன சொன்னபோதிலும் நான் சபலையைக் கொடுக்கமாட்டேன். இதுவே எனது ரத்தினம், எனது பொருள், எனது எல்லா ஆஸ்தி, எனது பிராணன், எனது தர்சம் என்ற சடங்கு, எனது பூர்ணிமாஸச் சடங்கு, தக்ஷிணையுடன் கூடிய எனது யாகம், எனது மற்றும் பலவித சடங்குகள். எனது தொழில்கள் எவற்றிற்கும் மூல

காரணம் இக்காமதேனுதான். வீணாய் அதிகமாகப் பேசுவதில் பயனென்ன. வேண்டும் பொருள்களை யெல்லாம் உண்டாக்கும் இக்காமதேனுவை நான் கொடேன்" என்றார்.

## ஐம்பத்துநான்காஞ்சருக்கம்:

### விசுவாமித்திரருடைய சண்டை.

விசுவாமித்திரர் காமதேனுவைப் பலாத்காரமாக இழுத்தல்.

வசிஷ்டமாமுனி இவ்வாறு சபலையைக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிடவே விசுவாமித்திர மன்னர் அதைப் பலாத்காரமாக இழுத்துக் கொண்டுபோக ஆரம்பித்தார். இவ்வண்ணம் இழுக்கப்பட்ட காமதேனு மிகவும் துக்கப் பட்டுக்கொண்டு அழுது தனக்குள்ளேயே ஆலோசிக்கலாயிற்று. "என்னை வேதிய சிரோமணியாகிய வசிஷ்டர் கைவிட்டாரோ? ஏன் என்னை விசுவாமித்திரருடைய போர் வீரர்கள் இவ்வாறு பலாத்காரமாக இழுத்துக்கொண்டு போகிறார்கள். இவ்வாறு மகாரிஷி என்னைக் கைவிட நான் என்ன அபராதம் பண்ணினேனோ தெரியவில்லையே; ஓர் அபராதமுஞ் செய்யாத அன்புள்ள அடிமையான என்னை வசிஷ்டர் ஏன் கைவிடுகிறார்" என்று இம்மாதிரி சபலை நினைத்து நினைத்துப் பெருமூச் செறிந்து உடனே உதறிக்கொண்டோடி அரசருடைய வேலைக் காரர்கள் என்ன முயன்றும் அவர்கள் கைக்குள் அடங்காமல் வாயுவேகமாய்ப் பறந்து வசிஷ்டர் காலின்கீழ் வந்துநின்றது. அவரைக்கண்டதும் தனது துக்கம் தனக்கே பொறுக்க முடியாமல் மேகநாதமும் துந்துபிநாதமும்போல் கதறி வெகு துயரத் துடன் "வேதியரே, ஏனென்னைக் கைவிட்டு அரசருடைய ஆட்கள் இழுத்துக்கொண்டு போகும்படி செய்தீர்கள்" என்றது.

இதை வசிஷ்டர் கேட்டு விசனப்பட்டு அதைத் தனது

வசிஷ்டர் மனவருத்தம்.

தங்கையாக எண்ணி "அம்மா! நான் உன்னைக் கைவிட்டதாக ஒருநாளும் எண்ணவே வேண்டாம். நீ எனக்கு ஒருவிதமான குற்றமும் செய்யவில்லையே. அந்த அரசரோ தமது பலத்தின் செருக்கால் உன்னை இழுத்துக்கொண்டு போகிறார். என்னுடைய பலம் அரசருடைய பலத்துக்கு நிகராகுமா? அவரோ வேந்தர். வெகு பல பராக்கிரமம் பொருந்தியவர். அல்லாமலும் இன்றைத்தினம் அவர் என்னுடைய விருந்தினராகையால் அவரை நானின்று கொல்லுவது நியாயமன்று என்றிருக்கிறேன். அநேக ஆயிரம் யானைகளும், குதிரைகளும், தேர்களும் நிறைந்த பெரியசைனியம் அவருடனிருக்கிறது" என்றார்.

காமதேனு உபாயங் கூறல்.

இதைக்கேட்டு, சமயத்துக்குத் தக்கவாறு பேசுவதில் வெகு திறமையுடைய சபலையும் வெகு வணக்கத்தோடு ஒப்பற்ற மகிமை தங்கிய அந்தப் பிரமரிஷியாகிய வசிஷ்டரைப் பார்த்து "அரசர்கள் பலம் அந்தணர்களுடைய பலத்துக்கு ஒப்பானதாக ஒருவரும் சொன்னதில்லையே. வேதியர்களுடைய பலம் வெகு அதிகம் என்றன்றோ எல்லாரும் சொல்லுகிறார்கள். அரசர்களுடைய பலத்துக்கு மேலானதன்றோ பிராமண பலம். உங்கள் பலத்திற்கு ஒரு நாளும் தம் சைனியத்துடன் விசுவாமித்திரர் நிகராகமாட்டார். நீங்கள் உங்களுடைய வேதிய மகிமையை என்னிடத்தில் ஏவி விட்டால் ஒரு நொடியில் நான் வேண்டிய படைகளை உண்டாக்கி இந்த மன்னவனுடைய செருக்கையும் பலத்தையும் குலைக்கிறேன்" என்றது.

காமதேனு சேனைகளை உண்டாக்கியது.

இதை வசிஷ்டர் கேட்டு "சரி, சத்துரு சேனையை வதைக்க நீ சேனையை உண்டுபண்ணு" என்று அநுமதிசெய்ய, சபலை என்ற காமதேனுவும் ஒரு நொடியில் அவ்விதச் சேனையை உற்பத்தி பண்ணலாயிற்று. அது ஒரு முக்காரம் போடவே அதிலிருந்து நூற்றுக்கணக்காக "பப்லவர்கள்" என்ற போர்வீரர்கள் உண்டாகி விசுவா

மித்திரர் கண்முன்னே அவருடைய சேனைமுழுவதையும் நாசம்பண்ணினார்கள். அரசரும் கோபங்கொண்டு தேர்மீதேறி அநேக ஆயுதங்களைப் பிரயோகஞ்செய்து பப்லவர்கள் எல்லாரையும் அழித்தார். உடனே காமதேனு "சகர்கள்," "யவனர்கள்" என்ற போர் வீரர்களை உண்டாக்கியது. அவர்கள் பார்ப்பதற்கே பயங்கரமான தோற்றமுள்ளவர்கள்; மகாவீரியமும் காந்தியும் பொருந்தியவர்கள்; மஞ்சள் நிறமுள்ளவர்கள்; பொன்னிறமான உடையை உடுத்துக் கையிற் கத்தி பிடித்தவர்கள். அவர்கள் கிளம்பி விசுவாமித்திரருடைய சைனியத்தை நெருப்புப் போட்டு எரிப்பதுபோல் எரித்துவிட்டார்கள். விசுவாமித்திரரும் அவர்கள்மேல் வெகுகோரமான அஸ்திரங்களைப் பிரயோகம்பண்ணினார். அவைகளால் யவனர்கள், காம்போஜர்கள் முதலியவர்களடங்கிய காமதேனுவின் சைனியமும் ஒருவாறு கலக்கமடைந்தது.

---

## ஐம்பத்தைந்தாஞ்சருக்கம்:

---

### வசிஷ்ட விசுவாமித்திர யுத்தமும், விசுவாமித்திரர் தவமும்.

*விசுவாமித்திருடைய சேனை அழிந்தது.*

இவ்வாறு காமதேனுவின் சைனியம் விசுவாமித்திருடைய அஸ்திரங்களால் மோகமடைந்து கலங்குவதை வசிஷ்டர் கண்டு காமதேனுவை நோக்கி "அம்மா, உனது யோகமகிமையால் அளவற்ற சைனியங்களை உண்டாக்குக" என்று வேண்டினார். உடனே சபலையும் தனது முக்காரத்திலிருந்தும் மடியிலிருந்தும் உடலிலிருந்தும் சூரியன்போல விளங்குகிற காம்போஜர், பப்லவர், யவனர், சகர், மிலேச்சர், ஹாரீதர், கிராதகர் என்ற எண்ணிறந்த போர்வீரர்களை உண்டாக்கினாள். அவர்கள் ஒரு நொடிப் பொழுதில் விசுவாமித்திருடைய சைனியத்தை ஒரு சிறிதும் விடாமல் அழித்துவிட்டார்கள். இதையறிந்த விசுவாமித்திர அரசருடைய நூறு குமாரர்கள்

தங்கள் தங்கள் ஆயுதங்களுடனும் சைனியங்களுடனும் வந்து வசிஷ்டரிடம் போர் புரிந்தார்கள். அவ்வேதியரும் ஹூங்காரத்தால் அவர்கள் அனைவரையும் அவர்களுடைய தேர்வீரர்கள் குதிரை வீரர்களுடன் பிடிசாம்பலாகச் செய்துவிட்டார்.

விசுவாமித்திரர் துக்கம்.

இவ்வண்ணம் தமது மக்கள் எல்லாரும் தங்களுடைய சைனியத்துடன் நாசமடைந்ததைப் பார்த்த விசுவாமித்திரர் வெட்கமுற்று சோகக்கடலில் முழுகிவிட்டார். அவர்மகிமையும் அலையடங்கிய சமுத்திரம்போலவும் பல்லுப் பிடுங்கின நாகம்போலவும் இராகுவால் விழுங்கப்பட்ட சூரியன் போலவும் மழுங்கியது. தமது குமாரர்களும் சேனைகளும் போனபின்பு அவர் இறகொடிந்த பக்ஷிபோல் பரிதபித்தார். தம்மைச்சேர்ந்த எல்லாரும் போனபின் அவருடைய செருக்கும் உத்ஸாகமும் குலைந்து போய்விட்டன.

விசுவாமித்திரர் தவம்.

கடைசியாய்ப் போரில் மாண்டுபோகாமல் மிகுந்திருந்த தமது மகனொருவனை விசுவாமித்திரர் பார்த்து அவனைக் கூப்பிட்டு "நீ நமது இராச்சியத்தை அரசநீதி தவறாது ரக்ஷித்துவா" என்று கட்டளையிட்டுவிட்டுத் தாம் தவம்புரியக் காட்டுக்குச் சென்றார். இமயகிரியில் கின்னரர்களாலும் பன்னகர்களாலும் நிறைந்த ஆச்சிரமம் ஒன்றை நாடி அடைந்து அங்கு மகாதேவரை உத்தேசித்து விசுவாமித்திரர் தவம்புரியலானார். இவ்வாறு சிலகாலம் சென்றபிறகு, ரிஷபக்கொடி உயர்த்திய அந்தச் சிவபிரானும் விசுவாமித்திரர்முன் தோன்றி, அவருடைய தவத்தால் தாம் உள்ளங்குளிர்ந்ததாகத் தெரிவித்து 'என்ன வரம்வேண்டும்?' என்று கேட்டனர். விசுவாமித்திரரும் அவருடைய பாதங்களை வணங்கி "மகாதேவா, தாங்கள் என் தவத்தால் உள்ளங் குளிர்ந்தீர்கள் என்பது உண்மையானால் எனக்குத் தநுர்வேதம் என்ற வித்தை முழுவதையும் அளிக்கவேண்டும். தேவர்களிடத்திலும், ரிஷிகளிடத்திலும், மானிடர்களிடத்திலும், அரக்கர் முதலான இன்னும் மற்றவர்களிடத்திலும், என்ன

என்ன ஆயுத வித்தைகளுண்டோ அவைகள் எல்லாம் என்னிடத்தில் தோன்றவேண்டும். அஸ்திரம் ஒவ்வொன்றினுடைய மந்திரமும் விடாமல் நான் அறியவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அப்படியே அளித்தேன் என்று சொல்லிவிட்டு ஈசுவரரும் மறைந்தார்.

இவ்வரத்தைத் தாம் பெற்றதனால் விசுவாமித்திரர் வெகு சந்தோஷமடைந்து அளவிறந்த செருக்கடைந்து விட்டார்.

விசுவாமித்திரர் வரம் பெற்று மீண்டும் போரிடல்.

சமுத்திரம் பருவகாலத்தில் பெருகுவதுபோல் இவர் சந்தோஷத்தால் பூரித்து வசிஷ்டரைத் தாம் நாசஞ் செய்திட்டதாக எண்ணிவிட்டார். அதன் பின் விசுவாமித்திரர் வசிஷ்டருடைய ஆச்சிரமத்துக்குச் சென்று அவ்விடத்தைக் கொளுத்தும்படி அங்கு அநேகவித திவ்வியாஸ்திரங்களைப் பிரயோகித்தனர். இவ்வற்புத ஆயுதங்களைக் கண்டு நூற்றுக்கணக்காக அங்கு வசித்துக்கொண்டிருந்த முனிவர்கள் எல்லாரும் நடுங்கி ஓடத் தலைப்பட்டார்கள். வசிஷ்டருடைய சிஷ்யவர்க்கமும் அவ்வாச்சிரமத்தில் குடியிருந்த நாநாவிதமான மிருகங்களும் பக்ஷிகளும் நான்கு பக்கங்களிலேயும் பறந்தோடத் தொடங்கின.

இவ்விதக்குழப்பத்தை வேதியர் பார்த்து "ஒருவரும் ஓடவேண்டாம், பயப்படவேண்டாம். நில்லுங்கள். இதோ உங்கள் கண்கள் முன்பாக விசுவாமித்திரரை ஒரு கணப்பொழுதில் கொல்லுகிறேன். சூரியன் முன் பனி பறந்தோடுவது போல அழியச் செய்கிறேன்" என்று சபதங்கூறினர். இங்ஙனங்கூறி உடனே வசிஷ்டர் விசுவாமித்திரரைப் பார்த்து "ஓமானிடப்பதரே, வெகு நாளாக விளங்கிவந்த எனது ஆச்சிரமத்தை நீ யெரித்த படியால் நீ இனி வாழப் போகிறதில்லை" என்று சொல்லிப் பெருங்கோபங் கொண்டு பிரளயகாலத்தில் யமனார் கையிற் பிடிக்கும் தண்டத்துக் கொப்பாகவும் பிரளயகாலாக்கினி போலவும் விளங்கும் தமது பிரமதண்டாயுதத்தைக் கைப்பற்றினர்.

வசிஷ்டர் பிரமதண்டம்.

## ஐம்பத்தாறுஞ்சருக்கம் :

### அந்தணர் பலமே அதிகம்.

வசிஷ்டவிசுவாமித்திர யுத்தம்.

இவ்வாறு வசிஷ்டர் சொல்லவே மகாபலம் பொருந்திய விசுவாமித்திரர் ஓர் ஆக்கிநேயாஸ்திரத்தை எடுத்து வசிஷ்டரை நோக்கி "நில்லு, நில்லு" என்றார். யமன் காலதண்டத்தை ஏந்தி நிற்பது போல வசிஷ்டர் ஒரு பிரமதண்டத்தைக் கையிலேந்தி "இதோ அசையாமல் நிற்கிறேன்; க்ஷத்திரியப்பதர் நீர். உமது செருக்கை நான் இன்று குலைக்கிறேனோ இல்லையோ பாரும். உமது ஆயுதங்களையும் உமது கர்வத்தையும் பொடிப்பொடியாகச் செய்து விடுகிறேன். அந்தணர்கள் முன் அரசர் பலமும் ஒரு பலமா? உம்மைப்பார்த்து உலகமுழுவதும் அவமதிக்கும்படி இன்று செய்துவிடுகிறேன்" என்று சொல்லும் பொழுதே விசுவாமித்திரர் அவர்மேல் அக்கினி யஸ்திரத்தைப் பிரயோகித்தார். அது பிரமதண்டத்தில் படவும் பிரமதண்டமானது நெருப்பைநீர் அவிப்பதுபோல் அதை அவித்துவிட்டது. இதைக் கண்டு விசுவாமித்திரர் வியப்புற்றுத் தாம் ஈசனிடத்திலிருந்து பெற்றுவந்த வாருணம், ரௌத்திரம், ஐந்திரம், பாசுபதம், ஐஷீகம், மாநவம், மோகநம், காந்தர்வம், ஸ்வாபநம், ஜ்ரும்பணம், மாதநம், சந்தாபநம், விலாபநம், சோஷணம், தாருணம், ஒருபொழுதும் வெல்லமுடியாத வச்சிரம், பிரமபாசம், காலபாசம், வருணபாசம், ஈசனுக்கு மிகவும் பிரியமான பிநாகாஸ்திரம், சுஷ்க அசநி, ஆர்த்ர அசநி, தண்டாஸ்திரம், பைசாசம், கிரௌஞ்சாஸ்திரம், தர்ம சக்கரம், காலசக்கரம், விஷ்ணு சக்கரம், வாயவ்யம், மதநம், ஹயசிரம், இரண்டு சக்தி, கங்காளம், முஸலம், வெகு பெரியதான வைத்யாதராஸ்திரம், வெகு கொடியதான காலாஸ்திரம் வெகு கோரமான திரிசூலம், காபாலம், கங்கணம் என்று பலபெயருள்ள பலமான அஸ்திரங்களையெல்லாம் ஒவ்வொன்றினுடைய மந்திரத்தையும் ஓதி ஏவி விட்ட

னர். அவை ஒவ்வொன்றும் வெகு வேகமாகப் பிரமதண்டம் வரையில் வந்து அதன்மேல் விழுந்ததும் ஒன்றும் செய்யமுடியாமல் எல்லாம் அவிந்து விட்டன. அவ்வந்தணர் ஒரு பிரம தண்டத்தால் அவ்வளவு அஸ்திரங்களையும் நாசப்படுத்தினார். இப்படி எல்லா அஸ்திரங்களும் வசிஷ்டரை ஒன்றுஞ் செய்யாமல் சாந்தமாய் நீங்கவே, விசுவாமித்திரர் கடைசியாய்ப் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தனர்.

வசிஷ்டர் பிரமாஸ்திரத்தை வென்றது.

இந்திரப் பிரமாஸ்திர மந்திரத்தை விசுவாமித்திரர் உச்சரித்து விடும்போது அக்கினி முதலான எல்லாத்தேவர்களும், கந்தர்வர்களும், தேவ ரிஷிகளும், உரகர் முதலான எல்லாரும் நடுங்கினார்கள். மூன்று உலகங்களும் பயப்பட்டன. அவ்வளவு பயங்கரமான அஸ்திரத்தை வசிஷ்டர் தமது பிரம தண்டத்தால் இழுத்தெறிந்தார். அப்படி அவர் செய்தபொழுது அவர்மேனியே மூவுலகத்தாரும் நடுங்கும்படியான அவ்வளவு பயங்கரமான தோற்றத்தை யடைந்தது. அவர் தேகஞ் சிலிர்சிலிர்க்க அவருடைய மயிர்க்கால் ஒவ்வொன்றிலிருந்தும் நெருப்புப் பொறிகள் கிளம்பலாயின. அவர் கையிற்பிடித்த பிரமதண்டமானது காலன் பிரளயகாலத்துக் கடைசியில் தன் கையிற்பிடித்த மற்றொரு யமதண்டம்போல் விளங்கிற்று. அதைப்பார்த்து எல்லாரிஷிகளும் வசிஷ்டரை நோக்கி "ஓ அந்தன ரத்தினமே, உமது பிராமண தேஜஸை உமக்குள்ளேயே அடக்கிக்கொள்ளும். ஒருவராலும் தாங்கமுடியாது. விசுவாமித்திரரை நீர் முழுதும் வென்றுவிட்டீர். இனி உலகத்தை ரக்ஷியும். பிரம தேஜசை உமக்குள்ளேயே அடக்கிக் கொள்ளும். இல்லாவிடில் உலகத்துக்கே நாசம் வந்துவிடும் போலிருக்கிறது" என்று அலறினார்கள். இப்படி எல்லாரும் சொல்லும்பொழுது வசிஷ்டர் தமது உக்கிரத்தை ஒருவாறு தமக்குள்ளேயே அடக்கிக்கொண்டார்.

விசுவாமித்திரரும் வசிஷ்டரால் ஜயிக்கப்பட்டவராய் முழு

அந்தணர் பலம்.

தும் தோல்வியடைந்து பெருமூச்செறிந்து "சீ! க்ஷத்திரிய பலம் ஒரு பலமா! அந்தணர் பலந்தான் பலம். ஒரு பிரமதண்டத்தால் எனது எல்லா அஸ்திரங்களும் நாசமாயின. இனி நான் இதை நன்றாயறிந்து ஐம்புலன்களையும் மனத்தையும் பரிசுத்தமாக வைத்துக்கொண்டு அந்தணன் என்ற பட்டத்தை அடையத் தவம் புரிகின்றேன்" என்று நிச்சயித்தார்.

---

## ஐம்பத்தேழாஞ்சருக்கம்:

---

### விசுவாமித்திரர் தவமும், திரிசங்கு வாக்கியமும்.

விசுவாமித்திரருக்கு இராஜரிஷிப் பட்டம் கிடைத்தது.

தமது தோல்வியை நினைத்து நினைத்து விசுவாமித்திரர் மனம் பதைத்துப் பெருமூச்செறிந்து மகாத்துமாவாகிய வசிஷ்டருடைய பொல்லாப்பை மாத்திரம் சம்பாதித்தவராய்த் தமது பத்தினியைக் கூட அழைத்துக் கொண்டு தவம்புரியத் தென்திசை சென்றார். அவ்விடத்தில் கனிகளையும், கிழங்குகளையும் புசித்துக் கொண்டு பொறுமையோடு கடுமையாகத் தவம்புரிந்தார். அவ்விடத்தில் அவருக்கு வெகு உண்மையும், தர்மமும் பொருந்திய நான்கு குமாரர்கள் உண்டானார்கள். அவர்கள் பெயர் ஹவிஷ்யந்தன், மகிஷ்யந்தன், த்ருடநேத்திரன், மகாரதன் என்பன. இவ்வாறு தவம்புரிந்து கொண்டிருக்கும் விசுவாமித்திரருக்கு ஆயிரம் வருஷங்கள் கடந்த பின்பு இவ்வுலகத்துக்கு ஆதிக்கடவுளான பிரமதேவர் பிரத்யக்ஷமாய், அவரைப் பார்த்து "குசிகருடைய குமாரரே, நீர் உமது தவத்தால் இராஜலோகத்தை வெற்றி கொண்டீர். இத்தவத்திற்காக உமக்கு இராஜரிஷி என்ற பட்டம் அளித்தேன்" என்று இனியவாக்கால் வெகு மதுரமாகச் சொல்லி, தேவர் கூட்டங்களுடன் தமது உலகஞ் சென்றார்.

*முனிவர் மனம் வெறுத்து மறு படி தவம் புரிந் தது.*

விசுவாமித்திரரும் இதைக்கேட்டு வெட்கமடைந்தவராய்த் தலைதாழ்ந்து வெகு துயரமடைந்து கோபமுங் கொண்டு "நாம் எவ்வளவோ உக்கிரமான தவம்புரிந்தோம். இவ்வளவு தானா நமக்குவந்த இலாபம். தேவர்களும் ரிஷிகணங்களும் என்னை இராஜரிஷி என்று தான் ஒப்புக் கொண்டார் களேயன்றி வேறில்லை. என் தவத்தின் பலன் இவ்வளவு தானா! நான் மறுபடி தவம்புரிவேன்" என்று தமக்குள்ளேயே ஆலோசித்துக்கொண்டு மறுபடியும் வெகு உக்கிரமாகத் தவம் புரியலுற்றார்.

*திரிசங்குவின் ஆசையை வசிஷ்டர் தடுத்தல்.*

இந்தச் சமயத்தில் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த உண்மையும் உறுதியும் பொருந்திய திரிசங்கு என்ற ஒரு அரசனிருந்தான். அவன் மனத்தில், தான் ஒரு யாகம்பண்ணி அந்த யாகத்தின் மகிமையால் தான் சரீரத்துடன் தேவலோகம் போகவேண்டும் என்ற எண்ணம் தோன்றிற்று. உடனே அவன் வசிஷ்டரை வரவழைத்து அவரிடம் தனது கருத்தை வெளியிட அவர் அது ஒருபொழுதும் முடியாதென்றனர். அவர் பேச்சை ஒரு பொருளாய் எண்ணாமல் அவமதித்துத் திரிசங்கு மன்னன் தென்திசை நோக்கிச் சென்று அங்கு வசிஷ்டர் குமாரர்கள் நூறு பெயர்கள் தவம்புரிந்துகொண்டிருக்கு மிடஞ் சேர்ந்தான்.

*திரிசங்கு வசிஷ்டகுமாரர்களைத் தனக்கு உதவி செய்ய வேண்டல்.*

அவர்கள் அனைவரும் வெகு காந்தியுடனும் மகிமையுடனும் தவம்புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் திரிசங்கு சென்று வணங்கிக் கொஞ்ச நேரம் வெட்கத்தால் குனிந்த தலையுடன் ஒன்றுஞ் சொல்லாமல் நின்று, பின்பு அவர்களைப் பார்த்து அஞ்சலி பந்தம் பண்ணி "எனது குருகுமாரர்களே, நானுங்களைச் சரணமாக அடைந்திருக்கிறேன். உங்களால் என்னைக் காப்பாற்ற முடியும். அப்படியே

செய்து எனது கருத்தை முடித்து வைக்கவேண்டும். முதலில் நான் வசிஷ்டரை வேண்டினேன்; அவர் தம்மால் முடியாதென்று என்னை ஓட்டிவிட்டார். நான் ஒரு பெரிய யாகம் நடப்பிக்கக் கருதுகிறேன். அதை நீங்கள் எல்லோரும் நடத்தியருளவேண்டும். உங்களை வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் எல்லாரும் ஒருமிக்கச்சேர்ந்து என் யாகத்தை நடத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். என் யாகத்தின் கருத்து, நான் என் சரீரத்துடன் தேவலோகம் போகவேண்டுமென்பது. இதைத் தம்மால் செய்துவைக்க முடியாதென்று வசிஷ்டர் மறுத்துவிட்டார். இப்பொழுது எனக்கு எனது புரோகிதர் பிள்ளைகளைவிட இக்காரியத்தை முடித்துக்கொடுக்க வேறுகதி ஒருவருமில்லை. இக்ஷ்வாகுவமிசத்து எல்லா அரசர்களுக்கும் குருவே பரம கதி. அக்குருக்கள் வித்வான்களாக விருப்பார்களேயானால் அவர்கள் எப்பொழுதும் அரசர்களுக்கு நற்கதியை உண்டாக்கிக் கொடுப்பார்கள். ஆகையால் உங்களுடைய தந்தைக்குப் பிறகு நீங்களே எனக்குத் தெய்வம்" என்றான்.

---

## ஐம்பத்தெட்டாஞ்சருக்கம்:

---

### திரிசங்கு சாபம்.

வசிஷ்டருடைய குமாரர்கள் ஆக்ஷேபித்தல்.

திரிசங்கு சொன்னதை வசிஷ்ட குமாரர்கள் நூற்றுவரும் கேட்டுக் கோபங்கொண்டு அவ்வரசனை நோக்கி "ஐயா, நீர் நல்ல புத்தியுடன் இங்குவரவில்லை. நமது பெரியவர் இந்த யாகம் வேண்டாம் என்று தடுத்திருக்க அந்தக் கட்டளையைத் தாண்டி நீர் எவ்வண்ணம் எங்களுதவியைநாடி இங்குவந்தீர். இக்ஷ்வாகு வம்சத்தார்களுக்குத் தங்கள் குருவே முக்கியகதி என்பது திண்ணம். அதேமாதிரி, அந்தச் சத்திய சந்தரான எங்கள் தகப்பனார் சொல்லை மீறிநடந்து பலனை

யடைய முடியாதென்பதும் திண்ணம். அவரே தம்மால் முடியாதென்று சொல்லும் காரியத்தை நாங்கள் எவ்வாறு நடத்தி வைக்கமுடியும்? ஏதோ சிறுபிள்ளைப் புத்தியுடன் நீர் இங்கு வந்திருக்கிறீர். சீக்கிரம் உமது பட்டணத்துக்குத் திரும்பிப் போம். எங்களுடைய தகப்பனார் இம்மூவுலகத்துக்கும் யாகஞ் செய்து வைக்கவல்லவர். அவரை அவமதித்து நடக்க நீர் எவ்வாறு முயலலாம்? அதற்கு நாங்கள் எங்ஙனம் சம்மதிப்போம்?" என்றார்கள்.

திரிசங்குவை முனிகுமாரர்கள் சபித்தல்.

இவர்கள் இப்படிச் சொன்னதைத் திரிசங்குமன்னன்கேட்டுப் பெருஞ்சினமடைந்து வார்த்தை தடுமாற அவர்களை நோக்கி "உங்கள் தகப்பனார் என்னை எவ்வாறு அவமதித்தாரோ அவ்வாறே நீங்களும் என்னை அவமதித்தீர்கள். இனிமேல் நானும எனக்குத்தக்க வேறு வழியைத் தேடிக்கொள்ளுகிறேன். நீங்கள் சௌக்கியமாயிருங்கள்" என்றான். இவ்வாறு கோபத்துடன் அரசன் சொன்னதை வசிஷ்ட குமாரர்கள் கேட்டுச் சினமடைந்து "நீ சண்டாளனாய்ப் போகக்கடவாய்" என்று சாபமிட்டார்கள். இப்படிச் சாபமிட்டுவிட்டு இவர்கள் தங்களாச்சிரமத்துக்குள் சென்றார்கள்.

திரிசங்கு சண்டாளனானது.

இரவு நீங்கிப் பொழுது விடியும்போது பார்த்தால் திரிசங்குமன்னன் சண்டாளனாக மாறி நின்றான். நீலத்துணி ஒன்றை உடுத்துக்கொண்டு மேனி முழுவதும் கறுத்துவடிவம் கொடியதாக மாறுபட்டுத் தலைமயிர் சிறுத்துச் சிதையிலிருந்து எடுத்தபொருளால் செய்யப்பட்ட மாலை ஒன்றை அணிந்தவனாகி மயானச்சாம்பலை மேலே பூசிக்கொண்டு இரும்புமயமான ஆபரணங்களை அணிந்து திரிசங்குமன்னன் நிற்பதை அவனைத்தொடர்ந்துவந்த அவனுடைய மந்திரிகளும், மற்றவர்களும் கண்டு நடுங்கிப் பயந்தோடினார்கள்.

விஸ்வாமித்திரர் மனமிரங்கல்.

ஆனால் திரிசங்குமன்னன்மட்டும் தனக்கு வந்த துயரத்தைத் தானே சகித்துக்கொண்டு செய்யும்வழி யொன்றுந் தெரியாமல் இரவும் பகலும் வழி நடந்து மனங்குழம்பி விசுவாமித்திரரை நாடிச் சென்றான். மன்னன் சண்டாளக் கோலத்துடன் தம்மிடம் வரக்கண்ட விசுவாமித்திரரும் மிக மனமிரங்கி வெகு கருணையுடன் " அயோத்தியின் வேந்தே, வெகு பலபராக்கிரமம் பொருந்திய மன்னவரே, ஏதுகாரணத்தால் இவ்விதம் தங்கள் மேனி உருக்குலைந்தது? ஏது காரணத்தால் இங்கு தாங்கள் வந்தது" என்றார்.

திரிசங்கு விசுவாமித்திரரிடம் முறையிட்டுக் கொள்ளுதல்.

அப்படி அவர் சொன்னதைச் சண்டாள விகாரத்துடனிருந்த அரசன் கேட்டு அஞ்சலி பண்ணிக் கொண்டு வெகு வணக்கத்துடன் "விசுவாமித்திர வேந்தே, நான் நடந்ததை நடந்தபடி சொல்லுகிறேன். நான் ஒருநாளும் இதுவரையில் பொய்சொன்னவனல்லன். எனது தேகத்துடன் தேவலோகம் போகவேண்டும் என்பது எனது கருத்து. இதை உத்தேசித்து எனது குருவாகிய வசிஷ்டரை என் கருத்தை நிறைவேற்றிவைக்க ஒரு யாகஞ் செய்து கொடுக்கக் கேட்டுக்கொண்டேன். அவர் அதை மறுத்து என்னையும் அவமதித்தார். அதன் பின்பும் அவருடைய குமாரர்களை வேண்டினேன். அவர்களும் என்னை அவமானம் பண்ணினார்கள். எனது வேண்டுகோள் நிறைவேறுவதற்கு ஈடாக இந்தக் கோரமான உருவங் கொண்டேன். என் சரீரத்துடன் தேவலோகம்போக நூறு யாகஞ் செய்தேன் ஒன்றும் பலிக்கவில்லை. இப்பொழுது நான் சாபத்தால் கஷ்டதசையை அடைந்திருந்தாலும் அரசர்களுடைய தருமம் தவறாது நடந்து வந்திருக்கிறேன். எத்தனையோ யாகங்களை நிறைவேற்றியிருக்கிறேன். தருமமும், நீதியும் தவறாது குடிகளைக் காப்பாற்றி யிருக்கிறேன் என் நற்செய்கையால் மகாத்துமாக்களான பெரியவர்களை யெல்லாம் நான் களிக்கச் செய்திருக்கிறேன். தருமமார்க்கத்தில்

நடந்து வந்து யாகமொன்றை நடத்தக்கருதி எனது குருவை நான் யாசிக்க அதை அவர்கள் ஒப்புக்கொள்ளாத காரணத்தால் நான் இந்தக் கதியை அடைந்தேன். எல்லாம் விதியின்பயன். புருஷயத்தனத்தில் ஒரு காரியமும் முடிவு பெறுகிறதில்லை. விதிதான் முக்கியமென்பது திண்ணம். விதியை வெல்ல ஒருவராலும் முடியாது. விதியின் கொடுமையை முழுதும் அனுபவிக்கும் என்னைத் தாங்களே ரக்ஷிக்கவேண்டும் எனக்கு வேறுவழி ஒன்றும் தோன்றவில்லை. வேறு ஒருவரையும் சரணமடைய என் மனம் நினைக்கவில்லை. விதியைத் தங்களுடைய பிரயத்தனத்தால் வென்று என் கருத்தைத் தாங்களே நிறைவேற்றி வைக்கவேண்டும்" என்றான்.

---

## ஐம்பத்தொன்பதாஞ்சருக்கம்:

---

### வசிஷ்டகுமாரரை விசுவாமித்திரர் சபித்தல்.

திரிசங்குவுக்கு விசுவாமித்திரர் அபயம் கூறல்.

இவ்வாறு திரிசங்கு சொல்ல, விசுவாமித்திர மகாரிஷியானவர் கருணைபுரிந்து "இக்ஷ்வாகு வம்சத்தினுதித்த வேந்தே, உம்மை வெகு யோக்கியர் என்று நான் முன்னமே அறிந்திருக்கிறேன். சரணம் என்று நீர் என்னை வந்து அடைந்த பிறகும் உமக்குப் பயமுண்டோ? நான் உமது யாகத்தை ஆரம்பித்து நடத்திக் கொடுக்கிறேன். எல்லா மகாரிஷிகளுக்கும் மற்றுமுள்ள யாகத்தை நிறைவேற்றி வைக்கிறவர்களுக்கும் இப்போதே சொல்லியனுப்பி அவர்களை வரவழைக்கிறேன். குரு சாபத்தால் உமது உருவம் மாறியிருக்கிறது. அதே யுருவத்துடன் நீர் சுவர்க்கலோகம் ஏறும்படி நான் செய்விக்கிறேன். இது முதல் நீர் சரீரத்துடன் சுவர்க்கலோகம் சேர்ந்துவிட்டதாகவே எண்ணிவிடலாம். எந்த நிமிஷம் என்னைச் சரணம் என்று அடைந்தீரோ அந்த நிமிஷ முதல் உமது விருப்பங்

ளெல்லாம் நிறைவேறிவிட்டன வென்று எண்ணும்" என்று சண்டாள வுருவத்துட னிருந்த அம்மன்னவரைப் பார்த்து மதுரமாகக் கூறினர்.

இப்படிச் சொல்லிவிட்டு உடனே அவர் வெகு புத்திசாலிகளும் தருமிஷ்டர்களுமான தமது குமாரர்களை அழைத்து, யாகத்துக்கு வேண்டியவை களைச் சேர்த்து வைக்கக் கட்டளையிட்டார். அதன் பின்பு வெகு கெட்டிக்காரர்களான சிஷ்யர்களைக் கூப்பிட்டு "நீங்கள் எல்லாரும் இந்தக்ஷணமே புறப்பட்டுப்போய் நான் செய்யப்போகிற திரிசங்குவின் யாகத்துக்காக எல்லா ரிஷிகளையும் வசிஷ்ட குமாரர்கள் உட்பட அழைத்து வாருங்கள். நான் அவர்களை அழைப்பதைப் பற்றி யாராவது அவமானமாய் எடுத்தெறிந்து சொன்னால் அதை ஒன்றும் விடாமல் அவர்கள் சொன்ன வண்ணம் என்னிடத்தில் வந்து சொல்லுங்கள்" என்று கட்டளையிட்டனர். இவர் கட்டளைப் படி எல்லாச் சிஷ்யர்களும் அநேக தேசங்கள் சென்று ஆங்காங்குள்ளவர்களை யாகத்துக்கு அழைத்தார்கள். அநேக பிராமணர்கள் உடனே வந்துசேர ஆரம்பித்தார்கள். சிஷ்யர்களும் திரும்பிவந்து "எல்லாரையும் அழைத்தோம். எல்லாரும் வருவதாக ஒப்புக்கொண்டார்கள். மகோதய ரிஷி நீங்கலாக மற்ற அந்தணர்கள் யாவரும் வருகிறார்கள். வசிஷ்டருடைய குமாரர்கள் நூறுபெயர்களையும் இந்த யாகத்துக்கு நாங்களழைத்தபொழுது அவர்கள் சொன்னதைச் சொன்னபடி தெரிவிக்கிறோம்: கேளுங்கள். நாங்கள் அவர்களை அழைத்தபொழுது 'அவர்களும், மகோதயரும் யாகத்தைப் பண்ணிவைக்கிறவன் ஒரு க்ஷத்திரியன். யாகத்துக்கு யஜமானன் சண்டாளனாய்விட்ட அரசன். அச்சபைக்கு எப்படி தேவர்கள் வந்து அவிர்ப்பாகம் வாங்குவார்கள்; அதைத்தான் பார்ப்போம். சண்டாளனுடன்கூட இருந்து புசித்து எந்த அந்தணன் விசுவாமித்திரனால் பரிபாலிக்கப்பட்டுச் சுவர்க்கலோகஞ் சேரப்போகிறான். அதையாவது பார்ப்

முனிவர் எல்லாரையும் யாகத்துக்கு அழைத்தல்.

போம்' என்று சொன்னார்கள்" என்று சிஷ்யர்கள் விசுவாமித்திரரிடந் தெரிவித்தார்கள்.

யாகத்துக்கு வாராதவர்களை முனிவர் சபித்தல்.

அவரும் கண்கள் சிவந்து கோபம் மேலிட்டுச் சீறிக்கொண்டு பின் வருமாறு சொல்லலானார். "குற்றமில்லாதபடி கடுந்தவம் புரிந்து கொண்டிருக்கும் என்னைத் துராத்துமாக்களான இவர்கள் இம்மாதிரி அவமதித்தபடியால் இவர்கள் எல்லாரும் நீறாய்ப்போகக்கடவர்கள். இதற்குச் சந்தேகமில்லை. இன்றைத் தினமே இவர்கள் கால பாசத்தால் நாசமடைந்து எழுநூறு ஜன்மம் சவமாம்சத்தைப்புசித்துக்கொண்டும் நாயிறைச்சியைத் தின்றுகொண்டும் இருக்கக்கடவார்கள். "முஷ்டிகர்கள்" என்று பெயர் படைத்துத் தயைதாக்ஷிணியம் இல்லாதவர்களாக விவகாரமான காரியங்களைச் செய்து கொண்டு விகாரரூபத்துடன் இவர்கள் பூமியில் சஞ்சரிக்கட்டும். எல்லா அந்தணர்களும் என் கட்டளைப்படி யாகத்துக்கு வந்திருக்க மகோதயர் அவமதிக்கத் தகாத என்னை அவமதித்தபடியால் அவர் வேடராகக்கடவர். வெகுகாலம் அவர் பிராணிகளை வதைத்து உண்டு வெகு பாவஞ் செய்து கொண்டு அவஸ்தைப் படக்கடவர்" என்று அங்குவந்திருந்த வேதியர்கள் சபையில் விசுவாமித்திரர் தம்மை அவமானஞ் செய்தவர்களெல்லாரையும் சபித்து ஓய்ந்தனர்.

## அறுபதாஞ்சருக்கம்:

### திரிசங்கு சுவர்க்கத்துக்கு ஏகுதல்.

திரிசங்கு யாகத்தை விசுவாமித்திரர் நடத்துதல்.

இங்ஙனம் சபித்தமையால் வசிஷ்ட குமாரர்களும் மகோதயரும் நாசமடைந்தனரென்று தமது யோக திருஷ்டியால் அறிந்துகொண்டு மகாகாந்தி பொருந்திய விசுவாமித்திரர் அங்கிருந்த ரிஷிகளைப் பார்த்துப் பின் வருமாறு சொல்லத் தொடங்கினார். இவர் திரிசங்கு என்று பெயர் கூறப்படும் பிரசித்திபெற்ற மன்னவர்; இக்ஷ்வாகு

வம்சத்தில் பிறந்தவர்; பல தருமங்களைப் புரிந்தவர்; வெகு கொடையாளி. என்னை இப்பொழுது சரணமாக அடைந்து தம்முடைய சரீரத்துடன் தாம் சுவர்க்கலோகம் போய்ச் சேரும்படியாக ஒரு யாகத்தை நடத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறார். ஆகையால், நீங்கள் எல்லாரும் என்னுடன்கூட இருந்து இந்த யாகத்தை நடத்திக் கொடுக்கவேண்டும்'' என்று இவ்வாறு விசுவாமித்திரர் சொன்னதை அங்கிருந்த ரிஷிகள் எல்லாரும் கேட்டு, விசுவாமித்திரருக்குத் தெரியாதபடி தங்களுக்குள் தாங்களே ஆலோசிக்கலானார்கள். "இந்தக் குசிகவம்சத்துப்பூண்டு கோபத்தின் அவதாரம். இவர் சொன்னபடி நாம் செய்யாவிட்டால் இவர் நம்மை இலேசில் விடமாட்டார். இவர் நெருப்பு; நம்மையும் சபித்துவிடுவார். இவர் கட்டளைப்படி யாகத்தை திரிசங்கு தனது தேகத்துடன் சுவர்க்கலோகம் போகும்படியாக நடத்துவோம். விசுவாமித்திரருடைய தவத்தின் பலத்தால் அவரும் சுவர்க்கமடையட்டும்'' என்று தங்களுக்குள் சொல்லிக்கொண்டு யாகத்தை நடத்த ஆரம்பித்தார்கள். யாகம் ஆரம்பித்துவிடவே விசுவாமித்திரர் தாமே புரோகிதராக முன்னே வீற்றிருந்தார். மந்திர சாஸ்திரத்திலும், தந்திர சாஸ்திரத்திலும் தேர்ச்சியடைந்த ஆசாரமுள்ள அந்தணர்கள் புரோகிதர்களாக உடனிருந்தார்கள்; சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் விதி தவறாது எல்லாச் சடங்குகளையும் நிறைவேற்றினார்கள்.

முனிவர் திரிசங்குவை உடலுடன் சுவர்க்கமேற்றுதல்.

பிறகு நீண்டகாலம் வெகு சிரமப்பட்டு விசுவாமித்திரர் சகல தேவதைகளையும் தங்கள் தங்கள் அவிர்ப்பாகங்களை வந்து வாங்கி போகும்படி மந்திரங்களைக் கூறிக்கூறி அழைத்துப்பார்த்தார். ஒருவராவது வரவேயில்லை. முனிவருக்கு அதிக கோபம் மூண்டுவிட்டது. அவர் தமது கையில் பிடித்திருந்த யாக அகப்பை ஒன்றை உயர எடுத்துக்கொண்டு திரிசங்குவைப் பார்த்து "நான் இதுவரையில் சேர்த்துவைத்திருக்கும் தவத்தின்

மகிமையை இதோ பாரும். அதன் பலத்தால் உமது சரீரத்தோடு இப்பொழுதே நீர் சுவர்க்கலோகஞ் செல்லும்படி செய்கிறேன். உமது மகிமையால் நீர் போகமுடியாதென்றாலும் எனது தபோபலத்தால் உம்மை இப்பொழுதே சுவர்க்கம் ஏற்றுகிறேன். உமது உடலுடன் சுவர்க்கம் ஏறும்" என்றார். இப்படி இவர் சொல்லி முடித்ததும் எல்லா ரிஷிகளுடைய கண்களுக்கும் முன்பாக அதிவேகமாக திரிசங்கு சுவர்க்கம் ஏறினார்.

இந்திரன் திரிசங்குவைக் கீழே தள்ளியது.

அங்குச் சென்றபொழுது அவரை இந்திரன் மற்றத் தேவதைகளுடன் பார்த்து "திரிசங்குவே சுவர்க்கம் உனக்கு இருப்பிடமன்று. மறுபடி உனது உலகத்துக்கே போய்விடு. மூடனே, குருசாபத்தால் நீ இழிக்கப்பட்டவன். தலை கீழாகப் பூமியில் விழு" என்றான். இப்படியே தேவேந்திரன் சொன்னபடியே திரிசங்குவும் தலைகீழாக விழும்போது "விசுவாமித்திரரே, என்னைக் காப்பாற்றும்" என்று அலறிக்கொண்டுவந்தார்.

முனிவர் திரிசங்குவுக்காகச் சுவர்க்கலோகம் வேறு படைத்தல்.

இதைக் கேட்டலும் விசுவாமித்திரர் கோபமடைந்து தமது தபோமகிமையின் பலத்தால் "நில், அவ்விடமே" என்று கட்டளையிட்டார். திரிசங்கு ஆகாசத்தில் எவ்விடத்தில் விழுந்துகொண்டிருக்கும்போது விசுவாமித்திரர் இவ்வண்ணம் சொல்லினரோ அவ்விடத்திலேயே அவ்வரசர் தலைகீழாக அந்தரத்தில் நின்றார். பிறகு எல்லா ரிஷிகளும் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே விசுவாமித்திரர் மற்றொரு பிரமதேவர்போல் மற்றொரு சுவர்க்கலோகத்தைத் தமது தவத்தின் பலத்தால் உண்டாக்க ஆரம்பித்தார். முதலில் ஆகாசத்துக்குத் தெற்குப் பாகத்தில் வேறு சப்தரிஷி மண்டலத்தை உண்டாக்கினார். இருபத்தேழு நக்ஷத்திரங்கள் அடங்கிய மற்றொரு நக்ஷத்திரக்கூட்டத்தையும் அத்திசையில் உண்டாக்கினார். இவைகளையெல்லாம் சகல ரிஷிகளும் பார்த்து ஆச்சரியப்படும்படி செய்தார். 'வேறு இந்திரனை நான் உண்டு பண்ணுகிறேன் ; அல்லது இந்திரனேயில்லாமல் அடித்துவிடு

கிறேன்' என்று சபதம் கூறினர். 'வேறு தேவதைகளையும் உண்டாக்கி விடுகிறேன்' என்று கோபங்கொண்டு கூறி அங்ஙனமே செய்யத் தொடங்கினர். இவைகளை யெல்லாங் கண்டு தேவர்களும் ரிஷிகளும் நடுநடுங்கி வெகு வணக்கத்துடன் விசுவாமித்திரரைப் பார்த்து "முனிவரே! இந்தத் திரிசங்கு என்னும் அரசர் குருசாபத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறார். அச்சாபத்தை யொழிக்காமல் இவர் தமது சரீரத்துடன் சுவர்க்கலோகம் ஏறுவது முடியாதே" என்றார்கள்.

முனிவர் உண்டாக்கிய திரிசங்கு சுவர்க்கத்தைத் தேவர்கள் ஒப்புதல்.

அதற்கு விசுவாமித்திரர் "நான் திரிசங்குவினிடம் அவருடைய சரீரத்தோடு அவரைச் சுவர்க்கத்தில் ஏற்றி வைப்பதாக ஒப்புக்கொண்டுவிட்டேன். நான் பொய்யனாக மாட்டேன். ஆகையால் அவர் தமது சரீரத்துடன் சுவர்க்கத்தில வசிக்கவே வேண்டும். நான் இப்பொழுது சிருஷ்டித்த நக்ஷத்திரங்கள் இவ்வுலகமுள்ள வரையில் இருக்க வேண்டியவதுதான். இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்" என்றார். தேவர்கள் "அப்படியே நீங்களுண்டாக்கின நக்ஷத்திரங்கள் ஜ்யோதிர் மண்டலத்தை விட்டுக் கொஞ்சம் ஒதுங்கி விளங்கட்டும். திரிசங்குவும் தலை கீழாக அவ்விடத்தில் தேவன்போல வசிக்கட்டும். நீர் உண்டாக்கின நக்ஷத்திரங்களெல்லாம் திரிசங்குவைப் பின் தொடர்ந்து செல்லட்டும். இவ்வளவு மாத்திரத்தால் திரிசங்கு சுவர்க்கமடைந்தவர் போலவே கீர்த்திபெறுவார்" என்றார்கள். விசுவாமித்திரர் அதைக் கேட்டு வெகு சந்தோஷமடைந்தார். எல்லாத் தேவர்களும் அவரைப் புகழ்ந்தார்கள். அதன் பிறகு அந்த யாகத்துக்காக அங்கு வந்திருந்த தேவதைகள் ரிஷிகள் எல்லாரும விசுவாமித்திரரிடம் விடைபெற்றுக் கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

## அறுபத்தோராஞ்சருக்கம்:

### ரிசீகர் சுனச்சேபனைப் பசுவாக விற்றது.

விசுவாமித்திரர் புஷ்கரம் புகுதல்.

திரிசங்குவுக்காகத் தாம் நடத்திய யாகத்திற்கு வந்த ரிஷிகள் எல்லாரும் போன பின்பு விசுவாமித்திரர் அந்தக் காட்டில் வசித்துக் கொண்டிருந்த எல்லாரையும் பார்த்து "நாம் இந்தத் தென்றிசைக்குத் தவம்புரிய வந்ததும், நமது தவத்துக்கு அநேக இடையூறுகள் நேர்ந்துவிட்டன. ஆகையால், நாம் வேறொருதிசை நோக்கிப் போய் அவ்விடத்தில் தவம் பண்ணுவோம். ஓ! மகாத்துமாக்களே! மேற்குத் திக்கில் புஷ்கரமென்று வெகு விசாலமான தபோவன மொன்றிருக்கிறது. அது எல்லாத் தபோவனங்களிலும் உத்தமமான வனம். வெகு ரமணீயமானது. அங்கு நாம் சென்று யாதொரு விக்கினமுமின்றி நமது தவங்களை நடத்துவோம்" என்றார். இம்மாதிரி சொல்லிப் புஷ்கரம் சேர்ந்து இம்மாமுனியும் கிழங்குகளையும் கனிகளையும் புசித்துக்கொண்டு வெகு கடுமையான தவம் புரிந்து வந்தார்.

அம்பரீஷர் யாகம்.

இச்சமயத்தில் அயோத்தியை மன்னவரான அம்பரீஷர் என்ற மிக்க கீர்த்தி பெற்றவர் ஒரு பெரிய யாகம் பண்ண ஆரம்பித்தார். அவர் யாகத்துக்காக ஒட்டிவிட்ட பசுவை இந்திரன் திருடிக் கொண்டு சென்று விட்டான். பசு காணமற் போனதும் புரோகிதர் அரசனைப் பார்த்து "இராஜாவே, பசு போய்விட்டது, அது உமது கவனக்குறைவென்று சொல்லவேண்டுமே யல்லது வேறன்று. எந்த அரசன் யாகபசுவைப் பாதுகாக்கத் தவறுகிறானோ அவன் அந்தத் தோஷத்தால் நாசமடைகிறான் என்று நீதிநூல் சொல்லுகின்றது. கெட்டுப்போன பசுவையாவது திரும்பக் கொண்டுவரவேண்டும். இல்லாவிடின் அதற்கு ஈடாக ஒரு மனிதனைப் பசுவாகச்செய்து அவனைக்கொன்று யாகத்தை முடிக்கவேண்டும். இதுவே அதற்குப் பிராயச்சித்தம்" என்றார்.

இதைக்கேட்டு அந்த புத்திமானான அரசர் "எனது ஒரு பசுவுக்குச் சரியாக ஆயிரக்கணக்காகப் பசு கொடுக்கிறேன். என் யாகபசுவை யாராவது கொண்டுவந்து கொடுங்கள்" என்று கூவிக் கொண்டு நாடும், நகரம், காடு, ஆச்சிரமம், கிராமம் முதலிய ஒவ்வோர் இடத்திலும் அலைந்து திரிந்து பார்த்தார். கடைசியாய் அவர் பிருகுதுங்கம் என்ற மலைப்பிரதேசம் சேர்ந்து, அங்குத் தமதுமனைவியோடும் மக்களோடும் வசித்துக் கொண்டிருக்கும் ரிசீகர் என்ற ரிஷியைக் கண்டார். அக்கினி போலத் தவத்தால் விளங்கும் அந்த அந்தணர் சிரோமணியை அம்பரீஷ அரசர் வணங்கி யோகக்ஷேமத்தை விசாரித்து அவரைப் பார்த்து "பிருகு வம்சத்தில் பிறந்த மகாரிஷியே, நான் யாகம்பண்ண ஆரம்பித்துப் பசுவை ஒட்டினேன். அது காணாமற்போயிற்று. எவ்வளவுதேடியும் அகப்படவில்லை. என் யாகம் நஷ்டமாகும் போலிருக்கிறது, நான் நூறாயிரம் பசுக்கள் கொடுக்கக் காத்திருக்கிறேன். அவைகளை ஒப்புக்கொண்டு யாக பசுவுக்கு ஈடாக எனக்குத் தங்கள் குமாரரிலொருவனைக் கொடுத்தால் என் யாகம் நிறைவேறும், என் கோரிக்கை முடிவு பெறும்" என்றார்.

அம்பரீஷர் பசு வாங்க ரிசீகரிடம் சென்றது.

இதை ரிஷிகேட்டு, தமக்கு மூன்று குமாரர்களிருத்தலால், "எனது மூத்தகுமாரன் எனக்கு உத்தர கிரியை முதலியன செய்யவேண்டுமாகையால் நான் அவனைக் கொடுக்கமாட்டேன்" என்றார். அவர் மனைவி "எனது கணவர் மூத்தகுமாரனை விற்கமாட்டேனென்றார். எனது கடைசிக் குமாரனான சுனகன் எனக்கு அருமைக் குழந்தையாகையால் நான் அவனைவிட்டுப் பிரியமாட்டேன். உலகத்திலே எப்பொழுதும் தகப்பனுருக்கு மூத்த குமாரன்மேலும் தாயாருக்கு இளைய குமாரன்மேலும் அதிக அபிமானம் உண்டு என்று சொல்லுவது வழக்கம். ஆகையால் நான் என் கடைசிக்குழந்

சுனச்சேபனை நரபசுவாக வாங்கினது.

தையைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்" என்றாள். இவ்வாறு தாயும் தந்தையும் சொல்லக் கேட்ட சுனச்சேபன் என்ற ரிசீகருடைய இரண்டாவது மகன் அம்பரீஷரிடம் வந்து நின்று "அரசரே, எனது தகப்பனாரோ மூத்தகுமாரனைக் கொடுக்க மாட்டேன் என்றார். எனது தாயோ கடைசிக்குமாரனைக் கொடேன் என்றாள். ஆகையால், சொல்லாமலே என்னை இவர்கள் தங்களுக்குக் கொடுத்ததுபோலாய் விட்டது. தாங்கள் என்னை ஒப்புக்கொள்ளுங்கள்" என்றான். இப்படி இவ்விளையவன் சொல்லலும் அம்பரீஷர் நூறாயிரம் பசுக்களைக் கொடுத்துச் சுனச்சேபனை விலைக்குவாங்கித் தமது இரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டு வெகு வேகமாக அயோத்தியை நோக்கித் திரும்பினர்.

## அறுபத்திரண்டாஞ்சருக்கம்:

### விசுவாமித்திரர் சுனச்சேபனைப் பாதுகாத்தல்

*சுனச்சேபன் விசுவாமித்திரரைச் சரணம் அடைந்தது.*

பெரும்புகழ்பெற்ற அம்பரீஷ ராஜர் சுனச்சேபனைத் தம்முடன் அழைத்துக்கொண்டு அயோத்திக்குத் திரும்பிப் போகும்போது மத்தியான்ன வேளையில் கொஞ்சம் இளைப்பாறுதற்குப் புஷ்கர க்ஷேத்திரத்தில் தங்கினர். அப்படி அவர் தங்கியபோது சுனச்சேபன் அங்குத் தவம்புரிந்து கொண்டிருக்கும் விசுவாமித்திரரை இரகசியமாய்ப்போய்ப் பார்க்கலானன். அந்த மகாரிஷியாகிய விசுவாமித்திரர் சுனச்சேபனுக்கு மாமனாக வேண்டும். அவர் அங்கு அநேக ரிஷிகளுடன் இருந்து தவம் புரிவதைக்கண்ட சுனச்சேபன் முகங் கருகி நாவறண்டு குழப்பங்கொண்டவனாகி விசுவாமித்திரர் மடியில்போய் விழுந்து அவரைநோக்கி "மாமா; எனக்குத் தாயுமில்லை; தந்தையுமில்லை; வேறுமுறையார்கள் எனக்கேது. நீர்தாம் எல்லாரையும் காத்து ரக்ஷிப்பவர்; ஆபத்துக் காலத்தில் எல்லாராலும் அடையத்தக்கவர்; நிர்க்கதியாயிருக்கும் என்னை நீர்தாம் இப்பொழுது ஆதரித்

தருள வேண்டும். அம்பரீஷ மகாராஜாவையும் தமது யாகத்தை முடித்தவராகும்படி செய்யவேண்டும். நானும் என் ஆயுள் நாள் குறைவில்லாமல் உயிர் வாழ்ந்து பெருந்தவஞ்செய்து சுவர்க்க லோகத்துக்குச் செல்ல யோக்கியதை யுள்ளவனாகவேண்டும். தகப்பனார் தமது பிள்ளையை ஆதரித்துக் காப்பாற்றுவதுபோல் நீர் இப்பொழுது என்னைப் பாதுகாக்கவேண்டும்'' என்று அலறினான்.

அவன் இப்படிப் புலம்பினதை நோக்கி விசுவாமித்திரர் அவனுக்கு அநேக விதமாகத் தேறுதல் சொல்லித் தமது பிள்ளைகளைப் பார்த்து "குழந்தைகளே, எந்தப் பயனை உத்தேசித்துத் தகப்பன்மார் நல்ல பிள்ளைகளைப் பெறுகிறார்களோ, அந்தப் பயனாகிய பிதிரு வாக்கிய பரிபாலனத்தை நீங்கள் செய்தற்குத் தக்க காலம் இப்பொழுது நேர்ந்திருக்கிறது. அந்தப்படி செய்தால் நீங்களும் நானும் மறுமையில் நன்மையைப் பெறலாம். ரிசீகருடைய குழந்தையாகிய இச்சிறுவன் என்னைச் சரணமாக அடைந்திருக்கிறான். நான் அவனைக் காப்பாற்றவேண்டும். அவ்வெண்ணம் எனக்கு உதித்துவிட்டது. ஆகையால் நீங்கள் அந்த ஆவலை நிறைவேற்றிக்கொடுக்கவேண்டும். நீங்கள் எல்லாரும் தவம் புரிந்து தவத்தின் சித்திபெற்றவர்கள். உங்களுள் ஒருவன் இவ்வரசனுக்குப் பசுவாயிருந்து அக்கினிக்குத்திருப்தி செய்து வைக்க வேண்டும், அப்படிச் செய்வதனால் சுனச்சேபன் காப்பாற்றப்படுவான். யாகமும் இடையூறின்றி நிறைவுபெறும் தேவதைகளும் திருப்தி செய்யப்பட்டவராவர். என் சொல்லும் தவறிப்போகாது'' என்றார்.

விசுவாமித்திரர் தம் பிள்ளைகளில் ஒருவனை நரபசு வாகும்படி வேண்டியது.

இவ்வண்ணம் முனிவர் சொன்ன சொல்லை மதுஷ்யந்தர் முதலான அவர் குமாரர்கள் கேட்டு வெகு படபடப்பாகத் தங்களுடைய தகப்பனாரைப் பார்த்து "தந்தையே, இது வெகு அற்புதமாக இருக்கிறதே. உமது பிள்ளையைப் பறிகொ

பிள்ளைகள் மாட்டோம் என்றது.

டுத்து மற்றவர் பிள்ளையைக் காப்பாற்றக் கருதுகிறீர். இது நாயிறைச்சியைத் தின்பதற் கொப்பான ஒரு அருவருப்பான காரியமென்று எண்ணுகிறோம்" என்றார்கள்.

முனிவர் பிள்ளைகளைச் சபித்தது.

என்றதும் விசுவாமித்திரர் கடுஞ்சினமடைந்து கோபத்தால் கண்கள் சிவந்து அவர்களைப் பார்த்து "என்னை அவமதித்து இவ்வளவு தைரியமாகவும், நியாயத்துக்கு விரோதமாகவும், கேட்கிறவர்கள் மயிர்க்கூச்சடைய நீங்கள் பேசினபடியால் நீங்களும் முஷ்டிகர்களாக வசிஷ்டர் பிள்ளைகள்போலவே மாறி நாயிறைச்சியைப் புசித்துக்கொண்டு ஓராயிரவருஷம் பூமியின்கண் வசியுங்கள்" என்று சாபமிட்டார்.

முனிவர் சுனச்சேபனுக்கு மந்திரம் உபதேசித்தல்.

இவ்வண்ணம் தம்முடைய குமாரர்களைச் சபித்துவிட்டுச் சுனச்சேபனைப் பயப்படவேண்டாம் என்று தைரியப் படுத்தி அவனுக்கு ஒரு வகைத் துன்பமும் நேரிடாத வண்ணம் சில ரக்ஷைகளைக் கட்டி, அவனைப்பார்த்து "நீ அஞ்சாதே; பரிசுத்தமான தர்ப்பைக் கயிறுகளால் கட்டப்பட்டுச் சிவப்பான மாலையை அணிந்து செங்குழம்புச் சந்தனத்தைப் பூசிக்கொண்டு நீ யாக சாலைக்குள் நுழைந்து அங்கு விஷ்ணுவைத் தெய்வமாகவுடைய யூபஸ்தம்பத்தினிடத்திற் போய்ச் சேர்ந்தவுடன் அக்கினியைத் துதித்து, இப்பொழுது நான் உனக்குச் சொல்லிக்கொடுக்கப் போகிற இரண்டு திவ்விய மந்திரங்களை வாய்விட்டுப் பாடு; அப்போது உனக்கு ஒரு குறைவும் வராது; உன் எண்ணம் நிறைவேறும்" என்று அவ்விரண்டு மந்திரங்களையும் உபதேசித்தனர் சுனச்சேபனும் வெகு கவனமாயும் பக்தியாயும் அம் மந்திரங்களைச் சிந்தித்துக்கொண்டு வேகமாக அம்பரீஷமகாராஜரிருந்த இடத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தான்.

அம்பரீஷர் யாகம் நடத்தல்.

சேர்ந்தவுடன் அவன் அவரைப்பார்த்து "இராஜ சிங்கமே, காலதாமதம் வேண்டாம்; நாம் சீக்கிரம் போவோம். தாங்களும் சீக்கிரம் யாகத்தை முடிக்கலாம்" என்றான். ரிஷி குமாரன் இவ்

வாறு சொன்னதைக் கேட்டு அம்பரீஷர் சந்தோஷப்பட்டு ஒரு நிமிஷங்கூட வீண்பொழுது போக்காமல் தமது யாகசாலை சேர்ந்தார். சேர்ந்தவுடன் அம்பரீஷர் தமது சபையார்கள் புரோகிதர்கள் முதலானவர்களுடைய அநுமதியைப் பெற்றுக் கொண்டு சாஸ்திரப் பிரகாரம் சுனச்சேபனைச் செந்நிறமான மாலை முதலியவைகளால் அலங்கரித்து யூபஸ்தம்பத்தில் கொண்டுவந்து பசுவைக் கட்டுவதுபோலத் தருப்பைக் கயிறு களால் கட்டினார்.

சுனச்சேபன் உயிர் பிழைத்தல்.

கம்பத்தில் கட்டப்பட்டவுடன் சுனச்சேபன் கிரமப்படி அக்கினியை முதலில் ஸ்தோத்திரம் பண்ணி, பின்பு, தனது மாதுலராகிய விசுவாமித்தி ரர் சொல்லிக் கொடுத்திருந்த இரண்டு மந்தி ரங்களால் இந்திரனையும் உபேந்திர மூர்த்தியா கிய விஷ்ணு பகவானையும் துதித்தான். இவ்வாறு அவன் அந் தரங்கமாகச் செய்த தோத்திரத்தால் இந்திரன் மற்றைய தேவர் களுடன் சந்தோஷமடைந்து சுனச் சேபனுக்குத் தீர்க்காயுளை அளித்தான். இந்திரனுடைய கருணையால் அம்பரீஷமகாராஜா வும் தமது யாகத்தின் சித்தியை வெகு விசேஷமாக அடைந் தார். கேளுங்கள், இரகுகுல சிகாமணிகளே, தருமத்தின் உருவ மான விசுவாமித்திரரும் புஷ்கரத்திலேயே பின்னும் பத்து நூறுண்டு தவம்புரிந்துவந்தார்.

---

## அறுபத்துமூன்றுஞ்சருக்கம்.

---

### விசுவாமித்திரர் தவம்.

விசுவாமித்திரருக்கு "ரிஷி" என்ற பட்டம் கிட்டியது.

ஓராயிரமாண்டு இவர் தவம் செய்தபின்பு இவர் தவத்தால் தேவர்கள் எல்லாரும் பிரதி யடைந்து இவ ருக்கு அத்தவத்தின் பலனை அளிக்க விரும் பிப் பிரமதேவரை முன்னிட்டுக்கொண்டு அங்கு வந்து தோன்றினார்கள். பிரமதேவர் விசுவாமித்திரரைப் பார்த்து "முனிவரே, முன்பே நீர் தவம்

புரிந்து இராஜரிஷி என்ற பட்டம் அடைந்துவிட்டீர். இன்று உமக்கு ரிஷி என்ற பட்டம் அளித்தேன்" என்று சொல்லித் தேவர்களுடன் தம் இருப்பிடஞ் சென்றார்.

இதைக்கேட்ட விசுவாமித்திரர் "இத்தனை நாளாயிற்று நமக்கு க்ஷத்திரியன் என்ற அழுக்கைக் கழிக்க, இன்று முதல் ரிஷியானோம். இனிமேல் பிரமரிஷியாக எத்தனை நாள் செல்லுமோ தெரியவில்லை" என்று வெகு உக்கிரமாக அந்தப் பிரமரிஷிப் பட்டத்தையடையத் தவஞ் செய்யத் தொடங்கினர். அக்காலத்தில் அந்தப் புஷ்கரம் என்ற வனத்துக்கு மேனகை என்ற அப்ஸரப்பெண் வந்தாள்.

முனிவர் பிரமரிஷியாகத் தவம்புரிதல்

* * * அவளைக் காண்டலும் விசுவாமித்திரர் 'இனி இங்கிருந்தால் நமது தவம் கெட்டுப்போம்' என்று அஞ்சிப் புஷ்கரவனத்தை விட்டுப் புறப்பட்டு வடதிசை சென்று இமையமலை சேர்ந்து அங்குக் கௌசிகி என்னும் நதியின் கரையில் கடுந்தவம் புரியலானார்.

அங்கு ஓராயிரமாண்டு சென்றபின் அவருடைய தவ நிஷ்டையைக் கண்டு தேவர்கள் எல்லாருக்கும் பயம் தோன்ற, அவர்கள் பிரமதேவரிடம் சென்று "ஆகா! விசுவாமித்திரர் வெகு கோரமாகத் தவஞ் செய்கின்றார். அவருக்கு மகாரிஷி என்ற பட்டங் கொடுக்க வேண்டியதுதான்" என்றார்கள். இப்படித் தேவர்கள் எல்லாரும் சொல்வதைப் பிரமதேவர் கேட்டுத் தாம் விசுவாமித்திரர் முன்தோன்றி அவரை நோக்கி மதுரமாக "உமது கடுந்தவத்தைக் கண்டு களித்து நாம் உமக்கு ரிஷிகளுக்குள் சிறந்த மகாரிஷி என்ற பட்டம் அளித்தோம்" என்று சொல்லினர்.

முனிவர் மகாரிஷியானது.

இப்படிப் பிரமதேவர் சொன்னதை விசுவாமித்திரர் கேட்டுச் சந்தோஷமாவது துக்கமாவது அடையவில்லை. ஆனால் அவர் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு அக்கடவுளை நோக்கி "என்னை மகாரிஷி என்றே இன்னும் தாங்கள் சொல்லுகிறபடியால் நான் எனது காமக் குரோதங்களை

முனிவர் பிரமரிஷியாவதற்குப் பிரமதேவர் உபாயஞ் சொல்லல்.

அடக்கிப் பிரமரிஷிப்பட்டம் பெறத் தக்கவனாகவில்லை என்று தோன்றுகிறது" என்றார். அதற்குப் பிரமதேவரும் "ஆம் இன்னும் உமது காமக்குரோதங்கள் தணியவில்லை; ஆதலால் இன்னுந் தவம்புரியும்" என்று சொல்லித் தமது இருப்பிடஞ் சென்றார்.

அதற்காக முனிவர் புரிந்த கொடிய தவம்.

தேவதைகள் சென்றபின்பு விசுவாமித்திரர் மறுபடியும் மேலெடுத்தகையராயும் கீழ்ப்பிடிப் பில்லாதவராயும் காற்றையே உணவாகக் கொண்டவராயும் நின்று தவம்புரிந்தார். வேனிற் காலத்தில் தம்மைச் சுற்றிலும் கொடிய நெருப்பை வளர்த்துப் பாஞ்சாக்கினிமத்தியில் நின்றுகொண்டும், மழைக்காலத்தில் ஜலத்தில் நனைந்துகொண்டும், குளிர்காலத்தில் தண்ணீரில் நின்றுகொண்டும், இரவும்பகலும் தவம்புரிந்தார். இவ்வண்ணம் ஆயிரவருஷகாலஞ் சென்றது. இவர் செய்த தவத்தைக் கண்டு எல்லாரும் நடுநடுங்கினார்கள். இந்திரன் முதலான தேவர்கள் இவர் நிஷ்டையைக்கண்டு பயந்து இவர்தவத்தைக்கெடுத்தற்காக அரம்பையை வரவழைத்து அவளைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்கள்.

---

## அறுபத்துநான்காஞ்சருக்கம்.

---

### அரம்பையின் சாபம்.

அரம்பை அத்தவத்தை கெடுக்க வந்தது

"அரம்பையே, இதுவோ தேவைகளுடைய காரியம்; நீ இவ்விஷயமாய்ப் பெருமுயற்சி செய்து விசுவாமித்திரர் தவத்தை அழிக்கவேண்டும்" என்று தேவர்கள் சொன்னார்கள். அவள் முன்னமே விசுவாமித்திருடைய குணங்களை யறிந்தவளாகையால் தான் கௌசிகரிடம் போக நடுங்கினாள். தேவர்களெல்லாரும் அவளைத் தோத்திரம் பண்ணி

அனுப்பினார்கள். ஆனால் அவளுக்கு பயம் மட்டும் போகவில்லை.

* * * அப்படியே அவள் கதியுமாயிற்று.

அரம்பையை முனிவர் சபித்தது.

எப்படி என்றால் அவளை விசுவாமித்திரர் கண்டதும் அவள் கருத்தையும் தேவதைகள் கருத்தையும் நன்றாயுணர்ந்தவராய் அவளைப்பார்த்து "அரம்பையே, காமக்குரோதங்களை யடக்கிக் கொண்டு தவம்புரியும் என்னைக் கெடுக்க நீ கெட்ட எண்ணங் கொண்டபடியால் பதினாயிர வருஷகாலம் கல்லாய் மாறியிருக்கக்கடவாய்" என்று சபித்தார். "அவ்வுருவத்திலிருந்து உன்னை ஒரு அந்தணர் பதினாயிர வருஷத்துக்கப்பால் விடுவிப்பார்" என்று சாபத்தின் முடிவையும் எடுத்துக்கூறினார்.

முனிவர் கோபத்தை அடக்கித் தவம் புரிதல்.

தமது கோபத்தால் இவ்வித சாபம் கொடுத்தபின்பு, கோபத்துக்கிவ்வா றிடங்கொடுத்த படியால் தமது தவம் பாழாயிற்று என்பதை விசுவாமித்திரர் அறிந்துகொண்டு, "ஐயோ! பாழாகிய கோபமே! என்னைக் குலைத்தாயே. இனி நான் ஒரு பொழுதும் என் கோபத்திற்கு இடங்கொடேன். ஒருவரையும் பார்த்து ஒரு பேச்சுஞ் சொல்லேன். பல நூறு வருஷகாலம் மூச்சுங்கூட விடமாட்டேன். நான் காயக்கிலேசம்பண்ணி என் தேகத்தை வாடச் செய்வேன். எத்தனை ஆயிரம் வருஷமானாலுஞ்சரி. பிரமரிஷி என்ற பட்டம் எனக்குக் கிடைக்கிறவரையில் நான் என் மூச்சை யடக்கி ஆகாரமின்றித் தவம்புரிவேன். நிஷ்டையிலிருக்கிற வரையில் என் சரீரம் நசிக்காது" என்று தமக்குள்ளேயே சொல்லிக் கொண்டு அவ்வாறு தவம்புரிய நிச்சயித்தனர்.

## அறுபத்தைந்தாஞ்சருக்கம்:

### விசுவாமித்திரர் பிரமரிஷியானது.

அரம்பையைச் சபித்த பிறகு கௌசிகி நதிக்கரையாகிய வடதிசையை விசுவாமித்திரர் துறந்து கீழ்த்திசை சேர்ந்து வெகு கடினமான தவம் புரிந்தார். ஓராயிர வருஷகாலம் ஒரு வருடனும் பேசாமல் வாய்திறவா நோன்பைக் கைக்கொண்டு அதிகோரமான நிஷ்டையிலிருந்தார். அதன் மேல் கட்டை போல் அசைவற்று நிஷ்டையில் நின்றார். இப்படி இவரிருக்கும்போது வெகுவித இடையூறுகள் இவர் நிஷ்டையைக் கெடுக்கச் சம்பவித்தன. அவ்வளவிலும் இவர் கோபத்துக்கு இடமே கொடுக்கவில்லை. தவத்தை ஒருநாளும் எவ்விதமான வழுவாலும் குறைவுபடுத்தக் கூடாதென்று உறுதிபண்ணிக் கொண்டார். இப்படி ஓராயிரம் வருஷம் உணவின்றித் தவஞ் செய்து அதன்பிறகு ஒருநாள் சிறிது அன்னம் உண்ண வேண்டும் என்று கருத்துக் கொண்டார். அப்படியே அவர் புசிக்க உட்காரும்போது அவர் தவத்தை எவ்விதத்திலாவது கெடுக்க வேண்டும் என்று எண்ணங்கொண்ட இந்திரன் ஒரு ஏழைவேதியனுக உருவங்கொண்டு அங்குவந்து அவர் புசிக்கப் போகும் அன்னத்தைத் தனக்கு வேண்டுமென்றான். அதற்காக அவன் மேல் கோபங்கொண்டு தமது தவத்தை இழந்துவிடாமல் தமக்கு எவ்வளவு பசியிருந்தபோதிலும் அதைப் பாராட்டாது தமது அன்னத்தைத் தாம் உண்ணுமலே அவனுக்குக் கொடுத்துவிட்டார். அவனைப்பார்த்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.

இந்திரன் முனிவரைச் சோதித்தல்.

மறுபடி மௌனியாய் ஆயிரம் வருஷகாலம் மூச்சு விடாமல் தவம்புரிந்தார். இவ்வண்ணம் இவர் கடுந்தவம் புரியவே இவருடைய கபாலத்திலிருந்து தவமே அக்கினியுருவமாகக் கிளம்பலாயிற்று. அதனுல், இம்மூவுலகங்களும் தீப்பட்டதுபோலக் குழப்ப

முனிவர் தவத்தின் தாபம்.

மடையலாயின. அவர் தவத்தின் தீயால் தேவர்கள் எல்லாரும் தங்களுடைய காந்தியை யிழந்து கலக்கமடைந்து பிரமனிடஞ் சென்று "கடவுளே, விசுவாமித்திரர் வெகு கடுமையாகத் தவம் புரிகிறுர். நாங்கள் எத்தனையோ உபாயங்கள்செய்து அவருக்கு ஆசையையும் கோபத்தையும் மூட்டி அவரைக்கெடுக்க முயன் ருேம். அவரோ ஒன்றிற்கும் அசைக்கப்படுகிறவராகத் தோன்ற வேயில்லை. தினந்தோறும் அவர் தவம் அதிகப்படுகிறது. அவர் அபீஷ்டத்தைத் தாங்கள் முடித்துவைக்காத பக்ஷத்தில் சராச ரத்தோடு கூடிய இம்மூவுலகத்தையும் அவர் தவத்தால் எரித்து விடுவர் என்பது நிச்சயம். இப்பொழுதே எல்லாத் திசைகளும் இருளடைந்திருக்கின்றன. அவ்விடங்களில் ஒன்றும் பிரகாசிக்க வில்லை. சமுத்திரங்கள் குழம்புகின்றன. மலைகள் வெடிக்கின் றன. பூமியும் நடுங்குகிறது. வாயுவும் மிகக் கலங்கிவிட்டது. எங்களுக்கு இன்னது செய்கிறதென்பதே தெரியவில்லை. இம் மூவுலகத்திலும் உள்ளவர்கள் மனமெல்லாம் குழம்பி யிருக் கின்றன. சூரியனுடைய காந்திகூடக் குன்றியிருக்கிறது. நாங்கள் எல்லாரும் சிலகாலம் வாழவேண்டுமென்றால், உடனே தாங்கள் பிரளயகாலாக்கினிபோல் விளங்குகிற விசுவாமித்திரர் விரும்பும் வரத்தை அளிக்கவேண்டும். இல்லாவிடில் அவர் இம்மூவுலகத்தையும் தீயிட்டுப் பொசுக்கிவிடுவார். அவர் இந் திர பட்டத்துக்கு ஆசைப்பட்டபோதிலும் அதைத் தாங்கள் கொடுக்கவேண்டியதுதான்" என்று அலறினர்கள்.

இவ்வாறு தேவர்கள் சொல்லக் கேட்ட பிரமதேவர் அவர் களுடன் விசுவாமித்திரரிடம் சென்று அம்மம காத்துமாவைப் பார்த்து இனிய வார்த்தையால் "ஓ பிரமரிஷியே, நீர் செய்த தவத்தால் நாங் கள் எல்லாரும் திருப்தியடைந்தோம். உமது நிஷ்டையால் நீர் பிரமரிஷிப்பட்டம் பெற்றீர். நான்தேவகணங் களுமிசைய உமக்கு நீண்ட ஆயுள் அளிக்கிறேன். இதை நீர் இனிமையாக ஒப்புக்கொள்ளும். இனி நீர் உமது இஷ்டப்படி

விசுவாமித்திர முனிவருக்குப் பிரமரிஷிப்பட் டம் கிட்டியது.

இருக்கலாம்" என்றார். இதைக்கேட்டு வெகுசந்தோஷமடைந்து விசுவாமித்திரர், தேவர்களையும் பிரமதேவரையும் வணங்கி " கருணாகரக் கடவுளே, எனக்குப் பிரமரிஷிப்பட்டமும் நீண்ட ஆயுளுமுண்டென்பது நிச்சயமானால் எனக்கு வேதங்களை ஓதி வைக்க யோக்கியதையும் வைதிக காரியங்களை நடத்திவைக்கத் தகுந்த பதவியும் தாங்கள் அளிக்கவேண்டும். க்ஷத்திரிய வேதங்களையும் பிராமணவேதங்களையும் அறிந்தவர்களில் முதல் வராய் விளங்கிக் கொண்டு பிரமரிஷியாயிருக்கும் பிரமபுத்திர ரான வசிஷ்டமுனிவருங்கூட என்னைப் பிரமரிஷி யென்று உங் கள் எல்லாருடைய முன்பாகவும் ஒப்புக்கொள்ள வேண்டும். எப்படியும் என் பிரார்த்தனையை நிறைவேற்றிவைத்துத் தான் நீங்கள் இவ்விடம்விட்டுப் போகவேண்டும்" என்றார். பிரமதேவ ரும் 'அப்படியே' என்று கூறித் தேவர்களும் தாமுமாக எவ்வ ளவோ நல்லவார்த்தைசொல்லி முனி சிரேஷ்டரான வசிஷ்டரை வரவழைத்தார். வசிஷ்ட ரிஷியும் விசுவாமித்திரரும் ஒருவர்க் கொருவர் அன்பர்களானார்கள். வசிஷ்டரும் "விசுவாமித்திரர் தமது கோரிக்கைப்படி பிரமரிஷியே" என்றார். இவ்வாறு எல் லாம் சரிவர முடிந்தபின் தேவர்களும் தேவலோகஞ் சென்றார் கள். விசுவாமித்திரரும் தமது பிரதிஜ்ஞையை நிறைவேற்றித் தமது விருப்பம் முடியப்பெற்று வசிஷ்டருக்கு நமஸ்காரஞ் செய்து உலகத்தில் தவத்தை நிலைநிறுத்திக்கொண்டு சஞ்சரிக்க லானார்.

ஓ இராஜகுமாரா, இவ்வண்ணம் பிரமரிஷிப்பட்டம் பெற் றவர் இம்மாமுனிவர். இவர் முனிவர்களுக்குள் உத்தமர். இவர் தவத்தின் உருவம்; எப்பொழுதும் நீதி வழுவாது நடப்பவர்; தவமகிமையின் இருப்பிடம்."

இங்ஙனம் விசுவாமித்திரரைப் பற்றிச் சதாநந்தர் சொல்லி நிறுத்தினார். இராமலக்ஷ்மணர்களின் முன் அவ்வந்தணர் சொன்ன விசுவாமித்திர மகி மையை ஜநகர் கேட்டுத் தமது இருகரங் களையுங் கூப்பிக்கொண்டு அம்முனிவரை

ஜநகர் விசுவாமித்திரரைப் புகழ்தல்.

நோக்கி "தபோ ரத்தினமே. தாங்கள் எப்பொழுது இவ்வரச குமாரர்களை அழைத்துக்கொண்டு எனது யாகசாலைக்கு வந்தீர்களோ அப்பொழுதே என் ஜன்மம் கடைத்தேறிவிட்டது. நான் வெகு பாக்கியவானாயினேன். மாமுனியே, தங்களுடைய தரிசனத்தினாலேயே நான் பரிசுத்தனாகப் பண்ணப்பட்டேன். அநேகவிதமான புண்ணியங்களையும் நன்மைகளையும் அடைந்து விட்டேன். தங்கள் மகிமை முழுதும் எடுத்துரைக்கப்பட்டதைக் கேட்பதனா லுண்டாகும் ஆனந்தத்தையும் நானும் இராமரோடு அடைந்தேன். இங்கிருக்கும் சபையார்களும் இச் சரித்திரத்தைக்கேட்டுச் சந்தோஷமடைந்தார்கள். உமது தவம் அளவிடக்கூடியதன்று; உமது பலம் கணக்கிலடங்குவதன்று; உமது குணங்களோ வருணித்து முடியாதவை. இவைகளைக் கேட்பதில் எனக்குத் திருப்தி உண்டாய்விட்டதென்பது ஒரு பொழுதுமில்லை. ஒருநாளும் தெவிட்டாத அமிருதம், உமது அபாரமான சரித்திரம். ஆனால், மாலைக் கடன்களைச் செய்து முடிக்கும்வேளை அணுகுகிறது. சூரிய பகவான் மலைவாயில் விழுகிற தருணமாக இருக்கிறது. நாளைக்காலையில் தப்பாமல் என்னைத் தாங்கள் பார்க்கவேண்டும். இப்பொழுது எனக்கு விடை கொடுத்தனுப்பவேண்டும்" என்று ஜநகர் வேண்டி நின்றார். விசுவாமித்திரரும் அவரை வெகுவாகப்புகழ்ந்து விடையுங் கொடுத்தனர். ஜநகர் தாமும் தம் புரோகிதர்களுமாக அம்முனிவரை வலம்வந்து வணங்கி விடை பெற்றுக்கொண்டு தமது இருப்பிடஞ் சென்றார். விசுவாமித்திர மாமுனியும் இராம லக்ஷ்மணருடன் தம்முடன் வந்த ரிஷிகளால் ஆராதிக்கப்பட்டுத் தமது விடுதியில் சௌக்கியமாக அன்றிரவு தங்கியிருந்தார்.

## அறுபத்தாறுஞ்சருக்கம்:

### ஜநகருடைய வில்லின் மகிமை.

இராமருக்கு வில்லைக் காட்டும்படி முனிவர் வேண்டல்.

பிறகு பொழுதுவிடிதலும் ஜநக மகாராஜர் தமது காலைக் கடன்களைச் சரியாக நிறைவேற்றி இராம லக்ஷ்மணர்களையும் விசுவாமித்திர மாமுனிவரையும் வரவழைத்து உபசரித்தார். அவ்விருவரையும் மாமுனிவருடன் விதிப்படி அரசர் அருச்சித்து விசுவாமித்திரரை நோக்கி "பகவானே, தங்களுடைய அடிமை நான். என்ன வேலை யிடுகிறீர்களோ அதைச் செய்யக் காத்திருக்கிறேன். என்னை ஏவுங்கள்" என்றார். இப்படி அரசர் சொல்லக் கேட்டதும் முனிவர் "தசரதகுமாரர்களாகிய இவ்விருவரும் உலகத்தில் புகழ்பெற்ற க்ஷத்திரிய வீரர்கள். உங்களிடத்தி லிருக்கும் வில்லைப் பார்க்க விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் இங்கிருந்து திரும்பிப் போகு முன் அவர்களுடைய ஆசையை நிறைவேற்றி வைக்கவேண்டும்" என்றார்.

ஜனகருடைய வில்லின் வரலாறு.

இதைக்கேட்டு ஜநக மன்னர் பின்வருமாறு மறுமொழி சொல்லலானார்:—"கேளுங்கள், எதற்காக இத் தனுசு இங்கிருக்கிறது என்றால்: நிமி என்ற எங்களுடைய வம்சத் தலைவரது ஆறாவது தலைமுறையில் தேவராதர் என்ற ஒரு அரசரிருந்தார். இந்தத் தனுசை வெகு ஜாக்கிரதையாக வைத்திருக்கும்படி தேவர்கள் அவர்கையில் அளித்தார்கள் இந்தத்தனுசைத் தாம் கைப்பற்றித் தான் ருத்திரமூர்த்தி தக்ஷர்செய்த யாகத்தில் தங்கள் தங்கள் அவிர்ப்பாகங்களை வாங்கவந்த தேவதைகளைத் தண்டித்தார். தம்மை அழைக்காமலிருக்க மற்றத் தேவதைகள் அந்த யாகத்துக்கு வந்த காரணத்தால் அவர்கள் தேகங்களை யெல்லாம் ஈசுவரர் இந்த வில்லால் சிதைத்தனர். அப்பொழுது தேவர்கள் எல்லாரும் அவரைக்கண்டு அஞ்சி

அவரைப் புகழ்ந்து தங்களைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டார்கள். அச்சமயத்தில் ஈசனும் தமது கோபத்தை விட்டு இந்தத் தனுசைத் தேவதைகள் கையிற் கொடுத்து விட்டுப் போயினர். அந்தத் தேவதேவருடைய தனுசு தான் இப்பொழுது எங்கள் வம்சத்தில் ஒப்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது. அதன் பிறகு ஒரு சமயத்தில் நான் யாகம் பண்ணுமுன் என் யாகபூமியை ஒரு கலப்பையால் உழும் போது அந்த உழுத பூமியிலிருந்து ஒரு பெண்மணி உண்டானாள். அதனாலேயே அவளுக்குச் சீதை என்று பெயர் வைத்தேன். அவளும் இவ்வண்ணம் ஆச்சரியமாகப் பிறந்து வெகு அழகாக வளர்ந்துகொண்டு வருகிறாள். அவளை மணம்புரிய விரும்பி அநேக வேந்தர்கள் என்னை வந்து கேட்டார்கள். நான் யாரொருவர் இந்த வில்லை வளைக்கிறாரோ அவருக்குத்தான் இந்தப் பெண்ணைக் கொடுப்பேன் என்று உறுதி சொல்லி இந்தத் தனுசைச் சீதையைக் கல்யாணம் பண்ணும் பணயமாக வைத்திருக்கிறேன்.

இதைக்கேட்டு இந்தத் தனுசின் பலத்தைச் சோதிக்க, பலபராக்கிரமம் பொருந்திய அநேக மன்னர்கள் மிதிலையை நாடி வந்தார்கள். நான் அவர்களுக்குத் தனுசைக் காட்டினேன். அவர்களால் அதை அசைக்கக்கூட முடியவில்லை.

பல மன்னர்கள் அவ்வில்லால் அவமானப்பட்டது.

அவர்கள் என்னால் அவமதிக்கப்பட்டவர்களாக நினைத்துக் கொண்டு ஒருமிக்கச் சேர்ந்து மிதிலையை முற்றுகை செய்தார்கள். இம்மாதிரி ஒருவருஷம் இப்பட்டணத்தை உபத்திரவஞ் செய்து வந்தார்கள். ஒரு வருஷத்தில் என்னுடைய கோட்டைக் காவல்களெல்லாம் அழிந்துபோய்விடவே நான் மிகத் துயருற்றுத் தேவர்களை ஆராதித்தேன். அவர்களும் என்னைக் காப்பாற்றுதற்காகச் சதுரங்க சைனியத்தைக் கொடுத்தார்கள் அதனால் அவ்வரசர்கள் எல்லாரும் தோல்வியடைந்து தங்கள் மந்திரி முதலியவர்களுடன் ஓடிவிட்டார்கள். இவ்வளவுக்கும் காரணமான தனுசு என்னிடமிருப்பது. இந்த ஆச்சரியமான

வில்லை நான் அவசியம் இராமலக்ஷ்மணர்களுக்குக் காட்டு கிறேன். இராமர் இந்தத் தனுசை வளைத்து நாணேற்றி விடுவாரானல், வெகு அதிசயமாகப் பிறந்து விளங்கிக் கொண்டிருக்கும் சீதையை அவருக்கு நான் கொடுப்பேன்" என்றார்.

---

## அறுபத்தேழாஞ் சருக்கம் :

---

### இராமர் வில்லை முறித்தல்.

ஜநகர் சபைக்கு வில்லை வரவழைத்தல்.

ஜநகர் சொன்ன வரலாற்றைக் கேட்டதும், விசுவாமித்திரர் அவ்வரசரைப் பார்த்து "இராமருக்கு அந்த வில்லைக் காட்டுங்கள்" என்றார். அதைக்கேட்ட ஜநகர் தமது மந்திரிகளைப் பார்த்து "நல்ல கந்தபுஷ்பங்களைக் கொண்டு அருச்சித்துப் பூஜையில் வைக்கப்பட்டிருக்கும் நமது தனுசை இங்கு வரவழையுங்கள்" என்று கட்டளை யிட்டார். இதைக் கேட்ட மந்திரிகள் எல்லாரும் மிதிலைக்குள் சென்று, தனுசை வைத்திருக்கும் பெட்டியை வெகு சிரமப்பட்டுக் கொண்டுவந்தார்கள். எட்டுச் சக்கரங்களுடன் ஓடும் ஒரு பெரிய வண்டி வடிவமான அந்தப் பெட்டியை ஐந்நூறு பலவான்கள் இழுத்து வந்தார்கள். இரும்புப் பெட்டியில் விளங்கும் அந்தத் தனுசை அரசா முன் கொண்டுவந்து சேர்த்து மந்திரிகள் அவரைப் பார்த்து "எல்லா அரசர்களாலும் வணங்கப்படும் தனுசைக் கொண்டுவந்திருக்கிறோம்; இதைத் தாங்கள் இப்பொழுது காண்பிக்கலாம்" என்றார்கள். இதைக்கேட்டு ஜநகராஜரும் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு விசுவாமித்திரரையும் இராமலக்ஷ்மணர்களையும் பார்த்து "இந்த உத்தம தனுசு எப்பொழுதும் எங்கள் வம்சத்தாரால் பூஜிக்கப்பட்டது. இதை அசைக்கக்கூடச் சாத்தியப்படாமல் வேந்தரெல்லாரும் விட்டுவிட்டார்கள். தேவர்கள், அசுரர்கள், ராக்ஷஸர்கள், கந்தர்வர்கள் முதலியவர்களில் ஒருவராலும் இது தூக்கி நிறுத்தவே முடியாமற்

போயிற்று. அப்படியிருக்கும்போது மனிதர்கள் எவ்வண்ணம் இதை அசைக்கவாவது, திறத்தவாவது, தாங்கவாவது, வளைக்கவாவது, நாணேற்றவாவது கூடும். அப்படிப்பட்ட சிறந்த தனுசு இங்கே வந்திருக்கிறது. முனிசிங்கமே, இதை இக் குழந்தைகளுக்குத் தாங்கள் காட்டலாம்" என்று சொல்லினர்.

இராமர் வில்லை முறித்தல்.

விசுவாமித்திரரும் இதைக் கேட்டு இராமரை நோக்கி "குழந்தாய், வில்லைப் பார்" என்றார். மகா ரிஷியின் சொற்படி இராமரும் பெட்டியைத் திறந்து தனுசைப்பார்த்து "நானிதை என் கையால் தொடலாமா? இதை எடுத்து நாணேற்றிப் பார்க்கட்டுமா?" என்றார். அதைக் கேட்டு அரசரும் முனிவரும் "அப்படியே செய்க; அதற்கு ஆக்ஷேபமுமுண்டோ" என்றார்கள். முனிவர் கட்டளைப்படி, அங்கிருந்த ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஆச்சரியப்பட்டு மெய்ம்மறந்து வியப்புடன் பார்த்து நிற்க, வெகு ஆலக்ஷ்யமாகத் தமது இடக்கையை வில்லின் மத்தியில் வைத்து ஒரு நிமிஷத்தில் அதை இராமர் வெளியில் எடுத்து நிறுத்தினர். உடனே அதை நாணேற்றும்பொருட்டு வளைத்து, நாணையும் ஏற்றிவிட்டார். நாணை நன்றாகத் தெறித்துச் சத்தம் உண்டு பண்ணி அதை இழுக்கும்பொழுது அந்த வில் மத்தியில் இரண்டுதுண்டாக முறிந்தது. அப்பொழுது பேரிடி முழக்கம்போல் அதிலிருந்து ஒரு பெரிய சத்தம் எழும்பிற்று. மலைபிளந்தாற் போன்ற அந்த முழக்கத்தைக் கேட்டுப் பூமி கிடுகிடு என்று நடுங்கிற்று. அந்தச் சத்தத்தால் ஜநகர் விசுவாமித்திரர் இராமர் லக்ஷ்மணர் இவர்கள் நீங்கலாக மற்ற எல்லா ஜனங்களும் கலக்கமுற்றுத் திகைப்படைந்து மூர்ச்சித்துக் கீழே விழுந்தார்கள். எல்லாரும் மூர்ச்சை தெளிந்தெழுந்த பிறகு பயம் நீங்கிய ஜநகர் தமது கைகளைக் கூப்பிக்கொண்டு விசுவாமித்திரரைப் பார்த்து "பகவானே, தசரத மைந்தரான இராமருடைய பராக்கிரமத்தைக் கண்டறிந்தேன். வெகு ஆச்சரியமாகவும் ஒருவராலும் எண்ணக்கூடாததாகவும் இருக்கிறது. எனது குழந்தை சீதை இராமரை மணந்து என்

குலத்தின் கீர்த்தியை விளங்க வைக்கப்போகிறாள் என்பதில் ஆக்ஷேபமில்லை. வில்லை முறித்தவருக்கு என் குழந்தையைக் கொடுப்பேன் என்று நான் கொண்ட நோன்பும் இன்று நிறைவுபெற்றது. என்னுயிருக்கு மேலாகப் பாவித்திருக்கும் சீதையை நானிப்பொழுது இராமருக்குக் கொடுக்கிறேன். இப்பொழுதே தங்களுடைய கட்டளையைப் பெற்றுக்கொண்டு எனது மந்திரிகள் இரதமேறி அயோத்திக்குப் போகவேண்டும். இராமர் வில்லை வளைத்ததையும், அதன் மூலமாய்ச் சீதையை விவாகஞ் செய்துகொள்ளும்படி நேர்ந்த செய்தியையும், தங்களுடன் அவர்களிங்குச் சௌக்கியமாக இருக்கிற சமாசாரத்தையும் தெரிவித்துத் தசரதரை உடனே அழைத்துவரவேண்டும்'' என்றார். அதற்கு விசுவாமித்திரரும் இசைய, ஜநகரும் தமது முக்கிய மந்திரிகளைக் கூப்பிட்டு அவர்களிடம் சமாசாரங்களைச் சொல்லித் தசரதரை அழைத்துவரும்படி அனுப்பினார்.

ஜநகர் ஆனந்தம்.

## அறுபத்தெட்டாஞ்சருக்கம் :

### தசரதர் மிதிலைக்குப்புறப்பட நிச்சயித்தல்.

இவ்வாறு ஜநகமகாராஜாவால் கட்டளையிடப்பட்ட தூதர்கள், தாங்கள் ஏறிவந்த குதிரைகள் வாயில் நுரையைத் தள்ளித் தளர்ந்துபோக அதிவேகமாய் மூன்றுநாள் இரவும் பகலும் வழிகடந்து அயோத்திமாநகரம் சேர்ந்தார்கள். அரசரிட்ட கட்டளைப்படி இளைப்பாறக் கொஞ்சங்கூடத் தாமதிக்காமல் உடனே அரண்மனைக்குள் சென்று அங்குத் தேவர்போல் விளங்கும் வெகு பெரியவரான தசரதமன்னரைக் கண்டார்கள். கண்டவுடன் அவர்கள் அஞ்சலி செய்துகொண்டு வெகு வணக்கத்துடன் மதுரமாக “ மகாராஜாவே! மிதிலை நகரத்து அரசரான எங்கள் ஜநகர், தமது புரோகிதர்கள் மந்திரிகள் முதலானவர்களுடன் வெகு அபிமானத்தோடு தங்க

ஜநகர் தூதர்கள் தசரதருக்குச் செய்தி சொல்லல்.

ளுடைய யோகக்ஷேமத்தை அடிக்கடி விசாரிக்க எங்களுக்குக் கட்டளையிட்டார். தங்களுடைய குடும்பம், புரோகிதர்கள், மந்திரிமார், மற்ற உத்தியோகஸ்தர்கள் முதலானவர்களுடைய யோகக்ஷேமத்தை விசாரித்து வர உத்தரவு பண்ணினார். முதலில் எல்லாருடைய க்ஷேமசமாசாரத்தையும் விசாரித்து இந்தச் சந்தோஷ சமாசாரத்தை விசுவாமித்திரர் நியமனப்படி தங்களிடம் சொல்லிவரத் திடஞ்செய்தார். அது என்னவென்றால் "என் வில்லை எவன் வளைக்கின்றானோ அவனுக்கு என்பெண்ணை விவாகஞ்செய்து கொடுப்பேன் என்று நான் செய்துகொண்ட உறுதிப்பாடு தங்களுக்கு நன்றாகத் தெரியுமன்றோ. அந்தக் காரணத்தால் அநேக அரசர்கள் அவ்வில்லை வளைக்கமுடியாமல் என்னிடம் பகை பாராட்டி வந்து தோற்றோடியதும் தங்களுக்குத் தெரியுமே. அதே வில்லை இப்பொழுது இங்குத் தாமாக வந்த தங்கள் குழந்தையான இராமர் வளைத்து நாணேற்றினார். அதனால் என் குழந்தையைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள யோக்கியதை பெற்றுவிட்டார். அந்தப் பலமான வில்லை அவர் ஒரு பெரிய சபைநடுவில் இரண்டாக முறித்தெறிந்தார். இனி நான் ஒரு நிமிஷமாவது தாமதிக்காமல் எனது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்பொருட்டு இராமருக்கு என் குழந்தையை விவாகம் செய்யவேண்டும் இவ்வாறு என் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ளத் தங்களுடைய அநுமதி கிடைக்கவேண்டும். ஒரு நொடியில் தாங்கள் தங்கள் உபாத்தியாயர்கள், மந்திரிகள், மனைவிமார், குடிகள் முதலிய எல்லோருடனும் வந்து குழந்தைகளுடைய கல்யாணததைப் பார்த்துக் களிக்க வேண்டும். இவ்விரு குழந்தைகளுடைய பலபராக்கிரமத்தையும் கண்டு கண்கள் குளிரவேண்டும்" என்று இவ்வாறு விதேகதேசத்து மன்னவரான எங்கள் ஜநகமகாராஜர் தங்களிடம் விண்ணப்பஞ் செய்துவரக் கட்டளையிட்டார். அவரும் இவ்வுத்தரவை விசுவாமித்திரருடைய ஆலோசனையின் மேலும் சதாநந்தருடைய அநுமதியின் மேலுமே அளித்தார்" என்று தூதர்கள் சொல்லி முடித்தார்கள்.

இவ்வண்ணம் தூதர்கள் சொல்லியதைக் கேட்ட தசரதரும் பரமானந்தமடைந்து வசிஷ்டர் வாமதேவர் முதலிய ரிஷிகளையும் எல்லா மந்திரிகளையும் பார்த்து "நமது செல்வக்குமாரன், விசுவாமித்திரமாமுனியால் பாதுகாக்கப்பட்டுத் தனது இளையவனுடன் இப்பொழுது மிதிலையிலிருக்கிறான். ஜநகரும் அவன் பலபராக்கிரமத்தைக் கண்ணாரக்கண்டு, தமது வாக்குத்தத்தத்தை முடித்து வைப்பதற்காக அவனுக்குச் சீதையைக் கல்யாணம் பண்ணிக்கொடுக்க நிச்சயித்திருக்கிறார். இது உங்களுக்கெல்லாம் சம்மதமாக இருந்தால் காலதாமதமின்றிச் சீக்கிரம் புரப்பட்டு நாம் அவருடைய நகரத்துக்குப்போவோம்" என்றார். மந்திரிகளும் அங்கிருந்த எல்லா ரிஷிகளும் "உடனே புறப்பட வேண்டும். ஏற்ற சம்பந்தம் வாய்த்தது" என்றார்கள். தசரதமன்னரும் வெகு சந்தோஷமடைந்து "நாளை நாம் சம்பந்தியின் ஊருக்குப் புறப்படுவோம்" என்று சொல்லி அன்று இரவு தமது மந்திரிமார்கள் ஜநகருடைய மந்திரிகள் எல்லோருக்கும் சிறந்த விருந்தளித்தனர்

தசரதர் மிதிலைக்குப் புறப்பட நிச்சயித்தல்.

---

## அறுபத்தொன்பதாஞ்சருக்கம்:

---

### சம்பந்திகளின் சந்திப்பு.

இரவு நீங்கியபின் தசரதமன்னர் தம்முடைய புரோகிதர்கள் உறவினர்கள் முதலானவர்களுடன் சுமந்திரரைப் பார்த்து "இன்று முதலில் நமது கருவூலக்காரர்கள் யதேஷ்டமாய் இரத்தினங்களையும் பணங்களையும் எடுத்துக்கொண்டு நல்ல காவலாளர் சூழ்ந்துவரப் புறப்பட்டுப் போகட்டும். நமது சதுரங்கசேனையும் சீக்கிரம் நடக்கட்டும். நமக்கு முன்னம் நமது குருக்களாகின்ற வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், நீண்ட ஆயுளுள்ள மார்க்கண்டேயர், காத்யாயனர் முதலான பிராமணோத்த

தசரதர் மிதிலை சேரல்.

மர்கள் பிரயாணப் படட்டும். சீக்கிரம் எனது இரதம் சித்தமாகட்டும். காலம் தவறக்கூடாது. ஜநகருடைய தூதர்கள் துரிதப்படுகிறார்கள்" என்றார். இம்மாதிரி அரசர் கட்டளையிடலும் அவரது சைனியமும் அவருடைய குருக்கள் முதலான எல்லோரும் புறப்பட்டார்கள். அரசரும் தமது இரதத்தில் ஏறிப்பிரயாணமானார். நான்கு நாள் வழிச் சென்று இவர்கள் எல்லாரும் விதேக நகரம் சேர்ந்தார்கள்.

தசரதருக்கு ஜநகர் செய்த உபசாரம்.

இவ்வாறு தசரத மன்னர் வருதலை வெகு பாக்கியசாலியாகிய ஜநகமகாராஜர் கேட்டு மிகுந்த ஆனந்தத்துடன் எதிர்சென்றழைத்து அவ்வளவு பெரிய மன்னவர் தம் ஊருக்குவந்த பாக்கியத்தால் மனம்பூரித்து அவருக்கு வேண்டிய மரியாதைகளைச் செய்தார். பிறகு அவரைப் பார்த்துத் தேனொழுகும் மொழியால் "மகாராஜரே, பிரயாணம் சிரமமில்லாமலிருந்ததா? எனது பெரும்பாக்கியத்தால் தாங்கள் இங்கு வரும்படி நான் பெற்றேன். தங்கள் பலபராக்கிரமம் பொருந்திய இரண்டு மைந்தர்களைக் கண்டு மனம்பூரியுங்கள். அவர்களுடைய வல்லமையின் பலந்தான் தாங்கள் இங்கு வந்ததற்குக் காரணம். வெகு காந்தி பொருந்தியவரும் முக்காலங்களையும் அறிந்தவருமான வசிஷ்டமாமுனிவரை எனது புண்ணியத்தால் நானின்று பார்க்கும்படியான பாக்கியம் பெற்றேன். அவரை உத்தமர்களான அந்தணர்கள் சூழ்ந்து நிற்பது இந்திரனைத் தேவர்கள் சூழ்ந்து நிற்பதுபோல விளங்குகிறது. இனி என் மனோரதத்துக்கு இடையூறுமுண்டோ; எல்லாம் தங்கள் புண்ணியவரவால் ஓடிவிட்டன. ஏதோ எனது பாக்கியத்தினால்தான் எனது குலத்துக்கும் அதி பலபராக்கிரமம் பொருந்திய ரகுகுலத்துக்கும் இப்பொழுது சம்பந்தம் நடக்கப் போகிறது. புருஷசிங்கமே, எனது யாகம் விரைவில் முடிந்துவிடுகிறது. அது நிறைவுபெற்றவுடன் நாம் நமது குழந்தைகளுடைய கல்யாணங்களை முடிக்கலாம்" என்றார்.

இவ்வாறு எல்லாரிஷிகள் மத்தியிலும் ஜநகர் சொன்ன

தசரதருடைய பெருங்குணம்.

வார்த்தையைத் தசரதர் கேட்டுத் தாமும் பேசுவதில் வெகு புத்திமானகையால் "தானங் கொடுத்தால் வாங்கமாட்டோம் என்று ஒருவரும் சொன்னதாக நாம் இதுவரையில் கேட்டதில்லை. நீங்கள் செய்யப்போகிற தானமோ கன்னிகாதானம். ஆகையால், தங்களுடைய சொல்லை ஒரு பொழுதும் தட்டாமல் நாம் நடத்திவைப்போம்" என்று உத்தரமளித்தார்.

விவாக நோன்பு நடத்தல்.

இவ்வண்ணம், தசரதமன்னர் வெகு தர்மமாகவும் கௌரவமாகவும் சொன்ன சொல்லை ஜநகர் கேட்டு அதிக ஆச்சரியமடைந்தார். எல்லா ரிஷிகளும் ஒருவரை யொருவர் கண்டு கொண்டதற்காக ஆனந்த கடலில் முழுகினார்கள். அன்றிரவு அவர்களுக்கு வெகு சுகமாகக் கழிந்தது. ஜநகரால் எல்லாவித மரியாதைகளும் பண்ணப்பட்டுத் தசரதமன்னரும் தமது இரண்டு குழந்தைகளையுங் கண்டு களித்து அவர்களுடன் வெகு சௌக்கியமாக அன்று இராப்பொழுதைப் போக்கினர். ஜநகரும் எல்லாவிஷயமு மறிந்தவராகையால் தமது யாக காரியங்களை ஒன்றும் விடாமல் சாஸ்திரப்பிரகாரம் முடித்துக் கொண்டு தமது குழந்தைகளுடைய கல்யாணத்துக்கு முன்பாக நடக்கவேண்டிய நோன்பு முதலியவைகளையும் அன்றிரவு நிறைவேற்றினர்.

## எழுபதாஞ்சருக்கம் :

### வசிஷ்டர் இக்ஷ்வாகு வம்சாவளியை எடுத்துரைத்தல்.

குசத்துவஜர்.

பிறகு பொழுதுவிடிந்தது. பேசுவதில் சமர்த்த ஜநகமகாராஜர் எல்லா மகரிஷிகளுட காலையஜ்ஞக் கடன்களைச் சீக்கிர விட்டுத் தமது முக்கிய புரோகிதரான சதாநந் "எனது தம்பி வெகு காந்திபொருந்திய குசத்துவசர், இக்ஷுமதி என்னும் நதியால் சூ

களும் கூரான ஆயுதங்களும் சோபிக்க இந்திரலோகம் போலவும் புஷ்பகவிமானம் போலவும் விளங்கும் ஸாங்காசியம் என்ற பட்டணத்திலிருப்பது உங்களுக்குத் தெரியுமே. அவரை நானிப்பொழுதே பார்க்கவேண்டும். அவர்தாம் என் யாகத்துக்குக் காவலாளர். அவரும் என்னுடன் இருந்து இந்தச் சந்தோஷத்தை அனுபவிக்கவேண்டும்'' என்றார். இப்படிச் சதாநந்தரிடம் சொல்லி முடித்ததும் குசத்துவஜரை அழைத்து வரத்தக்க மனிதர்கள் வேகமான குதிரைகளில் ஏறிக்கொண்டு, இந்திரன் கட்டளையால் விஷ்ணுவை அழைத்து வரத் தூதர்கள் புறப்படுவதுபோல் புறப்பட்டுவிட்டார்கள். ஜநகர் கட்டளையிட்டவண்ணம் அவர்கள் ஸாங்காசிய நகரம் சேர்ந்து குசத்துவஜர் முன்னின்று, ஜநகர்சொன்ன சமாசாரத்தைத் தெரிவிக்கவே, அவர் உடனே அவ்விடம் விட்டுப் புறப்பட்டு மிதிலை சேர்ந்து சதாநந்தரையும் தமது தமையனாரான ஜநகரையும் வணங்கி நின்றார். பிறகு அவ்விருவரும் விலையுயர்ந்த ஓர் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு தங்களுடைய முக்கியமந்திரியாகிய சுதாமனரைக் கூப்பிட்டு "ஐயா, மந்திரிசிங்கமே, நீங்கள் சீக்கிரமாகச்சென்று அளவற்ற காந்தியால் விளங்கும் தசரதமன்னவரை அவருடைய குழந்தைகளுடனும் மந்திரிகளுடனும் இவ்விடம் மரியாதையாக அழைத்துவாருங்கள்" என்று சொல்லியனுப்பினார்.

*தசரதர் ஜநகருடைய சபைக்கு வருதல்.*

அவரும் அவ்வாறே விரைந்துசென்று தசரத மன்னவரைக்கண்டு தலையால் வணங்கி நின்று "அயோத்திமா நகரத்தின் அதிபதியே, எங்கள் அரசர் மிதிலாதிபதி, தமது புரோகிதர்கள் பந்துக்கள் முதலானவர்களுடன், தங்களைத்
ரோகிதர்கள் குமாரர்கள் சகிதம் பார்க்க ஆசை
ந்திருக்கிறார்" என்றார். இதைக்கேட்ட தசரதர்
ஜநகரிடம் வந்துசேர்ந்தார். மந்திரிகள், பந்துக்
ர் ஜநகரைப்பார்த்து "மகாராஜாவே, எங்கள்
ஷ்டமகாரிஷி குரு என்பது உங்களுக்குத்

தெரிந்த விஷயமே. எந்த விஷயத்திலும் அவர் தாம் பேச வல்லவர். அவர்தாம் இப்பொழுது விசுவாமித்திர ரிடத்திலும் மற்ற ரிஷிகளிடத்திலும் அநுமதி பெற்றுக்கொண்டு எனது குலங்கோத்திரத்தைப் பற்றி இச்சபையில் சொல்லுவர்'' என்றார்.

தசரதருடைய வம்சக்கிரமம்.

இவர் இப்படிச்சொல்லி நின்றதும் வசிஷ்டர் ஜநகரையும் அச்சபையையும் பார்த்து "பரமாத்மாவினின்று சாச்வதராய் நித்தியராய் அழிவின்றி முதல் முதல் தோன்றினவர் பிரமதேவர். அவரிடமிருந்து மரீசி பிறந்தார். மரீசி மகனார் காசியபர். (விவஸ்வாந்) சூரியன் என்பவர் காசியபரிடமிருந்து உண்டானார். விவஸ்வானுடைய மைந்தர் மநு. மநுவின் குமாரர் இக்ஷ்வாகு. இந்த இக்ஷ்வாகுதான் முதலில் அயோத்திநகரத்தில் அரசாள ஆரம்பித்தவர். இவ்விக்ஷ்வாகுவின் பிள்ளை குக்ஷி என்று பெருங் கீர்த்திபெற்ற மன்னவன். இவனுக்கு விகுக்ஷி என்ற ஒரு மகனுண்டானான். விகுக்ஷியின் புத்திரன் பாணன் என்று புகழும் பிரதாபமும் பெற்றவன். பாணன் மைந்தன் அநரண்ணியன். அநரண்ணியனிடம் பிருது பிறந்தான். பிருதுவின் பிள்ளை திரிசங்கு. திரிசங்குவின் மகன் வெகு புகழ் பெற்ற துந்துமாரன். துந்துமாரனென்று ஒரு பெயருள்ள யுவநாச்வனுடைய மகன் மாந்தாதா என்ற மண்டலேசுவரன். மந்தாதாவின் மகன் சுசந்தி. சுசந்திக்குத் துருவசந்தி என்றும் பிரசேனஜித்து என்றும் இரண்டு குமாரர்களுண்டானார்கள். துருவசந்தியிடமிருந்து வெகு கீர்த்திபெற்ற பரதன் உண்டானான். பரதன் பிள்ளை அசிதன். இவனுடன் போர் புரியவென்றே ஹைஹயர்கள், தாலஜங்கர்கள், சசவிந்தர்கள் என்ற சூரர்களான அரசர்களுண்டானார்கள். அவர்களுடன் இவன் போர் புரிந்து தோல்வி யடைந்து இமையமலைக்கு ஓடிப் போய் அங்கு பிருகுபிரஸ்ரவணம் என்ற ஆச்சிரமத்தில் தனது மந்திரிகளுடனும் இரண்டு மனைவிமாருடனும் வசித்துக்கொண்டிருந்தான். இவன் அதிக பலசாலியல்லன். இவனுடைய

மனைவியரிருவரும் கர்ப்பமானார்கள். அவர்களில் காளிந்தியின் கர்ப்பத்தைக் கெடுக்க அவளுடைய சக்களத்தி அவளுக்கு விஷங்கொடுத்தாள். அக்காலத்தில் பிருகுவின் குமாரரான சியவனர் என்றவர் அழகான அந்த இமயமலையில் வெகு ஆனந்தமாய் வசித்துக்கொண்டிருந்தார். * * அவ்விருஷியைக் காளிந்தி வணங்கினதும் அவள் புத்திரப்பேறு அடைய விரும்பியிருப்பதைத் தெரிந்துகொண்டு அவர் அவளைப்பார்த்து "தாமரையிதழ்போன்ற கண்கள் அமைந்தவளே, உனது வயிற்றிலிருந்து அதிக பலம் அதிக வல்லமை அதிக தேஜஸ் பொருந்திய ஒரு புதல்வன் வெகு சீக்கிரத்தில் பிறப்பான். விஷத்துடன் அவன் ஜனிப்பான் நீ விசனப்படவேண்டாம்" என்றார். உடனே பதிவிரதையாகிய அந்த ராஜபுத்திரி சியவனரை நமஸ்காரஞ் செய்து சென்று தனது புருஷன் போனதற்குத் துக்கித்துக்கொண்டிருக்கையிலேயே ஒரு புதல்வனைப் பெற்றாள். சக்களத்தி காளிந்தியின் கர்ப்பத்தை அழிக்கக் கொடுத்த விஷத்துடன் (கரத்துடன்) அப்புதல்வன் பிறந்தமையால் அவன் ஸகரனானான். ஸகரனுடைய மகன் அசமஞ்சன். அசமஞ்சன் பிள்ளை அம்சுமான். திலீபன் என்று அம்சுமானுக்கு ஒரு பிள்ளை பிறந்தான். திலீபன் மகன்தான் பகீரத மன்னன். பகீரதனிடமிருந்து ககுத்தனுண்டானான். ககுத்தனுடைய மகன் இரகு. இரகுவின் மைந்தன் வெகு தேஜசுள்ள பிரவிருத்தன். சாபத்தால் இவன் பின்பு அரக்கனாயினான். கல்மாஷபாதன் என்ற பெயர் வந்ததும் இவனுக்கே. இவன் பிள்ளை சங்கணன். சுதர்சனன் சங்கணனுடைய மகன். சுதர்சனனுக்கு அக்கினிவர்ணன் என்ற பிள்ளை உண்டானான். அக்கினிவர்ணனுடைய மைந்தன் சீக்கிரகன். இவன்பிள்ளை மரு. மருவின் பிள்ளை பிரசுசுருகன். இவனிடமிருந்து உண்டானவன் அம்பரீஷன். அம்பரீஷன் மகன் நகுஷன்; இவன் மண்டலேசுவரன். நகுஷன் பிள்ளை யயாதி. யயாதியின் குமாரன் நாபாகன். நாபாகனுக்கு அஜன் என்ற குமாரனுண்டானான். அஜனிடமிருந்து உற்பத்தியானவர்

தசரதர். இந்தத் தசரதருடைய குழந்தைகள்தாம் இராமர், லக்ஷ்மணர் என்ற இவ்விருவரும். இவ்வாறு ஆதிமுதல் பரிசுத்தமான வம்சத்தில் பிறந்த வெகு தர்மிஷ்டர்களாகவும் வீரர்களாகவும் சத்திய சந்தர்களாகவும் இருக்கிறவர்கள் இராமலக்ஷ்மணர்கள். ஜநகமகாராஜரே, நாம் உமது குழந்தைகளை இவர்களுக்குப் பாணிக்கிரகணம் செய்து கொடுக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம். உமது குழந்தைகளும் நமது குழந்தைகளும் ஒருவருக்கொருவர் ஒருவிதத்திலாவது தாழ்ந்தவர்கள் அல்லர். எல்லாவிதத்திலும் சமானரானவர்கள். ஆகையால், உமது கன்னிகைகளை எமது குமாரர்களுக்குப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொடுக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறோம்" என்றார்.

## எழுபத்தோராஞ்சருக்கம் :

### ஜநகருடைய வம்சாவளி.

*ஜநகருடைய வம்சக் கிரமம்.*

வசிஷ்டர் இவ்வாறு சொல்லி முடித்தவுடன் ஜநகரும் வெகு சந்தோஷமடைந்து அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு "முனிவரரே, நானும் என் வம்சாவளியைச் சொல்லுகிறேன்; காதுகொடுத்துக் கேளுங்கள். கன்னிகாதான காலத்தில் பெண்கொடுப்பவர் தம்முடைய வம்சாவளியை எடுத்துச் சொல்லவேண்டுமென்பது கொள்கையன்றோ! மூவுலகத்திலும் பிரசித்தராய், தருமந்தவறாது நடப்பவராய், உண்மையையே உரைப்பவராய், சகல பலசாலிகளுள்ளும் சிறந்தவராய் நிமி என்று ஓர் அரசர் முற்காலத்திலிருந்தார். அவர் குமாரர் மிதி என்பவர். அவர் உண்டாக்கிய நகரம்தான் மிதிலை. அந்த மிதியே முதலாவது ஜநகர். இந்த ஜநகர்தாம் எங்கள் வம்சத்துக்கு மூல புருஷர். அவரிடமிருந்து உதாவசு என்பவருண்டானார். அவர் புத்திரர் வெகு தர்மிஷ்டரான நந்திவர்த்தனர். நந்திவர்த்தனர் குமாரர் வீரசிங்கமான சுகேது. சுகேதுவின் பிள்ளை மகாபலமும் நற்குணமும்

பொருந்திய தேவராதர். தேவராதரிடமிருந்து பிருகத்ரதர் உண்டானர். இவர் பிள்ளை வெகு சூரரான மகாவீரர். மகாவீரர் மகனர் சுதிருதி. அவர் தைரியமும் பராக்கிரமமும் பொருந்திய மன்னவர். அவர் பிள்ளை திருஷ்டகேது. திருஷ்டகேதுவின் புத்திரர் ஹரியசுவர். அவர் குமாரர் மரு. மருவின் புதல்வர் பிரதிந்தகர். அவர் குமாரர் வெகு கீர்த்திபெற்ற கீர்த்திரதர். அவர் மைந்தர் தேவமீடர். அவர் புத்திரர் விபுதர். விபுதர் குமாரர் மகீந்த்ரகர். அவர் குமாரர் வெகு பலம் பொருந்திய கீர்த்திராதர். அவர் மைந்தர் மகாரோமர். மகாரோமர் குமாரர் சுவர்ணரோமர். அவர் மகனர் ஹ்ரஸ்வரோமர். அந்த அரசருக்கு இரண்டுபிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவன் நான். இளையவர் வெகு வீரரான குசத்துவசர் என்பவர். என்னை எங்கள் தகப்பனர் இராஜ்யத்தில் முடிசூட்டி எனது தம்பியை என்வசத்தில் ஒப்பித்துத் தாம் காட்டுக்குத் தவம்புரியச் சென்றார். அவர் காலஞ்சென்றபிறகு நான் தருமராஜ்யம் பண்ணிக்கொண்டு எனது தம்பியையும் வெகு அபிமானமாகப் பாதுகாத்துவந்தேன்.

ஸாங்காசியம் கிடைத்த விவரம்

ஒருசமயத்தில் சுதந்வா என்ற பெயர்பெற்ற ஓர் அரசன் ஸாங்காசிய நகரத்திலிருந்து வந்து மிதிலையை முற்றுகை செய்தான். 'நீர் எனக்கு உமது மகள் சீதையையும் சிவனர் தனுசையும் கொடுத்தால் நான் உம்மை உபத்திரவம் பண்ணுகிறதில்லை' என்று சமாசாரம் சொல்லி யனுப்பினன். அதை நான் ஒப்பவில்லை. எங்களிருவர்க்கும் யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் சுதந்வா மாண்டான். அவன் மாண்ட பின் அவன் நாடாகிய ஸாங்காசியத்தில் எனது தம்பி குசத்துவசரை முடிசூட்டிவைத்தேன். நான் வெகு சந்தோஷத்துடன் எனது குமாரிகளை உங்கள் குலத்தில் விவாகம் பண்ணிக்கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன். இராமருக்குச் சீதையையும், லக்ஷ்மணருக்கு ஊர்மிளையையும் மணஞ்செய்து வைக்கிறேன். வில்லை ஒடித்த பராக்கிரமத்தால் விலைக்கு வாங்கப்பட்ட சீதையை இராமருக்

கும், ஊர்மிளையை லக்ஷ்மணருக்கும் கொடுக்கிறேன். நீங்களும் இந்த விவாகத்துக்கு முதல் அங்கமான சமாவர்த்தனம் முதலியவைகளைச் செய்யலாம். இன்னும் தேவர்களுக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து கல்யாணச் சடங்குகளைத் தொடங்கலாம். இன்று மக நக்ஷத்திரம். இன்றைக்கு மூன்றும் நாள் உத்தர பல்குநி நக்ஷத்திரம் வருகிறது. அந்த நாளில் கல்யாணச் சடங்குகளை முடியுங்கள். இராமர் லக்ஷ்மணர் இவர்களின் சௌக்கிய விருத்தியின் பொருட்டுத் தானத்தைச் செய்யுங்கள்'' என்றார்.

---

## எழுபத்திரண்டாஞ்சருக்கம்:

---

### பரத சத்துருக்கினர்களுக்குக் கல்யாணம் நிச்சயித்தல்.

நான்கு கல்யாணங்கள் நிச்சயமாகுதல்.

ஜநகர் இவ்வாறு சொல்லி முடித்தலும் மாமுனியான விசுவாமித்திரரும் வசிஷ்டருமாக அந்த வீரரைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்கள். "புருஷசிங்கமே, இக்ஷ்வாகு குலமும், நிமிகுலமும் இவ்வுலகத்தில் மிகக் கீர்த்தி பெற்ற குலங்கள். இவ்வளவு பிரசித்தமான குலங்கள் வேறு கிடையா. இந்த வமிசங்களுக்கு ஒப்பாக வேறு ஒரு வமிசத்தையும் சொல்லமுடியாது. அன்றியும், இராம லக்ஷ்மணர்கள், சீதை ஊர்மிளை இவர்களுக்குத் தகுந்த நாயகர்கள். சம்பத்திலும், அழகிலும், குணத்திலும் ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு பெண்ணுக்குத் தகுதியானவர். இந்தச் சுபகாலத்திலேயே இன்னும் சில சுபங்கள் சேர்ந்து நடக்கும்படி நாம் ஒரு விஷயம் தெரிவிக்கிறோம். வெகு தர்மிஷ்டராயும், தங்கள் தம்பியாயுமிருக்கிற இந்தக் குசத்துவச மன்னவருக்கு அழகில் ஒப்பற்ற இரண்டு குமாரிகள் உளரன்றோ. அவ்விருகுழந்தைகளையும் தசரதர் குழந்தைகளாகிய பரதனுக்கும், சத்துருக்கினனுக்கும் இதே பந்தலில் கல்யாணம் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தசரதருக்கு லோகபாலர்கள்

போல நான்கு குமாரர்கள் இருக்கிறார்கள் ; நல்ல அழகும், யௌவனமும், பராக்கிரமும் பொருந்தியவர்கள். ஆகையால், மற்ற இரண்டு பிள்ளைகளுக்கும் தங்கள் வம்சத்துப் பெண்களைக் கொடுப்பதனால் தாங்கள் தசரதரிடம் செய்யும் சம்பந்தத்தை இன்னும் அதிகமாகச் செய்து கொள்ளுங்கள்" என்றார்.

ஜநகர் முனிவர்களைத் துதித்தல்.

இவ்வாறு வசிஷ்டமுனிவருடைய அனுமதியுடன் விசுவாமித்திரர் சொன்ன வாக்கியத்தை ஜநக மகாராஜர் கேட்டு அவ்விரு மகாரிஷிகளையும் பார்த்து அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு "இவ்வண்ணம் இரு முனிமாணிக்கங்கள் இந்தச் சம்பந்தத்தைக் கூட்டிவைக்க ஏற்பட்டபொழுது எமது குலம் வெகு பாக்கியம் பெற்றதென்பதை நான் சொல்லவும் வேண்டுமோ! தாங்கள் சொல்லும் சொல்லை நாங்கள் தட்டினதுமுண்டோ. அதற்கென்ன ஆக்ஷேபம். குசத்துவசன் குமாரிகளிருவரையும் பரதர் சத்துருக்கினர் இருவர்க்கும் மணஞ் செய்து வைக்கிறேன். இந்த மகா பலம் பொருந்திய இராஜகுமாரர்கள் நால்வரும் ஒரே நாளில் எங்களுடைய வம்சத்து இராஜகுமாரிகளைப் பாணிக்கிரகணஞ் செய்து கொள்ளட்டும். உத்தர பல்குனி நக்ஷத்திரம் விவாகத்துக்கு எடுக்கப்பட்ட நக்ஷத்திரம் ; அந்நக்ஷத்திரத்தின் தேவதையே விவாகத்துக்கு ஏற்பட்ட தேவதை என்று பெரியவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட உத்தம நாள்" என்று ஜநகர் சொல்லி அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு எழுந்திருந்து மறுபடி அவ்விரு முனிவர்களையும் பார்த்து "நான் தங்களுக்கு எக்காலத்திலும் சிஷ்யனாக இருக்கும் பலனை இன்று தாங்கள் இந்த விவாகங்களை இசைத்து வைப்பதால் அடைந்தேன். நீங்கள் இருவரும் இந்தச் சிங்காசனங்களில் வீற்றிருங்கள். இந்த இராச்சியமே தசரதருடையது. அப்படியே இனி அயோத்தியும் என்னுடையது. எல்லாம் தங்களுடையன. உங்களிஷ்டப்பிரகாரம் இவ்விடம் கட்டளையிடலாம்" என்றார்.

இவ்வாறு ஜநகர் சொன்னதைக் கேட்டுத் தசரதர் வெகு

*தசரதர் ஜநகரைப் புகழ்தல்.*

ஆனந்தமடைந்து அவ்விரு சகோதரரையும் பார்த்து "உங்கள் இருவருடைய உத்தம குணங்களும் வருணித்து முடியாதவை. அநேக ரிஷிகளையும் அரசர்களையும் ஆதரிப்பதே உங்களுடைய விரதமாகியிருக்கிறது. நீங்கள் வெகு பாக்கியசாலிகள். எனக்கு விடைகொடுங்கள்; என் விடுதிக்குச் சென்று செய்யவேண்டிய காரியங்களைச் செய்து முடித்துக்கொள்ளுகிறேன்" என்றார். அப்படியே விடை பெற்றுக்கொண்டு விசுவாமித்திரர் வசிஷ்டர் இவ்விரு முனிவர்களையும் கூட அழைத்துக்கொண்டு தமது இருப்பிடம் வந்து சேர்ந்தார்.

*சமாவர்த்தனம்.*

அங்குத் தமது காரியங்களை அன்றிரவிற் செய்து முடித்தார். மறுநாள் அதிகாலையில் எழுந்திருந்து தமது குமாரர்களுடைய கல்யாணத்தை உத்தேசித்துச் சமாவர்த்தனம் முதலிய சடங்குகளை வெகு சம்பிரமமாகச் செய்யத் தொடங்கினர். ஒவ்வொரு பிராமணருக்கும் நூற்றுக்கணக்காயும் ஆயிரக்கணக்காயும் பசுமாடுகளைத் தானஞ் செய்தார். இளங் கன்றுடனும் பால்கறந்து உபயோகிக்க வெண்கலப் பாத்திரங்களுடனும் அழகுள்ளனவும், கொம்பில் தங்கக் குமிழ் கட்டப்பட்டனவுமான நாலுலக்ஷம் பசுக்களைத் தானம் பண்ணினர். அதேமாதிரி தமது குமாரர்கள்மீது தாம் வைத்திருந்த அபிமானத்தால் அவர்களுடைய க்ஷேமத்தை உத்தேசித்து அளவற்ற பொருள்களைப் பிராமணர்களுக்குத் தானங் கொடுத்தார். இவ்வாறு சமாவர்த்தனஞ் செய்விக்கப்பட்ட தமது நான்கு குமாரர்களால் சூழப்பட்டுத் தசரதர் நிற்கும்போது, லோகபாலர்கள் நால்வரால் சூழப்பட்டு நிற்கும் பிரமதேவர்போல் விளங்கினர்.

## எழுபத்துமூன்றாஞ்சருக்கம் :

### சீதா விவாகம்.

*யுதாஜித்தின் வரவு.*

என்றைத்தினம் தசரதமன்னர் சமாவர்த்தனமாகிய பெரியகாரியத்தைச் செய்து முடித்தனரோ அதேதினத்தில் தசரதரை நாடிக்கொண்டு பரதருடைய மாமாவான யுதாஜித் என்ற கேகய ராஜகுமாரன் அங்கு வந்து சேர்ந்தான். அவனும் தசரதரைக் கண்டு யோகக்ஷேமம் விசாரித்துவிட்டு அவரை நோக்கி "எனது தந்தை கேகயமன்னவர் தங்களுடைய க்ஷேமத்தை விசாரித்தார்; எனது தங்கையின் குமாரனைப் பார்க்க ஆசைகொண்டு அவனை அழைத்துவா என்று கட்டளையிட்டார். அதற்காக நான் அயோத்தி வந்தேன். அங்குத் தாங்கள் தங்கள் குமாரருடைய கல்யாணத்தின் பொருட்டு அக்குமாரர்களுடன் இங்கு வந்திருப்பதாகத்தெரிந்துகொண்டு, சீக்கிரம் வந்தேன்" என்றான். தசரதமன்னர் தமக்கு இவ்வளவு சமீபமான பந்து அச்சமயத்தில் வந்து நேர்ந்துகொண்டதற்கு மிக மகிழ்ச்சியடைந்து வெகுவித மரியாதைகள் செய்து அவனை உபசரித்து அன்றிரவை வெகு ஆனந்தமாகக் கழித்தார்.

*இராமர் விவாக கங்கணம் தரித்தல்.*

பொழுது விடிந்ததும் தசரதர் தமது நித்திய கடன்களைச் சாஸ்திரப் பிரகாரம் செய்துமுடித்துத் தமது குலதெய்வங்களான முனிவர்களை முன்னிட்டுக் கொண்டு விவாகசாலைக்கு வந்து சேர்ந்தார். வெற்றியுடன் கூடிய அதே முகூர்த்தத்தில் இராமரும் வசிஷ்டர் முதலான மகா ரிஷிகளை முன்னிட்டுக்கொண்டு தமது தம்பிமார்களுடன் சர்வாபரணபூஷிதராய் கல்யாணத்துக்கு முன்னாகச் செய்யவேண்டிய விரதங்கள் எல்லாவற்றையுஞ் செய்துமுடித்துக்கொண்டு கல்யாண கங்கணம் தரித்தவராய் விவாக சாலைக்கு வந்து சேர்ந்தார். அவ்விடம் வந்து சேர்ந்ததும் வசிஷ்ட மாமுனிவர் ஜனகமன்னவரைப் பார்த்து

"வேந்தே, தமது குழந்தைகளுடைய கல்யாணத்துக்காகத் தாம் செய்யவேண்டிய பூர்வாங்கங்கள் என்ற எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொண்டு, தசரதமன்னவர் கீர்த்தியும் பிரதாபமும் பெற்ற தமது குமாரர்களோடு உமது கன்னிகைகளுடைய தானத்தை எதிர்பார்த்து நிற்கிருர். கொடுத்தல் பெற்றுக்கொள்ளுதல் இவைகள் இரண்டும் வைதிகமுறைப்படி நடக்கவேண்டுமன்ரே. ஆகையால், தாங்கள் இந்தச்சமயத்தில் கன்னிகைகளைத் தானம்பண்ணிப் புண்ணியத்தைக் கட்டிக்கொள்ளுங்கள். தாங்களோ இந்தச்சமயத்தில் கொடுக்கவேண்டியவர்கள். நாங்களோபெற்றுக்கொள்ள வேண்டியவர்கள்" என்ருர்.

கல்யாண ஹோமம்.

இப்படி வசிஷ்டர் சொல்லலும் வெகு உதாரகுணம் பொருந்திய ஜநகர் வெகு தர்மப் பிரபுவாகையால் அவரைநோக்கி "என்ருல் என்னதடை. இந்த இடத்தில் உத்தரவு பண்ணவேண்டியவர்கள் யார். தங்களுடைய சொந்தவீட்டில் ஒருவரைக்கேட்டுத்தான் செய்யவேண்டுமென்று சந்தேகிக்க இடமேயில்லையே. இந்த இராச்சியமே எனக்கு எவ்வளவு சொந்தமோ அவ்வளவு தங்களுக்கும் சொந்தமன்ரே. எனது குழந்தைகளை முன்னமே மங்கள ஸ்நானம் செய்வித்து அலங்கரித்து வரவழைத்து அவர்கள் செய்யவேண்டிய நோன்புகளை முடித்துவைத்துக்கொண்டு இதேபந்தலில் உங்கள் வரவை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்தவனுகக் காத்திருக்கிறேன். சீக்கிரம் எல்லாக்காரியங்களையும் நடத்திக்கொடுங்கள். முகூர்த்தகாலம் தவறக்கூடாது" என்ருர். இப்படி அவர் சொல்ல, தசரதர் தமது பிள்ளைகளுடன் முனிவர்களை முன்னிட்டுக்கொண்டு கல்யாணப் பந்தலில் பிரவேசித்தனர். உடனே 'ஜநகரும் வசிஷ்டரைப்பார்த்து "முனிரத்தினமே, மற்றமுனிவர்களுடன் இராமருடைய கல்யாணஹோமாதிகளை ஆரம்பித்து நடத்துங்கள்" என்ருர். உடனே வசிஷ்டரும் "அப்படியே" என்று சொல்லி விசுவாமித்திரர் சதாநந்தர் முதலிய ரிஷிகளுடன் அந்தக் கல்யாணமண்டபத்தில் உட்கார்ந்தார். அந்த மணப்பந்தலின் மத்தியிலே வெகு அழகாக ஒரு

மேடையைச் சாஸ்திரப்பிரகாரம் அமைத்து அந்த வேதியைக் கந்த புஷ்பங்களாலும் இழைக்கோலங்களாலும் அந்த முனிவர்கள் அலங்கரித்தார்கள்; தங்கப் பாலிகைகளை வைக்கவேண்டிய இடத்தில் வைத்தார்கள்; தீர்த்தகும்பங்களைப் புஷ்பம் தர்ப்பம் முதலியவைகளால் பூசித்தார்கள். முளை நிறைந்த பாத்திரங்களை மேடையின் நாற்பக்கங்களிலும் நிறுத்தினார்கள். ஒருபக்கத்தில் தூபம், ஒருபக்கத்தில் தீபம், ஒருபக்கம் பொரி, மற்றொருபக்கம் அர்க்கியம், வேறொரு பக்கத்தில் அக்ஷதை இவைகளால் அந்தக் கல்யாண வேதிகை விளங்கலாயிற்று. வசிஷ்டர் விதிப்பிரகாரம் வேதியைச் சுற்றித் தருப்பைப் புல்லைப் பரப்பினார்; அதன்மத்தியில் சாஸ்திரோக்தமாய் ஓமத்தை வளர்த்துக் கல்யாண மந்திரத்தை ஜபித்தனர்.

சீதையின் பாணிக்கிரஹணம்.

இச்சமயத்தில் ஜநகமன்னர் ஸர்வாபரண பூஷிதையாய் விளங்கும் தமது பெண்மணியான சீதையை அக்கினிக்கு முன்பாக இராமரெதிரில் கொண்டுவந்து நிற்கச்செய்து இராமரைப்பார்த்து மிகச் சந்தோஷமாகப் பின் வருமாறு சொல்லினர்:—“என் பெண்ணாகிற இந்தச் சீதையை உம்முடைய ஒவ்வொரு தருமங்களையும் கூட நின்று நிறைவேற்றிவைக்க நான் உமக்குத் தானம் பண்ணுகிறேன். உமக்கு எப்பொழுதும் க்ஷேமமுண்டாகக்கடவது. இதோ அவளுடைய கையை உமது கையால் பற்றும். இவள் எப்பொழுதும் தனது புருஷன்தான் தனக்குக்கதி என்று கருதுங் குணமுள்ளவள். எப்பொழுதும் உமது நிழல்போல் உம்மை ஒருநாளும் விட்டுப்பிரியாத மனைவியாகக்கடவ ளென்று ஆசீர்வாதம் பண்ணுகிறேன்” என்று சொல்லி இராமர் கையில் மந்

திரஞ் சொல்லி நீரை வார்த்துத் தம் பெண்ணுகிய சீதையைக் கன்னிகாதானம் பண்ணின அச்சம யத்தில் ரிஷிகளும் தேவர்களும் "வெகு சிலாக்கிய மான விவாகம்; வெகு அழகான கல்யாணம்" என்று எங்கே பார்த்தாலும் புகழ்ந்தார்கள். ஆகா சத்தில் தேவதைகள் துந்துபி வாத்தியம் முழங்கி ஞர்கள். புஷ்பமாரியும் பொழிந்தது.

மற்ற மூவர்கள் விவாகம்.

இவ்வண்ணம் கையில் மந்திரஜலத்தை விட்டுச் சீதையை ஜநகர் தானஞ்செய்து அந்த ஆனந்தத்தால் தேகமும் மனமும் பூரித்து லக்ஷ்மணரை நோக்கிச் சொல்லலுற்ருர். "லக்ஷ்மணரே, இலக்கினம் தவறக்கூடாது. சீக்கிரமாக வாரும். எனது குழந்தை ஊர்மிளையின் கையை உமது கையால் பற்றும்" என்ருர். அதன்பின், பரதரைப்பார்த்து "உமது கரத்தால் மாண்டவியின் கரத்தைப்பற்றும்" என்று சொன்ஞர். அப்புறம், சத்துருக்கினரை ஜநகர் அழைத்து "சுருதகீர்த்தியின் கரத்தை உமது கரத்தால் பற்றும்" என்ருர். "நீங்கள் நால்வர்களும் வெகு தீரர்கள்; வெகு யோக்யர்கள்; நற்குண நற் செய்கை பொருந்தியவர்கள்; இப்பொழுது உங்கள் நால்வர்களுக்கும் விவாகம் நடக்கவேண்டும்; காலதாமதம் ஆகலாகாது" என்றும் சொன்ஞர். இவ்வண்ணம் ஜநகர், சொல்லவே, வசிஷ்டரும் 'நல்லவேளை தப்பிவிடும், சீக்கிரம்' என்று சொல்லிக்கொண்டு நிற்க, ராஜகுமாரர்கள் நால்வரும் அந் நான்கு ராஜ குமாரிகளையும் கையாற்பற்றி ஹோமாக்கினியையும் ஜநகரையும் வலம்வந்து

அப்படியே ரிஷிகளையும் அந்தணர்களையும் சூழ்ந்துசென்று கல்யாணச் சடங்குகளை விதிப்படி ஒன்றும் விடாமல் செய்து முடித்தார்கள்.

விவாக மகோத்ஸவம்.

பெரிய மலர்மாரி வெகு ஒளியுடன் ஆகாயத்தினின்று பொழிந்தது. தேவதைகள் எல்லாரும் களித்துக் கூத்தாடினார்கள், பாடினார்கள், வாத்தியம் வாசித்தார்கள், துந்துபி முழக்கினார்கள், அப்ஸரசுகள்தாண்டவஞ்செய்தார்கள், கந்தருவர்கள் இசைபாடினார்கள்; இராமர் தமது தம்பிமார்களுடன் கல்யாணஞ் செய்துகொண்ட தினத்தில் இவ்வளவு ஆச்சரியங்கள் நடந்தன. பலவகை வாத்தியங்களும் முழங்கிக்கொண் டிருக்க அவ்வரச குமாரர்கள் தங்களுடைய மனைவிமார்களுடன் அக்கினியை மூன்று முறை வலம் வந்து தங்களுடைய மனைவிகளையும் அழைத்துக்கொண்டு தங்கள் விடுதிக்குச் சென்றார்கள். இக்குழந்தைகளின் அழகையும் பாக்கியத்தையும் பார்த்துக் களித்துக்கொண்டு தசரத மன்னரும் ரிஷிகளால் தொடரப்பட்டு அக்குழந்தைகளுடன் தாம் தங்கியிருக்கும் இடத்துக்குச் சென்றார்.

## எழுபத்துநான்காஞ்சருக்கம்.

### பரசுராமர் வரவு.

ஸ்திரீதனங்களுடன் தசரதர் அயோத்திக்குப் புறப்படல்.

இரவு கழிந்தவுடன், விசுவாமித்திரமாமுனிவர், தசரதர் ஜனகர் இவ்வரசர்களிடம் விடைபெற்றுக் கொண்டு இமயகிரிக்குச் சென்றார். அவர் புறப்பட்டுப் போனபின்பு, தசரதரும் ஜநகரிடம் விடைபெற்று அயோத்திக்குப் புறப்படலானார். அவரை இரண்டோர் இறங்குமிடம் தொடர்ந்து ஜநகரும் வழியனுப்பலானார். தமது குழந்தைகளுக்கு ஜநகர் வெகு சீதனங் கொடுத்தார். எத்தனையோ லக்ஷம்

பசுக்களும், கம்பளங்களும், கோடிக் கணக்கான வெண்பட்டு களும், வஸ்திரங்களும், யானைகளும், குதிரைகளும், இரதங்க ளும், போர் வீரர்களும், முதலிய பொருள்களைக் குழந்தைக ளுக்கு ஜநகர் வெகுமதி செய்தார். பட்டாடைகளாலும் நகை களாலும் நிறைந்த வேலைக்காரிகளையும் வேலைகாரர்களையும் நூற் றுக் கணக்காகத் தமது குமாரிகளுடன் அனுப்பினார். தங்கம், வெள்ளி, பவளம், முத்து இவைகளை வெகு சந்தோஷத்துடன் தமது குழந்தைகளுக்கு மிதிலை மன்னர் வாரிக்கொடுத்தார். இவ் வாறு அநேக விதமாய்ச் சீதனங் கொடுத்துத் தமது குழந்தை களை அனுப்பித் தசரதமன்னவரிடம் விடைபெற்றுக் கொண்டு ஜநகர் தமது நகரம் திரும்பி வந்து சேர்ந்தார். தசரதரும் மகாத்துமாக்களான தமது குமாரர்களாலும் வேதியர்களாலும் ரிஷிகளாலும் சூழப்பட்டவராய்த் தமது சேனையும் வேலைக்காரர் களும் உடன் செல்லத் தாம் பிரயாணமானார்.

வழியில் நடந்த சகுனபேதம்.

இப்படி அவர்கள் செல்லும்போது சில அபசகுனங்களும் சில சுபசகுனங்களும் உண்டாயின. எங்ஙன மென்றால், வானத்தில் பக்ஷிகளெல்லாம் வெகு கோரமாகக் கூவின. பூமியில் மிருகங்கள் பிர தக்ஷிணமாகச் சென்றன. இவைகளை ராஜசிங்கமான அந்தத் தச ரதர் பார்த்து வசிஷ்டமாமுனியை நோக்கி முனிமாணிக்கமே, இதென்ன ! பக்ஷிகளெல்லாம் பயங்கரமாகச் சத்தமிடுகின்றன. மிருகங்களெல்லாம் வலம் வந்து ஓடுகின்றன. ஏதோ தெரிய வில்லை. என்மனம் பதைக்கிறது. துக்கமுண்டாகிறது" என் றார். இதை வசிஷ்டர் கேட்டு "பயமே வேண்டாம்; இவைக ளின் பலனை நான் இதோ சொல்லுகிறேன். பக்ஷிகளின் சத்தங் கள் சமீபத்தில் வரப்போகிற பயத்தை வெளியிடுகின்றன என் பதற்கு ஆக்ஷேபமில்லை. ஆனாலும், மிருகங்களெல்லாம் வலம் வந்து ஓடுகிறபடியால் நமக்கு ஒரு பயமுமில்லை. எல்லாம் ஜய மாகமுடியும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். ஆகையால் இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் ஒன்றும் சிந்திக்கவேண்டாம்" என்றார். இப்படி இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே

பூமியை அசைத்துக்கொண்டு மரங்களை யெல்லாம் வேரோடு பிடுங்கித் தள்ளிக்கொண்டு ஒரு பிரசண்டமாருதம் அடித்தது. சூரியன் இருளால் மறைந்தான். எல்லாத் திசைகளும் கண்ணுக்கு ஒன்றுந் தெரியாதவண்ணம் இருண்டன. தசரதர் சேனை புழுதியால் மூடப்பட்டு இருந்த இடமே தெரியாமற் போயிற்று. அச்சமயத்தில் வசிஷ்டமாமுனி, மற்ற ரிஷிகள், தசரதர், அவர் பிள்ளைகள் இவர்கள் நீங்கலாக மற்றவர்களெல்லாம் மூர்ச்சை யடைந்தவர்களா யிருந்தார்கள்.

பரசுராமர்.

அப்பொழுது பயங்கரமான தோற்றத்துடன் தலையில் சடையின் சமூகம் விளங்க ஓர் உருவம் கண்ணுக்குத் தோன்றியது. இப்படி வந்த உருவத்தினர் சமதக்கினியின் குமாரரான பரசுராமர். இவர் இராஜவம்சங்களை அநேகமுறை வதை செய்தவர்; கைலாச பருவதம்போல எதிர்க்கக்கூடாதவராயும் பிரளயகாலத்துத் தீப்போல அணுகக் கூடாதவராயும் விளங்கினர். அவருடைய காந்தி கொழுந்துவிட்டெரியும் சுவாலைபோல் பிரகாசித்தபடியால் அவரைச் சாதாரணமாகக் கண்கூசாமல் ஒருவரும் பார்க்கமுடியாமலிருந்தது. தோளில் கோடாலி ஒன்றை வைத்துக்கொண்டு மின்னற் கொடிபோன்ற ஒரு பெரு வில்லைக் கையிற் பிடித்து மற்றொரு கையிற் பாணமேந்திவரும் அவரை அக்காலத்தில் பார்க்கும்பொழுது, முப்புரங்களையும் தீயிட வந்த சிவபெருமான்போல் விளங்கினர். அக்கினிபோல் சுவலித்துக் கொண்டு வெகு பயங்கரராய் வரும் அவரைப் பார்த்ததும் வசிஷ்டர் முதலான அந்தணர்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குள்ளேயே "தமது தகப்பனரை ஒரு க்ஷத்திரியன் கொன்றதற்காக முன்னமே க்ஷத்திரிய வம்சத்தில் வைரம் வைத்திருக்கும் இவர் மறுபடியும் க்ஷத்திரியர்களை நாசம்பண்ண வந்திருக்கிறரா என்ன? இவர் தமது கோபத்தையும் வைரத்தையும் ஒருவாறு விட்டு ஒழிந்தார் என்று கேள்விப்பட்டோமே! மறுபடி ஏன் வந்திருக்கிறர்?" என்று ஆலோசிக்கலானர்கள்.

இவ்வண்ணம் இவர்கள் ஆலோசித்துக்கொண்டு அர்க்கியம்

பரசுராமரை முனிவர்கள் பூசித்தல்.

முதலிய மரியாதைகளைக் கையிலேந்தி "இராம இராம," என்று கூப்பிட்டுக்கொண்டு, பயங்கர ரான அந்தப் பரசுராமரை எல்லாருமாக எதிர் கொண்டு சென்று பூசித்தார்கள். அவரும் இவர்கள் செய்த மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு தசரதகுமா ரரான இராமரை நோக்கிப் பின் வருவாறு சொல்லலானார்:—

## எழுபத்தைந்தாஞ்சருக்கம் :

### பரசுராமர் வாக்கியம் ; விஷ்ணுதனுசின் மகிமை.

விஷ்ணு வில்லை வளைக்க இராம ரைப் பரசுராமர் ஏவுதல்.

பரசுராமர் இராமபிரானைப் பார்த்து "ஓ! தசரத மன்னவ ரின் மைந்தா, ஓ! ராமா, உனது பராக்கிரமம் வெகு அதிகமாக எல்லாராலுங் கூறப்படுகி றது நீ சிவன் வில்லை முறித்த சமாசாரமும் நான் சிறிதும் விடாமல் கேள்விப்பட்டேன். அது வெகு அற்புதமாகவும், எப்படியிருக்கு மென்று எண்ணமுடியாமலு மிருக்கிறது. அதைக் கேட்ட வுடன் மற்றொரு தனுசை எடுத்துக்கொண்டு நான் இங்கு வந் தேன். இந்தப் பயங்கரமான பெரிய ஜமதக்கி வில்லை நீ வாங்கி வளைத்து நாணேற்றினால் அப்பொழுது நான் அதைப் பார்த்து உனது பலத்தை நம்பி உன்னுடன் சண்டையிடலாமா என்ப தைப்பற்றி ஒருவாறு ஆலோசிப்பேன்" என்று கூறினர்.

தசரதர் பரிதாபம்.

இவ்வாறு அவர் சொன்னதைத் தசரதர் கேட்டு மிகத் துயரப்பட்டு வெகு பரிதாபத்துடன் தமது கைகளைக் கூப்பிக்கொண்டு "பரசுராமரே, முன்னமே தாங்கள் க்ஷத்திரியர்கள்மேல் வைத்திருந்த கோபத்தை நீக்கிச் சாந்தமடைந்து விட்டீர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதல்லாது தாங்கள் இப் பொழுது தவம் பண்ணிக்கொண்டு மகா வேதியராக இருக்கி றீர்கள். ஆகையால், என் பாலர்களான குழந்தைகளை நீங்கள் தாம் ரக்ஷித்தருளவேண்டும். எப்பொழுதும் வேதபாராயணத்

தையே விரதமாகக் கொண்டிருக்கும் பார்க்கவ வம்சத்தில் உண் டானவர்களன்றோ தாங்கள். முன்னமே, இனி நாம் வில்லெடுக் கிறதில்லை என்று இந்திரன் முன்னிலையில் நீங்கள் உங்கள் ஆயு தங்களைக் கீழே வைத்தீர்கள். தருமசிந்தை கொண்டவராய்த் தாங்கள் தங்கள் தேசம் முழுவதையும் காசியப ரிஷிக்குத் தானம் பண்ணினீர்கள். அதன்மேல் நாட்டிலேயே இருக்கக் கூடாதென்று கருதி மகேந்திர பருவதஞ் சென்று அங்கு வசிக்க லானீர்கள். இப்பொழுது, என் பாவம் நீங்கள் என்னை முழு துக் நாசம்பண்ணத் திரும்பி வந்திருக்கிறீர்கள். இராமன் ஒரு வன் போனபின் நாங்கள் எல்லாரும் உயிருடனிருப்போம் என்று மட்டும் தாங்கள் எண்ணவே வேண்டாம்" என்றார்.

விற்களின் வரலாறு.

இந்த விதமாகக் கிழவர் சொன்ன வார்த்தையைக் கொஞ்ச மேனும் காதுக்குள் வாங்கிக் கொள்ளாமலே அவரை அலக்ஷியஞ் செய்து பரசுராமர் இரா மரைப்பார்த்து "இராமர், முற்காலத்தில் விசுவகருமா என்ற தேவத்தச்சன் வெகு விசித்திரமாக இரண்டு வில்லை உண்டாக்கினான். அவை வெகு ஆச்சரியமானவை; உலகத்தில் பெயர் பெற்றவை; வெகு உறுதியுள்ளவை; வெகு பலமுள்ளவை. அவைகளில் ஒன்றை ஈசுவரருக்குத் தேவர்கள் திரிபுரத்தை நாசம் பண்ணக் கொடுத்தார்கள். அதுதான் நீ முறித்தது. அதனுடைய இனமான மற்றொன்று, அதைப் போன்ற பலமுள்ளது, இதோ என் கையிலிருக்கிறது. வைஷ் ணவ வில் என்று சொல்லப்படுவது இது தான். முன்னொரு காலத்தில் தேவர்கள் ஈசுவரருடைய பலத்தையும், விஷ்ணுவின் பலத்தையும் தெரிந்துகொள்ள உத்தேசித்து இவர்களுள் யாருக் குப் பலம் அதிகம் என்று பிரமதேவரைக் கேட்டார்கள். இவர் கள் கருத்தைப் பிரமதேவர் அறிந்துகொண்டு சிவபெருமானுக் கும் விஷ்ணுவுக்கும் சண்டை யுண்டாக்கி விட்டார். இவ்விரு தெய்வங்களும் வெகு ரோஷத்துடன் சண்டையிடும் பொழுது விஷ்ணுவினுடைய ஹுங்காரத்தால் சிவ தநுசு சிறிது முறிந் தது. சிவபிரானும் திகைத்து நின்றார். அப்பொழுது தேவர்க

ளெல்லாரும் முனிவர்களுடன் வந்து இவர்களைத் தங்கள் சண்டையை விட்டுவிடக் கேட்டுக்கொண்டார்கள். அங்ஙனமே தேவ சிரேஷ்ட ரிருவரும் சாந்தியடைந்தனர். நடந்த செய்கையைக் கண்டு தேவர்களும் முனிவர்களும் விஷ்ணுவை வெகு சிறப்பாக மதித்தார்கள். சிறிது முறிந்தவில் தமக்குப் பிரயோஜனமில்லை என்று சிவபெருமான் அதை விதேக நாட்டு மன்னரான தேவராதரிடம் கொடுத்தார். திருமாலும் சிறந்த தமது வில்லை எங்கள் வம்சத்து ரிசீகரிடங் கொடுத்தார். ரிசீகரும் அதை வெகு பல பராக்கிரமம் பொருந்திய எனது தந்தையாகிய ஜமதக்கினிக்குக் கொடுத்தார்.

பரசுராமர் தமது புகழை உரைத்தல்.

எனது பெருமை பொருந்திய தந்தையார் தமது ஆயுதங்களை யெல்லாம் விட்டொழிந்த காலத்தில் அற்ப புத்தியுள்ள கார்த்த வீரியார்ச்சுனன் அவரை வதைத்தான்; அவன்மேல் உண்டான கோபத்தால் நான் இவ்வுலகத்திலேயே அரசப் பூண்டில்லாமலடிக்க எத்தனையோ யுத்தம்பண்ணி எல்லாரையும் அழித்து விட்டேன். ஜயித்த நாடுகளை யெல்லாம் மகாத்துமாவாகிய காசியபருக்கு யஜ்ஞ தக்ஷிணையாகத் தானஞ்செய்தேன். இவ்வண்ணம் என் கோபம் ஒருவாறு அடங்கி மகேந்திரமலை சேர்ந்து அவ்விடத்தில் தவம் புரிந்து கொண்டிருந்தேன். நீ சிவபெருமான் வில்லை ஒடித்ததைக் கேள்விப்பட்டு மறுபடி இங்கு ஓடிவந்தேன். ஆகையால், நீ பலவான் என்பது உண்மையானால், க்ஷத்திரிய தருமம் உன்னிட மிருப்பதும் நிஜமென்றால், எனது தகப்பனார் பாட்டனார் உபயோகித்த இந்த விஷ்ணு பகவானுடைய உயர்ந்த வில்லைக் கைப்பற்று; சத்துரு நகரத்தை நாசம்பண்ணக் கூடிய ஓர் அம்பை இதில் தொடு. அப்படி நீ செய்வாயானால் உன்னுடன் நான் சண்டை செய்யத் தகுந்த யோக்கியதை உனக்கு உண்டு என்று நான் ஒப்புக் கொள்ளுவேன்" என்றார்.

## எழுபத்தாருஞ்சருக்கம் :

### பரசுராமருடைய வில்லை நாணேற்றல்.

பரசுராமர் வில்லை இராமர் நாணேற்றல்.

இவ்வாறு பரசுராமர் சொல்லவும் அதை இராமர் கேட்டுத் தமது தகப்பனாராகிய தசரதர் அருகிலிருக்கிறார் என்ற மரியாதைக்காக வெகு வணக்கத்துடன் பரசுராமரைப் பார்த்து "பிருகுவம்சத்திலுதித்த வேதியரே, தங்கள் தகப்பனாருக்கு ஒரு க்ஷத்திரியன் கெடுதல் செய்த காரணத்தால் அந்தக் கடனைத் தீர்க்கத் தாங்கள் செய்திருக்கும் காரியங்களை ஒன்றும் விடாமல் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அதற்காக என்னிடத்தில் பராக்கிரமமே இல்லையென்றும் நான் க்ஷத்திரியன் அல்லனென்றும் என்னைத் தாங்கள் அவமதித்து அலக்ஷ்யமாகப் பேசினது நியாயமன்று. இன்றையதினம் என் பராக்கிரமத்தையும் பலத்தையும் நீங்கள் நேரில் பார்க்கலாம்" என்று சொல்லி இராமர் பரசுராமரிடமிருந்து அவர் கொண்டு வந்த வில்லையும் அம்பையும் தமது கையை நீட்டி வாங்கினார்; அதை அலக்ஷ்யமாக நாணேற்றி அதில் அம்பைத் தொடுத்தார்.

இராமர் கோபம்.

அப்புறம் கோபங்கொண்டு ஜமதக்கினி குமாரரான பரசுராமரைப் பார்தது இராமர் பின்வருமாறு சொல்லலானார் :—"நீங்கள் எப்படியிருந்தாலும் பிராமணராகையால் என்னால் வணங்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். மேலும் விசுவாமித்திர மகாரிஷிக்குச் சமீபபந்துவாகவும் இருக்கிறீர்கள். அவருக்காகவும் நான் கொஞ்சம் பார்க்கவேண்டியவன். இக்காரணங்களைக் கொண்டுதான் இந்தப்பாணத்தைப் போட உங்களுடைய உத்தரவை நான் கேட்கவேண்டியவனாக இருக்கிறேன். இதோ பிராணனைப் பிடுங்கும் பாணம். இந்தப் பாணத்தைக் கொண்டு உங்களுடைய கால்நடையைக் கெடுக்கட்டுமா, அல்லது இத்தனை நாளும் தவங்களனேகம் செய்து தேடி வைத்திருக்கும் மோக்ஷலோகத்தைப் பிடுங்கிவிடட்டுமா ? இந்த விஷ்ணுதனு

சில் ஏற்றப்பட்டபாணம் சத்துருவினுடைய ஏதாவது ஒரு வீரத்தை வாங்காமல் கீழேயிழமாட்டாதென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயந்தானே" என்றார்.

தேவர்கள்வரவு.

இவ்வாறு இராமர் பரசுராமரைப் பார்த்துச் சொல்லும் சமயத்தில் அவர் விற்பிடித்து நின்ற காட்சியைப் பார்க்க ஆகாசத்தில் தேவர்கள் ரிஷிகள் முதலான எல்லாரும் பிரமதேவரை முன்னிட்டுக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். இவ்வதிசயத்தைக்கண்டு கண்குளிரக் கந்தர்வர்கள், சித்தர்கள், அப்ஸரசுகள் முதலான இன்னும் மற்றத் தேவகணங்களும் அங்கே கூடினார்கள். அப்பொழுது சகல காந்தியும் ஒரு நிமிஷத்தில் பரசுராமரை விட்டு இறங்கி இராமர் முகத்தில் வந்து ஏறி விளங்கலாயின.

பரசுராமர் விண்ணப்பம்.

வீரியங் குன்றிவிடவே பரசுராமரும் இராமரைப் பார்த்து வெகு மிருதுவாகப் பின்வருமாறு சொல்லலானார் :—நான் முற்காலத்தில் இவ்வுலகம் முழுவதையும் காசியப மகாரிஷிக்குத் தானம்பண்ணினபோது அவர் "இனிமேல் நீ உலகத்திலிருக்கக்கூடாது ; எல்லாம் என்னுடையதாகிவிட்டது" என்று என்னைப்பார்த்துச் சொன்னார். நானும் அதை மனத்தில் வைத்துக்கொண்டு அந்தப் பூமியில் வசிக்காமல் மகேந்திரமலையில் குடியிருக்கிறேன். தப்பித்தவறிப் பூமியிலிறங்கினாலும் இரவில் ஒருபொழுதும் பூமியில் வசித்ததேயில்லை. மலைக்குப் போய் விடுவேன். இப்படியிருக்க எனது காலை நான் எப்படி இழக்க முடியும். ஆகையால், இராம, கருணைபுரிந்து என் காலைமட்டும் காப்பாற்றும். நான இதோ வாயுவேகமனோவேகமாக மகேந்திர பருவதம் ஓடிவிடுகிறேன். நான் ஒப்பற்ற மோக்ஷலோகத்தைத் தவத்தினால் கைப்பற்றி யிருக்கிறேன். ஆகையால், நீங்கள் இப்பொழுது இதே நிமிஷத்தில் உங்கள் பாணத்தைவிட்டு எனது மோக்ஷகதியைப் பிடுங்கிவிடலாம்.

நான் ஏதோ தங்களை உண்மையாக அறியாமல் இங்கு

*அவர் இராமரைத் துதித்தல்*

வந்ததாக எண்ணவேண்டாம் அழிவற்ற தேவதேவரான திருமாலின் அவதாரம் தாங்கள் என்று நிச்சயமாக எண்ணியே இவ்விடம் வந்தேன். உமது உண்மையான வில்லையும் உம்மிடத்தில் ஒப்பித்துவிட்டேன். நீர் வெகு க்ஷேமமாக இவ்வுலகத்தை ரக்ஷித்தருளவேண்டியவர். உமது தரிசனத்துக்காகவே எல்லாத் தேவதைகளும் ஆகாசத்தில் வந்துவிட்டார்கள். யுத்தத்தில் உமக்கு நிகர் ஒருவரும் இல்லை. உம்மால் நான் தோல்வியடைந்ததற்கு எனக்கு வெட்கமில்லை. ஏனெனில், இம்மூவுலகத்துக்கும் கடவுளன்றோ நீர். பாணத்தை விட்டுவிடும். நீர் பாணத்தைப் போட்டபின்பு நானும் மகேந்திரம் போய்ச் சேருகிறேன்" என்று இவ்வாறு பரசுராமர் சொல்ல, இராமர் தாம் தொடுத்த அந்தத் திவ்வியபாணத்தை விடுத்தார். அது சென்று தமது மோக்ஷலோகத்தைப் பறித்ததாகப் பரசுராமரும் அறிந்துகொண்டு, மகேந்திரகிரியை நோக்கி விரைந்து செல்லச் சித்தராயினர்.

*பரசுராமர் திரும்பியது.*

அதன்பின்பு அங்குண்டாயிருந்த இருளும் குழப்பமும் கலைந்துபோயின. அங்கு வந்திருந்த தேவதைகளும் ரிஷிகளும் இராமர் இவ்வண்ணம் விஷ்ணுவின் வில்லை வளைத்து நாணேற்றிப் பாணம் எய்ததற்காக அவரைப் புகழ்ந்தார்கள். பரசுராமரும் இராமரை வணங்கித் துதித்து அவரை வலம்வந்து விடைபெற்றுத் தமது இருப்பிடஞ் சென்றார்.

## எழுபத்தேழாஞ்சருக்கம் :

### தசரதர் திரும்பி அயோத்தியைச் சேர்ந்தது.

*தசரதருடைய ஆனந்தம்.*

பரசுராமர் புறப்பட்டுப் போனபின் இராமர் தமது ரோஷம் அடங்கினவராய் வருணபகவானைக் கூப்பிட்டு அவரிடம் விஷ்ணுதனுசை ஒப்பித்தார். அப்புறம் வசிஷ்ட ரிஷியையும் மற்ற ரிஷிகளையும்

இராமர் வணங்கி அவர்களை முன்னிட்டுக்கொண்டு சென்று, சோகமுற்றிருந்த தமது தந்தையாரைப் பார்த்து "ஜமதக்கினி மகனான பரசுராமர் போய் விட்டார். இனித் தாங்கள் நமது சைநியத்தை அயோத்தியை நோக்கி நடக்க உத்தரவளிக்கலாம்" என்று தெரிவித்தார். இவ்வண்ணம் இராமபிரான் பேசினதைக் கேட்டுத் தசரதர் தமது குழந்தையைக் கட்டியணைத்து உச்சிமோந்து, பரசுராமர் போய் விட்டார் என்ற ஓரே பேச்சினால் மெய்யும் மனமும் பூரித்தவராய் ஆனந்தக் கடலில் முழுகினர். தாமும் தமது குமாரர்களும் மறுபிறப்புப் பிறந்ததாக எண்ணினர். சைனியத்தை விரைவாக நடத்தினர். வெகு வேகமாக எல்லாரும் அயோத்தி வந்து சேர்ந்தார்கள்.

அயோத்தி நகரின் அலங்காரம்.

அப்பட்டணமும் எங்கே பார்த்தாலும் தோரணங்களும் கொடிகளும் கட்டப்பட்டும், வெகு ரம்மியமாய் நான்கு பக்கங்களிலேயும் மங்கள வாத்தியங்கள் முழங்கிக்கொண்டும், நன்றாய் நீர் தெளித்து இழைக்கோலம் முதலியவைகளால் சிங்காரிக்கப்பட்டும், புஷ்பங்கள் இறைக்கப்பட்டும், அரசர் வருகிறார் அவரைக் காணவேண்டும் என்ற அவாவுடன் கூடிய குடிகளால் காணிக்கைப் பொருள்களைக் கையிலேந்திக்கொண்டு எதிர்சென்றழைக்க யத்தனங்கள் செய்யப்பட்டும், வேடிக்கை பார்க்கவந்தவர்களால் நிரம்பப்பட்டும் விளங்கிற்று.

தசரதர் தம் அரண்மனை புகுதல்.

இவ்வளவு மரியாதைகளும் நடக்க, தம்மை எதிர்கொண்டழைக்க வந்த குடிகளுடனும், பிராமணர்களுடனும் தசரதமன்னர் தமது பரிவாரங்களோடு தமது பட்டணத்தில் புகுந்தனர். அவர் செல்வக் குழந்தைகளும் அவருடன் தொடர்ந்து சென்றார்கள். அந்நகரில் இமய பருவதம்போல் விளங்கும் தம் அரண்மனையில் அவர் பிரவேசித்தார்; அங்கு எல்லாராலும் மரியாதை செய்யப்பட்டு வெகு சந்தோஷத்தை அடைந்தார். கௌசல்யை, சுமித்திரை, கைகேயி முதலிய இராஜ ஸ்திரீகளும் இன்னும் மற்றுமுள்ள பெண்பாலர்களும்

தங்களுடைய நாட்டுப்பெண்களான சீதை, ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி இவர்களை ஆலத்தி எடுத்து அரண்மனைக்குள் அழைத்து அணைத்துக்கொண்டு ஆனந்தித்தார்கள். அவர்களும் பெரியவர்களை யெல்லாம் வணங்கித் தெய்வங்களை ஆராதித்து மரியாதை செய்யவேண்டியவர்களுக்கெல்லாம் மரியாதைசெய்து தங்கள் புருஷர்களோடு கூட எல்லாவிதமான சௌக்கியத்தையும் சந்தோஷத்தையும் அடைந்திருந்தார்கள். இந்நான்கு அரசகுமாரர்களும் யுத்த வித்தையை முன்னமே அடைந்து, தங்களுக்குச் சரியான மனைவிமார்களையும் பெற்று, ஒருவிதக் குறைவுமின்றிச் சகல சம்பத்துடனும் சிநேகிதர்களோடு எப்பொழுதும் தங்களுடைய தகப்பனாரான தசரதருக்குப் பணிவிடைகள் செய்துகொண்டு சௌக்கியமாக வாழ்ந்துவந்தார்கள்.

பரதர் கேகயம் ஏகுதல்

இப்படிச் சிலநாள் சென்றபிறகு தசரத மன்னரானவர் தமது மகன் பரதனைக் கூப்பிட்டு அவனைப் பார்த்து "குழந்தாய், உனது மாமனும் கேகயராசாவின் குமாரருமான யுதாஜித் உன்னை அழைத்துப்போகக் கருதி இங்குவந்து பலநாளாக காத்துக் கொண்டிருக்கிறார். நீயும் போய்வரலாம்" என்றார். இவ்வாறு தமது தந்தை விடைகொடுக்கவே, பரதன் சத்துருக்கினனோடு கேகயநாடு போய்வரச் சித்தனானான். தனது தாய்தகப்பன்மார்களையும் இராமரையும் நமஸ்கரித்து அவர்களுடைய ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு பரதன் சத்துருக்கினனுடன் கேகயம் சென்றான். இவ்விருவருடன் யுதாஜித்துத் திரும்பிவந்ததைக் கேகயமன்னர் கண்டு வெகு சந்தோஷமடைந்தார்.

இராமர் ஒழுக்கம்.

பரதன் சென்றபின்பு இராமர் லக்ஷ்மணனுடன் தெய்வத்துக் கொப்பான தங்களுடைய தந்தைதாய்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு அவர்களுக்குச் சந்தோஷமுண்டாகும்படி நடந்துகொண்டும் வந்தார். அரசர் உத்தரவுப்படி எப்பொழுதும் குடிகளுக்கு ஒருவித க்ஷேமக்குறைவும் இல்லாமல் வெகு ஆதரவாயும் அன்பாயும் இராமர் இராச்சியகாரியங்களை நடத்தினார். தமது தாய்மாரிடம் எவ்வண்ணம் தாம் நடந்து கொள்ளவேண்டுமோ

அவ்வண்ணம் அவர்களிடத்திலும் தமது குருக்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய பிரகாரம் அவர்களிடத்திலும் நடந்துகொண்டார். இராமர் நடந்துகொண்ட விஷயத்தைப் பார்த்து அவரது தகப்பனார் மிக்க மனமகிழ்ச்சி யடைந்தார். அந்நகரத்திலிருந்த பிராமணர்கள் வைசியர்கள் மற்றக் குடிகளெல்லாரும் திருப்தியடைந்தார்கள். இவ்வண்ணம் இராமர் தமது ஒழுக்கத்தாலும், செய்கையாலும், உண்மையாலும், குணத்தாலும் எல்லாப் பிராணிகளிடத்திலும் பிரமதேவர் ஆதரவா யிருப்பதுபோ லிருந்தார்.

இராமபிரான் சீதாதேவி இவர்களின் அந்யோந்யம்.

வீட்டில் இராமர் சீதையிடம் வெகு அன்பாயும் ஆதரவாயும் இருந்து வெகு சௌக்கியங்களை அனுபவித்தார். சீதாதேவியும் தனது பக்தியாலும் விசுவாசத்தாலும் ரூபத்தாலும் இராமருடைய சுகத்துக்கும் சந்தோஷத்துக்கும் முக்கிய காரணமாக இருந்தாள். அவள் எல்லாவிதமான உத்தம குணங்களும் பொருந்தியவளாக இருந்தாள். இராமருக்குச் சீதையினிடம் உள்ள அன்பினும் இருமடங்காகச் சீதைக்கு இராமரிடம் அன்பு நிகழ்ந்தது. சீதையின்மனம் இராமருடைய மனத்திலிருக்கும் விஷயங்களை ஒன்றும் விடாதறிந்து அவ்வண்ணம் நடக்க ஏற்படுத்தப்பட்டதுபோல் இருந்தது. அவள் உருவத்தில் தேவமாதுபோலும், அழகில் லக்ஷ்மிபோலும் விளங்கி, இராமருடைய உள்ளத்தைத் தன்னுள்ளத்தால் அறிந்து நடக்கும் உத்தமியாயிருந்தாள். இவ்வித உத்தம குணங்களும் சம்பத்தும் பொருந்திய ஜானகியை இராமர் தமது பார்யையாக அடைந்து விஷ்ணுபகவான் லக்ஷ்மிதேவியை அடைந்து விளங்குகிறதுபோல் விளங்கினர்.

## பாலகாண்டம்

## முற்றிற்று.